உள்ளடக்கம்

24—3—1990

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள். 117—150

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள். 151—194

2. தகவல் கோரல்—

கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் சில கிராமங்களில் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுவதால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து. 194—196

3. கவன ஈர்ப்பு—

(அ) மதுரவாயல் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் ஆதி திராவிடர் குடும்பங்களை வெளியேற்றும் நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள பாதிப்பு. 196—200

(ஆ) பரமக்குடி தொகுதியில் மின் அழுத்தக் குறைவால் மின் விளக்குகள் எரியாதது குறித்து. 200—201

4. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)

(அ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990. 201—202

(ஆ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990. 202—203

டி2 53-60—1

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

5. அறிவிப்பு—	
பேரவை அலுவல்கள்.	203—281
6. வரவு-செலவுத் திட்டம், 1990–91 பொது விவாதம்—தொடர்ச்சி.	203—221 224—281
திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்.	203—221
திரு. கே. ஏ. செங்கோட்டையன்.	224—233
திரு. அ. மலர்மன்னன்.	233—242
திரு. பி. எச். பாண்டியன்.]	242—257
*திரு. கே. ரமணி	257—278
7. அமைச்சர் பதவியை விட்டு விலகிய திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களின் விளக்கம்.	221—224
8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.	281

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 10, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021
1990 மார்ச் 24, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணி அளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். ''

நல்ல பண்பாடு உடையவர் பயன் இல்லாத சொற்களைச் சொல்வாரானால் அவருடைய மேம்பாடு அவருக்குரிய மதிப்போடு நீங்கி விடும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

அரசுத் தேர்வுத் துறை தற்காலிகப் பணியாளர்கள்.

*4225—திரு. உ. ரா. வரதராசன்:

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசுத் தேர்வுத் துறை, இளநிலை உதவியாளர் பணியில் தற்காலிகப் பிரிவு எழுத்தர்களாக தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் நாள் ஊதியம் எவ்வளவு?

(ஆ) இந்த ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்களா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) 1—9—1989 முதற்கொண்டு தற்காலிகப் பிரிவு எழுத்தர்களுக்கு அலுவலக நேர வேலையான 10-00 மணி முதல் 5-30 மணி வரை பணியாற்றுகிறவர்களுக்கு ரூ. 25-ம்

காலை 8-00 மணி முதல் 5-30 மணி வரை வேலை செய்கிற வர்களுக்கு ரூ. 30-ம் நாள் கூலியாக வழங்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வுத் துறையிலே பணியாற்றுகிற இளநிலை உதவியாளர்கள், எழுத்தர்கள் ஆகிய பணியாளர்கள் தினக் கூலி அடிப்படையிலே நீண்ட காலம் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுடைய பணிக்காலம் எவ்வளவு? அவர்கள் நிரந்தரத் தற்காலிக ஊழியர்களாகவே வைக்கப்படுகிற நிலைமையை மாற்றுவதற்கு அரசு என்ன செய்ய உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினை பல்வேறு துறைகளிலே தற்காலிக மாகப் பணியாற்றுகிறவர்களைப் பற்றி எழுகிறது. ஒரே ஒரு துறையிலே தற்காலிகமாகப் பணியாற்றுகிறவர்களைப் பற்றித் தனியாகப் பரிசீலிப்பது என்பது கடினமான ஒரு காரியம். மற் றொன்று. இவர்கள் 10 (எ) (1) என்ற முறையிலே நியமிக்கப் பட்டவர்கள் அல்ல. எனவே தற்காலிக அடிப்படையிலே கூட அரசாங்கத்தால் 10 (எ) (1) விதிமுறைப்படி நியமிக்கப்பட்டால் ஏற்படுகிற அந்த உரிமை கூட இவர்களுக்கு வழங்குவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் மொத்தமாக அரசாங்கத்தினுடைய நிதி வரவு செலவு வாய்ப்பு களைப் பொறுத்துத் தான் அரசு பரிசீலிக்கக் கூடிய கட்டத்திலே இருக்கிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் தேர்வுத் துறையிலே பணியாற்றுகின்றவர் களைத் தற்காலிகமாக்க முடியாது என்ற நிலை இருந்தாலும், கல்வித் துறையிலேயாவது முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு நிரந்தரப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே வேலை வாய்ப்பை உருவாக்குவது இல்லை என்பது நீண்ட காலக் கொள்கை. பல ஆண்டுகளாகவே அவர்களுக்குத் தேவைப்பட்டாலும் கூட, நிதி நிலை வசதியைப் பொறுத்து அவைகளை உடனடியாக ஏற்க அரசால் இயல வில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 24]

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட் கூலித் தொழிலாளர்கள், ஊழியர்கள் 480 நாட்கள் பணி புரிந்தால் அவர்கள் நிரந்தர ஊழியர்களாகக் கருதப்படுவார்கள் என்று அரசு ஆணை கூறுகிறபோது, அவ்வாணை இந்த ஊழியர்களுக்குப் பொருந்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஆணை எல்லோருக்குமே கூடப் பொருந்தும். ஆனால் அப்படிப்பட்ட முறைப்படி அவர்கள் வேலைக்கு வைக்கப்படுவது இல்லை. ஏனென்றால் இது பருவ காலத்து வேலை என்ற அடிப்படையிலே தான் உருவாக்கப் பட்டு இருக்கிறது.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்த கேஷுவல் லேபர் முறையை நம் நாட்டிலிருந்து ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதற்காக ஒரு பெரும் இயக்கம் நடத்துவது மட்டுமல்லாமல் மத்திய சர்க்கார் அதற்கு ஒரு சட்டத்தையே கொண்டு வரப்போகிறார்கள். ஒரு வேதனைக்குரிய விஷயம் என்னவென்று சொன்னால், கல்வி இலாகாவை மட்டும் நான் சொல்லவில்லை; அரசாங்க இலாக்காக்களில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள், ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் போகக்கூடியவர்கள், டைபிஸ்ட், ஸ்டெனோகிராபர்ஸ் போன்றவர்களும் தினக் கூலிகளாக மஸ்டர் ரோலில் இல்லாமல், அவர்களுக்கு ரிக்கார்டும் இல்லாமல் வைத்து இருக்கக்கூடிய அந்தத் தவறை நிறுத்துவதற்கு அரசு யோசித்து ஒரு திட்டத்தைக் கொண்டு வர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எல்லா வேலைகளும் நிரந்தரமாக, முழுவதுமாகத் தொடரக்கூடிய பணிகளாக அமையவில்லை. சில குறிப்பிட்ட பணிகளை குறிப்பிட்ட காலக் கட்டத்தில் நிறைவேற்றுவதற்கு அதிகம் பேர் பணியாற்ற வேண்டிய கட்டாயமான நிலைமை அரசாங்கத்தினுடைய பல்வேறு துறைகளில் இருக்கிறது. கேஷுவல் லேபராக இருக்கக்கூடாது என்ற கொள்கை ஆண்டு முழுவதும் வேலை இருக்கிற அந்தத் துறைகளில் அவர்களை கேஷுவல் ஆகவே வைத்துக் கொண்டிருப்பது என்பது முறையல்ல என்பதற்காகப் பேசப்படுகின்ற வாதம். தற்காலிக சேவைக்கு எம்.ஏ. படித்தவர்களும், ஐ.ஏ.எஸ்.-க்குப் போகக் கூடியவர்களும் இந்த வேலைகளுக்கு வராமல், ஐ.ஏ.எஸ்.-க்கே போவதை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த வேலை அமைக்கப்பட்டிருக்கின்ற முறை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு என்ற எண்ணத்தில் ஏற்படுத்தப் பட்ட வேலைகள்தான் இவை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

9–05 மணி

[1990 மார்ச் 24

திரு. சோ. பால்ராஜ் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் துறையில் மட்டுமல்லாது, கூட்டுறவுத் துறையில் கூட 1,000 நாட்கள், 800 நாட்கள் என்று வேலை பார்த்த அவர்களை நிரந்தரமாக்காத காரணத்தால் உயர்நீதிமன்றத்தில் வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில்(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தது.

மொரிஷியஸ் தீவில் உள்ள தமிழர்களுக்கு தமிழ் படிக்க உதவி.

*4901—திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மொரிஸியஸ் தீவில் உள்ள தமிழர்களுக்கு தமிழ் படிப்பதற்காக தமிழக அரசு உதவி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதியுதவியுடன் தமிழ் நூல்கள், தமிழ்ப் பாடத்திட்டங்களுடன் கூடிய ஒலிப்பதிவு நாடாக்கள், தமிழ் தட்டச்சுப் பொறிகள் முன்னர் வழங்கப்பட்டு இருக்கின்றன.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மொரிஸியஸ் தீவில் வாழும் தமிழர்களில் இன்றைய தலைமுறையினர் தமிழ் மொழியைப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் மொழி வளர்ச்சி குன்றிக் காணப்படுவதாகவும், இந்நிலை தொடர்ந்து நீடித்தால், எதிர்காலத்தில் தமிழ் மொழியே தெரியாத அளவிற்கு மொரிஸியஸ் தமிழர்களின் நிலை ஆகிவிடும் என்று ஒரு வாரப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, மொழிப் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் கருதி அரசு எந்த ஆண்டு இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்தியது, எதிர்காலத்தில் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சோ. பால்ராஜ் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் துறையில் மட்டுமல்லாது, கூட்டுறவுத் துறையில் கூட 1,000 நாட்கள், 800 நாட்கள் என்று வேலை பார்த்த அவர்களை நிரந்தரமாக்காத காரணத்தால் உயர்நீதிமன்றத்தில் வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில்(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தது.

மொரிஷியஸ் தீவில் உள்ள தமிழர்களுக்கு தமிழ் படிக்க உதவி.

*4901—திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மொரிஸியஸ் தீவில் உள்ள தமிழர்களுக்கு தமிழ் படிப்பதற்காக தமிழக அரசு உதவி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதியுதவியுடன் தமிழ் நூல்கள், தமிழ்ப் பாடத்திட்டங்களுடன் கூடிய ஒலிப்பதிவு நாடாக்கள், தமிழ் தட்டச்சுப் பொறிகள் முன்னர் வழங்கப்பட்டு இருக்கின்றன.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மொரிஸியஸ் தீவில் வாழும் தமிழர்களில் இன்றைய தலைமுறையினர் தமிழ் மொழியைப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் மொழி வளர்ச்சி குன்றிக் காணப்படுவதாகவும், இந்நிலை தொடர்ந்து நீடித்தால், எதிர்காலத்தில் தமிழ் மொழியே தெரியாத அளவிற்கு மொரிஸியஸ் தமிழர்களின் நிலை ஆகிவிடும் என்று ஒரு வாரப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, மொழிப் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் கருதி அரசு எந்த ஆண்டு இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்தியது, எதிர்காலத்தில் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, மொரிஸியஸ் நாட்டில் அண்மையிலேகூட உலகத் தமிழ் மாநாடு ஒன்று நடைபெற்று நம்முடைய நாட்டைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர்களும், தமிழறிஞர்களும் சென்று கலந்து கொண்டு வந்திருக்கின்றார்கள். அந்த நாட்டிலே உள்ள மக்கள் தமிழ் மொழியை ஓரளவு பேசினாலும்கூட, பேச்சு வழக்குகூட விட்டு விடப்படக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதைக் கூடத் தெரிவித்தார்கள். ஆனால், அந்த அரசு எந்தவிதமான வகையில் நம்முடைய தமிழக அரசினுடைய ஒத்துழைப்பை அல்லது உதவியைக் கேட்கிறது என்பதைப் பொறுத்துத்தான் இது அவ்வப்பொழுது பரிசீலிக்கப்பட முடியும். மற்றொன்று, ஏற்கனவே தமிழ் பேச்சு வழக்கு அவர்களுக்குத் தெளிவாக அமைவதற்கு உதவி செய்வதற்காக ஆறு ஒலிப் பதிவு நாடாக்களுடன் கூடிய பேச்சுத் தமிழ் மற்றும் இலக்கியத் தமிழ் உள்ளிட்ட பாடல்கள் பதிவு செய்யப்பட்டு, பாடப் புத்தகங்களும் ஒலிப் பதிவு நாடாக்களும் வெளியிடப்பெற்றுள்ளன. அப்படி வெளியிடப்பட்ட அவைகளில் ஒரு பகுதி அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்று நான் அறிகிறேன். ஒரு தட்டச்சு இயந்திரமும்—தமிழ் தட்டச்சு இயந்திரமும் அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும், அண்மைக் காலத்திலே 1987-இல், தமிழ்நாடு இயலிசை நாடக மன்றத்தின் மூலமாக, கர்நாடக இசை நாடாப் பதிவுகளும் கூட அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் எப்படிப்பட்ட ஒத்துழைப்பு அல்லது சேவை தேவை எனத் தெரிவிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து, தமிழக அரசு இயன்ற வரையில் பரிசீலனை செய்யும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த புலவர்களை மொரிஸியஸ் நாட்டுக்கு அனுப்பி, தமிழக அரசு தமிழ் பயில்விக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, ஏற்கனவே கூட சில ஆசிரியர்கள் சில நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். அதிலே மொரிஸியஸும் இருக்கலாம் என்று நம்புகிறேன். தேவை என்று கேட்டால் உதவி செய்யத் தமிழக அரசு முன் வரும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உலகத் தமிழ் மாநாடு அங்கே நடைபெற்றதைப் பற்றி நமது மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் சொன்னார்கள். மலேசியாவிலே நடைபெற்ற பொழுது டாக்டர் கலைஞர் அவர்கள், எங்களைப் போன்றவர்கள் போக முடிந்தது, இந்தத் தடவை அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால்

ஏற்தனவே சிவகாசியிலேயிருந்து 11,000 அரிச்சுவடி புத்தகங்களும், பதிப்பகத்தாரிடமிருந்து 10,000 புத்தகங்களும், ஒரு தமிழ்த் தட்டச்சும் உங்களைப் போல அந்தப் பதவியியிலே அமர்ந்திருந்த மரியாதைக்குரிய இராசாராம் அவர்களுடைய முயற்சியாலே அனுப்பப்பட்டது. அதற்குப் பின்னர் இப்பொழுது ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்கள், ஒளிப்பதிவு நாடாக்கள் அனுப்பப்பட்டதாகச் சொல்கிறார்கள். அங்கே சொக்கநாதர் மீனாட்சி ஆலயம் என்ற ஆலயத்திலே தமிழிலே வழிபாடு நடத்துகிறார்கள். உள்ளே சொல்வதை வெளியே இருக்கின்ற மக்களெல்லாம் சேர்ந்து சொல்கிறார்கள். ஆனாலும், ஓதுவார்களும், தமிழாசிரியர்களும் இல்லை என்ற குறை அவர்களுக்கு இருக்கிறது. அவைகளைத் தீர்த்து வைப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா?

9–16 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதுபற்றியும் கூட—அது ஒரு தனி அரசு என்ற காரணத்தால் அவர்கள் கேட்டால் எண்ணிப் பார்த்து ஏதாவது உதவி செய்யலாமே தவிர, நாமாக செய்வது என்பது எளிய காரியமல்ல. திரு. குமரி அனந்தன் அவர்கள் அங்கேயுள்ள திருக்கோவில்களில் ஓதுவார் பாடி, வெளியே உள்ளவர்களும் பாடுகிறார்கள் என்கிறார்கள். ஒரு வகையில் அதை நம்முடைய நாட்டுக்கு கொண்டு வர என்ன முயற்சி செய்யலாம் என்பதை திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. மு. ராமநாதன் : தலைவர் அவர்களே, பழக்கத்தாலும் பண்பாட்டாலும், இறை வழிபாட்டாலும் தமிழர்களாக வாழ்ந்து கொண்டு, தமிழ் மொழியையே மறந்து விட்ட மக்களாக வாழ்ந்து வரும் மொரிஷியஸ் நாட்டு மக்களுக்கு உதவுவதற்கு ஆசிரியர்கள், பயிற்சி ஆசிரியர்கள் என்ற முறையில் செல்வதற்கு யாரும் விரும்பவில்லை என்ற காரணத்தால், அல்லது அங்கே போய் அவர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு வாய்ப்பு குறைவு என்ற காரணத்தால் போகவில்லை என்று சொல்லப்படுகிறது. தாய்த் தமிழ்நாடு என்ற முறையில் தமிழ் இனத்தைக் காக்கிற முறையில் ஒரு சிறப்பு ஏற்பாட்டைச் செய்து, அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பதிலில் குறிப்பிட்டதைப் போல, ஒலிப்பதிவு நாடா மூலம் தமிழ்ப் பாடம் சொல்லி கொடுக்கும் சிறப்பு ஏற்பாட்டை தமிழக அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமநாதன் அவர்கள் அவ்வளவு விளக்கமாக அந்தக் கேள்வியைக் கேட்டாலும் கூட, அந்த அரசிடமிருந்து எந்த விதமான வேண்டுகோளும் வந்ததாக அமைச்சராக இருக்கிற நிலையில் நான் பார்க்கவில்லை; இதுவரையில்,

1990 மார்ச் 24]

எனக்குக் கிடைக்கவில்லை. நம்முடைய அறிஞர்கள் தான் அது பற்றித் தெரிவித்தார்கள். அந்த அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு அவர்கள் தேவையை பொறுத்து தமிழாசிரியர்கள் எவ்வளவு பேர் வேண்டுமானாலும் அனுப்ப ஒரு முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, அந்தமான் தீவிற்கு சமீபத்தில் சென்றபோது முதல் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் பிள்ளைகளுக்கு தமிழ்ப் புத்தகம் கிடைக்கவில்லை என்று தமிழ்ச் சங்கத்தார் எங்களிடம் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கும் நம்முடைய அரசாங்கம் நல்ல உள்ளத்தோடு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதுபற்றியும் அரசுக்கு எந்தத் தகவலும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மன்றத்தாரை கடிதம் எழுதச் சொன்னால், கூடியவரையில், முடிந்த வரையில் அவர்களுக்கு உதவ முயற்சிக்கலாம்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, மொரிஷியஸ் நாட்டில் வாழ்கிற ஒரு லட்சத்து 10 ஆயிரம் தமிழர்களில் ஏறக்குறைய ஒரு லட்சம் தமிழர்கள் தமிழ் அறியாத நிலையில், அவர்களுக்கு தமிழ் ஆர்வம் இருந்தும், அன்றைக்கிருந்த அரசியல் சூழ்நிலையில், அரசே முன்வராத நிலையில் இந்திய நாட்டுக்கு வேண்டுகோள் விடுத்து, எவரும், தமிழாசிரியர்கள் வேண்டுமென்று கேட்கிற சூழ்நிலை அன்றைக்கு இல்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாம் தமிழாசிரியர்களை அனுப்புவதற்கு மத்திய அரசு மூலமாக உரிய ஏற்பாட்டை இந்த அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதற்கான வழிமுறைகள் எது என்று நான் இப்போது அறிந்திருக்க வில்லை. உரிய முறையில் முயற்சிக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, வெளி நாடுகளுக்கு புதியதாக பாடங்களோ, நாடாக்களோ அனுப்பு கிறபோது, அதிலே பயன்படுத்தப்படுகிற சொற்கள் எல்லாம் கலப்பு இல்லாமல், தனித் தமிழ் சொற்களாகவும், எழுத்துக்களில் வேற்று மொழி கலக்காமல் தனித் தமிழாகவும் அனுப்புவதற்கு அரசு பரிசீலித்து, அப்படிப்பட்ட அரசாணை வழங்க, வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுவதை பரிசீலித்து அனுப்ப இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எளிய முறையில் கற்பதற்கு என்று சொற்களை தேர்ந்தெடுத்துத் தான் பாடங்கள் அமைக்கப்படும். அது தனித் தமிழ் நோக்கத்திலே உருவாக வேண்டுமென்று கட்டாயம் இல்லை. தனித் தமிழ் என்பது கொஞ்சம் வளர்ந்தவர்களுக்குத் தானே தவிர, வளராதவர்களுக்குத் தனித் தமிழ்ச் சொற்கள் அந்தத் தெளிவை ஏற்படுத்தி விடும் என்று எதிர்பார்க்க முடியாது.

9–15 மணி

மீனம்பாக்கம் விமான தள அபிவிருத்தி

*916—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மீனம்பாக்கம் விமான தள அபிவிருத்திக்காக மீனம் பாக்கம் கிராமத்தை காலி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மீனம்பாக்கம் விமான தள அபிவிருத்திக்காக மீனம் பாக்கம் கிராமத்தில் 15—77—0 எக்டேர் நிலத்தினைக் கையகப்படுத்தித் தருமாறு, இந்திய சர்வதேச விமானப் போக்குவரத்துக் குழுமம் அரசைக் கேட்டுள்ளது. இப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மை வாய்ந்த அந்தக் கிராமத்தை விமான தள அபிவிருத்திக்காக எடுத்துக் கொள்வதைப் பற்றி ஏற்கனவே பத்திரிகையிலே எல்லாம் அறிவிக்கப்பட்டதன் விளை வாக அந்த ஊரினுடைய சொத்துக்கள் மதிப்பிழந்து இருக்கின்ற காரணத்தால் ஒரு தெளிவான முடிவை இந்த அரசு அறிவிப் பதற்கு முன்னால், அப்படி விமான தளத்தினுடைய அபி விருத்திக்காக எடுத்துக் கொள்ளும்போது, எந்த முறையில் அவர்களுக்கு ஈட்டுறுதி வழங்கப்பட இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு, அதற்கு மிக அருகாமையிலே இருக்கக் கூடிய அந்த நிலம் தான் பொருத்தமானது என்று விமான தளத்தினுடைய அந்த சர்வதேசக் குழு தெரிவித்திருக்கிறது. அதேபோல இடம் பெயருகின்ற மக்களுக்கு தகுந்த மாற்று இடமும், அவர்கள் அனுபவித்து வந்த அத்தனை வசதிகளையும் அந்த மக்களுக்குச் செய்து தர வேண்டும் என்றும், நம்முடைய அரசின் சார்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தப் பகுதியிலே 96 குடிசை

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எளிய முறையில் கற்பதற்கு என்று சொற்களை தேர்ந்தெடுத்துத் தான் பாடங்கள் அமைக்கப்படும். அது தனித் தமிழ் நோக்கத்திலே உருவாக வேண்டுமென்று கட்டாயம் இல்லை. தனித் தமிழ் என்பது கொஞ்சம் வளர்ந்தவர்களுக்குத் தானே தவிர, வளராதவர்களுக்குத் தனித் தமிழ்ச் சொற்கள் அந்தத் தெளிவை ஏற்படுத்தி விடும் என்று எதிர்பார்க்க முடியாது.

9–15 மணி

மீனம்பாக்கம் விமான தள அபிவிருத்தி

*916—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மீனம்பாக்கம் விமான தள அபிவிருத்திக்காக மீனம் பாக்கம் கிராமத்தை காலி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மீனம்பாக்கம் விமான தள அபிவிருத்திக்காக மீனம் பாக்கம் கிராமத்தில் 15—77—0 எக்டேர் நிலத்தினைக் கையகப்படுத்தித் தருமாறு, இந்திய சர்வதேச விமானப் போக்குவரத்துக் குழுமம் அரசைக் கேட்டுள்ளது. இப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மை வாய்ந்த அந்தக் கிராமத்தை விமான தள அபிவிருத்திக்காக எடுத்துக் கொள்வதைப் பற்றி ஏற்கனவே பத்திரிகையிலே எல்லாம் அறிவிக்கப்பட்டதன் விளை வாக அந்த ஊரினுடைய சொத்துக்கள் மதிப்பிழந்து இருக்கின்ற காரணத்தால் ஒரு தெளிவான முடிவை இந்த அரசு அறிவிப் பதற்கு முன்னால், அப்படி விமான தளத்தினுடைய அபி விருத்திக்காக எடுத்துக் கொள்ளும்போது, எந்த முறையில் அவர்களுக்கு ஈட்டுறுதி வழங்கப்பட இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு, அதற்கு மிக அருகாமையிலே இருக்கக் கூடிய அந்த நிலம் தான் பொருத்தமானது என்று விமான தளத்தினுடைய அந்த சர்வதேசக் குழு தெரிவித்திருக்கிறது. அதேபோல இடம் பெயருகின்ற மக்களுக்கு தகுந்த மாற்று இடமும், அவர்கள் அனுபவித்து வந்த அத்தனை வசதிகளையும் அந்த மக்களுக்குச் செய்து தர வேண்டும் என்றும், நம்முடைய அரசின் சார்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தப் பகுதியிலே 96 குடிசை

களும், ஓடு மற்றும் தளம் அமைத்த 196 வீடுகளும் ஒரு விநாயகர் கோயிலும், பெருமாள் கோயிலும், குடிநீர்க் கிணறு, பஞ்சாயத்து அலுவலகம், பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளி, மற்றும் பாலவாடி மற்றும் உயர்நிலைப் பள்ளி போன்றவைகள் எல்லாம் அந்த கிராமத்திலே இருக்கின்றன. அதேபோல் பிரதான சாலையில் நிறைய கடைகளும் அங்கே யிருக்கின்றன. ஒட்டு மொத்தமாக அந்தக் கட்டிடங்களுடைய உத்தேச மதிப்பு சுமார் 2 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, தகுந்த வசதியான மாற்று ஏற்பாடுகளை விமான நிலையக் குழு செய்து கொடுப்பதற்கு முன்வருவார் களானால், அந்த இடங்களை அவர்களிடத்திலே ஒப்படைப்பது பற்றி அரசு முடிவு செய்யும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : தலைவர் அவர்களே, அப்படி விமான தளத்திற்கு அந்த இடத்தை எடுத்துக் கொள்கிற போது, முழு அளவிற்கு அவர்களுக்கு மானியம் வழங்கினாலும் கூட, அந்த ஊரிலே இருக்கிற மக்கள் பல்வேறு இடங்களுக்குப் பிரிந்து செல்லாமல், அது மத்திய அரசோடு ஒட்டியிருக்கின்ற காரணத்தால், விமான தளத்திற்கு எதிரிலே மத்திய அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. எனவே அந்த இடத்தில் இவர்களை இடம் பெயர்த்து அனுப்புவதற்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்த இடத்திற்கு அருகிலே சென்னை வட்டார ராணுவத தளம் இருக்கிறது. அந்த இடத்தை எடுக்கலாம் என்று சம்பந்தப்பட்ட அலுவலர்களை கலந்து ஆலோசிக்கின்ற நேரத்தில், அந்த இடத்திற்கு மிக அருகாமையில் சுடும் பயிற்சி, 'பயரிங் ரேஞ்ச்' இருக்கின்ற காரணத்தால், அது வசிப்பதற்கு தகுதியற்ற இடம், ஆகவே, கொடுப்பது அவ்வளவு உசிதமாக இருக்காது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் அவர்கள் ஒரே இடத்தில் இருக்கின்ற வகையில் மாற்று ஏற்பாடு செய்து கொடுத்த பிறகுதான், குறிப்பிட்ட இடத்தை விமானத் தளத்திற்கு மாற்றிக் கொடுப்பது குறித்து அரசு முடிவு எடுக்கும்.

திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு வீடுகள்

* 3344—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரில் உள்ள பனியன் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

களும், ஓடு மற்றும் தளம் அமைத்த 196 வீடுகளும் ஒரு விநாயகர் கோயிலும், பெருமாள் கோயிலும், குடிநீர்க் கிணறு, பஞ்சாயத்து அலுவலகம், பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளி, மற்றும் பாலவாடி மற்றும் உயர்நிலைப் பள்ளி போன்றவைகள் எல்லாம் அந்த கிராமத்திலே இருக்கின்றன. அதேபோல் பிரதான சாலையில் நிறைய கடைகளும் அங்கே யிருக்கின்றன. ஒட்டு மொத்தமாக அந்தக் கட்டிடங்களுடைய உத்தேச மதிப்பு சுமார் 2 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, தகுந்த வசதியான மாற்று ஏற்பாடுகளை விமான நிலையக் குழு செய்து கொடுப்பதற்கு முன்வருவார் களானால், அந்த இடங்களை அவர்களிடத்திலே ஒப்படைப்பது பற்றி அரசு முடிவு செய்யும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : தலைவர் அவர்களே, அப்படி விமான தளத்திற்கு அந்த இடத்தை எடுத்துக் கொள்கிற போது, முழு அளவிற்கு அவர்களுக்கு மானியம் வழங்கினாலும் கூட, அந்த ஊரிலே இருக்கிற மக்கள் பல்வேறு இடங்களுக்குப் பிரிந்து செல்லாமல், அது மத்திய அரசோடு ஒட்டியிருக்கின்ற காரணத்தால், விமான தளத்திற்கு எதிரிலே மத்திய அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. எனவே அந்த இடத்தில் இவர்களை இடம் பெயர்த்து அனுப்புவதற்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்த இடத்திற்கு அருகிலே சென்னை வட்டார ராணுவத தளம் இருக்கிறது. அந்த இடத்தை எடுக்கலாம் என்று சம்பந்தப்பட்ட அலுவலர்களை கலந்து ஆலோசிக்கின்ற நேரத்தில், அந்த இடத்திற்கு மிக அருகாமையில் சுடும் பயிற்சி, 'பயரிங் ரேஞ்ச்' இருக்கின்ற காரணத்தால், அது வசிப்பதற்கு தகுதியற்ற இடம், ஆகவே, கொடுப்பது அவ்வளவு உசிதமாக இருக்காது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் அவர்கள் ஒரே இடத்தில் இருக்கின்ற வகையில் மாற்று ஏற்பாடு செய்து கொடுத்த பிறகுதான், குறிப்பிட்ட இடத்தை விமானத் தளத்திற்கு மாற்றிக் கொடுப்பது குறித்து அரசு முடிவு எடுக்கும்.

திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு வீடுகள்

* 3344—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரில் உள்ள பனியன் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருப்பூரிலுள்ள பனியன் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. கே. ரமணி ; தலைவர் அவர்களே, திருப்பூரிலே பனியன் தொழில் ஒரு பெரிய தொழிலாக பரவலாக வளர்ந்து ஏராளமான மக்கள் கான்சன்ட்ரேசன் அதிகமாக இருக்கக் கூடிய இடம். அந்த இடத்தில் சாதாரண மக்கள் வசிக்கக் கூடிய தன்மையில் உள்ள ஒரு வீடுகட்டும் திட்டத்தை அமைத்து, அவர்களுக்கு அந்த வீட்டு வசதியை செய்து கொடுப்பது மிக மிக அவசியம் என்ற முறையில் ஒரு திட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே. மத்திய அரசில் பொருளாதார உதவியியல் தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் அப்படிப்பட்ட திட்டம் இல்லை என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஆனால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் தொழிலாளர்களுக்கும், மிகக் குறைந்த வருமானம் உள்ள பிரிவு மக்களுக்கும் வீட்டு வசதியை ஏற்படுத்துகின்ற வகையில், திருப்பூரிலேயும் சுற்று வட்டாரத்தி லேயும் வீட்டு வசதித் திட்டத்தை எதிர்காலத்திலே உறுதியாக இந்த அரசு செய்யும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலுள்ள பனியன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்று தமிழகம் எங்கும் பரவி யிருக்கின்ற லட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்களே, அவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுக்கவும், அல்லது மத்திய அரசாங்கம் பீடித் தொழிலுக்கு செஸ் வரி மூலமாக நிதி வசூலித்து அதிலே கோடிக்கணக்கான ரூபாய் இருப்பதாகச் சொல்கிறார்களே, அவைகளைப் பெற்றாவது, வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

9—20 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் மூலம் நகர் பகுதிகளாக இருந்தாலும், கிராமப்புறப் பகுதிகளாக இருந்தாலும் கடன் வழங்கப்பட்டு ஹட்கோ உதவி யுடன் ஏராளமான வீடுகள் கட்டும் திட்டம் ஏற்கெனவே நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகப்படியான வீடுகளை கூட்டுறவுச் சங்கம் மூலம் கட்டி வருகிறோம். அதே அடிப்படையில் முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தது போல் ஐந்தாண்டுகளில் 500 நகரங்களில்,

1990 மார்ச் 24]

நகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் சாதாரண ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு லட்சம் வீடுகள் கட்டித் தரும் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தற்போது இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. அத்தகையத் திட்டம் மேலும் கிராமப்புறங் களுக்கு விரிவாக்கப்பட அரசாங்கம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையில் ஆயிரக் கணக்கான புதிய தொழில் விசைத்தறிப் பகுதிகளில், கிராமப் பகுதிகளில் இருப்பவர்கள் பணியாற்றுகின்றார்கள் வீடு இல்லா மல், அவர்களையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 829 மற்றும் 5077, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறு கின்றன.

கான்கிரீட் வீடுகள் கட்டுதல்

*873—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல். ஈ.ஜி.பி. திட்டத்தில் கட்டப்படும் மரம், ஓடுபோடும் தொகுப்பு வீட்டுத் திட்டத்தை மாற்றி கான்கிரீட் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1989–90-ல் மத்திய அரசு, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டங்களை இணைத்துப் புதிய ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காகக் கட்டப்படும் 42,000 தொகுப்பு வீடுகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 4,000 செலவில் கான்கிரீட் தளம் போட அரசு அனுமதித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 24]

நகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் சாதாரண ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு லட்சம் வீடுகள் கட்டித் தரும் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தற்போது இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. அத்தகையத் திட்டம் மேலும் கிராமப்புறங் களுக்கு விரிவாக்கப்பட அரசாங்கம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையில் ஆயிரக் கணக்கான புதிய தொழில் விசைத்தறிப் பகுதிகளில், கிராமப் பகுதிகளில் இருப்பவர்கள் பணியாற்றுகின்றார்கள் வீடு இல்லா மல், அவர்களையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 829 மற்றும் 5077, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறு கின்றன.

காங்கிரீட் வீடுகள் கட்டுதல்

*873—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல். ஈ.ஜி.பி. திட்டத்தில் கட்டப்படும் மரம், ஓடுபோடும் தொகுப்பு வீட்டுத் திட்டத்தை மாற்றி கான்கிரீட் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1989–90-ல் மத்திய அரசு, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டங்களை இணைத்துப் புதிய ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காகக் கட்டப்படும் 42,000 தொகுப்பு வீடுகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 4,000 செலவில் கான்கிரீட் தளம் போட அரசு அனுமதித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 மார்ச் 24

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வி கொடுத்து நீண்ட நாள் ஆகி விட்டது. லேட்டாக பதில் கிடைத்திருக்கிறது. இருந்தாலும் அமைச்சருக்கு நன்றி. ஆனால் நான் அமைச்சர் இடத்தில் கேட்டுக்கொள்வது பொதுவாகப் புதிய காலனிகள் ஆரம்பிக்கும் போது நில ஆர்ஜிதம் செய்த இடமாக இருக்கிறது அல்லது ஏதாவது புறம்போக்கு நிலத்தில் ஒன்று அல்லது இரண்டு கிலோ மீட்டர் தள்ளி தனியான ஓர் இடத்திலே அந்தக் காலனி திட்டத்தை ஆரம்பிக்கிறார்கள். அப்படி ஆரம்பிக்கும்போது அவர்களுக்கு குடிநீர் வசதி தருவதில் காலதாமதம் ஏற்படுகிறது. வீதி விளக்குகள் அமைப்பதிலே இரண்டு, மூன்று ஆண்டுக்குமேல் காலதாமதம் ஏற்படுகின்றது. இதனால் அந்த வீடுகள் இருட்டிலே இருந்து கொண்டிருக்கின்றன.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குப் பெயர் வினாவா ?

திரு. வி. கே. சின்னசாமி : ஆக இவைகள் அனைத்தும் வீடு கட்டி முடிக்கின்ற அதே நேரத்திலே செய்து முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்கு முன்னால் தற்போது கூட இந்தப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு இவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்காத காரணத்தால் கொஞ்சம் தள்ளிக் கட்டும் சூழ்நிலை ஏற்படுகின்றது. இருந்தாலும் எல்லா வீடுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று முறைப்படி எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கொடுக்கப் பட்டும் வருகிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் மாவட்டம் வாரியாக எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன். இதேபோல் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், மற்றவர்களுக்கும் கட்டித் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் பூராவும் 42 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

1990 மார்ச் 24]

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் என்ற அடிப்படையில் ஊராட்சி மன்றத் தலைவர்களே செய்கிறார்கள். அதனால் பல இடங்களில் அதிகாரிகள் 'மெஷர்மென்ட்', 'செக் மெஷர்மென்ட்' செய்வதில் முறையாகச் செயல்பட முடிவதில்லை. பல இடங்களில் ஊராட்சி மன்றத் தலைவர் வேறு நபர்களிடம் இந்த வேலையை விட்டு விடுகிறார்கள். இந்தத் திட்டத்தை 'டென்டர்' விட்டு அதில் வரும் லாபத்தை பஞ்சாயத்துக்கு சேர்க்க வேண்டும் அல்லது வேறு வகையைப் பின்பற்ற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 16,200 ரூபாய் செலவிலும், 16 ஆயிரம் ரூபாய் செலவிலும் இப்படி இரண்டு பிரிவாகத்தான் அந்த வீடுகள் கட்டப்படுகின்றன. குறைந்த அளவாக 'எஸ்டிமேட்' உள்ளதால் 'டென்டர்' விடுவது கஷ்டமாகவும் இருக்கிறது. கூடுமானவரையில் ஊராட்சி மன்றத் தலைவர்களே அதைச் செய்தால் அந்த மக்களுக்கு, வாக்களித்தவர்களுக்கு பயந்து செய்வார்கள் என்ற முறையில்தான் தரப்படுகிறது. எங்கெங்கே குறைகள் காணப்படுகின்றதோ அங்கேயிருந்து தகவல்கள் தரப்படுமானால் அதைப்பற்றி விசாரித்து தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9—25 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தில் முன்பெல்லாம் ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். இப்போது அவர்கள் அதிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் அவர்களை சேர்க்கிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது கான்கிரீட் வீடுகளைக் கட்டுவது பற்றிய வினா.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் அடிப்படையில் தொகுப்பு வீடுகள் கட்டப்படுகிற திட்டம் கிராமப்புறங்களுக்கு மட்டும் இருக்கிறது. ஒன்றியத்தில் உள்ள பேரூராட்சி மன்றங்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்ற அரசாங்கத்தினுடைய கொள்கை எந்த அளவில் இருக்கிறது? அது நிறைவேற்றப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அது பற்றியும் அனுதாபத்துடன் கவனிக்கச் சொல்லி இருக்கிறார்கள். இந்த ஆண்டு பேரூராட்சி மன்றங்கள் உட்பட்ட எல்லைகளிலும் அந்த வீடுகள் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் இருந்த அரசு காலத்தில் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் முழுமையும் இடிந்து குடியிருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. அதைச் செப்பனிடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செப்பனிட இயலாது. அவர்கள் சுத்தமாக குடியிருக்க இயலாமல் போவார்களேயானால், குடியிருக்க வீடு இல்லாதவர்கள் என்று கருதப்பட்டு, அவர்கள் மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்த ஊரில் திட்டம் எடுக்கும்போது சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசால் இந்த இரண்டு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் சில இடங்களில் மக்கள் குடியேறுவதற்கு முன்னாலேயே இடிந்து விழுந்து விட்டன. அப்படிப்பட்ட வீடுகளை கட்டித்தந்த ஒப்பந்தக்காரர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட புகார் தந்தால் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலமாக கட்டப்பட்ட வீடுகளில் பல வீடுகள் இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன. ஆகவே அந்த வீடுகளை மறுபடியும் செப்பனிட அல்லது கான்கிரீட் வீடுகளாக மாற்றிக் கட்டித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாகச் சொன்னால் நடவடிக்கை எடுக்க இயலாது, அப்படிப்பட்ட குறிப்பிட்ட இடத்தை நினைவு கூர்ந்தால் அதற்கான நடவடிக்கை உரிய காலத்தில் எடுக்கப்படும்.

1990 மார்ச் 24]

ஊராட்சிகளை மாற்றி அமைத்தல்

*1100—திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களில் ஊராட்சிகளை மாற்றி அமைக்க கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது சம்பந்தமான செயற்குறிப்பு ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சாணார்பட்டி யூனியனில் செம்மண்நல்லூர் பஞ்சாயத்தில் கூடுதலான மக்கள் தொகை இருக்கிற காரணத்தினாலே பொதுமக்கள் நலன் கருதி, அதை செம்மண்நல்லூர் பஞ்சாயத்தாகவும், டி. ராமராஜபுரம் பஞ்சாயத்து ஆகவும் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நத்தம் ஊராட்சி ஒன்றியம் 21 ஊராட்சிகளையும் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் 22 ஊராட்சிகளையும் கொண்டுள்ளது. இவைகளில் மொத்தமாக முறையே 1 லட்சத்து 6 ஆயிரத்து 946, மற்றும் 86 ஆயிரத்து 716 ஆகிய மக்கள் தொகை கொண்டதாகத்தான் இருக்கிறன. இவை இரண்டையும் தனித்தனியாக பிரித்து, அதிலே ஒன்றை எடுத்து பிரிப்பதால், அதனை ஒன்றாக நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்லை. இருந்தாலும் அது பற்றி பரிசீலிப்பதற்கு உரிய நேரத்தில் அந்த தடை நீக்கப்பட்டதற்கு பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பஞ்சாயத்து யூனியன்கள் கூடியது ஒரு நத்தம் தொகுதி. ஆகையால் அதில் நிறைய கிராமங்கள் இருக்கிற காரணத்தால், அதுவும் அந்த சேத்தூர் பஞ்சாயத்தில் கூடுதலான ஜனத்தொகை இருக்கிறது. அதிலே குறிப்

பாக 20, 25 கிராமங்கள் இருக்கிற காரணத்தாலே பொது மக்களுக்கு சேவை செய்ய முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை இருப்பதால், அந்த சேத்தூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அந்த மக்களுடைய நலன் கருதி அரசு அதற்கு உடனேயே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, பிரிப்பதோ சேர்ப்பதோ அதிலே மக்கள் தொகையை மட்டும் கணக்கு எடுத்துக் கொள்ள இயலாது. நிர்வாக வசதி இருக்க வேண்டும். நிதி வருவாய் போதிய அளவுக்கு அமைய வேண்டும். இப்படிப்பட்ட நிலைகளில் ஒத்து இருக்குமானால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

நெல் அரவை ஆலைகளில் சோதனை

*1641—திரு. கோ. பூவராகன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1988–89 ஆம் ஆண்டில் மணச்சநல்லூர் (திருச்சி மாவட்டம்) நெல் அரவை ஆலைகளில் திடீர் சோதனை போடப் பட்டதால் எவ்வளவு பதுக்கல் நெல் பிடிக்கப்பட்டது?

(ஆ) அதில் பறிமுதல் செய்யப்பட்டது எவ்வளவு?

(இ) திருப்பி கொடுக்கப்பட்டது எவ்வளவு?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மச்சணநல்லூர் நெல் அரவை ஆலைகளில் திடீர் சோதனையின்போது பதுக்கப்பட்டிருந்த 2700.74 குவிண்டால் நெல்லும் மற்றும் 131.29 குவிண்டால் அரிசியும் பிடிக்கப் பட்டது.

(ஆ) பிடிக்கப்பட்ட நெல் மற்றும் அரிசி தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற தடையாணை சில வழக்குகளில் அமலில் இருந்ததால், கைப்பற்றுதலின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்க இயலாமல் அதனால் பறிமுதல் செய்யப்படாமல் இருந்தது. இவ்வினங்களில் 13—7—1989 நாளிட்ட உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி, மேல் நடவடிக்கை தொடரும்போது அரிசி ஆலை அதிபர்கள் மீண்டும் உயர்நீதிமன்றத்திலே வழக்குகள் தொடர்ந்தனர். தற்போது அதன்மீது அரசு தொடர்ந்துள்ள வழக்கில் 19–3–1990 அன்று அரசு சார்பாக தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது. எனவே மேல் நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப் படும்.

பாக 20, 25 கிராமங்கள் இருக்கிற காரணத்தாலே பொது மக்களுக்கு சேவை செய்ய முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை இருப்பதால், அந்த சேத்தூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அந்த மக்களுடைய நலன் கருதி அரசு அதற்கு உடனேயே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, பிரிப்பதோ சேர்ப்பதோ அதிலே மக்கள் தொகையை மட்டும் கணக்கு எடுத்துக் கொள்ள இயலாது. நிர்வாக வசதி இருக்க வேண்டும். நிதி வருவாய் போதிய அளவுக்கு அமைய வேண்டும். இப்படிப்பட்ட நிலைகளில் ஒத்து இருக்குமானால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

நெல் அரவை ஆலைகளில் சோதனை

*1641—திரு. கோ. பூவராகன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1988–89 ஆம் ஆண்டில் மணச்சநல்லூர் (திருச்சி மாவட்டம்) நெல் அரவை ஆலைகளில் திடீர் சோதனை போடப் பட்டதால் எவ்வளவு பதுக்கல் நெல் பிடிக்கப்பட்டது?

(ஆ) அதில் பறிமுதல் செய்யப்பட்டது எவ்வளவு?

(இ) திருப்பி கொடுக்கப்பட்டது எவ்வளவு?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மச்சணநல்லூர் நெல் அரவை ஆலைகளில் திடீர் சோதனையின்போது பதுக்கப்பட்டிருந்த 2700.74 குவிண்டால் நெல்லும் மற்றும் 131.29 குவிண்டால் அரிசியும் பிடிக்கப் பட்டது.

(ஆ) பிடிக்கப்பட்ட நெல் மற்றும் அரிசி தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற தடையாணை சில வழக்குகளில் அமலில் இருந்ததால், கைப்பற்றுதலின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்க இயலாமல் அதனால் பறிமுதல் செய்யப்படாமல் இருந்தது. இவ்வினங்களில் 13—7—1989 நாளிட்ட உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி, மேல் நடவடிக்கை தொடரும்போது அரிசி ஆலை அதிபர்கள் மீண்டும் உயர்நீதிமன்றத்திலே வழக்குகள் தொடர்ந்தனர். தற்போது அதன்மீது அரசு தொடர்ந்துள்ள வழக்கில் 19–3–1990 அன்று அரசு சார்பாக தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது. எனவே மேல் நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப் படும்.

1990 மார்ச் 24]

(இ) பிடிக்கப்பட்ட நெல் மற்றும் அரிசி இருப்பிலிருந்து ஏதும் திருப்பி கொடுக்கப்படவில்லை.

9—30 மணி

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணச்சநல்லூர் பகுதியிலே எத்தனை ஆலைகள் சோதனையிடப்பட்டது ? அங்கே இருக்கும் எல்லா ஆலைகளும் சோதனையிடப்பட்டதா? இதற்கு மேலும் பக்கத்தில் இருக்கின்ற ஆலைகளிலே அந்த சமயத்திலே சோதனையிடப்பட்டது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்ததா? அவர்கள் ஏதோ வழக்கு மன்றத்திற்குச் சென்றதால் அவர்களை மட்டும் விட்டு விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988–89 ஆம் ஆண்டுகளில் மணச்சநல்லூர் பகுதியிலே 20 ஆலைகளில் சோதனையிடப்பட்டது. 20 ஆலைகளிலும் தவறாக வைக்கப்பட்டு இருந்த நெல், அரிசி கைப்பற்றப்பட்டு இருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு கைப்பற்றப்பட்ட அரிசி அல்லது நெல் இவைகளை உடனடியாக அன்றையதினமே அவர்கள் பறிமுதல் செய்து இருந்தால் அல்லது இவ்வாறு அரசு கணக்கில் வைத்து இருந்தால் அவர்கள் கோர்ட்டுக்கு போவது நிறுத்தப்பட்டு இருக்கும். ஏதோ அவகாசம் கொடுத்து அவர்கள் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தியதால்தான் அவர்கள் கோர்ட்டுக்குப் போவது என்பது தெரிய வருகிறது. ஆகவே இனிமேலாவது, அந்த மாதிரி நடைமுறையை தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு சோதனையிடப்படும் போது பாதிக்கப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்வதற்கு சட்டப்படி, சுற்றறிக்கையின்படி அவர்களுக்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அந்த மேல் முறையீடுகள் எல்லாம் முடிந்த பின்னால்தான் கைப்பற்றுவதற்கு உண்டான வாய்ப்பு சட்டப்படி ஏற்படும். அந்த முறைப்படி அதிகாரிகள் பின்பற்றி இவற்றைக் கைப்பற்றி இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு பூவராகன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். அந்த பதுக்கி வைக்கப்பட்டு இருந்த நெல், அரிசி இவற்றை கைப்பற்றுவதற்காக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தபோது அந்த ஆலைகளுக்கு சொந்தக்காரர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும், அவர்களால் தயாரிக்கப்பட்ட சிலரும்

சேர்ந்து கொண்டு அதிகாரிகளைத் தாக்குகின்ற வகையில் அங்கே ஒரு கிளர்ச்சி நடைபெற்ற காரணத்தால் உடனடியாக ஒரு பெரும் மோதுதலைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காக அவ காசம் அளிக்கப்பட்டது. அதற்கிடையில் நானும் திருச்சிக்கு சென்று இருந்தேன். அவர்களை எல்லாம் அழைத்து வைத்து நானும் அன்றைக்கு இருந்த உணவு அமைச்சரும் அவர்களிடத் திலே பேசியும் பார்த்தோம். ஆனால் அரசினுடைய நிபந்தனை களுக்கு கட்டுப்பட மறுத்து பேசிக்கொண்டு இருக்கும்போதே நீதிமன்றத்திற்குச் சென்று விட்டார்கள். இதுதான் அப்போது நடந்தது.

காவிரியின் கடைமடைப் பகுதியில் வடிகால் வசதி

*765—திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காவிரியின் கடைமடைப் பகுதிகளில் வெள்ள நீர் சரியாக வடியாமல் பயிர் பாழாவதைத் தவிர்க்க அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காவிரி நவீனப்படுத்தும் திட்டத்தில், ஆறு மற்றும் வாய்க் கால்களை மேம்படுத்துவதுடன் வடிகால்களை மேம்படுத்து வதற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. மேற்படி திட்டத் தில் எல்லா வடிகால்களும் மேம்படுத்தப்பட உள்ளன. இத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் காவிரிகடைமடைப் பகுதிகளில் வெள்ள நீர் சரியாக வடியாமல் பயிர் பாழாவது தவிர்க்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச் சராக இருக்கும் போது 1971–72-ல் வெறும் 49.6 கோடி ரூபாய்க்கு ஒட்டுமொத்தமாக தயாரிக்கப்பட்ட அந்த திட்டம் இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு எட்டி நிற்கிறது. 20 பங்கு அதிகமாகியிருக்கிறது. இன்றைக்கு உலக வங்கி கடன் பெறுவதற்கு இதற்கு முன்னால் மத்திய அரசும், மைசூர் அரசும் முட்டுக்கட்டையாக இருந்து அந்த திட்டம் தவிர்க்கப்பட்டு, இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி இருக்கிறது. எனவே மத்திய அரசை அணுகி மைசூர் அரசை அணுகி உடனடி யாக ஒப்புதல் பெற்று உலக வங்கி கடன் பெற்று அந்தத் திட் டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

சேர்ந்து கொண்டு அதிகாரிகளைத் தாக்குகின்ற வகையில் அங்கே ஒரு கிளர்ச்சி நடைபெற்ற காரணத்தால் உடனடியாக ஒரு பெரும் மோதுதலைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காக அவ காசம் அளிக்கப்பட்டது. அதற்கிடையில் நானும் திருச்சிக்கு சென்று இருந்தேன். அவர்களை எல்லாம் அழைத்து வைத்து நானும் அன்றைக்கு இருந்த உணவு அமைச்சரும் அவர்களிடத் திலே பேசியும் பார்த்தோம். ஆனால் அரசினுடைய நிபந்தனை களுக்கு கட்டுப்பட மறுத்து பேசிக்கொண்டு இருக்கும்போதே நீதிமன்றத்திற்குச் சென்று விட்டார்கள். இதுதான் அப்போது நடந்தது.

காவிரியின் கடைமடைப் பகுதியில் வடிகால் வசதி

*765—திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காவிரியின் கடைமடைப் பகுதிகளில் வெள்ள நீர் சரியாக வடியாமல் பயிர் பாழாவதைத் தவிர்க்க அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காவிரி நவீனப்படுத்தும் திட்டத்தில், ஆறு மற்றும் வாய்க் கால்களை மேம்படுத்துவதுடன் வடிகால்களை மேம்படுத்து வதற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. மேற்படி திட்டத் தில் எல்லா வடிகால்களும் மேம்படுத்தப்பட உள்ளன. இத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் காவிரிகடைமடைப் பகுதிகளில் வெள்ள நீர் சரியாக வடியாமல் பயிர் பாழாவது தவிர்க்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச் சராக இருக்கும் போது 1971–72-ல் வெறும் 49.6 கோடி ரூபாய்க்கு ஒட்டுமொத்தமாக தயாரிக்கப்பட்ட அந்த திட்டம் இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு எட்டி நிற்கிறது. 20 பங்கு அதிகமாகியிருக்கிறது. இன்றைக்கு உலக வங்கி கடன் பெறுவதற்கு இதற்கு முன்னால் மத்திய அரசும், மைசூர் அரசும் முட்டுக்கட்டையாக இருந்து அந்த திட்டம் தவிர்க்கப்பட்டு, இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி இருக்கிறது. எனவே மத்திய அரசை அணுகி மைசூர் அரசை அணுகி உடனடி யாக ஒப்புதல் பெற்று உலக வங்கி கடன் பெற்று அந்தத் திட் டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைசூர் அரசு என்று ஒன்று இல்லை. இருந்தால் அணுகுவோம். (சிரிப்பு).

9—35 மணி

திரு. மா. மணிமாறன் ; மன்னிக்கவும். கர்நாடக அரசாங்கம் இரண்டு தடவை அன்றைக்கும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலம் கடந்த முயற்சி. (சிரிப்பு).

திரு. மா. மணிமாறன் : எனவே, உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் தண்ணீர் வந்தாலும் அங்கு தேங்குகிறது; மழை பெய்கின்ற நேரத்தில் உடனடியாகத் தண்ணீர் தேங்குகிறது. வருகின்ற தண்ணீரும் தேங்குகிறது. பல இலட்சம் ஏக்கர் பாழ்பட்டு ஆண்டுக்காண்டு இதே தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற அந்த மக்களுக்குப் பாதுகாப்பாக உடனடியாக உலக வங்கியிலிருந்து நிதியைப் பெற்று திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், சென்ட்ரல் வாட்டர் கமிஷனிடமிருந்து பிறகு டெக்னிக்கல் கமிட்டிக்குச் சென்று, இப்போது அது பிளானிங் கமிஷனிலே இருக்கிறது. பிளானிங் கமிஷனுடைய பரிந்துரை கிடைத்த பிறகு, அது அமைச்சரவைக்குச் சென்று பிறகுதான் நமக்குக் கிடைக்கும். எனவே அதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

மின் அழுத்தக் குறைவு

*1900—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடக்கன்குளம் இராதாபுரம் தொகுதி காவல்கிணறு பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் மின்சாரம் முழுமையாக தடைபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நடவடிக்கை எடுத்து தடையில்லாமல் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைசூர் அரசு என்று ஒன்று இல்லை. இருந்தால் அணுகுவோம். (சிரிப்பு).

9—35 மணி

திரு. மா. மணிமாறன் ; மன்னிக்கவும். கர்நாடக அரசாங்கம் இரண்டு தடவை அன்றைக்கும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலம் கடந்த முயற்சி. (சிரிப்பு).

திரு. மா. மணிமாறன் : எனவே, உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் தண்ணீர் வந்தாலும் அங்கு தேங்குகிறது; மழை பெய்கின்ற நேரத்தில் உடனடியாகத் தண்ணீர் தேங்குகிறது. வருகின்ற தண்ணீரும் தேங்குகிறது. பல இலட்சம் ஏக்கர் பாழ்பட்டு ஆண்டுக்காண்டு இதே தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற அந்த மக்களுக்குப் பாதுகாப்பாக உடனடியாக உலக வங்கியிலிருந்து நிதியைப் பெற்று திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், சென்ட்ரல் வாட்டர் கமிஷனிடமிருந்து பிறகு டெக்னிக்கல் கமிட்டிக்குச் சென்று, இப்போது அது பிளானிங் கமிஷனிலே இருக்கிறது. பிளானிங் கமிஷனுடைய பரிந்துரை கிடைத்த பிறகு, அது அமைச்சரவைக்குச் சென்று பிறகுதான் நமக்குக் கிடைக்கும். எனவே அதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

மின் அழுத்தக் குறைவு

1900—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடக்கன்குளம் இராதாபுரம் தொகுதி காவல்கிணறு பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் மின்சாரம் முழுமையாக தடைபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நடவடிக்கை எடுத்து தடையில்லாமல் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப் பகுதிகளில் சீரான மின் அழுத்தம் பராமரிக்கப் படுவதற்காக புதிய இரு மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மூன்று மின்மாற்றி அமைப்பதற்கான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கியுள்ளன. இப்பகுதி களில் மின் தடைகளை தவிர்ப்பதற்காக பனகுடி கேப்- (லெவஞ்சிபுரம்) இருப்புப்பாதை பகுதியில் மேலும் ஒரு புதை மின்வடம் (Underground Cable) போடப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இத்தனை முயற்சிகளை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆனால் இங்கே கேள்வி யிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற அந்த காவல்கிணறு பகுதியிலே தான் மகேந்திரகிரி இருக்கிறது. ராக்கெட் ஆராய்ச்சி நிலை யமும் அங்கேதான் இருக்கிறது. எனவே, வருங்காலத்திலேயும் அதிகமாக மின்சாரம் தேவைப்படுகிற காரணத்தினாலே பக்கத் தில் வர இருக்கின்ற கூடங்குளத்தை விரைவு படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இது குறித்து அரசு முயற்சிக்கும்.

கீழ்பவானி பாசனத்தின் ஆயக்கட்டு பகுதிகளை விரிவு படுத்துதல்

*2087—திரு. ஏ. கணேசமூர்த்தி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்பவானி பாசனத்தின் ஆயக்கட்டுப் பகுதி தற் போது விரிவாக்கப்பட்டு அதிகமான நிலப்பரப்பிற்கு அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலத்திற்கு விரிவாக் கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கீழ்பவானி திட்டத்தில் புதியதாக 20,419 ஏக்கர் நிலங்களை சேர்ப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள் ளது.

திரு. ஏ. கணேசமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி பாசன ஆயக்கட்டு 2 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் என்றாலும், கடந்த 35 ஆண்டுகளில் அதிலே

(ஆ) இப் பகுதிகளில் சீரான மின் அழுத்தம் பராமரிக்கப் படுவதற்காக புதிய இரு மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மூன்று மின்மாற்றி அமைப்பதற்கான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கியுள்ளன. இப்பகுதிகளில் மின் தடைகளை தவிர்ப்பதற்காக பனகுடி கேப்-(லெவஞ்சிபுரம்) இருப்புப்பாதை பகுதியில் மேலும் ஒரு புதை மின்வடம் (Underground Cable) போடப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இத்தனை முயற்சிகளை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆனால் இங்கே கேள்வியிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற அந்த காவல்கிணறு பகுதியிலே தான் மகேந்திரகிரி இருக்கிறது. ராக்கெட் ஆராய்ச்சி நிலையமும் அங்கேதான் இருக்கிறது. எனவே, வருங்காலத்திலேயும் அதிகமாக மின்சாரம் தேவைப்படுகிற காரணத்தினாலே பக்கத்தில் வர இருக்கின்ற கூடங்குளத்தை விரைவு படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இது குறித்து அரசு முயற்சிக்கும்.

கீழ்பவானி பாசனத்தின் ஆயக்கட்டு பகுதிகளை விரிவு படுத்துதல்

*2087—திரு. ஏ. கணேசமூர்த்தி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்பவானி பாசனத்தின் ஆயக்கட்டுப் பகுதி தற்போது விரிவாக்கப்பட்டு அதிகமான நிலப்பரப்பிற்கு அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலத்திற்கு விரிவாக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கீழ்பவானி திட்டத்தில் புதியதாக 20,419 ஏக்கர் நிலங்களை சேர்ப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. கணேசமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி பாசன ஆயக்கட்டு 2 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் என்றாலும், கடந்த 35 ஆண்டுகளில் அதிலே

1990 மார்ச் 24]

வீட்டு மனைகளாகவும், கால்நடைத் தொழுவங்களாகவும் மாறியிருக்கிற நிலங்களை ஆயக்கட்டுப் பகுதியிலிருந்து அரசு நீக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது குறித்து புலத் தணிக்கையாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுடைய ஒரு அறிக்கையை 30-6-1990-க்குள் தர வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது.

திரு. ஏ. கணேசமூர்த்தி : தலைவர் அவர்களே, தற்போது கீழ்பவானி பாசனப் பகுதியில் உரிய ஆயக்கட்டுப் பகுதி எவ்வளவு ஏக்கர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தற்போது பாசனம் பெறுவது, ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 909 ஏக்கர்.

தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி மக்கள்

*5241---திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி மக்கள் எந்தெந்த பகுதிகளில் வாழ்கிறார்கள்?

(ஆ) வேதாரண்யம் தொகுதி கோடிக்காடு கிராமத்தில் ஆதிவாசிகள் வசிப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) அவர்களுக்கு அரசு சலுகைகளும் முன்னேற்றத் திட்டங்களும் ஏன் செயல்படுத்தப்படவில்லை.?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) 1931 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி, தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி (பழங்குடி) மக்கள் 6,012 பேர்கள் சீர்காழி, மயிலாடுதுறை (மாயூரம்), திருவிடைமருதூர், கும்பகோணம், நன்னிலம், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, மன்னார்குடி, திருவாரூர், நாகப்பட்டிணம், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி ஆகிய வட்டங்களில் வாழ்கின்றனர்.

(ஆ) மற்றும் (இ) வேதாரண்யம் தொகுதி கோடிக்காடு கிராமத்தில் வசிக்கும் 201 மக்கள் ''சீந்தி வலையர்'' எனப்படும் இனத்தைச் சார்ந்தவர்கள். இந்த இனம் பழங்குடியினர் பட்டியலில் இடம் பெறவில்லை.

1990 மார்ச் 24]

வீட்டு மனைகளாகவும், கால்நடைத் தொழுவங்களாகவும் மாறியிருக்கிற நிலங்களை ஆயக்கட்டுப் பகுதியிலிருந்து அரசு நீக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது குறித்து புலத் தணிக்கையாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுடைய ஒரு அறிக்கையை 30-6-1990-க்குள் தர வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது.

திரு. ஏ. கணேசமூர்த்தி : தலைவர் அவர்களே, தற்போது கீழ்பவானி பாசனப் பகுதியில் உரிய ஆயக்கட்டுப் பகுதி எவ்வளவு ஏக்கர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தற்போது பாசனம் பெறுவது, ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 909 ஏக்கர்.

தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி மக்கள்

*5241—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி மக்கள் எந்தெந்த பகுதிகளில் வாழ்கிறார்கள்?

(ஆ) வேதாரண்யம் தொகுதி கோடிக்காடு கிராமத்தில் ஆதிவாசிகள் வசிப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) அவர்களுக்கு அரசு சலுகைகளும் முன்னேற்றத் திட்டங்களும் ஏன் செயல்படுத்தப்படவில்லை.?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) 1931 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி, தஞ்சை மாவட்டத்தில் ஆதிவாசி (பழங்குடி) மக்கள் 6,012 பேர்கள் சீர்காழி, மயிலாடுதுறை (மாயூரம்), திருவிடைமருதூர், கும்பகோணம், நன்னிலம், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, மன்னார்குடி, திருவாரூர், நாகப்பட்டிணம், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி ஆகிய வட்டங்களில் வாழ்கின்றனர்.

(ஆ) மற்றும் (இ) வேதாரண்யம் தொகுதி கோடிக்காடு கிராமத்தில் வசிக்கும் 201 மக்கள் ''சீந்தி வலையர்'' எனப்படும் இனத்தைச் சார்ந்தவர்கள். இந்த இனம் பழங்குடியினர் பட்டியலில் இடம் பெறவில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற 1,012 பேர்கள், அதிலே வேதாரண்யம் பகுதியில் மட்டும் ஆதிவாசிகளாக 201 பேர் இருப்பதாக அரசு தெரிவித்திருக்கிறது. அந்த 201 பேரும் ''சீந்தி வலையர்'' என்ற கம்யூனிட்டி என்றும் அரசு தெரிவிக்கிறது. அவர்கள் இன்னமும் பட்டியலில் இடம் பெறாதது அவர்களுடைய குற்றம் கிடையாது. அந்த மக்களை உடனடியாக, பிரெசிடென்ஷியல் நோட்டிபிகேஷன் மூலமாக பட்டியலில் இடம் பெறச் செய்து, அவர்களுக்குரிய சலுகைகளை உடனடியாக, அந்த டிரைபல்ஸ்"க்கு நிச்சயம் தர வேண்டும். அன்றைக்கு சர்தார் வேதரத்தினம் பிள்ளை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது அவர்களுக்கு வீடு கொடுத்ததுதான் 30, 40 ஆண்டுகளுக்கு முன்னால். அதற்குப் பின்னால் அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அங்கே கிடையாது, என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுடைய இன்றைய சூழ்நிலைகளைத் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தினுடைய ஆந்திரபாலஜிஸ்ட் யாரையாவது அணுகி இந்த அரசு தமிழ் பல்கலைக்கழகத்தின் மூலமாகவும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தமிழக அரசு அதை எடுத்துப்பார்த்துமத்திய அரசுக்கு உணர்த்துவதற்கான நடவடிக்கையை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்ற காரணத்தாலும் அவர்கள் மிகவும் அழுத்தப்பட்ட நிலையில் உள்ள சமுதாயத்தினராக இருக்கின்ற காரணத்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு மத்திய அரசோடு தொடர்புகொண்டு ஆவன செய்ய இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய முறையிலே அனுதாபத்தோடு கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். அதேபோல் தான் நாகைத் தொகுதியில் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் அச்சக்கரையார் என்ற ஒரு பகுதியினர் ஒரு சிறிய பகுதி மக்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களை எஸ். சி. யாக கூட இப்போது அங்கீகரிக்கப்படவில்லை. அதையும் பரிசீலித்து அவர்களை மிக மிக பின்தங்கிய பட்டியலிலாவது, அல்லது எஸ். சி. பட்டியலிலாவது சேர்ப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா? சிறு பகுதி எண்ணிக்கையில் அச்சக்கரையார் என்பது நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அந்தப் பகுதி மக்களுக்கு இந்தச் சலுகைகளை கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*261—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு முன் அரசு அனுமதி வழங்கிய பெரியார் மாவட்டம் ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு கொடைமேடு அருகில் பவானி ஆற்றிலிருந்து நீர் பெறப்படும். இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இம் மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப அனுமதி, வாரியத்தால் வழங்கப்பட்டப் பின், பணிகள் தொடங்கப்படும். இத்திட்டம் 1993 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு தொகை எவ்வளவு? இந்த திட்டத்தால் எத்தனை கிராமங்கள் பயன் பெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு 1.08 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 131 கிராமங்கள் பயன் அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக 1-9-1989 ஆம் தேதி செயற்பொறியாளர் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த செயற்பொறியாளர் அலுவலகம் 9-9-1989-ல் ஏனோ அங்கே இருந்து மாற்றப்பட்டு விட்டது. ஆகவே அந்த செயற்பொறியாளர் அலுவலகத்தினை

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*261—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு முன் அரசு அனுமதி வழங்கிய பெரியார் மாவட்டம் ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு கொடைமேடு அருகில் பவானி ஆற்றிலிருந்து நீர் பெறப்படும். இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இம்மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப அனுமதி, வாரியத்தால் வழங்கப்பட்டப் பின், பணிகள் தொடங்கப்படும். இத்திட்டம் 1993 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு தொகை எவ்வளவு? இந்த திட்டத்தால் எத்தனை கிராமங்கள் பயன் பெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு 1.08 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 131 கிராமங்கள் பயன் அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக 1–9–1989 ஆம் தேதி செயற்பொறியாளர் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த செயற்பொறியாளர் அலுவலகம் 9–9–1989-ல் ஏனோ அங்கே இருந்து மாற்றப்பட்டு விட்டது. ஆகவே அந்த செயற்பொறியாளர் அலுவலகத்தினை

[1990 மார்ச் 24

அங்கே உருவாக்க குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத் திட்டத்தை விரைவுப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மணப்பாறை நகருக்குக் குடிநீர்.

*626—திரு பாப்பா சுந்தரம் :
திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை தொகுதி, மணப்பாறை நகருக்கு காவிரியில் இருந்து குடிநீர் கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மணப்பாறை நகராட்சி மற்றும் 59 வழியோரக் கிராமங்களுக்கு தொம்பேச்சியார் ஆற்றினை ஆதாரமாகக் கொண்ட ஒரு குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ. 548.52 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தீட்டப் பட்டது திருத்தி அமைக்கப்பட்ட உலக வங்கி உதவியுடன் செயல் படுத்தப்படும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் துப்புறவுத் திட்டத்தில் இத்திட்டத்தினை சேர்த்து மத்திய அரசு மற்றும் உலக வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் இத்திட்டத்தினை அமுலாக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடனாக பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார் கள். உலக வங்கி அதற்கு அனுமதி அளித்துள்ளதா? எத்தனை ஆண்டு காலத்திற்குள்ளாக இதை முடிப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை தெரிவிக்க

அங்கே உருவாக்க குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத் திட்டத்தை விரைவுப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மணப்பாறை நகருக்குக் குடிநீர்.

*626—திரு பாப்பா சுந்தரம் :
திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை தொகுதி, மணப்பாறை நகருக்கு காவிரியில் இருந்து குடிநீர் கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மணப்பாறை நகராட்சி மற்றும் 59 வழியோரக் கிராமங்களுக்கு தொம்பேச்சியார் ஆற்றினை ஆதாரமாகக் கொண்ட ஒரு குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ. 548.52 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தீட்டப் பட்டது திருத்தி அமைக்கப்பட்ட உலக வங்கி உதவியுடன் செயல் படுத்தப்படும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் துப்புறவுத் திட்டத்தில் இத்திட்டத்தினை சேர்த்து மத்திய அரசு மற்றும் உலக வங்கி யின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் இத்திட்டத்தினை அமுலாக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடனாக பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார் கள். உலக வங்கி அதற்கு அனுமதி அளித்துள்ளதா? எத்தனை ஆண்டு காலத்திற்குள்ளாக இதை முடிப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை தெரிவிக்க

முடியுமா? அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம். இது நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் சேர்ந்து இருக்கின்ற பல்வேறு கிராமங்களையும் சேர்த்து உள்ள ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம். யார் பராமரிப்பது என்ற குறை இருக்கிறது. அதைப் பற்றி அரசு முடிவு எடுத்திருக்கிறதா என்ற விவரத்தை தெரிவிக்க முடியுமா?

9-45 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப்பற்றி ஆய்வதற்காக மத்திய அரசு மற்றும் உலக வங்கியின் ஒப்புதலுக்காக 15–11–1989-ல் அரசிலிருந்து அவர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி உலக வங்கியின் ஒப்புதலைத் துரிதமாகப் பெறும் நோக்கத்துடன் தலைமைச் செயலாளரின் தலைமையில் அதிகாரிகள் குழு அமெரிக்கா சென்று பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. மணப்பாறை உட்பட திருத்தி அமைக்கப்பட்ட உலக வங்கித் திட்டம் முன்பிருந்தபடி, மதுரை, கோவை, சேலம் ஆகிய நகரங்களுக்கு குடிநீர் வழங்குவதுடன் மாற்றியமைக்கப்பட்ட வடிவில், கூடுதலாக பொள்ளாச்சி, மணப்பாறை, சங்கரநயினார்கோயில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய 6 நகரங்களுக்கும் குடிநீர் வழங்கும். மணப்பாறை, பொள்ளாச்சி ஆகிய நகரங்களுக்கு திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, உலக வங்கியின் ஒப்புதல் பெற்ற பிறகு, இந்தப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிநீர் திட்டத்திற்கு கிட்டத்தட்ட குளித்தலையிலிருந்து மணப்பாறை வர வேண்டுமென்றால் 26 மைலுக்கு மேல் ஆகிறது. நடுவிலே இப்போது தோகைமலை என்கின்ற ஒரு பேரூராட்சியைத் தனியாகப் பிரித்து இருக்கிறார்கள். இதற்காக ஏற்கெனவே 14 வருடங்களுக்கு முன்பாக கலைஞர் ஆட்சியிலே கிராஷ் புரோகிராம் என்று மத்திய சர்க்கார் ஒதுக்கியிருந்தது. அந்தத் திட்டத்தில் இதுவும் சேர்ந்து இருந்தது. அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து தனியாக வினா எழுப்புமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[1990 மார்ச் 24

மாதவரம் பால் பண்ணைக்குச் சொந்தமான காலியிடங்கள், கட்டிடங்களில் சிறு தொழில்கள்.

*2177—திரு. டி. கே. பழனிச்சாமி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தற்சமயம் பயனற்ற நிலையில் உள்ள மாதவரம் பால் பண்ணைக்குச் சொந்தமான காலியிடங்களிலும், கட்டிடங்களிலும் சிறு தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாதவரம் பால் பண்ணையை தற்பொழுது புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு மாற்றவிருப்பதால் அங்கு சிறு தொழில் தொடங்க அனுமதிக்கவியலாது. இக்கட்டிடங்களில் தற்பொழுது பயனற்றவை என்று எதுவுமில்லை. மேலும் சிறுதொழில்கள் தொடங்கினால், கால்நடை வளர்ப்பும், சுற்றுப் புறச் சூழ்நிலையும், பால் பெருக்கமும் பாதிக்கப்படுவதுடன் மறைப்பு நிலையும் (privacy) பாதிக்கப்படும் என்று கருதப்படுகின்றது.

திரு. டி கே. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் அவரை நான் அழைத்துச் சென்றிருந்தேன். அங்கேயுள்ள காலி இடங்களை அவர்கள் பார்வையிட்டார்கள். பல கோடிக்கு சொந்தமான காலியிடங்கள், எதற்கும் உபயோகமில்லாமல், நல்ல கட்டிடங்களாக விளங்கி வருகிறது. அந்த இடத்தை கால் நடை பராமரிப்புத் துறை பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்குவது என்பது சரியானதா என்பதை யோசிக்க வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப் பற்று இருக்கிறார்கள். அங்கே ஒரு தொழில் நுட்பக் கல்லூரி ஏற்பாடு செய்தால் சிறப்பாக இருக்கும் என்றுதான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். இது குறித்து அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. நே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் இருக்கின்ற 343 ஏக்கரில் 157 ஏக்கர் 92 சென்ட்டினை இன்றைக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு மாற்றம் செயயப்பட்டிருக்கிறது. மானாவாரி நிலமாக 18 ஏக்கர் 26 சென்ட்டும் சாகுபடியிலுள்ள பாசன நிலம் 9 ஏக்கரும் அதைப்போல அங்கிருக்கின்ற கட்டிடங்களும் சாலைகளும், எருக்குழிகளும் மற்ற ஏரிகள் உட்பட 165 ஏக்கர் என்றும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்காக _ ஒதுக்கப்பட்

டிருக்கிறது. மேலும் புதிதாக ஆரம்ப்பிக்கப்பட்ட அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு அதிலிருந்து கிடேரி வளர்ப்புத் திட்டம் ஒன்றும், திரவ நைட்ரஜன் உற்பத்திச்சாலை ஒன்றும், உரை விந்து வங்கி ஒன்றும் இப்படி படிப்படியாக அங்கே ஏற்படுத்தப் பட்டிருப்பதால் தனியாக யாருக்கும் சிறு தொழில் நடத்துவதற்கு அனுமதிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பால் பண்ணையைச் சேர்ந்த அதிகாரி களுடைய கவனக் குறைவின் காரணமாக காலி இடங்களில், 2, 3 இடங்களில், குடிசைகளைப் போட்டு சிலர் வசித்து வரு கிறார்கள். பலமுறை அந்த அதிகாரிகளிடத்திலே சொல்லி இருக் கிறேன். இன்னும் அந்த காலி நிலங்கள் இருக்குமேயானால் சமுதாயத்திலே இருக்கக்கூடிய சமூக விரோதிகள் நிச்சயமாக அந்த இடங்களில் குடிசை போட்டு வியாபாரம் செய்து விடு வார்கள். உடனடியாக அந்த இடத்தை பாதுகாத்திட தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வ தோடு எப்படியாவது அந்தக் கட்டிடங்களில் நல்ல வருமானம் வரக்கூடிய தொழில்களையாவது ஆரம்பிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்ப பட்டு குடிசைகளெல்லாம் அகற்றப்படும் என்பதைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

9-50 மணி

திரு. சோ. அழகர்சாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வி என்றாலும் முக்கிய மான விஷயமும் ஆகும். ஏனென்றால், ஏற்கெனவே பெரிய ஒரு பண்ணையை ஆரம்பிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடம் அந்த மாதவரம் பால் பண்ணையினுடைய இடம். மகாராஷ்டிர மாநிலத்தில் பம்பாய் போன்ற இடங்களுக்குச் சென்ற நமது மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கு பார்த்திருக் கலாம். பம்பாய்க்கு வெளியே 7-8 கிலோ மீட்டர் தூரத்தில் ஆரே பால் பண்ணை என்று அமைத்து மிக நவீனமான முறை யில் பெரிய அளவில் அதை அமைத்து சிறந்த முறையில் பயன் படுத்தி வருகிறார்கள். அதே மாதிரி நமது தமிழகத்திலும் ஒரு முன் மாதிரியாக பண்ணையை ஏற்படுத்துவது மட்டுமல்ல, மிக மிக முக்கியமான, அனைவருக்கும் தேவையான, குழந்தை களுக்குத் தேவையான பாலைச் சீராக வழங்க முன்வர வேண்டும். நாம் காலையில் எழுந்து காப்பி, டீ குடிக்கும் போது பார்க்க லாம். 3 நாளைக்கு முன்னால் கறந்த பாலைத்தான் பதப்படுத்தி இங்கே கொடுக்கிறார்கள். ஆகவே அன்றாடம் பால் கிடைக்கக் கூடிய வகையில், மாடுகளை இந்த கால்நடைத் துறையே வளர்த்து பாலை எடுத்துக் கொடுக்கலாம். இவ்வளவு பெரிய கட்டிடங்கள் கட்டி வீணாகப் போகின்றன என்ற நிலையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாவாகவே கேட்கலாமே. நீங்கள் மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி ; ஆகவே இன்றைக்கு முன்மாதிரியான ஒரு பால் பண்ணையாக, அதாவது பம்பாய் பால் பண்ணையைப் போல இங்கே அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆவின் நிறுவனத்திற்கு என்று தனியாக நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, மீதியிருக்கிற நிலம் தான் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. கடந்த காலத்தில் மாடுகளை வைத்து வளர்த்து, பால் வழங்கப்பட்டதால் அரசுக்கு மிகவும் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால்தான், அந்த எண்ணம் கைவிடப்பட்டது. மேலும் முன் மாதிரியான பால் பண்ணை ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மூன்றாவது பால் பெருக்கத் திட்டத்தின் கீழ் சோளிங்கரில் பால் பண்ணை அமைய இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வள்ளுவர் கோட்டம்.

*5596—திரு. சா. கணேசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வள்ளுவர் கோட்டம் மேலும் பொலிவூட்டப்படுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்தின் ஒரு பகுதியிலே, திருக்குறள் ஆய்வு மையம் ஒன்றை அமைத்து, திருக்குறள் பற்றி அனைத்து மொழியிலும் வந்துள்ள புத்தகங்களைச் சேகரித்து நூல் நிலையம் அமைக்கவும், குறிப்பாக தமிழறிஞர்கள் மு.வ.வின் திருக்குறள் தெளிவுரை டாக்டர் கலைஞர் அவர்களுடைய குறளோவியம் போன்ற நூற்களை அரசே அச்சிட்டு இந்த வள்ளுவர் கோட்டத்தில் மலிவு விலையில் விற்பனை செய்யவும், அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாவாகவே கேட்கலாமே. நீங்கள் மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி ; ஆகவே இன்றைக்கு முன்மாதிரியான ஒரு பால் பண்ணையாக, அதாவது பம்பாய் பால் பண்ணையைப் போல இங்கே அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆவின் நிறுவனத்திற்கு என்று தனியாக நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, மீதியிருக்கிற நிலம் தான் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. கடந்த காலத்தில் மாடுகளை வைத்து வளர்த்து, பால் வழங்கப்பட்டதால் அரசுக்கு மிகவும் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால்தான், அந்த எண்ணம் கைவிடப்பட்டது. மேலும் முன் மாதிரியான பால் பண்ணை ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மூன்றாவது பால் பெருக்கத் திட்டத்தின் கீழ் சோளிங்கரில் பால் பண்ணை அமைய இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வள்ளுவர் கோட்டம்.

*5596—திரு. சா. கணேசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வள்ளுவர் கோட்டம் மேலும் பொலிவூட்டப்படுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்தின் ஒரு பகுதியிலே, திருக்குறள் ஆய்வு மையம் ஒன்றை அமைத்து, திருக்குறள் பற்றி அனைத்து மொழியிலும் வந்துள்ள புத்தகங்களைச் சேகரித்து நூல் நிலையம் அமைக்கவும், குறிப்பாக தமிழறிஞர்கள் மு.வ.வின் திருக்குறள் தெளிவுரை டாக்டர் கலைஞர் அவர்களுடைய குறளோவியம் போன்ற நூற்களை அரசே அச்சிட்டு இந்த வள்ளுவர் கோட்டத்தில் மலிவு விலையில் விற்பனை செய்யவும், அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கேள்வி, வள்ளுவர் கோட்டத்தை மேலும் பொலிவு படுத்துவதற்கான திட்டம் இருக்கிறதா என்பதுதான். அதையொட்டி கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சா. கணேசன் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை நான் இங்கே படித்த போது அவையில் இருந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஒரு வேளை இல்லாவிட்டாலும் அந்தப் புத்தகத்தை மீண்டும் படித் திருப்பார் என்று நம்புகிறேன். தமிழ் உயர்மட்டக் குழு ஒன்றை இந்த அரசு நியமிக்க இருப்பதாகவும், வள்ளுவர் கோட்டம் உள்ளிட்ட பல மேம்பாடுகள் குறித்து அந்தக் குழு ஆய்ந்து அரசோடு ஒத்துழைத்து செயல்படும் என்றும் அந்த வரவு செலவுத் திட்ட உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வள்ளுவர் கோட்டத்தினுடைய முகப்பில், கன்னியாகுமரியில் அமைக்க இருக்கிற 133 அடி வள்ளுவர் சிலையைப் போல இங்கும் அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது 'குமரி'-க்கு மாத்திரம் தரப்படுகிற சிறப்பு. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது 'குமரி'. (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, கலைஞர்கள் எப்போதுமே குமரியைப் பற்றி நல்ல எண்ணத்தோடு பார்ப்பது உண்டு என்பதற்கு இது ஒரு சான்று, எடுத்துக் காட்டு. (சிரிப்பு) அதோடு தொடர்புடைய ஒன்று. கலைஞர் அவர்கள் கையால் ஒரு பரிசைப் பெறுகிற பாக்கியம் எனக்கு வள்ளுவர் கோட்டத்தில் கிடைத்தது. அந்த நேரத்தில் திருக்குறள் ஒலிப்பதிவு நாடாக்களை நல்லிசையோடு காற்றில் மிதந்து வருகிற அளவுக்கு ஏதாவது ஒரு நேரத்தில் ஒலி பரப்புவதாக முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருநாள் காலையிலோ மாலை நேரத்திலோ நம்முடைய குமரி அவர்கள் வள்ளுவர் கோட்டம் பக்கம் உலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். காலையிலும் மாலையிலும் அங்கே குறள் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

9–55 மணி காசிமேடு மீன்பிடித் துறைமுகம்.

*1318—திரு. இரா. மதிவாணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை காசிமேடு பகுதியில் மீன்பிடித் துறை முகம் அருகில் மீனவர்களுக்கு விசைப்படகுகள் கட்டுவதற்கு, பிங்கர் ஜட்டியும் (Finger Jetty) மற்றும் மீன் ஏலம் போடு வதற்கு தனித்தனியாக இடமும் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சென்னை மீன்பிடி துறைமுகத்தில் விசைப்படகுகளின் உபயோகத்திற்கென மூன்று பிங்கர் ஜெட்டி கள் (Finger Jetties) கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1580 ச.மீ. பரப்பளவு உள்ள மீன் ஏலமிடும் கூடம் ஏற்கனவே மீன்பிடித் துறைமுக வளாகத்தின் தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்த ஆண்டிலிருந்து துவங்கப் படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பேரவைத் தலை வர் அவர்களே, இது துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளது. எனவே அரசின் உயர்மட்டக் குழு ஆய்வு செய்து அதாவது சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் குறித்து ஒரு அறிக்கை யைத் தயாரித்து, அதன் அடிப்படையில் 6.6 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்து, அந்தத் திட்டம் மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. விரைவில் மத்திய அரசினுடைய ஒப்புதல் கிடைத்துவிடும். அவ்வாறு ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. மதிவாணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, ராயபுரம் மீன்பிடித் துறைமுகத்திற்கு வழக்கறிஞரும் பொதுவுடைமைவாதியுமான சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரை வைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பழையாறு துறைமுகத்திற்கு சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களுடைய பெயர், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு சூட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் சென்னை துறைமுகத்திற்கு சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரை வைக்கவேண்டு மென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்துக்கொண்டிருக் கிறார்கள். ஆனால் அது மத்திய அரசினுடைய பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் அவ்வாறு பெயர் சூட்டுகிற பொறுப் பும் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. ஆனால் ஏற்கனவே இருந்த மத்திய அரசு அதனை நிராகரித்துள்ளது. எனினும் உறுப்பினர் அவர்களுடைய கருத்தினைக் கவனத்தில் கொண்டு மத்திய அரசுக்கு இதனைத் தெரிவித்து வலியுறுத்துவோம்.

சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம்

*3057—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுக வேலை எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) விரைவாக முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகப் பணிகளுள் மேற்கு அலைத்தடுப்புச் சுவர், கிழக்கு அலைத்தடுப்புச் சுவர் ஆகிய இரு பணிகள் நிறைவுற்றுள்ளன. நில சீராக்கப்பணி (Reclamation) மற்றும் கரையோரச் சுவர் (Quay wall) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 412 மீட்டர் நீளத்திற்கு கரையோரச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) விரைவாக முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற பெரும் பான்மையான மீனவர்கள், ஏற்கெனவே இருந்த மீன்பிடித் துறைமுகம் இதுவரையில் செயல்படாத காரணத்தால் கேரள மாநிலத்தில் உள்ள எர்ணாகுளம் போன்ற இடங்களுக்குச் சென்று மீன்பிடிக்க, அங்கேயுள்ள மீனவர்களுக்கும் நம்மவர்களுக்கும் தகராறு ஏற்படக்கூடிய வகையில் பல பிரச்சினைகள் அடிக்கடி உருவாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பழையாறு துறைமுகத்திற்கு சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களுடைய பெயர், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு சூட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் சென்னை துறைமுகத்திற்கு சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரை வைக்கவேண்டு மென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்துக்கொண்டிருக் கிறார்கள். ஆனால் அது மத்திய அரசினுடைய பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் அவ்வாறு பெயர் சூட்டுகிற பொறுப் பும் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. ஆனால் ஏற்கனவே இருந்த மத்திய அரசு அதனை நிராகரித்துள்ளது. எனினும் உறுப்பினர் அவர்களுடைய கருத்தினைக் கவனத்தில் கொண்டு மத்திய அரசுக்கு இதனைத் தெரிவித்து வலியுறுத்துவோம்.

சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம்

*3057—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுக வேலை எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) விரைவாக முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகப் பணிகளுள் மேற்கு அலைத்தடுப்புச் சுவர், கிழக்கு அலைத்தடுப்புச் சுவர் ஆகிய இரு பணிகள் நிறைவுற்றுள்ளன. நில சீராக்கப்பணி (Reclamation) மற்றும் கரையோரச் சுவர் (Quay wall) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 412 மீட்டர் நீளத்திற்கு கரையோரச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) விரைவாக முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற பெரும் பான்மையான மீனவர்கள், ஏற்கெனவே இருந்த மீன்பிடித் துறைமுகம் இதுவரையில் செயல்படாத காரணத்தால் கேரள மாநிலத்தில் உள்ள எர்ணாகுளம் போன்ற இடங்களுக்குச் சென்று மீன்பிடிக்க, அங்கேயுள்ள மீனவர்களுக்கும் நம்மவர்களுக்கும் தகராறு ஏற்படக்கூடிய வகையில் பல பிரச்சினைகள் அடிக்கடி உருவாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்

டத்தில் உள்ள ஏராளமான மீனவர்கள் அதிகமான மீன்களைப் பிடித்து நம்முடைய பகுதியிலேயே வியாபாரம் செய்கிற வகையில் அந்தத் துறைமுகப் பணியை இந்த ஆண்டே முடித்திடவும், மேலும் இனையம் போன்ற இடங்களில் அதிகமான அளவில் சின்ன மீன்பிடித் துறைமுகங்களை அமைத்திடவும் இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமுட்டம் துறைமுகப் பணி 1982-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பல்வேறு காரணத்தால் அந்தப் பணிகள் விரைவாக நடைபெறாத காரணத்தால் அதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்தப் பகுதி மீனவர்களுக்கு பயன் அளிக்கிற வகையில் விரைவில் அந்தத் துறைமுகத்தைக் கட்டி முடிக்கவேண்டுமென்று அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு 234 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கி, அதாவது மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் என்ற அளவுக்குரிய நிதியுடன் இந்தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இப்போது மறு மதிப்பீட்டின் அடிப்படையில் 684 இலட்சம் ரூபாய் ஆகிறது. கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் அரசாணை 72-ன் மூலம் ரூபாய் 684 இலட்சத்திற்கு 6—2—1990 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு விரைவாக பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகிற ஜூன் 1990-க்குள்ளாக அந்தப் பணிகள் முடிவடைந்து விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடிப்படை வசதி ரோடு வசதி போன்ற மற்றைய பணிகள் வருகிற ஏப்ரல் 1991-க்குள்ளாக நிச்சயமாக முடிவடைந்துவிடும். அது மீனவர்களுக்குப் பயன்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

10—00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கியுள்ள துணிகள் மதிப்பு.

*1536—திரு. எஸ் எஸ். கருப்பசாமி,
திரு. என். பழனிவேல்,
திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1-1-1989 அன்றுள்ளபடி, மாநில முழுவதுமுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கியுள்ள துணிகளின் மொத்த மதிப்பு என்ன ?

டத்தில் உள்ள ஏராளமான மீனவர்கள் அதிகமான மீன்களைப் பிடித்து நம்முடைய பகுதியிலேயே வியாபாரம் செய்கிற வகையில் அந்தத் துறைமுகப் பணியை இந்த ஆண்டே முடித்திடவும், மேலும் இனையம் போன்ற இடங்களில் அதிகமான அளவில் சின்ன மீன்பிடித் துறைமுகங்களை அமைத்திடவும் இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமுட்டம் துறைமுகப் பணி 1982-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பல்வேறு காரணத்தால் அந்தப் பணிகள் விரைவாக நடைபெறாத காரணத்தால் அதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்தப் பகுதி மீனவர்களுக்கு பயன் அளிக்கிற வகையில் விரைவில் அந்தத் துறைமுகத்தைக் கட்டி முடிக்கவேண்டுமென்று அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு 234 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கி, அதாவது மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் என்ற அளவுக்குரிய நிதியுடன் இந்தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இப்போது மறு மதிப்பீட்டின் அடிப்படையில் 684 இலட்சம் ரூபாய் ஆகிறது. கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் அரசாணை 72-ன் மூலம் ரூபாய் 684 இலட்சத்திற்கு 6—2—1990 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு விரைவாக பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகிற ஜூன் 1990-க்குள்ளாக அந்தப் பணிகள் முடிவடைந்து விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடிப்படை வசதி ரோடு வசதி போன்ற மற்றைய பணிகள் வருகிற ஏப்ரல் 1991-க்குள்ளாக நிச்சயமாக முடிவடைந்துவிடும். அது மீனவர்களுக்குப் பயன்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

10—00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கியுள்ள துணிகள் மதிப்பு.

*1536—திரு. எஸ் எஸ். கருப்பசாமி,
திரு. என். பழனிவேல்,
திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1-1-1989 அன்றுள்ளபடி, மாநில முழுவதுமுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கியுள்ள துணிகளின் மொத்த மதிப்பு என்ன ?

1990 மார்ச் 24]

(ஆ) தேங்கியுள்ள துணிகளை விற்பனை செய்வதற்கு அரசு ஏதேனும் சிறப்புத் திட்டத்தை மேற்கொள்ள இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1-1-1989 அன்று நிலவரப்படி மாநில முழுவதுமுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கியுள்ள துணிகளினுடைய மொத்த மதிப்பு ரூ. 5,558.99 இலட்சம் ஆகும்.

(ஆ) மற்றும் (இ) தேங்கிக் கிடக்கின்ற துணிகளை மட்டுமல்லாமல் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற புதிய துணிகளின் தேக்கம் இல்லாமல் விற்பனை செய்வதற்கு தள்ளுபடி மானியமாக 90 நாட்கள் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், மீண்டும் அந்த 90 நாட்கள் வழங்கப்பட்டு கைத்தறி விழா, பேரறிஞர் பிறந்த நாள், தந்தை பெரியார் பிறந்த நாள், தீபாவளி, பொங்கல் பண்டிகை காலங்களை முன்னிட்டு 90 நாட்கள் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டு கடந்த ஆண்டைவிட அதிகமான துணியை விற்பனை செய்துள்ளோம்.

திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி விற்பனைக்கு ஆண்டு ஒன்றுக்கு 90 நாட்கள் 20 சதவிகிதம் மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்களுடைய அறிக்கைப்படி ஏறத்தாழ 55 கோடி ரூபாய் அளவுக்கு மாநிலத்தில் கைத்தறித் துணி தேங்கியிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். வருடம் ஒன்றுக்கு 90 நாட்கள், கைத்தறி வாரம், பண்டிகை தினங்களில் கொடுப்பது என்பதற்குப் பதிலாக மாதா மாதம் 1-ம் தேதி முதல் 5-ம் தேதி வரை கொடுத்து, வருடத்திற்கு 60 தினங்களுக்கும், தீபாவளி பண்டிகை, பொங்கல் பண்டிகை போன்றவற்றிற்கு 30 நாட்களுக்கும் கொடுத்து விற்பனை செய்தால் சீரான ஒரு விற்பனை இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்கு அரசினுடைய சிறப்பு குறிப்பு ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் 90 நாட்கள் தள்ளுபடி வழங்கப்படும். அந்த 90 நாட்கள் தள்ளுபடி முறையாக சீரமைக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதற்கேற்ப தொடர்ந்து இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமான கேள்வி. ஒரு ஆண்டுக்கு முன்பாகப் போடப்பட்ட கேள்வி. அதற்கு இன்றையதினம் அமைச்சர் அவர்கள் 1—1—1989 அன்று நிலவரம் கணக்குப்படி $5\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். இன்றைய நிலவரம் என்ன என்று எங்களுக்குத் தெரியபடுத்தவேண்டும் அத்தோடு இந்த தேங்கிக்கிடக்கக்கூடிய துணியால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை சரி செய்வதற்கு அரசு மானியத் தொகை கொடுப்பதோடு இந்த தேங்கிக் கிடக்கின்ற துணிகளை விற்பனை செய்வ தற்கு தமிழ்நாட்டில் உள்ள ரேஷன் கார்டுகள் மூலம் கார்டு களுக்கு மலிவு விலையிலேயே இந்த துணிகளை ஏழைஎளிய மக்கள் வாங்கி உபயோகப்படுத்தக்கூடிய முறையிலே இதை சப்ளை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, தற்போது தேங்கியிருக்கின்ற துணிகளின் நிலவரம் பற்றி வருகின்ற மானியக் கோரிக்கையில் அது சம்பந்தமாக தெளிவாக விளக்க இருக்கிறேன். இப்படிப்பட்ட துணிகள் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக விற்பனையாகின்றன. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து அனுப்பப்பட்டு கோ-ஆப் டெக்ஸ் மூலமாக பாதி துணி விற்பனை செய்துகொண்டிருக் கிறோம் என்பதையும் ஆனால் ரேஷன் கடையில் விற்பனை செய்கின்ற உத்தேசம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ்-லிருந்து கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1988-89 ஆண்டுக்கு நிலுவை பாக்கி எவ்வளவு இருந்தது என்பதையும், 1989-90-ல் பட்டுவாடா செய்யப் பட்டது எவ்வளவு என்பதையும் அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா தேங்கிக்கிடந்த துணி களுடைய மதிப்பைப் பொறுத்தது. தனி வினா எழுப்பினால் விரிவான விடையை அளிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 24]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

பச்சை மலைக்குப் போக்குவரத்து வசதி.

வினா எண். 598—திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உப்பிலியாபுரம் தொகுதி துறையூர் ஒன்றியத்தி லுள்ள பச்சை மலைக்கு போக்குவரத்து வசதி செய்து தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1990-91-ல் நிறைவேற்றப்படும்.

2—

மோட்டாத்தூர் சகடமங்கலம் சாலையை இணைக்க பாலம் கட்டும் திட்டம்.

வினா எண் 762—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

நாகப்பட்டினம் நெடுஞ்சாலைத் துறை கோட்டத்திற்கு உட்பட்ட அரசலாற்றில் மோட்டாத்தூர் சகடமங்கலம் சாலையை இணைக்க பாலம் கட்டும் திட்டம் உள்ளதா ?

விடை—

ஆம். 1989-90 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் இப் பாலப் பணி சேர்க்கப்பட்டுள்ளது.

3—

அந்தியூர் மற்றும் குருவாரெட்டியூரில் மாணவியர் விடுதி அமைத்தல்.

வினா எண் 926—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில் குருவாரெட்டியூரிலும், அந்தியூரிலும் மாணவியர் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

1990-91 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் புதிய விடுதிகள் திறக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன. அவ்வமயம் அந்தியூர் மற்றும் குருவாரெட்டியூரில் மாணவியர் விடுதிகள் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

4—

திண்டுக்கல் வேடசந்தூர் தடத்தில் நகரப் பேருந்தின் நடைகளை அதிகப்படுத்தல்.

வினா எண். 1160—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திண்டுக்கல்—வேடசந்தூர் (வழி) மாரம்பாடி சென்று வரும் நகரப் பேருந்தை பள்ளி மாணவர்கள் வசதிக்காக காலையில் ஒரு தடவையும், மாலையில் ஒரு தடவையும் அதிகப்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

விடை—

மாரம்பாடி—திண்டுக்கல் தடத்தில் 1—1—89 முதல் ஒரு புதிய நகரப் பேருந்து 4 தனி நடைகளும், திண்டுக்கல் (வழி) மாரம்பாடி வேடசந்தூர் தடத்தில் 10 தனி நடைகளும் இராணி மங்கம்மாள் போககுவரத்துக் கழகத்தால் இயக்கப் பட்டு வருகின்றன. மேற்கண்டவாறு இயக்கப்படும் நடை களே தற்போதைய தேவைக்கு போதுமானது எனக் கருதப் படுகிறது.

5—

தஞ்சை மாவட்டம் திருக்குவளை நெடுஞ்சாலை.

வினா எண். 1188—திரு. மா. மணிமாறன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம்—திருக்குவளையை இணைக்கும் நெடுஞ்சாலை பழுதுபட்டுள்ளதா ?

1990 மார்ச் 24]

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருக்குவளையை இணைக்கும் நெடுஞ்சாலையை வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் பராமரிக்கப் பட்டு வருகிறது.

6—

ஊராட்சிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு.

வினா எண். 2347—திரு. அ. செங்குட்டுவன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சிகளுக்கு அதிக நிதி ஒதுக்கித் தருவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்படும்.

விடை—

(அ) ஊராட்சிகளுக்கு அதிக நிதி ஒதுக்கித் தருவதற்கான செயற்குறிப்பு வரவு-செலவு திட்டத்தில் ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

7—

ஸ்ரீகண்டபுரம் இராமாபுரம் சாலையில் நாட்டாற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 2593—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் ஸ்ரீகண்டபுரம்—இராமாபுரம் சாலை நாட்டாற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

விடை—

(அ) ஆம்

(ஆ) குத்தாலம் ஒன்றியத்தைச் சார்ந்த ஸ்ரீகண்டபுரம்—இராமாபுரம் சாலையில் நாட்டாற்றின் குறுக்கே ஒரு வண்டி பாலம் அமைக்க 1989–90 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 3.66 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலைகள் விரைவில் துவங்கப்படும்.

8—

புளிச்சக்காடி ஸ்ரீவாஞ்சியம் சாலையில் வளப்பாற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண் 2595—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் புளிச்சக் காடி—ஸ்ரீவாஞ்சியம் சாலையில் வளப்பாற்றில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு திட்டம் மேற்கொள்ளப் படும்?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9—

சிதக்கமங்கலம் பம்மல் கூந்தலூர் சாலையில் திருமலைராசன் ஆற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண் 2596—திரு. இரெ. இராசமாணிக்கம் ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சீதக்க மங்கலம்—பம்மல் கூந்தலூர் சாலையில் திருமலைராசன் ஆற்றில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ள தா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும் ?

1990 மார்ச் 24]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

10—

உத்திரமேரூர் நகரத்தில் தீயணைப்பு நிலையம்.

வினா எண் 2778—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா:

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் நகரத்தில் புதியதாக தீயணைப்பு நிலையம் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ):

செங்கை—அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் நகரத்தில் புதியதாக ஒரூர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் 17–6–1989 அன்று திறக்கப்பட்டு, நல்ல முறையில் இயங்கி வருகிறது.

11—

ஆரகலூர் பெரியேரி அருகே உள்ள ஆற்றில் தரைப்பாலம்.

வினா எண் 3191—திரு. எஸ். குணசேகரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆரகலூர் பெரியேரி அருகே உள்ள ஆற்றில் தரைப்பாலம் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

விடை—

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

12—

அம்புலியாற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண் 3399—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணியிலிருந்து சித்தாதிக்காடு போகும் வழியில் அம்புலியாற்றில் ஒரு பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

13—

பூனைக்குத்தி ஆற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண். 3400—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி மாவடுகுறிச்சி இந்திரா நகரில் பூனைக்குத்தி ஆற்றில் ஒரு பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

14—

மதினாப்பல்லி கொட்டாற்றில் மேம்பாலம் அமைக்கும் திட்டம்.

வினா எண். 3442—திரு. வெ. கோவிந்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் மதினாப்பல்லி கொட்டாற்றில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

15—

இராமநாதபுரம் மாவட்ட ஆதிதிராவிடர் நல மாணவ மாணவியர் விடுதிகள்

வினா எண் 3616—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை ஆதி திராவிடர் ஆண்/பெண் விடுதிகள் உள்ளன?

(ஆ) அவற்றில் சொந்தக் கட்டிடங்களில் உள்ள விடுதிகள் எத்தனை?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 19 ஆதி திராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிகள் உள்ளன. அவற்றில் 16 மாணவர் விடுதிகள் ; 3 மாணவியர் விடுதிகள்.

(ஆ) நான்கு மாணவர் விடுதிகள் அரசுக்கு சொந்தக் கட்டிடத்தில் உள்ளன.

16—

விழுப்புரம் வட்டம் சிறுவந்தாட்டில் புறக்காவல் நிலையம்.

வினா எண். 3694—திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விழுப்புரம் வட்டம், சிறுவந்தாட்டில் புறக்காவல் நிலையம் நிறுவும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

விடை—

விழுப்புரம் வட்டம், சிறுவந்தாட்டில் புறக்காவல் நிலையம் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

17—

போளூர்வீரளூர் நேரு நகர் சாலை மேம்பாட்டுப்பணி.

வினா எண். 4040—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர்வீரளூர் சாலையில் இருந்து கேட்டவரம்பாளையம், சாலமேடு இடாம்பாளையம் வழியாக நேரு நகர் செல்லும் சாலை மிகவும் சீர்கெட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள போளூர்வீரளூர் சாலையிலிருந்து பிரிந்து கேட்டவரம்பாளையம் இடாம்பாளையம் வழியாக நேருநகர் செல்லும் சாலையை மேம்பாடு செய்யும் பணி இதர சாலைத் திட்டத்தின்கீழ் ரூ. 16.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு விரைவில் செயலாக்கத்திற்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

18—

சித்தூர் கடலூர் காஞ்சி அகரம் சிப்பந்தி சாலைப் பராமரிப்பு

வினா எண். 4042—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், சித்தூர் கடலூர் சாலையில் இருந்து கருந்துவாம்பாடி, காட்டுப்புத்தூர் ஊதிரம்பூண்டி பெரிய கிளாம்பாடி வழியாக காஞ்சி அகரம் சிப்பந்தி சாலையை அடையும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

1990 மார்ச் 24]

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் பழுதுகள் சரிபார்க்கப்பட்டு பராமரிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

19—

போளூர் நகரம் மன்சுருபாத் சாலைப் பராமரிப்பு.

வினா எண் 4043—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் நகரத்தில் இருந்து மட்டப்பிரையூர், அல்லியாளமங்கலம், செம்பியமங்கலம், ராந்தம், பாடகம் வழியாக மன்சுருபாத் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பழுதுபார்த்தல் பணி சாலை பராமரிப்புக்கென அளிக்கப்படும் நிதி வசதிக்கேற்ப மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

20—

சங்கராபுரத்தில் அரசு அலுவலகங்கள்.

வினா எண் 4195—திரு. எம். முத்தையன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சங்கராபுரத்தில் அரசு கருவூலம் மட்டும் அல்லாமல் பிற அலுவலகங்களும் செயல்பட அரசு முயற்சி எடுக்குமா ?

விடை—

சங்கராபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்தும்போது பிற அரசு அலுவலகங்களும் அமைய வாய்ப்பு ஏற்படும்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 மார்ச் 24

21—

திருமருங்கல் துறையூர் சாலையினை சீர்செய்தல்.

வினா எண் 4278—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெடுஞ்சாலைத் துறையின்கீழ் உள்ள நாகை கோட்டத்திற்கு உட்பட்ட நன்னிலம் உட்கோட்டத்தில் உள்ள திருமருங்கல்—துறையூர் சாலையில் கடைசி பகுதி சீர் செய்யாமல் உள்ளதை சீர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பணி மத்திய சாலை நிதித் திட்டத்தில் (CRF-ல்) சேர்த்து மைய அரசின் ஒப்புதல் பெற அரசின் பரிசீலனையில் உள்ளது.

22—

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தங்கத் தேர்.

வினா எண் 4313—திரு. என். பழனிவேல்
திரு. வி. இராமசாமி } : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனியில் தண்டாயுதபாணி சுவாமி தங்கத் தேரை ஒரு முறை இழுப்பதற்கு கட்டணம் எவ்வளவு ?

(ஆ) அதன் மூலம் ஆண்டுக்கு வரும் வருமானம் எவ்வளவு ?

விடை—

(அ) பழனியில் தண்டாயுதபாணி சுவாமி தங்கத் தேரை ஒரு முறை இழுப்பதற்கு கட்டணம் ரூ. 1,200 (ரூபாய் ஆயிரத்து இருநூறு மட்டும்) வசூல் செய்யப்படுகிறது. இக் கட்டணம் 1—11—1989-க்கு முன் ரூ. 900 ஆக இருந்தது.

(ஆ) இதன் மூலம் திருக்கோயிலுக்கு 1—7—1987 முதல் 30—6—1988 முடிய ரூ. 37,24,423-ம், 1—7—1988 முதல் 30—6—1989 முடிய ரூ. 44,20,177-ம் வருமானம் வந்துள்ளது.

1990 மார்ச் 24]

23—

வேலூரில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்.

வினா எண் 4445—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட. ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், வேலூர் நகரத்தில் தனியாக மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் நெடுஞ்சாலைத் துறையில் திறக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

24

வைகை ஆற்றின் கரைகளை பலப்படுத்தல்.

வினா எண் 4501—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வெள்ளம் வரும்போது வைகை ஆற்றின் கரையோரத்தில் இருக்கும் ஊர்களை பாதுகாக்கும் பொருட்டு கரைகள் பலப்படுத்தப்படுமா ?

விடை—

ஆம். வைகையாற்றின் கரை ஓரத்தில் உள்ள ஊர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்படாமல் இருக்க அவ்வப்போது தேவையான பகுதிகளில் கரைகளைப் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1990 மார்ச் 24

25—

குறிஞ்சி ஏரிக்கு வரும் பிரதான வாய்க்கால்.

வினா எண் 4540—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாநகரை அடுத்துள்ள குறிஞ்சி ஏரிக்கு வரும் பிரதான வாய்க்கால் மண் மேடிட்டும், வாய்க்கால் வழியில் வீடுகள் கட்டப்பட்டும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இது பற்றி அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

விடை—

(அ) கோவை மாநகரை அடுத்துள்ள குறிஞ்சி ஏரிக்கு வரும் பிரதான வாய்க்காலில் மண் மேடுகள் தண்ணீர் போக்குவரத்தைப் பாதிக்கும் அளவிற்கு ஏதுமில்லை. கரைகளின் மீது பல வருடங்களாக ஆக்கிரமிப்பு செய்து குடிசைகள் போடப்பட்டுள்ளன. பல வருடமாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் உள்ள இடர்ப்பாடுகளை தள அதிகாரிகளிடமிருந்து விவரம் பெற்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இது பற்றி புகார் எதுவும் வரப் பெறவில்லை.

26—

பேராவூரணி—நாகூருக்கு வேளாங்கண்ணி வழியாக பேருந்து.

வினா எண் 4570—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி—நாகூருக்கு வேளாங்கண்ணி வழியாக ஒரு பேருந்து விட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

பேராவூரணி—பட்டுக்கோட்டை தடத்தில் 18 பேருந்துகள் 130 நடைகளும், பட்டுக்கோட்டை—நாகூர் தடத்தில் 14 பேருந்துகளில் 34 நடைகளும் சோழன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளதால், பேராவூரணி நாகூர் தடத்தில் ஒரு புறநகர்ப் பேருந்து இயக்கத் தேவையில்லை என கருதப்படுகிறது.

27—

கா. உஞ்சிவிடுதியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம்.

வினா எண் 4637—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, கா. உஞ்சிவிடுதியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

ஆம். அடுத்த நிதியாண்டில் திட்டம் மேற்கொள்ளப் படும்.

28—

பள்ளத்தூரில் கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்பு.

வினா எண் 4653—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணித் தொகுதி, பள்ளத்தூரில் அரசால் கட்டி முடிக்கப்பட்ட பயிற்சி வழித் தொடர்புத் திட்ட அலுவலர் குடியிருப்பை உரியவர்களுக்கு ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

பேராவூரணித் தொகுதி பள்ளத்தூரில் கட்டி முடிக்கப் பட்ட குடியிருப்பு 17—8—1989 அன்று உதவி வேளாண்மை அலுவலருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

29—

சொர்ணக்காடு ஆதிதிராவிடர் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 4683—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு ஆதி திராவிடர் தெருவில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை. சொர்ணக்காடு ஆதி திராவிடர் தெரு, சொர்ணக்காடு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இதன் மக்கட் தொகை 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 155 ஆகும். இப்பகுதிக்கு சொர்ணக்காடு குடிநீர் திட்டத்தில் ஒரு பொது குடிநீர்க் குழாய் அமைத்து குடிநீர் வசதி செய்து தரப்படுகிறது. இது போதுமானதாகும்.

30—

மருங்கப்பள்ளம் களத்துக்குப் பக்கத்தில் போர்வேல் போடுதல்.

வினா எண் 4816—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம், மருங்கப் பள்ளம் களத்துக்குப் பக்கத்தில் போர்வெல் போட்டு குடி தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை. மருங்கப்பள்ளம் குடியிருப்பிற்கு 1980 ஆம் ஆண்டில் ஒரு மின்விசைத் திட்டமும், 1989 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தில் ஒரு கையிறைப்பான் திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளதால், தேவையான அபிவிருத்திப் பணிகள் "குடிநீரே இல்லாத குடியிருப்புகளுக்குக்" குடிநீர் வசதி அளித்த பின்னர்தான் மேற்கொள்ள இயலும்.

31—

கல்லணை—அய்யம்பேட்டை நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்.

வினா எண் 4920—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கல்லணையிலிருந்து தோகூர், திருக்காட்டுப்பள்ளி, நடுக்காவேரி, கண்டியூர் வழியாக அய்யம்பேட்டை செல்லும் நெடுஞ்சாலை மிகவும் குறுகலாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?

1990 மார்ச் 24]

(ஆ) ஆம் எனில், நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சாலை வளர்ச்சிப் பணிகளுக்கு பெரும் அளவில் நிதி வழங்கப்படும் தருணத்தில் இப்பணியினை மேற்கொள்வது தொடர்பாக பரிசீலனை செய்ய வாய்ப்பு ஏற்படலாம்.

32—

ஒலையாற்றின்மீது பாலம் கட்டும் திட்டம்.

வினா எண் 5107—திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவண்ணாமலை நகரில் இருந்து சாவல்பூண்டி கிராமத்திற்கு செல்லும் சாலையின் குறுக்கே போகும் ஓலை யாற்றின் மீது பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் அமைப்பதற்கு ரூ. 18.00 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இப்பணி மத்திய சாலை நிதித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கின்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. மைய அரசின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33—

திருவண்ணாமலை நகரப் பேருந்து நிலையத்தில் 'புறக்காவல் நிலையம்'

வினா எண் 5148—திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

திருவண்ணாமலை நகரப் பேருந்து நிலையத்தில் புறக் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரி சீலனையில் உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

திருவண்ணாமலை நகரப் பேருந்து நிலையத்தில் 'புறக் காவல் நிலையம்' அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

34—

பாய் முடையும் தொழிலை மேம்படுத்தும் திட்டம்.

வினா எண் 5154—திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவண்ணாமலை ஆவூர் பகுதியில் பாய் முடையும் தொழிலை மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

35—

செய்யாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டும் திட்டம்

வினா எண் 5250—திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செய்யாறு தொகுதியில் காழியூர்—அத்தி கிராமங்களுக்கு இடையில் செய்யாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

மேற்படி பாலம் கட்டும் பணியினை மத்திய சாலைத் திட்டத்தில் (R. F. Scheme) ரூ. 55.00 லட்சங்கள் செலவில் மேற்கொள்ள மைய அரசின் அனுமதி பெற அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மைய அரசின் அனுமதி கிடைக்கப்பெற்ற பிறகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1990 மார்ச் 24]

36—

லெவி முறையில் மலிவு விலையில் முட்டை கொள்முதல்.

வினா எண் 5275—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சத்துணவில் முட்டை கொடுக்கும் திட்டத்திற்கு லெவி முறையில் மலிவு விலையில் முட்டை கொள்முதல் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

லெவி முறையில் மலிவு விலையில் முட்டை கொள் முதல் செய்யும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

37—

காங்கேயம் தொகுதி, தனியார் நிலங்களில் கொத்தடிமைகள்.

வினா எண் 5654—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயம் தொகுதியில் தனியார் நிலங்களில் கொத்தடிமைகள் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களை மீட்க அரசு என்ன நட வடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) காங்கேயம் தொகுதியில் தனியார் நிலங்களில் கொத்தடிமைகள் இருப்பதாக கண்டுபிடிக்கப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

38—

தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் நலக் கல்லூரி.

வினா எண் 5705—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுககு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் நலக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

விடை—

தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் நலக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் இல்லை.

39—

தமிழக அரசு போக்குவரத்துப் பேருந்துகளில் திருக்குறள் புத்தகம் வைக்கும் செயற்குறிப்பு

வினா எண் 5783—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழக அரசு போக்குவரத்துப் பேருந்துகள் ஒவ்வொன்றிலும் திருக்குறள் புத்தகம் ஒன்று வைக்கும் செயவ் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப் படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

40—

பாப்பிரெட்டிப்பட்டியில் புதிய பேருந்து நிலையம்.

வினா எண் 5798—திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பாப்பிரெட்டிப்பட்டியில் புதிய பேருந்து நிலையம் கட்டும் செற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1990 மார்ச் 24]

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

41—

பல்லவன் பேருந்துகளில் பயணச்சீட்டு வாங்காமல் பிடிபட்டவர்களின் எண்ணிக்கை.

வினா எண் 5876—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1–1–1989 முதல் 31–3–1989 முடிய 3 மாத காலத்தில் சென்னை பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணச் சீட்டு வாங்காமல் பிடிபட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களிடமிருந்து அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது எவ்வளவு?

விடை—

(அ) 1–1–1989 முதல் 31–3–1989 வரை பல்லவன் பேருந்துகளில் பயணச்சீட்டு வாங்காமல் பயணம் செய்து பிடிபட்டவர்களின் எண்ணிக்கை 9,481 ஆகும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட பயணச்சீட்டில்லாமல் பயணம் செய்த நபர்களிடமிருந்து ரூ. 88,270.25 (எண்பத்தெட்டாயிரத்து இருநூற்று எழுபது ரூபாயும் இருபத்தி ஐந்து காசுகள் மட்டும்) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

42—

திருப்பூர் எல். ஆர். ஜி. அரசு பெண்கள் கலைக்கல்லூரி.

வினா எண் 5904—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை மாவட்டம், திருப்பூரில் உள்ள எல்.ஆர்.ஜி. அரசு பெண்கள் கலைக்கல்லூரியில் எம்.காம்., பி.காம்., வகுப்புகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

43—

நீர்த்தேக்கங்களில் மீன்பண்ணை அமைத்தல்.

வினா எண் 5968—திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கம்பம் தொகுதியின் மலைப் பக்கத்திலுள்ள புச்சை காமாட்சி, மணலாறு, வெள்ளியாறு, இரவங்கலாறு ஆகிய நீர்த்தேக்கங்களில் மீன் பண்ணை அமைப்பது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட விவரங்கள் யாவை?

விடை—

(அ) இல்லை

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

44—

பழனியில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள்.

வினா எண் 6035—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனியில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1–4–1989 தேதியில் நிலுவையில் உள்ள வழக்குகள் எவ்வளவு?

(ஆ) இதில் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருக்கும் வழக்குகள் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) 3,687

(ஆ) 768

1990 மார்ச் 24]

45—

சென்னை-பழனி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து.

வினா எண் 6223—திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையிலிருந்து பெரம்பலூர், கிருஷ்ணராய புரம், கடலூர், திண்டுக்கல் வழியாக பழனிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை —

(அ) மற்றும் (ஆ): சென்னையிலிருந்து வெவ்வேறு இடங்களுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் ஆறு பேருந்துகள் பழனி வழியாக இயக்கப்படுகின்றன. மேற்கூறிய தடத்தின் நீளம் 496 கி. மீட்டராகும். மேலும் இது ஒரு சுற்றுத் தடமாகும். எனினும் சென்னையிலிருந்து கிருஷ்ண ராயபுரம், கடலூர் மற்றும் திண்டுக்கல் வழியாக பழனிக்கு பேருந்து விடுவது குறித்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக பழனியில் ஒரு பணிமனை துவக்கப்பட்ட பிறகு பரிசீலிக்கப்படும்.

46—

கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம்.

வினா எண் 6356—திரு. உ.ரா. வரதராசன் : மாண்பு மிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வருவாய் கோட்டாட்சியர் சரகத்திற்கு ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

47—

நயினார் கோவிலை தாலுக்காவாக மாற்றுதல்.

வினா எண் 6455—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார் கோவிலை தாலுக்காவாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

48—

வேடசந்தூர் மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கல்.

வினா எண் 6899—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேடசந்தூர் மகளிர் உயர்நிலைப் பள்ளி அடுத்த கல்வி ஆண்டில் மேல்நிலைப் பள்ளி ஆக்கப்படுமா?

விடை—

வேடசந்தூர் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை அடுத்த கல்வி ஆண்டில் (1990-91) மேல் நிலைப் பள்ளியாக உயர்த்துவது தொடர்பான கருத்துருக்கள் பெறப்பட்டால் அரசின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

49—

சிவகாசியில் முஸ்லீம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

வினா எண் 7088—திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராசர் மாவட்டம், சாத்தூர் கோட்டம், சிவகாசியில் உள்ள முஸ்லீம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதி கோரி அரசுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு உள்ளதா ?

1990 மார்ச் 24]

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) காமராசர் மாவட்டம், சிவகாசியிலுள்ள முஸ்லீம் உயர்நிலைப் பள்ளி 1987–88ஆம் ஆண்டில் மேல் நிலைப் பள்ளியாக (நிதியுதவியின்றி) உயர்த்தப்பட்டுள்ளது.

50—

மறைமலை நகரை தாலுக்கா தலைமையிடமாக மாற்றுதல்.

வினா எண் 7228—திரு. பே. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மறைமலை நகரைத் தாலுக்காத் தலைமையிடமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

(அ) மறைமலை நகரை வட்ட தலைமையிடமாகற் மாறும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

51—

மலைபாளையம் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுதல்.

வினா எண் 1303—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கை—அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கருங்குழி பேரூராட்சி மலைபாளையம் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

52—

மாமல்லபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 1599—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(ஆ) மாமல்லபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்ட செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இப்பள்ளிக்குச் சொந்தமான நிலம் இல்லாததால், கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு இல்லை.

53—

பெரிய பஞ்சாயத்துகளைப் பிரித்தல்.

வினா எண் 1972—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரிய பஞ்சாயத்துகளை பிரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

தற்பொழுது 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக, அரசினால் நிருவாக மாற்றம் செய்ய தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 30—6—1991 வரை இந்தத் தடை ஆணை அமுலில் உள்ளதால், பெரிய பஞ்சாயத்துக்களை பிரிக்க இயலாது.

54—

தஞ்சை மாவட்டத்தில் காலரா பாதிப்பு.

வினா எண் 2658—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் காலராவினால் 1989-ல் எத்தனை பேர் காலமானார்கள் ?

1990 மார்ச் 24]

(ஆ) பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) ஒன்று (செப்டம்பர் 1989 வரை)

(ஆ) பன்னிரண்டு.

55—

செங்கை அண்ணா மாவட்டத்தில் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம்.

வினா எண் 2748—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டத்தில் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் எவ்வளவு பகுதியில் காடு வளர்ப்பு நடைபெறுகிறது ?

(ஆ) அவைகளை பராமரிக்க அரசு நிதியுதவி செய்கின்றதா ?

விடை—

(அ) செங்கை அண்ணா மாவட்டம் திருவள்ளூர் சமூகக் காடுகள் கோட்டத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1981–82 முதல் 1988–89 ஆண்டு வரை 7863.95 ஹெக்டேர் பரப்பளவில் அடர் நடவு தோட்டங்களும், 387.95 கி.மீ. நீளத் தோட்டங்களும் ரூ. 243.94 இலட்சம் செலவில் காடு வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) ஆம். இவைகளை பராமரிக்க அரசு நிதியுதவி செய்கிறது.

56—

சிறுநல்லூர் ஊராட்சி மன்றத்தைப் பிரித்தல்.

வினா எண் 2833—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் சிறுநல்லூர் ஊராட்சி மன்றத்தைப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இந்த ஊராட்சி மன்றம் பிரிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

57—

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

வினா எண் 3094—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்போது சென்னை நகரில் ஓடும் பல்லவன் போக்கு வரத்துக் கழக பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) ஒரு நாளைக்கு சராசரியாக எவ்வளவு பயணிகள் அவைகளில் பயணம் செய்கின்றனர் ?

(இ) ஒரு நாளைய சராசரி வருவாய் எவ்வளவு ?

விடை—

(அ) தற்போது போக்குவரத்துக் கழகத்தினால் 2,125 பேருந்துகள் சென்னை நகரில் இயக்கப்படுகின்றன.

(ஆ) ஒரு நாளைக்கு சராசரியாக 31.21 லட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர்.

(இ) ஒரு நாளைய சராசரி வருமானம் ரூ. 24.13 லட்சங்களாகும்.

58—

உதவிச் செவிலியர் பல்நோக்கு பெண் பணியாளர் பயிற்சி.

வினா எண் 3155—திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உதவிச் செவிலியர் பல்நோக்கு பெண் பணியாளர் பயிற்சி கொடுக்க வேலை வாய்ப்பு அலுவலகம் வழியாக தேர்ந்தெடுக்கப்படுவது பற்றி அரசு அறியுமா ?

1990 மார்ச் 24]

(ஆ) இதனை மாற்றி நேர்முகத் தேர்வின் மூலமாகவும் மருத்துவக் கல்வி இயக்குநர் வழியாக தேர்ந்தெடுத்து மருத்துவக் கல்வி இயக்குநரின் கீழ் பயிற்சி கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பல்நோக்கு சுகாதார பெண் பயிற்சியாளரை தேர்ந்தெடுக்க அரசால் அமைக்கப்பட்டுள்ள குழு வேலை வாய்ப்பு அலுவலகம் அனுப்பி வைக்கும் நபர்களுக்கு நேர்முகத் தேர்வு ஒன்று நடத்தி அதன் மூலம் தகுதி பெற்ற நபர்கள் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த முறையை மாற்றியமைப்பதற்கு இல்லை.

59—

செட்டிப்பேடு இராமத்தில் உள்ள ஏரிகளை ஆழப்படுத்தல்.

வினா எண் 3164—திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருப்பெரும்புதூர் தாலுக்கா, தண்டலம் ஊராட்சி செட்டிப்பேடு கிராமத்தில் உள்ள ஏரிகளை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

60—

மண்ணூர் இராமத்தில் ஏரிகளை ஆழப்படுத்தல்.

வினா எண் 3165—திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருப்பெரும்புதூர், வளர்புரம் ஊராட்சியில் உள்ள மண்ணூர் கிராமத்தில் ஏரிகளை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

61—

மேவளூர் குப்பம் ஊராட்சி கிராம பெரிய ஏரியை ஆழப்படுத்தல்.

வினா எண் 3166—திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருபெரும்புதூர் தாலுக்கா மேவளூர் குப்பம் ஊராட்சியிலுள்ள கிராம பெரிய ஏரியை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

62—

வெள்ளியூர் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம்.

வினா எண் 3709—திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவள்ளூர் தொகுதி வெள்ளியூர் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி சொந்தக் கட்டிடத்தில் இயங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

விடை—

செங்கை அண்ணா மாவட்டம், வெள்ளியூர் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டுவதற்கு தகுந்த இடம் தேர்ந்தெடுத்து கையகப்படுத்தியபின் இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டு பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 24]

63—

மதுரையில் கிரிக்கெட் விளையாட்டு மைதானம்.

வினா எண் 3722—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரையில் கிரிக்கெட் விளையாட்டு மைதானம், அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம், என்ன?

விடை—

(அ) நடவடிக்கை ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

64—

கமுதி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 3852—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளச்சாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

65—

சூசையப்பர்பட்டி—சூடியூர் சாலை,

வினா எண் 3954—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியத்தில் சூசையப்பர் பட்டி—சூடியூர் சாலை 1989—90-ல் செப்பனிடப்படுமா?

டி2 53-60—9

விடை—

பரமக்குடி ஒன்றியத்தில் சூசையப்பர்பட்டி—சூடியூர் சாலை ஏற்கெனவே 2.4 கி.மீ. தூரத்திற்கு கிராவல் பரத்தப்பட்டுள்ளது. இச்சாலை ஊராட்சி சாலையாகும்.

66—

மேல் பாலம் கட்டுதல்.

வினா எண் 3988—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி, பரமக்குடி பஞ்சாயத்து யூனியனில் மேலச்சீவங்குளம் ஊருக்குப் போகும் வழியில் கொத்தங்குளம் கால்வாய் மேல் பாலம் அமைக்கப்படுமா?

விடை—

இது குறித்த கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

67—

சூடியூர் கால்வாயில் பாலம் அமைத்தல்.

வினா எண் 3990—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி பஞ்சாயத்து யூனியனில் சூசையப்பர் பட்டிக்கு செல்லும் வழியில் உள்ள சூடியூர் கால்வாயில் பாலம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1990 மார்ச் 24]

68—

மகளிர் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

வினா எண் 4013.—திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் பெண்களே நடத்தும் மகளிர் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அவை எங்கெங்கே செயல்படுகின்றன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் 13 இடங்களில் மகளிர் நுகர்வோர், கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவை சென்னையில் ஏழு இடங்களிலும், செங்கை—அண்ணா மாவட்டத்தில் ஆதம் பாக்கத்திலும், கோயம்புத்தூரில் இரண்டு இடங்களிலும், மதுரை நாகர்கோவில் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும், செயல்படுகின்றன.

69—

பாரூர் ஏரியின் வேஸ்டேஜ் நீர்

வினா எண் 4204—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருஷ்ணகிரி வட்டம், பாரூர் ஏரியின் வேஸ்டேஜ் நீரை கொத்தமர் ஏரி, பொடார் ஏரி, ஒண்ணகரை ஏரி, மேட்டு சூளகரை ஏரி (கல்லாவி), வளையகுட்டை ஏரி, மேட்டுத்தாங்கல் ஏரி, வேலம்பட்டி ஆகிய ஏரிகளில் நிரப்பி வழிந்தோடி, பெண்ணையாற்றில் கலக்கவிடும் செயல் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கதர் துணிக்கு வழங்கும் தள்ளுபடி தொகை

70—

வினா எண் 4430—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு கதர் துணிக்கு வழங்கும் தள்ளுபடி தொகையை அதிகப்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனை யில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ)—இல்லை.

71—

பரமக்குடி நகரில் நகர பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 4505—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் City Bus Stand அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

பரமக்குடி நகரில் நகரப் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் பரமக்குடி நகராட்சியின் ஆய்வில் இல்லை.

கப்பிச் சாலையாக மாற்றுதல்

72—

வினா எண் 4579—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியன் கோட்டை நாடியம் வழி துறையூர் சாலையை மராமத்துச் செய்து RLEGP திட்டத்தின் கீழ் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

1990 மார்ச் 24]

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

73—

பெத்தனாட்சி வயல் கிராமத்தில் தொடக்கப் பள்ளி

வினா எண் 4649—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, ஊமத்தநாடு ஊராட்சி, பெத்தனாட்சி வயல் கிராமத்தில் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

74—

புனவாசல் வாடிக்காடு ஆதி திராவிட மக்களுக்கு காலனி கட்டுதல்

வினா எண் 4656—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி ஒன்றியம், புனவாசல் வாடிக்காடு ஆதி திராவிட மக்களுக்கு காலனி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பட்டா வழங்கப்பட்டு விட்டதா

விடை—

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து மாநில அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

[1990 மார்ச் 24

75—

குறுக்குச் சாலையைப் பராமரித்தல்

வினா எண் 4661—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ராஜா மடம் அருகில் சேதுசாலை நெடுஞ்சாலையிலிருந்து ஏரிப்புறக் கரை செல்லும் குறுக்குச் சாலையை ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத் தின் கீழ் பராமரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

76—

ஆவணம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 4699—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி ஒன்றியம், ஆவணம் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இல்லை. நவம்பர் 1978 இல் விரைவுபடுத்தப்பட்ட குடி நீர்த் திட்டத்தின் கீழ் ஒரு கையிறைப்பான் திட்டம் நிறைவேற் றப்பட்டுள்ளது. இக்குடியிருப்பிற்கு முழுவதுமாக குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டு ஒரு மின் விசைத் திட்டம் குடிநீர் இல்லாத குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளித்த பின்னர்தான் மேற் கொள்ள இயலும்.

77—

சூரியநாராயணபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 4701—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

பேராவூரணி ஒன்றியம், களத்தூர் ஊராட்சி சூரியநாரா யணபுரத்தில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

1990 மார்ச் 24]

விடை—

ஆம். அடுத்த நிதியாண்டில் திட்டம் மேற்கொள்ளப்படும்.

78—

விளங்குளம் வடக்கில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 4713—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம், விளங்குளம் வடக்கில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ஆம். நடப்பு ஆண்டில், ஒரு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், 1.5 கி.மீ. நீளத்திற்கு பகிர்மான குழாயும் 7 பொது குடிநீர் குழாய்களுடன் கூடிய ரூ. 2.13 இலட்சம் மதிப்பீட்டில் குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் ஒரு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

79—

பின்னவாசல் ஆதி திராவிடர் தெருவிற்கு போர்வெல் போடுதல்

வினா எண் 4808—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஆதி திராவிடர் தெருவிற்கு போர்வெல் போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ஆம். தற்போது உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளதால் இதனைக் கருத்தில் கொண்டு, இக்குடியிருப்பிற்கு முழுமையாக குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டு ஒரு மின் விசைத் திட்டம் முன்னுரிமை அளித்து முயற்சிகள் செய்யப்படுகின்றன.

80

அரசம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 4828—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஒன்றியம் அரசம்பட்டியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. வாரிய விதி முறைகளின்படி மக்கட் தொகை 750ஐக் கொண்ட குடியிருப்புக்களுக்குத்தான் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துத் தர இயலும். அரசம்பட்டியில் மக்கட்தொகை 277 (1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி) மட்டுமே. மேலும் இது முழுமையாக குடிநீர் வசதி பெற்ற கிராமம். குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் 1984–85 ஆம் ஆண்டு இக்கிராமத்தில் இரண்டு இந்தியா மார்க் கையிறைப் பான்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கதர் வாரிய நெசவாளர்களுக்கு வீடுகள்

81—

வினா எண் 4974—திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வீடில்லாத கதர் வாரிய நெசவாளர்களுக்கு ஹட்கோ நிறுவனம் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் மேற் கொள்ளப் படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[1990 மார்ச் 24]

82—

கதர் வாரிய நெசவாளர்களுக்கு உதவித் தொகை

வினா எண் 4975—திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வயதான கதர் நெசவாளர்களுக்கு சர்வோதய சங் கங்கள், உதவித் தொகை ரூ. 3,000 அளிப்பது போல கதர் வாரிய நெசவாளர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ)—இல்லை.

83—

காஞ்சிபுரம் வெங்களத்தூர் வழித் தடத்தில் பேருந்து விடுதல்

வினா எண் 5253—திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காஞ்சிபுரம்—வெங்களத்தூர் வழித் தடத்தில் பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுவதற்கு அரசு முன் வருமா?

விடை—

காஞ்சிபுரத்திலிருந்து வட இலுப்பைக்கு வெங்களத்தூர் வழியாக நகரத் தடம் மூலம் பட்டுக்கோட்டை அழகிரி போக்கு வரத்துக் கழகத்தால் தற்பொழுது 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

84—

இளம்பிள்ளை பேரூராட்சியில் பொதுச் சுகாதார மையம்

வினா எண் 5302—திரு. பெ. வெங்கடாசலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இளம்பிள்ளை பேரூராட்சியில் பொதுச் சுகாதார மையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப் பெறும்?

விடை—

(அ) மற்றும் (ஆ). சேலம் மாவட்டம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் இளம்பிள்ளையில் உள்ள அரசு மருந்தகம் 28-3-1986 ஆம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அரசாணை எண் (நிலை) 692-ன்படி ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு 1-6-1987 முதல் செயல்பட்டு வருகிறது.

85—

வெள்ளியூரில் புறக்காவல் நிலையம்

வினா எண் 5362—திரு. எஸ். ஆர். முனிரத்தினம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவள்ளூர் தொகுதி, வெள்ளியூரில் புறக்காவல் நிலையம் திறக்கப்படுமா?

விடை—

திருவள்ளூர் தொகுதி, வெள்ளியூரில் புறக்காவல் நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

குஜிலியம்பாறையில் அரசு மேல்நிலைப் பள்ளி அமைத்தல்

வினா எண் 5544—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறையில் அரசு மேல்நிலைப் பள்ளி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் வட்டம் குஜிலியம்பாறையில் ஏற்கெனவே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. கூடுதலாக மேலும் ஒரு மேல்நிலைப் பள்ளி அங்கு துவங்குவதற்குத் திட்டம் ஏதும் இல்லை.

1990 மார்ச் 24]

87—

கோவிலூரில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்தல்

வினா எண் 5552—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேடசந்தூர் வட்டம், கோவிலூரில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க மக்கள் பங்குத் தொகை செலுத்தப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

88—

அண்ணா சதுக்க மேம்பாட்டுப் பணி

வினா எண் 5602—திரு. சா. கணேசன் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அண்ணா சதுக்கத்தை மேலும் பொலிவுள்ளதாக்க ஏதேனும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அண்ணா சதுக்கத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 7.50 இலட்சம் செலவினம் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

89—

மேலாக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

வினா எண் 5633—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி மேலாக் குடி அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

90—

செங்கம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி

வினா எண் 5785—திரு. எம். சேட்டு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செங்கம் நகரில் உள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் பள்ளிக்குத் தேவையான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசால் பெறப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

91—

இராசபுரம், தாமரைக்குளம் இணைப்பு மேம்பாலம்

வினா எண் 5843—திரு. என் பழனிவேல்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி வட்டத்திலுள்ள இராசபுரம், தாமரைக்குளம் இணைப்பு மேற்பாலத்தின் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

(அ) பழனி வட்டத்திலுள்ள இராசபுரம், தாமரைக்குளம் இணைப்பு மேற்பாலத்தின் திட்ட மதிப்பீடு ரூ. 27.50 லட்சமாகும்.

(ஆ) மேற்படி பணியானது 31—3—1990-ல் கட்டி முடிக்கப்படும்.

1990 மார்ச் 24]

92—

கம்பம் பகுதியில் கால்நடைப் பண்ணை அமைத்தல்

வினா எண் 5967—திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம், கம்பம் பகுதியில் ஒரு கால்நடைப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

இப்பொருள் குறித்து தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

93—

ஆர். புதுப்பாளையத்தில் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் 5975—திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ராசிபுரம் தொகுதியில், ஆர். புதுப்பாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :—சேலம் மாவட்டம் ராசிபுரம் தொகுதி ஆர். புதுப்பாளையத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி 1989–90 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

94—

அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் திறத்தல்

வினா எண் 6048—திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விக்கிரவாண்டி, கண்டமங்கலம், சிறுவந்தாடு கிராமங்களில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் திறக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

விக்கிரவாண்டி, கண்டமங்கலம் ஆகிய கிராமங்களில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவங்கும் திட்டம் ஏதுமில்லை. 1989–90-ல் சிறுவந்தாடு என்னும் கிராமத்தில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அரசாணை எண். 696, கல்வி, நாள் 21—6—1989-ன்படி அனுமதிக்கப்பட்டு 12—9—1989 முதல் செயல்பட்டு வருகிறது.

95—

உசிலம்பட்டி-இடையப்பட்டி நகரப் பேருந்து

வினா எண் 6120—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, உசிலம்பட்டியிலிருந்து இடையப்பட்டிக்குச் செல்லும் நகரப் பேருந்தை தொட்டப்ப நாயக்கனூர் ஊருக்குள் சென்று திரும்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தொட்டப்பநாயக்கனூர் கிராமத்திற்கு உசிலம்பட்டி—(ஆண்டிப்பட்டி வழி) இடையப்பட்டி செல்லும் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் மூலம் 5—11—1989 ஆம் தேதி முதல் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

96—

அரியனேந்தல் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்

வினா எண் 6258—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் அரியனேந்தல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு தொடங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): இல்லை. இதுதொடர்பாக கருத்துரு பெறப்பட்டால் அரசு பரிசீலிக்கும்.

[1990 மார்ச் 24]

97—

சந்திரக்குடியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

வினா எண் 6456—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், போகளூர் ஒன்றியம், சத்திரக்குடியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

விடை—

இதற்கான கருத்துருக்கள் அரசால் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்பட்டால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

98—

பேராவூரணி காமராசர் அரசு மருத்துவமனைக்குத் தொலைபேசி இணைப்பகம்

வினா எண் 6572—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி காமராசர் அரசு மருத்துவமனைக்கு தொலைபேசி இணைப்பகம் வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

99—

நெரிஞ்சிப்பேட்டை உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம்

வினா எண் 6762—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, நெரிஞ்சிப் பேட்டை உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டிக் கொடுக்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கும் ?

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

(அ) தற்போது திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

100—

மறைமலைநகரில் நூலகம் ஏற்படுத்துதல்

வினா எண் 7227—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மறைமலைநகரில் ஒரு நூலகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

விடை—

தற்போது இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

10-05 மணி

2. தகவல் கோரல்

கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் சில இராமங்களில் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுவதால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, பெரியார் மாவட்டத்தில் உள்ளடங்கிய ஆலப்பாளையம் கள்ளிப்பாளையம், கனுவுக்கரை கவுண்டன் பாளையம், வாணிச்சிபாளையம், தேவன்பாளையம் போன்ற பல கிராமங்களில் தங்கம் இருப்பதாக சொல்லி அங்கே அதிகாரி கள் ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதியில் விவசாயிகள் கிணறு வெட்டக்கூடாது என்றும், அங்கே நிலங்களை விற்கவோ வாங்கவோ கூடாது என்றும் அறிவித்திருக்கிறார்கள். அதனால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி யில் இவ்வாறு தங்கம் எவ்வளவு ஏக்கர் நிலப்பரப்பில் இருப்ப தாக ஆய்வு நடத்தியிருக்கிறார்கள்? அப்படி ஆய்வு நடத்தியதில்

விடை—

(அ) தற்போது திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

100—

மறைமலைநகரில் நூலகம் ஏற்படுத்துதல்

வினா எண் 7227—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மறைமலைநகரில் ஒரு நூலகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

தற்போது இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

10-05 மணி

2. தகவல் கோரல்

கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் சில இராமங்களில் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுவதால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, பெரியார் மாவட்டத்தில் உள்ளடங்கிய ஆலப்பாளையம் கள்ளிப்பாளையம், கனுவுக்கரை கவுண்டன் பாளையம், வாணிச்சிபாளையம், தேவன்பாளையம் போன்ற பல கிராமங்களில் தங்கம் இருப்பதாக சொல்லி அங்கே அதிகாரி கள் ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதியில் விவசாயிகள் கிணறு வெட்டக்கூடாது என்றும், அங்கே நிலங்களை விற்கவோ வாங்கவோ கூடாது என்றும் அறிவித்திருக்கிறார்கள். அதனால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி யில் இவ்வாறு தங்கம் எவ்வளவு ஏக்கர் நிலப்பரப்பில் இருப்ப தாக ஆய்வு நடத்தியிருக்கிறார்கள்? அப்படி ஆய்வு நடத்தியதில்

1990 மார்ச் 24] [திரு. வி. கே. சின்னசாமி]

எவ்வளவு தங்கம் கிடைக்கும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன். அதோடு அங்கே அதற்காக ஆய்வு நடத்தியதில் இதுவரை எவ்வளவு கோடி செலவாகி யுள்ளது? அந்த திட்டம் துவங்குகின்றபோது அந்தப் பகுதி யிலுள்ள நில உரிமையாளர்களுக்கும், அங்கே வீடு கட்டி குடி யிருப்பவர்களுக்கும் நஷ்டஈடு தரப்படுமா? இல்லையென்றால் அப்படி எடுக்கின்ற தங்கத்திலே அவர்களுககு பங்கு கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதையும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதோடு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்ப ஆழமாகப் போகிறீர்களே, தங்கம் வெட்டுவதாலா? (சிரிப்பு).

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தங்கம் உள்ளதா என்பதையும் இந்த ஆய்வின் மூலம் அங்கேயிருந்து தங்கம் கிடைத்துள்ளதா என்பதையும் மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் நண்பர் சின்னசாமி அவர்கள் இது குறித்து ஒரு விளக்கம் கோர வேண்டுமென்று தங்கள் அறையில் கேட்டபோது, நானும் அதை ஏற்றுககொண்டு, உடனடியாக பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ளப்பட்டது. தங்கம் கிடைக் கிறது என்றால் யாருக்குதான் ஆசை வராது (சிரிப்பு). எனவே, மிகுந்த துடிதுடிப்போடு இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் தொடர்பு கொண்டேன். ஆனால் நேற்று திரு. சின்னசாமி இன்னொரு கருத்தையும் சொன்னார். இப்படி தங்கம் அங்கே வெட்டி எடுக்கப்படப்போகிறது என்பதால் கிணறுகளே அங்கே தோண்டக்கூடாது என்று தடை விதித்திருப்ப தாகவும் சொன்னதால் அதுபற்றியும் நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே கேட்டேன். எனக்குக் கிடைத்துள்ள விவரம், கிணறு தோண்டக்கூடாது என்று எவ்விதமான தடையும் யாருக்கும் அங்கே விதிக்கப்படவில்லை என்ப தாகும். ஆனால் ஜியாலாஜிக்கல் சர்வே, அதாவது நிலத்தடி ஆய்வு அந்தத் துறையின் சார்பில் சில மாதங்களுக்கு முன்பு அந்தப் பகுதியிலே ஒரு சோதனை நடைபெற்றது உண்மை என் றும் ஆனால் திரு. சின்னசாமி அவர்கள் எதிர்பார்ப்பதுபோல அங்கே தங்கம் கிடைப்பதில்லை என்றும் தகவல் வந்துள்ளது. ஆனால், அந்த ஆய்வின் மூலம் செம்பு தாதுப்பொருள் 'காப்பர் ஓர்' கிடைக்கலாம் என்று இப்போது தெரிய வந்துள்ளது என்றும் 'காப்பர் ஓர்' அங்கே கிடைக்கிறது என்ற காரணத்தைக் காட்டி

இப்போது அங்கே கிணறுகள் தோண்டுவதற்கு எதற்கும் தடை விதிக்கப்படவில்லை என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) மதுரவாயல் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் ஆதிதிராவிடர் குடும்பங்களை வெளியேற்றும் நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கை அண்ணா மாவட்ட ஆட்சியரின் ஆணைக்கிணங்க மதுரவாயல் பேரூராட்சிக்குட்பட்ட புறம்போக்கு நிலத்தில் குடியமர்த்தப்பட்ட 23 ஆதி திராவிடர் குடும்பங்களை 22—3—1990-க்குள் வெளியேற்ற அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் என்கிற பெயரில் எனது கவனத்தையும் ஈர்த்துவிட்ட நிலையில் நான் கவனக் குறைவாக இருக்கக்கூடாது என்பதற்காக சில விளக்கங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

''செங்கை அண்ணா மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம் மதுரவாயல் கிராமம் புல எண் 335/1, தாங்கல்கரை புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலமாகும். இந்நிலம் நீர் நிலைப் புறம்போக்கு ஆதலால் அவை வகைபாடு மாற்றம் செய்ய தடையாணை உள்ளது. இந்நிலத்தில் குடிசையாகவும் விவசாயம் செய்தும் 23 ஆக்கிரமணங்களும் உள்ளன.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள். அறிக்கை இப்போது படைக்கப்பட்டதால், தொடர்ந்து அவரை வினாக்கேட்க அனுமதிக்கலாம். அந்த விளக்கத்தை அவர் படித்திருப்பார். அதற்கு மேலும் விளக்கம் அளித்தால் எனக்கு மகிழ்ச்சியே.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

இப்போது அங்கே கிணறுகள் தோண்டுவதற்கு எதற்கும் தடை விதிக்கப்படவில்லை என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) மதுரவாயல் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் ஆதிதிராவிடர் குடும்பங்களை வெளியேற்றும் நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கை அண்ணா மாவட்ட ஆட்சியரின் ஆணைக்கிணங்க மதுரவாயல் பேரூராட்சிக்குட்பட்ட புறம்போக்கு நிலத்தில் குடியமர்த்தப்பட்ட 23 ஆதி திராவிடர் குடும்பங்களை 22—3—1990-க்குள் வெளியேற்ற அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் என்கிற பெயரில் எனது கவனத்தையும் ஈர்த்துவிட்ட நிலையில் நான் கவனக் குறைவாக இருக்கக்கூடாது என்பதற்காக சில விளக்கங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

''செங்கை அண்ணா மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம் மதுரவாயல் கிராமம் புல எண் 335/1, தாங்கல்கரை புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலமாகும். இந்நிலம் நீர் நிலைப் புறம்போக்கு ஆதலால் அவை வகைபாடு மாற்றம் செய்ய தடையாணை உள்ளது. இந்நிலத்தில் குடிசையாகவும் விவசாயம் செய்தும் 23 ஆக்கிரமணங்களும் உள்ளன.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள். அறிக்கை இப்போது படைக்கப்பட்டதால், தொடர்ந்து அவரை வினாக்கேட்க அனுமதிக்கலாம். அந்த விளக்கத்தை அவர் படித்திருப்பார். அதற்கு மேலும் விளக்கம் அளித்தால் எனக்கு மகிழ்ச்சியே.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1990 மார்ச் 24] *[திரு. நாஞ்சில் கி. மனோகரன்]*

அறிக்கை.

செங்கை-அண்ணா மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், மதுரவாயல் கிராமம் புல எண் 335-1, தாங்கல்கரை புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலமாகும். இந்நிலம் நீர் நிலைப் புறம்போக்கு. ஆதலால் அதை வகைபாடு மாற்றம் செய்ய தடையாணை உள்ளது. இந்நிலத்தில் குடிசையாகவும் விவசாயம் செய்தும் 23 ஆக்கிரமணங்கள் உள்ளன. இதில் உள்ள ஆக்கிரமணங்கள் இது வரையில் வெளியேற்றப்படவில்லை. அவ்வாக்கிரமணங்கள் மேற்படி புலத்தில் தொடர்ந்து உள்ளன.

மதுரவாயல் கிராமம் புல எண் 335/1, நிலம் தன் அனுபவத்தில் உள்ளதாகவும், அந்நிலத்தில் அத்துமீறி பிரவேசித்தல் கூடாது எனவும், ஆக்கிரமணதாரர்களுக்கு எதிராக மேற்படி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணிய நாயக்கர், பூந்தமல்லி மாவட்ட் நீதிமன்றத்தில் மதுரவாயல் பேரூராட்சி நிர்வாக அலுவலர் அவர்களை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு வழக்கு தொடுத்தார் (ஓ. எஸ். எண் 2124/88). மேலும் நிலத்தில் தனது அனுபவத்தில் பேரூராட்சி நிர்வாக அதிகாரி தலையிடக் கூடாது என ஒரு தடையாணையும் பெற்றுள்ளார். (ஐ.ஏ. 2643/88).

திரு. சுப்பிரமணிய நாயக்கர் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுவும் தாக்கல் செய்துள்ளார் (W.P.No. 11571/89). அதில் பூந்தமல்லி மாவட்ட நீதிமன்றத்தின் ஆணையை அமுலாக்கும்படி ஆணை வழங்க உயர்நீதி மன்றத்தை அவர் கோரினார். உயர்நீதி மன்றம், மதுரவாயல் காவல் ஆய்வாளர் அவர்களை பூந்தமல்லி மாவட்ட நீதிமன்றத்தின் ஆணையை அமுல்படுத்தும்படி ஆணையிட்டு 15—9—1989 அன்று மனுவைத் தள்ளுபடி செய்தது.

அதற்கு பிறகு திரு. சுப்பிரமணிய நாயக்கர் காவல் ஆய்வாளர், நீதிமன்ற ஆணையை அமுல்படுத்தவில்லை என குற்றம் சாட்டி நீதிமன்ற அவமதிப்பு மனு ஒன்றை (Contempt Petition) சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அதைத் தொடர்ந்து மேற்படி நீதிமன்ற ஆணையை நடைமுறைப்படுத்த வேண்டி மதுரவாயல் கிராமம், புல எண் 335/1 இல் குடிசைகள் மூலமாக மற்றும் விவசாயம் மூலமாக ஆக்கிரமணம் செய்துள்ள 23 ஆக்கிரமணங்களை அகற்ற தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச்சட்டம் 1905, பிரிவு 7 இன் கீழ் நடவடிக்கை எடுத்து சைதாப்பேட்டை வட்டாட்சியரால் 6.3.90 அன்று மேற்படி ஆக்கிரமணங்களை அப்புலத்திலிருந்து ஏன் அகற்றக்கூடாது என காரண விளக்கங்களைக் கோரியும், 15 நாட்கள் கால அவகாசம் அளித்தும் நம்பர் 7 அறிவிக்கையும், அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டத்தின்படி மேற்படி ஆக்கிரமணங்களை அகற்ற

நம்பர் 6 அறிவிக்கையும் அளிக்கப்பட்டது. திரு. சுப்பிரமணிய நாயக்கர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அவமதிப்பு மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ளது.

மேற்படி புலத்தில் ஆக்கிரமணம் செய்துள்ள திரு. ஏ. ராசு மற்றும் பலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு (12726/90) மற்றும் ரிட் (பலவகை) மனு (W.M.P. No. 3776/90) தாக்கல் செய்தார்கள். இந்த ரிட் மனுவை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளாமல், ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ள 22 ஆக்கிரமணங்களை 9–3–1990 வரையில் அப்புலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. மேலும், இப்பொருள் தொடர்பான ஆணைகளை திரு சுப்பிரமணிய நாயக்கர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அவமதிப்பு மனுவை பரிசீலிக்கும் நீதிபதியிடமிருந்து பெறலாம் எனவும், உயர்நீதிமன்றம் அறிவுரைகள் வழங்கியுள்ளது. அந்த நீதிபதி அவர்கள் திரு. இராசு மற்றும் ஆக்கிரமணதாரர்களால் தொடரப்பட்ட ரிட் மனுவை அனுமதிக்கலாமா என்பதைப் பற்றிப் பரிசீலிப்பார் என்றும் உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. ஆனால், இது தொடர்பாக மேற் கொண்டு நீதிமன்ற ஆணைகள் ஏதும் இதுவரையில் அரசுக்குக் கிடைக்கவில்லை.

எனவே, நீதிமன்றங்களிலுள்ள மேற் குறித்த வழக்குகள் முடிவாகும் வரையில் மதுரவாயல் கிராமம், புல எண். 335/1 இல் குடிசைகள் மற்றும் விவசாயம் செய்து ஆக்கிரமணம் செய்துள்ள 23 ஆக்கிரமணங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது.

10–10 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இப்பொழுது நீதிமன்றத்திலே இருக்கிற காரணத்தால், இது பற்றி எதுவும் பேசுவதற்கில்லை. ஆகையால் விளக்கம் கேட்கும் கேள்விகளைப் போடுகின்ற அவசியம் இராது என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒரேயடியாக அடிப்பீர்கள் என்று நாங்களும் எதிர்பார்க்கவில்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையில் 23 குடிசைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்ற உறுதி மொழி இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த உறுதிமொழி மீறப்படாமல் நிறைவேற்றப்படுவதை பேரவையினுடைய உறுதி மொழிகள் குழு கவனிக்குமென்று நம்புகிறேன். இந்த 23 குடிசைகள், ஏற்கனவே மதுரவாயல் பஞ்சாயத்தில் புலம் எண். 320க்கு உட்

1990 மார்ச் 24] [திரு. உ. ரா. வரதராசன்]

பட்ட கசம் புறம்போக்கில் குடியிருந்தவர்கள். ஜாதி இந்துக்கள் எதிர்ப்பு காரணமாக, அங்கேயிருந்து அவர்கள் வெளியேற்றப் பட்டபோது, ஆதி திராவிட நலத்துறை இவர்களுக்கு மாற்று இடம் தர வேண்டுமென்று, மாவட்ட ஆட்சியருக்குத் தாக்கீது அனுப்பியது. மாவட்ட ஆட்சியருடைய உத்தரவுக்கிணங்க சைதை கோட்டாட்சியர் அவர்கள் இப்போதுள்ள புலம் எண். 335க்கு உட்பட்ட இடத்தில், இவர்களை அவராகக் குடியமர்த்தி இருக் கிறார், மாவட்ட ஆட்சியர் அவர்கள், அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கான பரிந்துரையைச செய்யுமாறு கோரி யிருக்கிறார். ஆகவே இந்த ஆக்கிரமணங்கள் என்று சொல்லுவது எப்படிச் சரியாகும். நீதி மன்றத்தினுடைய தடை உத்தரவு இந்தக் குடியிருப்புகளுக்கு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களையே அறிக்கையைப் படிக்க வேண்டாமென்று சொன் னேன். தாங்களும் அதே அறிக்கையைப் படிக்கிறீர்கள். வினா வாக மட்டும் கேளுங்கள்.

திரு. உ. ரா. வரதராசன்: வினாவிற்கு வந்து விடுகிறேன். தடை உத்தரவு இதற்கல்ல. மதுரவாயல் தேர்வு நிலை பேரு ராட்சி, அங்கே உள்ள பேரூராட்சிப் பணியாளர்களுக்குக் குடி யிருப்பு அமைக்க வேண்டுமென்பதற்கு எதிராக தடை உத்தரவு என்பதை அரசு அறியுமா? மாவட்ட ஆட்சியருடைய ஆணைக் கிணங்க 23 குடிசைவாசிகளுக்கு குடிமனைப் பட்டா வழங்க பரிந்துரை செய்து, அவர்களுக்குக் குடிமனைப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவ ரவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தது போல, அவர்களை அகற்றுவதாக இந்த அரசுக்கு உத்தேசம் இல்லை என்று திட்ட வட்டமாக, தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். இது ஒன்று. தீர்ப்பு வந்ததற்குப் பிறகு எப்படிப்பட்ட முடிவுகளைக் கையாள் வது என்பது பற்றி இந்த அரசு பரிசீலிக்கும், இது இரண்டு. திரு. வரதராசன் அவர்களுக்கு இனிமேல் கேள்வி கேட்க வேண்டிய அவசியமில்லை என்பது மூன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வரதராசன் அவர் கள், அவர் பங்கை அவர் விட மாட்டார்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலத்திலே ஏற்கெனவே ஆக்கிரமணம் செ திருக்கக் கூடிய, அறிக்கையில் கூறியிருக்கிற, திரு. சுப்பிரமணிய நாயக்கர் என்பவர் வசதி படைத்தவர். அந்த நிலத்தை அவர் ஆக்கிரமணம் செய்து கொண்டதற்கு எதிராக அவரை அகற்றுவதற்கு, அந்த ஆக்கிரமணத்தைத் திரும்பப் பெறுவதற்கு

வருவாய்த் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால்தான் அங்கே பிரச்சனைகள் வந்திருக்கின்றன. ஆகவே அந்த ஆக்கிரமணத்தை அகற்றுவதற்கு வருவாய்த் துறை நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலைத்தான் திருப்பியும் சொல்கிறேன். நீதிமன்றத்திலே வருகின்ற ஆணை, அவர்களை அகற்றக்கூடாது என்று இருக்குமானால், நிச்சயம் அவர்கள் அகற்றப்பட மாட்டார்கள். இப்போது அவர்களை அகற்றுகின்ற உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.

(ஆ) பரமக்குடி தொகுதியில் மின் அழுத்தக் குறைவால் மின் விளக்குகள் எரியாதது குறித்து

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பரமக்குடி தொகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், மின் விளக்குகள் எரியாமல் இருப்பது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கையை வைக்கிறேன் ;

அறிக்கை.

2–3–1990 முதல் 12–3–1990 வரை நெய்வேலி — திருவாரூர் — காரைக்குடி — தூத்துக்குடி 230 கே. வி. மிக உயர் மின்பாதையில், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மின்பாதையை மாற்றி அமைக்கும் பணியை மேற்கொண்டது, அப்பொழுது அந்தப் பாதையில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டு மொத்த மின் விநியோகமும் தூத்துக்குடியிலிருந்து வழங்கப்பட்டது. இதனால், பரமக்குடி தொகுதியில் 2–3–1990 முதல் 12–3–1990 வரை மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டிருந்தது.

12–3–1990க்குப் பிறகு இப்பகுதியில் மின் அழுத்தம் சீராக உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; பேரவைத் தலைவர் அவர்களே, மின் பாதையை மாற்றி அமைக்கும் பணியை முடிக்க பரமக்குடி தொகுதியில் 2–3–1990 முதல் 12–3–1990 வரை மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மின்னழுத்தக் குறைவானது 12–3–1990க்குப் பிறகு சீராக உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் 16–3–1990 அன்று மாலை பரமக்குடியிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டேன். அதுவரையில் அந்த மின்னழுத்தம் அதே நிலை

வருவாய்த் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால்தான் அங்கே பிரச்சனைகள் வந்திருக்கின்றன. ஆகவே அந்த ஆக்கிரமணத்தை அகற்றுவதற்கு வருவாய்த் துறை நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலைத்தான் திருப்பியும் சொல்கிறேன். நீதிமன்றத்திலே வருகின்ற ஆணை, அவர்களை அகற்றக்கூடாது என்று இருக்குமானால், நிச்சயம் அவர்கள் அகற்றப்பட மாட்டார்கள். இப்போது அவர்களை அகற்றுகின்ற உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.

(ஆ) பரமக்குடி தொகுதியில் மின் அழுத்தக் குறைவால் மின் விளக்குகள் எரியாதது குறித்து

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பரமக்குடி தொகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், மின் விளக்குகள் எரியாமல் இருப்பது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கையை வைக்கிறேன் ;

அறிக்கை.

2–3–1990 முதல் 12–3–1990 வரை நெய்வேலி — திருவாரூர் — காரைக்குடி — தூத்துக்குடி 230 கே. வி. மிக உயர் மின்பாதையில், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மின்பாதையை மாற்றி அமைக்கும் பணியை மேற்கொண்டது, அப்பொழுது அந்தப் பாதையில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டு மொத்த மின் விநியோகமும் தூத்துக்குடியிலிருந்து வழங்கப்பட்டது. இதனால், பரமக்குடி தொகுதியில் 2–3–1990 முதல் 12–3–1990 வரை மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டிருந்தது.

12–3–1990க்குப் பிறகு இப்பகுதியில் மின் அழுத்தம் சீராக உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; பேரவைத் தலைவர் அவர்களே, மின் பாதையை மாற்றி அமைக்கும் பணியை முடிக்க பரமக்குடி தொகுதியில் 2–3–1990 முதல் 12–3–1990 வரை மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மின்னழுத்தக் குறைவானது 12–3–1990க்குப் பிறகு சீராக உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் 16–3–1990 அன்று மாலை பரமக்குடியிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டேன். அதுவரையில் அந்த மின்னழுத்தம் அதே நிலை

யில்தான் இருந்தது. 16 ஆம் தேதிகூட புகைவண்டி நிலையத்தில் 3 மின் விளக்குகள் எரியாமல்தான் இருந்தது. இதைப் பற்றி புகைவண்டி நிலைய ஸ்டேஷன் மாஸ்டரிடம் கேட்டதற்கு வோல்டேஜ் குறைவாக இருக்கிறது என்று கூறி உள்ளார். எனது மருத்துவமனைக்குச் சொந்தமான எக்ஸ் ரே....

10-15 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் அரசு அறியுமா என்று உறுப்பினர் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, இவர் ஊரை விட்டு வருகிறபோது மின் அழுத்தம் குறைவாக இருந்து இருக்கலாம். இவர் ஊர் போய்ச் சேருகிறபோது அது சரி செய்யப்பட்டு இருக்கும். அடுத்த முறை அவர் வந்து பாராட்டுத் தெரிவிப்பார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 டிரான்ஸ்பார்மர் சரியாக இயங்காமல் இருக்கின்ற காரணத்தினால்தான் வோல்டேஜ் குறைவாகஇருப்பதாக மின் வாரிய ஊழியர்கள் கூறுகிறார்கள். ஆனால் பாதையைமாற்றி அமைப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னைப் பொருத்தமட்டில் மின் விளக்குகள் எரிந்தால் போதும். இப்போது மாணவர்கள் அரசு தேர்வுக்காகத் தங்களைத் தயார் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் அரசு, மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மின்விளக்குகள் எரிவதற்கு வழி செய்ய மாண்புமிகு அமைச்சர் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, எல்லோருடைய நலத்தையும் கருத்தில் கொண்டு இப்போது மின் அழுத்தம் சீரமைக்கப்பட்டு இருப்பதால் இப்போது அந்தப் பிரச்சினை இல்லை.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

யில்தான் இருந்தது. 16 ஆம் தேதி கூட புகைவண்டி நிலையத்தில் 3 மின் விளக்குகள் எரியாமல்தான் இருந்தது. இதைப் பற்றி புகைவண்டி நிலைய ஸ்டேஷன் மாஸ்டரிடம் கேட்டதற்கு வோல்டேஜ் குறைவாக இருக்கிறது என்று கூறி உள்ளார். எனது மருத்துவமனைக்குச் சொந்தமான எக்ஸ் ரே....

10–15 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் அரசு அறியுமா என்று உறுப்பினர் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, இவர் ஊரை விட்டு வருகிறபோது மின் அழுத்தம் குறைவாக இருந்து இருக்கலாம். இவர் ஊர் போய்ச் சேருகிறபோது அது சரி செய்யப்பட்டு இருக்கும். அடுத்த முறை அவர் வந்து பாராட்டுத் தெரிவிப்பார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 டிரான்ஸ்பார்மர் சரியாக இயங்காமல் இருக்கின்ற காரணத்தினால்தான் வோல்டேஜ் குறைவாகஇருப்பதாக மின் வாரிய ஊழியர்கள் கூறுகிறார்கள். ஆனால் பாதையைமாற்றி அமைப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னைப் பொருத்தமட்டில் மின் விளக்குகள் எரிந்தால் போதும். இப்போது மாணவர்கள் அரசு தேர்வுக்காகத் தங்களைத் தயார் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் அரசு, மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மின்விளக்குகள் எரிவதற்கு வழி செய்ய மாண்புமிகு அமைச்சர் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, எல்லோருடைய நலத்தையும் கருத்தில் கொண்டு இப்போது மின் அழுத்தம் சீரமைக்கப்பட்டு இருப்பதால் இப்போது அந்தப் பிரச்சினை இல்லை.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற இந்தத் திருத்தச் சட்டத்தை நான் எதிர்க்கின்ற நேரத்திலே, இந்தச் சட்டத் திருத்தம் தேவையில்லாமல்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே வரியில் ''எதிர்க்கிறேன்'' என்று சொல்லுங்கள் : அவ்வளவுதான். (குறுக்கீடு) ஒரே வரியில் தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) ''அறிமுக நிலையிலே எதிர்க்கிறேன்'' என்று சொல்லுங்கள் அல்லது அடுத்த நிகழ்ச்சிக்குப் போகட்டுமா ?

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன் என்று தெரிவித்து இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ;

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற இந்தத் திருத்தச் சட்டத்தை நான் எதிர்க்கின்ற நேரத்திலே, இந்தச் சட்டத் திருத்தம் தேவையில்லாமல்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே வரியில் "எதிர்க்கிறேன்" என்று சொல்லுங்கள் : அவ்வளவுதான். (குறுக்கீடு) ஒரே வரியில் தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) "அறிமுக நிலையிலே எதிர்க்கிறேன்" என்று சொல்லுங்கள் அல்லது அடுத்த நிகழ்ச்சிக்குப் போகட்டுமா?

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன் என்று தெரிவித்து இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ;

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

1990 மார்ச் 24]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. அறிவிப்பு.

பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 31—3—1990 ஆம் நாள் அன்று டில்லியில் நடக்க இருக்கின்ற பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் தேசிய மாநாட்டில் தான் கலந்துகொள்ள வேண்டி இருப்பதாக மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்து உள்ளார். அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 31—3—1990 அன்று எடுத்துக்கொள்ள வேண்டிய ''பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்'' பற்றிய மானியக் கோரிக்கை 29—3—1990 ஆம் நாள் அன்றும், 29—3—1990 ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 31—3—1990 ஆம் நாள் அன்றும் எடுத்துக்கொள்ளப்படும்.

31—3—1990 ஆம் நாள் அன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை; ''சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி-சுற்றுலாத் துறை, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.''

6. வரவு-செலவுத் திட்டம், 1990-91 —பொது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, 1990—91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

10-20 மணி

நாம் சுதந்திரம் பெற்று வெகு நாட்களாகி விட்டது. 43 வருடங்கள் ஆகிவிட்டன. இந்த நாட்டினுடைய வளர்ச்சி எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதையெல்லாம் நாம் அனுமானிக்க வேண்டும். வளர்ச்சியே இல்லை. எந்தத் துறையிலேயும் நாம் வளர்ச்சி அடையவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய தேவையை

1990 மார்ச் 24]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. அறிவிப்பு.

பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 31—3—1990 ஆம் நாள் அன்று டில்லியில் நடக்க இருக்கின்ற பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் தேசிய மாநாட்டில் தான் கலந்துகொள்ள வேண்டி இருப்பதாக மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்து உள்ளார். அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 31—3—1990 அன்று எடுத்துக்கொள்ள வேண்டிய ''பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்'' பற்றிய மானியக் கோரிக்கை 29—3—1990 ஆம் நாள் அன்றும், 29—3—1990 ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 31—3—1990 ஆம் நாள் அன்றும் எடுத்துக்கொள்ளப்படும்.

31—3—1990 ஆம் நாள் அன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை; ''சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி-சுற்றுலாத் துறை, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.''

6. வரவு-செலவுத் திட்டம், 1990-91 —பொது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 1990—91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

10-20 மணி

நாம் சுதந்திரம் பெற்று வெகு நாட்களாகி விட்டது. 43 வருடங்கள் ஆகிவிட்டன. இந்த நாட்டினுடைய வளர்ச்சி எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதையெல்லாம் நாம் அனுமானிக்க வேண்டும். வளர்ச்சியே இல்லை. எந்தத் துறையிலேயும் நாம் வளர்ச்சி அடையவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய தேவையை

1990 மார்ச் 24]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. அறிவிப்பு.

பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 31-3-1990ஆம் நாள் அன்று டில்லியில் நடக்க இருக்கின்ற பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் தேசிய மாநாட்டில் தான் கலந்துகொள்ள வேண்டி இருப்பதாக மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்து உள்ளார். அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 31-3-1990 அன்று எடுத்துக்கொள்ள வேண்டிய ''பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்'' பற்றிய மானியக் கோரிக்கை 29-3-1990 ஆம் நாள் அன்றும், 29-3-1990ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 31-3-1990ஆம் நாள் அன்றும் எடுத்துக்கொள்ளப்படும்.

31-3-1990ஆம் நாள் அன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை; ''சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி-சுற்றுலாத் துறை, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.''

6. வரவு-செலவுத் திட்டம், 1990-91 —பொது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 1990-91ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

10-20 மணி

நாம் சுதந்திரம் பெற்று வெகு நாட்களாகி விட்டது. 43 வருடங்கள் ஆகிவிட்டன. இந்த நாட்டினுடைய வளர்ச்சி எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதையெல்லாம் நாம் அனுமானிக்க வேண்டும். வளர்ச்சியே இல்லை. எந்தத் துறையிலேயும் நாம் வளர்ச்சி அடையவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய தேவையை

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மார்ச் 24

எடுத்துக் காட்டும்பொழுது, கிட்டத்தட்ட மறுபடியும் இந்த 43 வருடங்களுக்கு பட்ஜெட் போட்டால்தான் சரியாக இருக்கும். இல்லையென்றால் நோட்டு அடிக்க வேண்டும். அது கூட பற்றாது என்று நினைக்கிறேன். அந்த அளவிலே நம்முடைய நாடு வளர்ச்சி குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன? அது இனிமேல் வளர்ச்சி பெறுவதற்கு வழிவகை என்ன?

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

இப்பொழுது போட்டிருக்கிறீர்களே திட்டம், கலைஞர் அவர்களுடைய திட்டமானது, வருவாய் 43,000 கோடி ரூபாயும், செலவு 48,000 கோடி ரூபாயும் இருக்கிறது. ஆனால் 1967 ஆம் ஆண்டிலே, காங்கிரஸ் கவர்ன்மென்டு முதலிலே விட்டுப் போகின்றபொழுது 156 கோடி ரூபாய் மொத்த வரவு—செலவுத் திட்டமே இருந்தது. இப்பொழுது வரவு-செலவுத் திட்டத்தினுடைய வளர்ச்சி, வரவோ, செலவோ இரண்டுமே இவ்வளவு கோடிக்கு வளர்ந்திருக்கிறது. இந்த 22, 23 வருட காலத்திலே ஜனங்களிடமிருந்து வாங்கும் வரிப் பணம், அதைச் செலவழிக்கக் கூடிய சக்தி, இது இரண்டும் எவ்வளவு தூரம் வேகமாக ஏறியிருக்கிறது என்று பார்க்கும்பொழுது, அதனுடைய பலன் என்ன என்று பார்க்கவேண்டும். பண வருமானமும் நிறைய வந்திருக்கிறது. பணம் சம்பாதிப்பதும் கஷ்டம், அதைப் பாதுகாப்பதும் கஷ்டம், அதைச் செலவழிப்பதும் கஷ்டம். பணம் சம்பாதிப்பது என்பது சாமானியம் அல்ல. மக்களிடம் வரி போட்டோம் என்றால், சாமானியமாக, சாதாரணமாக அதை விட்டு விடுவதில்லை. அதுவும் எங்களைப் போன்ற எதிர்க்கட்சிக்காரர்கள் எதையும் விடுவதில்லை. மேடை போட்டு வரி போட்டிருக்கிறார்கள், வரி போட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு போய்க் கொண்டே இருப்போம். வரி போட்டார்கள், வரி போட்டார்கள் என்று. அடுத்து, அதைப் பாதுகாத்து செலவழிக்கும் பொழுது, அதற்குச் செலவழிக்கவில்லை. இதற்குச் செலவழிக்கவில்லை என்று அதுவும் குற்றம்தான். இது இரண்டிலும் அகப்பட்டுக் கொண்டு முழிக்கின்றபொழுது, இந்த வரவு செலவுத் திட்டத்தைச் சரியான முறையிலே தயாரிக்கின்றபொழுது கஷ்டப்பட்டுத்தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதிலே ஒன்றும் சந்தேகமே இருக்காது. ஒரு கோடியா, இரண்டு கோடியா? 48,000 கோடிக்கு வருவாய் 43,000 கோடி ரூபாய். பற்றாக்குறை வேறே அதிலே இருக்கிறது. பற்றாக்குறை ஏற்படத்தானே செய்யும்? பற்றாக்குறை ஏற்படாமல் என்ன செயயும்? செலவு வேகமாக போகிறது. ஜனங்களுடைய அபேட்சையைச் சரியான முறையிலே தீர்ப்பதற்குச் செலவு பண்ணும்பொழுது ஏராளமான பணம் தேவையாக இருக்கிறது.

1990 மார்ச் 24] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

கலைஞர் அவர்கள் போட்ட முதல் பட்ஜெட் அல்ல இது. ஏற்கனவே 9 வருஷங்கள் அமைச்சராக இருந்திருக்கிறார். வெறும் அமைச்சர் அல்ல. முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள் முதலிலே விட்டுவிட்டேன். கலைஞர் முதலமைச்சராக இருந்திருக்கிறார். இப்பொழுது நாம் வந்து உட்கார்ந்து, இரண்டாவது வரவு-செலவுத் திட்டம் இது. ஏற்கனவே எலக்ஷன் மேனிபெஸ்டோ — தேர்தல் விஞ்ஞாபனத்திலே சொல்வது போல, நான் மேடையிலே ஏறி நின்று, எனக்கு ஓட்டுப் போட்டால் நாங்கள் வானத்தை வில்லாக வளைப்போம். மணலைக் கயிறாகத் திரிப்போம். ஆகவே, எனக்கு எல்லோரும் ஓட்டுப் போடுங்கள் என்று கேட்போம். அப்பொழுது, இம்மாதிரி பட்ஜெட் வரப்போகிறது. இதற்குக் கிடைக்கும், இதற்குக் கிடைக்காது என்றெல்லாம் சொல்ல மாட்டோம். எல்லாவற்றையும் தீர்த்து விடுவோம், அதனால் ஓட்டுப் போடுகின்றவர்களுக்கு என்னென்ன உனக்குத் தேவை என்று தானே கேட்கிறோம். முடியுமா முடியாதா என்பது அப்புறம். அதில் தீர்க்கக் கூடியதும் உண்டு: தீர்க்க முடியாததும் உண்டு. இதற்கெல்லாம் பொறுப்பு அமைச்சரவர்கள். அதிலும் முதலமைச்சர், பைனான்ஸ மினிஸ்டர் இரண்டும் ஒன்றாக இருக்கிறது இன்றைக்கு. இந்தக் காலத்திலே முதலமைச்சர் ஒருவர் தனியாக இருப்பார்: பைனான்ஸ் மினிஸ்டர் ஒருவர் இருப்பார்: மற்ற அமைச்சர்களெல்லாம் இருப்பார்கள். சிக்கல் ஒன்றும் வராது. இருந்தாலும் எல்லாமே அவரிடத்திலே, நல்லபடியாக ஒரு வரவு செலவுத் திட்டத்தை நமக்கு முன்னால் வைத்திருக்கிறார்கள். பல பணிகளை, மக்களுக்கு என்ன என்ன திட்டம் போட்டிருக்கிறார்களோ, ஓரளவு நிறைவேற்றி வந்திருக்கிறது. போன வரவு செலவுத் திட்டத்திலே என்னனென்ன சொன்னார்களோ, தேர்தல் விஞ்ஞாபனத்திலே அறிவித்தார்களோ அத்தனை திட்டங்களையும் - ஓஹோ, சபாநாயகர் மாறி போய் விட்டார் போல இருக்கிறது. அதைக் கவனிக்காமல் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆமாம், யார் உட்கார்ந்தாலும் ஒன்றுதான். அவர் சபாநாயகராக இருப்பார், இவர் துணை சபாநாயகர், அதற்கப்புறம் மாற்று சபாநாயகர் என்று இருப்பார்கள்.

பல திட்டங்களிலே, அரிசி கிடைக்கிறதோ, கிடைக்கவில்லையோ, கொண்டு வந்தார்களோ, கொண்டு வரவில்லையோ, கிட்டத்தட்ட 83 இலட்சம் ஜனங்களுக்குக் கையே வலித்துப் போய் விட்டது எங்களைப் போன்றவர்களுக்கு, கொடுத்துக் கொடுத்துக் கொடுத்து ஜனங்களுக்கு, இன்னும் என்னென்ன மனதிலே இருக்கிறதோ, தெரியவில்லை. நல்ல திட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதை விடமாட்டார் என்று நினைக்கிறேன்.

வேட்டி, புடவை. சென்று பாருங்கள். கோவாப்பரேட்டிவிலே தேங்கியிருக்கின்ற வேட்டியெல்லாம் இதற்குத்தான் பயன்படுகிறது. ஏதோ சட்ட திட்டம் போட்டு, கோவாப்பரேட்டிவ்லே தேங்கி இருக்கிறதெல்லாம் சரியாகச் செலவழிய வில்லை என்றால், அவைகளை வாங்கிக் கொள்ளுங்கள். இவைகளை வாங்கிக் கொள்ளுங்கள், இதற்கு இந்தத் திட்டத்தில் கொடுக்கிறோம், அதற்கு அந்தத் திட்டத்தில் கொடுக்கிறோம், என்று சொன்னாலும், கோவாப்பரேட்டிவ் சொசைட்டியிலே ஏராளமான புடவைகள், வேட்டிகள் மிஞ்சிப் போனால் அதையும் செலவழிப்பதற்கு ஒரு வழியாகி விட்டது. இலவசமாகக் கொடுப்பதற்கு ஒரு திட்டமும் ஆயிற்று. இந்தத் திட்டமும் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. ஏதோ சில இலட்சங்கள்தான் பாக்கியிருக்கிறது. எல்லாம் ஒரே யிடத்திலே செய்ய முடியாது. நம் கை தவித்துப் போகும். பணம் எங்கே இருக்கிறது? பணம் இருந்தாலும் சாமான் கிடைக்க வேண்டுமே? நம்முடைய ஸ்டேட்டிலே இருக்கிற கோவாப்பரேட்டிவ் துணிகளை எடுத்து, பக்கத்து ஸ்டேட்டுகளிலே யெல்லாம் எடுத்து, அதற்குப் பக்கத்திலே இருக்கிற ஸ்டேட்டிலே எடுத்து நம்மாலே முடியவில்லை. அவ்வளவு கார்டு, நியாய மான கார்டுகள் இருப்பதைப் பார்த்தால் இத்தனை இலட்சம், அதற்கு மேலே ஒரு பங்கு உயர்ந்து போகிறது. நான் கதர் தான் கட்டுவது. அதுவும் துப்பட்டி மாதிரி இருந்தால்தான் இடுப்பிலே தெரியும், இல்லையென்றால் தெரியாது. நான் கட்டுவது என்றால் அதுமாதிரிதான். 41 இலேயிருந்து அதே மாதிரிதான் மாறுவதே இல்லை. விபூதி, கதர், அதைப்போல குடுமி இந்த மூன்றிலும் நான் மாறமாட்டேன். 1943-ஆம் ஆண்டிலிருந்து இந்த மூன்றும் அப்படியே இருக்கிறது.

10.25 மணி

அதைப்போல முதியோர் பென்ஷன் திட்டத்தை நல்ல அளவிலே நிறைவேற்றி இருக்கிறார்கள். திருமணத் தொகை என்று வருகிறபோதுதான் கஷ்டம் இருக்கிறது. நல்ல எண்ணத்தோடு பெண்கள் எல்லாம் படிக்க வேண்டும், வெறுமனே கொடுத்தால் படிக்க மாட்டார்கள் என்று நினைத்து, ஏதோ நான்காவது பாரம் வரையில் படித்தால் கொடுக்கவேண்டுமென்று வைத்து, அது ஓரளவிற்கு திட்டத்தில் வந்திருக்கிறது. அதற்கு மேலே போகிறபோது கஷ்டமாக இருக்கிறது. எப்படி என்றால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களுக்குத் திருமணக் கடன் கொடுக்கிறபோது 5,000 என்று சொல்கிறார்கள், 5 ஆண்டுகள் பணியில் இருக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள். படிப்பவர்கள் ஒழுங்காகப் படித்தாலே எஸ்.எஸ்.எல்.சி., முடிக்கிறபோது 17 வயதாகி விடுகிறது. டிகிரி கோர்ஸ் போனால் வயதாகி விடுகிறது. அதற்கு மேல் டெக்னிக்கல் குவாலி பிகேஷன் வேண்டுமென்று படித்தால் 25 வயதாகி விடுகிறது.

1990 மார்ச் 24] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

அதற்குப் பிறகு நம்முடைய சர்க்காரில் வேலைக்காக சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதி அவர்கள் திட்டப்படி சர்வீஸ் கமிஷன் மேல் ஜாதி, கீழ் ஜாதி என்றெல்லாம் பார்க்கிறபோது 30 வயதாகி விடுகிறது. 30 வயதிற்கு மேல் கல்யாணம் செய்து கொண்டு என்ன பண்ண முடியும்? அவள் கிழவியாகி விடுவாள் இல்லையா, 30 வயதானால் யாராவது கல்யாணம் பண்ணிக் கொள்வார்களா? எவனும் கல்யாணம் பண்ணிக் கொள்ளமாட்டான், கிழவன்தான் பண்ணிக் கொள்வான். ஆகவே இந்த மாதிரி ஒரு கட்டுப்பாடு இவ்வளவு வயதாக வேண்டும் என்று இருக்கிறது. நாம் ஏழைக்குத் தான் கொடுக்கப் போகிறோம், பணக்காரனுக்குக் கொடுக்கப் போவதில்லை. அது மாதிரி கொடுக்கிறபோது அவளும் ஏழை தான—பணியில் சேர்ந்தால் என்ன, சேராவிட்டால் என்ன? கல்யாணம் பண்ணும் போது ஆணும், பெண்ணும் தான் பண்ணிக் கொள்ளப் போகிறார்கள். அந்தத் திட்டத்தில் யாராக இருந்தாலும், ஏழையாக இருந்தால், இந்தத் தொகையைக் கொடுக்கிறோம் என்று கலைஞர் அவர்கள் அறிவித்து இருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்பொழுது நன்றாக இல்லையென்று சொல்லவில்லை. இது நன்றாகத் தான் இருக்கிறது. இது நிறைவேறும் போது எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று எல்லோரும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

எங்களைப் போன்ற படிக்கத் தெரியாதவர்கள், ஒரு கிளாசை மூன்று தடவை எழுதுகிறான். அதிலே டிகிரி கோர்ஸ் என்றால் ஒரு சப்ஜெக்ட்டை மூன்று, நான்கு தடவை எழுது கிறான். டிகிரி பாஸ் பண்ணும்போது 5, 6 வருடம் ஆகி விடுகிறது. அதுபோல பெண்களும் நிறைய பேர் இருக்கிறார்கள், இல்லையா? அதுமட்டுமல்ல, நம்மைப் போல மூளை கொஞ்சம் குறைவாக இருக்கிற பெண்களும் நிறைய இருக்கிறார்கள். அவர் களுக்கு வயது என்ன ஆகிவிடுகிறது என்றால் 30-க்கு மேலே போய்விட்டால் கிட்டத்தட்ட 10 வருடம்தான் இந்தக் கல்யாண சுகத்தை அனுபவிக்க முடியும். அதற்குப் பிறகு தூரம் போய் விடும். அப்புறம் கிட்டவே வராதே என்று சொல்லி விடுவார்கள். எனவே, அந்த அளவிற்குப் போகிறபோது, இந்தத் திருமணத் திட்டம் இருக்கிறதே – சிரிக்கக் கூடாது—நான் நியாயத்தைச் சொல்கிறேன். ஏதாவது தவறாக இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) வயதானவன் சொல்லக் கூடாதா? நீங்கள் எல்லா வற்றையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள், நான் எல்லாம் அனுபவித்து முடித்தவன். நீங்கள் அனுபவிக்கப் போகிறவர்கள். எனக்கு வயது 75. இப்போது 74 முடியப் போகிறது. போன வருடம் கலைஞர் கிட்டே 74 வயது என்று சொன்னேன். இப்போது 75 ஆரம்பிக்கப் போகிறது. ஆகவே எல்லா வற்றிற்கும் பிராக்டீஸ், எக்ஸ்பீரியன்ஸ் வேண்டும் இல்லையா? (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். இராதா : தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த விவரங்களை எல்லாம் அவையில் சொல்லக்கூடாது. அவையில் சொல்லக்கூடாத விவரங்களை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நெருப்பிலே வெறுப் பில்லை, வயதாகி விடும் என்று தான் சொல்கிறேன். வயதானதைச் சொல்லக் கூடாதா ? தவறாக எதையும் சொல்லியிருந்தால் தவறை எடுத்துச் சொல்லுங்கள். யாரையாவது குறிப்பிட்டு இவர்களுக்கு இந்த வயதாகி விட்டது, அவர்களால் அனுபவிக்க முடியாது என்று சொல்லியிருந்தால் நான் வெறுப்பிற்குள்ளா வேன். நான் மொத்தமாக ஜனங்களுக்கு இருக்கிற குறை பாட்டைச் சொல்கிறேன்.

அடுத்து கருவுற்ற பெண்களுக்கு உதவி—ரொம்பவும் சந்தோ ஷமாக இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்கிறேன். கணவனை இழந்த பெண்களுக்கு உதவி, அதுவும் ரொம்பவும் நல்ல திட்டம். விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவி—அதுவும் நல்ல திட்டம். இப்படி எல்லாத் திட்டங்களும் நல்ல திட்டங்கள். சத்துணவுத் திட்டம், நல்ல திட்டம் தான்.

எங்கள் ஜில்லாவில் ரொம்ப நாட்களாக கிட்டதட்ட 50 வரு டத்திற்கு மேலாக ஒரு குறை நிறைவேற்றப்படாமல் இருந்தது. ஆயிரக்கணக்கான செயற்கை வைரத் தொழிலாளர்கள் கோரிக்கைதான் அது. அது சாமானியமான காரியம் அல்ல. 37 வயதிலிருந்து அதுபற்றி எனக்குத் தெரியும். ஏனென்று கேட்டால் எனக்கு ஆரம்பமே அது தான். அந்த செயற்கை வைரத் தொழிலாளர்கள் 50 வருடகாலமாக எத்தனையோ முறையீடுகளை எத்தனையோ சர்க்கார்களுக்குக் கொடுத்து, இவர் முன்னாலே இருந்த சர்க்காருக்கும் கொடுத்துள்ளார்கள். அப்போது மறந்து விட்டார். இப்போது தான் நினைவு வந்திருக் கிறது. இவரும் அந்தக்காலத்தில் எவ்வளவோ முறையீடுகள் வந்தும் அப்போது நிறைவேற்றவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. இப்போது அந்தத் திட்டத்தை நல்ல முறையில்—ஓராயிரம், இரண்டாயிரம் இல்லை, பல ஆயிரம் தொழிலாளர்கள் பிரச்சினை அது. திருச்சிராப்பள்ளியில் மட்டு மல்ல, கொடுமுடி, ஈரோடு, பெரியார் மாவட்டம், கோயம் புத்தூர் மாவட்டம் எல்லா இடத்திலும் இருக்கிறார்கள். செயற்கை வைரம் என்று அதற்குப் பெயர். இப்போது எல்லாம் செயற்கையாகி விட்டது. இயற்கையே ஒன்றும் கிடையாது. புஷ்பராகம் என்று அந்தக்காலத்தில் சொல்வார்கள், அது வெள்ளையாக இருக்கும். ரங்கூனிலிருந்து வந்தது அந்த வைரம். அது இறக்குமதியானது, ரங்கூன் டைமண்ட் என்று திருச்சிராப்பள்ளியில் சொல்வது வழக்கம். திருச்சியில் அப் போது இரண்டு கடைகள்தான் இருக்கும். இப்போது 300

1990 மார்ச் 24] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

கடைகளுக்கு மேல் வந்துவிட்டன. எதற்காகச் சொல்கிறேன் என்றால் இதுபோன்ற அரிய நல்ல திட்டங்களை எல்லாம் நம்முடைய கலைஞர் அவர்கள் எங்கள் ஜில்லாவிற்குக் கொடுத்திருக்கிறார்கள். இது சுற்று வட்டாரத்தில் எல்லா இடத்திலும் இருக்கிறது. தளம் என்று சொல்வார்கள். எங்கள் ஊர்க்காரர் ஒருவர் போய் ஹாலண்டில் இருந்து தளம் எல்லாம் கண்டுபிடித்து இப்போது மேட்டுப்பாளையத்தில் அது நடக்கிறது. தளம் பண்ணுகிற கம்பெனி—மேட்டுப்பாளையத்தில் மகாலிங்கம் கம்பெனி ஒன்று நடக்கிறது. அது ரொம்பவும் கஷ்டம். அப்போது ஆரம்பகாலத்தில் யாரோ கெட்டிக்காரர் போய் கோட்டாவை வாங்கி விடுவார்கள். அந்தக் கோட்டாவிலே வாங்குவதற்கு அவ்வளவு கஷ்டம். அந்தப் பெட்டியிலே வைத்திருப்பான். 100 ரூபாய் விலைக்கு 300 ரூபாய் சொல்வான். அப்போது வேலையில்லை. வேறு வேலை தெரியாது அவனுக்கு. அந்த வேலையைக் கற்றுக்கொண்ட பிறகு முழிக்கிறான். அதற்குத் தளம் கிடைத்தால்தான் அவனால் முடியும். தளம் கிடைக்கவில்லை என்றால், பிளாக் மார்க்கெட்டிலே வாங்க வேண்டியதாக இருக்கிறது. இது மாதிரியான கஷ்டங்களை எல்லாம் நீக்குவதற்கு கலைஞர் அவர்கள் நல்ல முடிவை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

10-30 மணி

இந்தத் தளத்திற்கு எல்லாம் இப்போது டிரெயினிங் கோர்ஸ் ஏற்படுத்துவது நல்ல திட்டம். அடுத்த வருடம் வருகிற பட்ஜெட்டிலே இது இன்னும் உருவம் எடுத்துவிடும் என்று நினைக்கிறேன். இதிலே என்ன கஷ்டம் என்றால், நம்முடைய ஸ்டேட் அல்லாமல் வெளியிலிருந்தும் வருகிறது. 300 கடைக்கு மேலே இருக்கிறது. எனக்குத் தெரிந்து 300 கடைகள். இன்னும் எக்சீடாகக் கூட இருக்கலாம். நித்யம் இரண்டு கடைகள் உற்பத்தியாகின்றன. இவ்வளவு இடம் இருந்தால் போதும். ஒருவன் உட்கார்ந்து கொண்டு இந்த கிளாட்டை இப்படித் தள்ளிக்கொண்டே இருப்பான். திருச்சூரிலேயிருந்து ஏராளமான வைரங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. திருச்சூரிலேயிருந்து ஏராளமான வைரங்கள் வந்து கொண்டிருக்கிறபோது, நம்முடைய நாட்டிலே உற்பத்தியாகிற வைரங்கள் அதோடு பீட் பண்ண முடியவில்லை. அவன் எங்கேயிருந்து வைரத்தைக் கொண்டுவந்து, அதைத் தீட்டுகிறானோ, உருட்டுகிறானோ, பட்டை தீட்டுகிறானோ தெரியவில்லை. முதலிலே உருட்டுவது, பட்டை தீட்டுவது, பிறகு மெருகு ஏற்றுவது என்று அந்தக் காலத்திலே திட்டம் இருந்தது. நாளடைவிலே அதையெல்லாம் விட்டுவிட்டார்கள். மறுபடியும் இந்தத் திட்டத்திலே அதுமாதிரி வரப்போகிறது. இப்போது கலைஞர் அவர்கள் போட்டிருக்கிற திட்டத்தாலே,

இதுமாதிரி கொஞ்சம் கொஞ்சமாக உருவாகிக்கொண்டு இருக்கிறது. எவ்வளவு கற்கள், இங்கே படியிலே அளக்கலாம். கற்கள் வாராவாரம் வரும்போது, இங்கே இருக்கிற கற்களுக்குச் சரியான விலைவாசி, கட்டுப்படியாகாமல் இருக்கிறது. இப்போதுதான் விற்பனை வரி என்று போடுகிறார்களே, நான் பணத்தைச் சம்பாதிக்கவேண்டும் என்று சொன்னதற்கு அர்த்தம் என்ன? அர்த்த சாஸ்திரத்தை எழுதினானே சாணக்கியன், அவன் சொல்லியிருக்கிறான், பணத்தை எப்படிச் சம்பாதிப்பது என்பது பற்றி. அதுமாதிரி இந்தப் பணத்தைச் சம்பாதிப்பதற்கு அதற்கும் கூட வரி போடலாம். நிறைய வரும். ஓரளவிற்குக் கட்டுப்படியாகக்கூடிய வரி போடலாம். திருச்சூரிலேயிருந்து, மற்ற மாநிலத்திலேயிருந்து நம் மாநிலத்திற்கு இதுமாதிரி இறக்குமதியாகக்கூடிய சாமான்களிலே இதுவும் ஒன்று. மடியிலே கட்டிக்கிட்டு வருவான். பையிலே கூட தூக்கிக்கொண்டு வரலாம். அப்படிப்பட்ட கற்கள் எல்லாம் இருந்தன. எனவே இதைப்பற்றி கலைஞர் அவர்கள் யோசித்து ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த கிராம நிர்வாகம். இது இன்றைக்கு ஏற்பட்டதல்ல. வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து, ஏன் அதற்கு முன்னாலேயிருந்து நம்முடைய பரம்பரைக்கு முன்னாலேயிருந்து ஏற்பட்டது. கிராம நிர்வாகத்தைப் பற்றி கலைஞர் அவர்களுக்குத் தெரியும். கிராம அதிகாரிகளிலே கணக்குப்பிள்ளை, வெட்டியான், கிராம முன்சீப், இது பரம்பரை. எந்தவிதமான தவறும் இல்லாமல், சர்க்காருடைய கட்டணம் இல்லாமல், ஸ்டேசனரி இல்லாமல், எந்தவிதமான முதலீடும் இல்லாமல் அவர்கள் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அதிகாரிகள் வந்தால், அவர்களுக்கு வரவேற்பு, சப்ளை செய்யவேண்டும். நான் கூட ஸ்ரீரங்கத்திலே கிராம அதிகாரியாக இருந்தேன். 22 வருடங்கள் பார்த்தேன். அதிகாரிகள் வந்துவிட்டால், இவர்கள் எல்லாம் ரெடியாக இருப்பார்கள். அவனுக்கு என்னென்ன வேண்டும், நான்—வெஜிடேரியனா, வெஜிடேரியனா, வெறும் சாப்பாடா வெல்லம் போட்ட சாப்பாடா என்று, கேம்ப் பண்ணிவிட்டால் போதும், அவனுக்குச் செலவு செய்வதுதான் முக்கியமானது நமக்கு. அப்படிப்பட்ட நிலைமை.

வெட்டியானை எடுத்துக்கொண்டால், அவனுக்கு ஒன்றும் இருக்காது. குடித்துவிட்டு வருவான். 20 ஆயிரம் ரூபாய் தண்டல் போட்டு, இங்கேயிருந்து கிஸ்தி போட்டு வசூல் செய்து அனுப்பினால், ஒரு அணா பஸ் சார்ஜ்—இதுவரைக்கும் எந்த வெட்டியானும் பணத்தைத் தூக்கிக் கொண்டு போனதே கிடையாது. 40 ஆயிரம் 30 ஆயிரம் அனுப்புவோம். அது உங்களுக்குத் தெரியும். நீங்கள் எல்லாம் கிராமத்திலே பிறந்தவர்கள் தான்.

1990 மார்ச் 24] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

முன்சீப் இருப்பார், கணக்குப் பிள்ளை இருப்பார். கணக்குப் பிள்ளை ஆயிரம் ரூபாய் பத்திரத்தை கண்ணை மூடிக்கொண்டு எழுதுவார். இந்தக் கையிலே ஒரு பத்திரம், அதையும் எழுது வார். அப்படிப்பட்ட ஒரு நல்ல வர்க்கத்தை எந்த விதமான காரணமும் இல்லாமல்—அவர்கள் எல்லாம் எந்தத் தப்பும் பண்ணியதாக எனக்குத் தெரியவில்லை—ஒரே நாளில், அர்த்த ராத்திரியிலே 12–30 மணிக்கு ஒரு ஆர்டினன்சை பாஸ் பண்ணி, 1980 ஆம் வருடத்திலே அவர்களுடைய தஸ்தாவேஜுகளை எல்லாம் ஜீப்பைக் கொண்டு வந்து பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்கள். என்ன காரணமோ தெரியவில்லை? அப்படிப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்கள். அவர்கள் பரம்பரை யாக இருந்தார்கள். அந்த ஊரைவிட்டு ஓடிவிடமாட்டார்கள். ஏன் என்றால், 10 ஏக்கர் நிலம் இருக்கும். பெரும் பணக்காரர் கள் எல்லாம் இருப்பார்கள். கல்லை எடுத்தாலும் எடுக்கலாம், கணக்குப்பிள்ளையை எடுக்கக்கூடாது என்று சொல்வார்கள். அப்போது சர்க்கார் ஒரேயடியாக எல்லாவற்றையும் எடுத்து விட்டார்கள். அப்படிப்பட்ட பெரும் நிர்வாகத்தைப் பிடுங்கி விட்டார்கள். இப்போது வரதராஜன் அவர்கள் கூட போராடு கிறார்கள், 10 பேர்களை வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள் என்றால், அவர்களுடைய நிலை என்ன? அவர்களுடைய கிராஜுவிட்டி என்ன, சம்பளம் என்ன? அவர்கள் குடும்பம் என்ன ஆவது?

இப்போது எவ்வளவோ பேர்களுக்கு பென்சன் கொடுக் கிறோம். அவர்கள் பரம்பரையாக வேலை பார்த்தவர்கள். பணக்காரர்களாக இருப்பவர்களுக்குக் கொடுக்கவேண்டாம். நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். பல பேர்கள் பணக்காரர் களாக இருக்கிறார்கள், பெரிய கிராம நிர்வாக அதிகாரிகளாக இருந்தவர்கள். இப்போது கலைஞர் அவர்கள் லான்ட் ரிபார் மிலே 15 ஏக்கர்தான், அதுவே போதும். கஷ்டப்படுகிறவர் களுக்கு, வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு எல்லாம் நாம் பணம் கொடுக்கிறோம். கஷ்டப்படுகிறவர்களுக்கு எல்லாம் 10 ரூபாய், 50 ரூபாய், 100 ரூபாய் என்று கொடுக்கிறோம். அது மாதிரி எந்தவிதமான ஒரு மறுவாழ்வும் இல்லாமல் இவர்களை எடுத்துவிட்டு, கிட்டத்தட்ட 10, 11 வருடங்களாக அவர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய குடும்பத்தினுடைய நிலை என்னவாகும்? சில கணக்குப்பிள்ளைகள், கிராம அதிகாரிகள் வசதியானவர்களாக இருக்கலாம். ஆனால், கிராம அதிகாரி களாக இருந்தவர்களிலே பல பேர்கள் இன்றைக்கு சொத்து சுகங்களை இழந்துவிட்டார்கள். அந்தக் காலத்திலிருந்தும் சரி, இந்தக் காலம் வரையிலும் சரி, மற்ற ஸ்டேட்டுகளைப் பார்க்கவேண்டும் நீங்கள். இப்போது நியமித்திருக்கிற கிராம அதிகாரிகளினாலே என்ன நன்மை? சொல்லுங்கள். இன்னும் அவர்கள் எல்லாம் போராட்டத்திலே இறங்கவில்லை. இறங்கு வார்கள் என்று நான் நினைக்கிறேன். இப்போது நான்

பேசுகிற பேச்சைக் கேட்டு, கிராம நிர்வாகம் இன்றைக்கும் கெடவில்லை. அப்படிப்பட்ட நிர்வாகத்தை நடத்திவந்த அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில், அவர்களுக்கு பென்சன் போன்றவற்றைக் கொடுக்கவேண்டும். எத்தனையோ பேர்களுக்கு பென்சன் கொடுக்கிறோம். அதுமாதிரி அவர்களுக்கும் பென்சன் கொடுங்கள். அரை வயிற்றுக் கஞ்சி குடிப்பதற்காகவாவது கொடுங்கள். அவர்களிலே நன்றாக வேலை செய்பவர்கள் இருந்தால், வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய குடும்பத்திற்கு ஏதாவது மறுவாழ்வு கொடுப்பதாக இருந்தால், கம்பாசனேட் கிரவுண்டிலே அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுங்கள். அதிலே கொஞ்சம் பேர்கள் தற்போது கிடையாது. இப்போது இருக்கிற கிராம அதிகாரிகளைத் தள்ளவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் எல்லாம் சர்வீஸ் கமிஷன் எழுதிவந்தவர்கள். நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. அதிலே யுடிலைஸ் பண்ணிக் கொள்ளலாம். கலைஞர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தெரியாமல் இல்லை, ஆகவே அது மாதிரி அவர்களை எடுத்துக் கொள்ளும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

10-35 மணி

லக்ஷ்மி காந்தன் பாரதி தலைமையில் ஒரு கமிஷன் போட்டார்கள். அந்தக் கமிஷன் என்ன ஆச்சு? கிராம அதிகாரிகளை நாட்டை விட்டே ஓட்டணும் என்று சொன்னார்களே அது என்ன ஆச்சு? இப்போதிருக்கிற சிஸ்டமே நல்ல சிஸ்டமா அல்லது இதற்கு முன்னால் இருந்த கிராம நிர்வாகம் சரியான சிஸ்டமா? அது குறித்து என்ன எழுதியிருக்கிறார்கள்? என்ன ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள்? என்னென்ன சாட்சியங்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று அதை ஓரளவில் வெளியிட்டால் தேவலாம். வெளியிடவில்லை என்றால் மனத்திலே வைத்தாவது அதை நிறைவேற்றலாம். அந்தப் பரிந்துரைகளில் என்னென்ன எழுதியிருக்கிறது என்று பார்த்து நல்லதாக இருந்தால் நிறைவேற்றுங்கள், கெட்டதாக இருந்தால் அடித்துத் தள்ளுங்கள்—இதுதான் என்னுடைய வியாக்கியானம். ஏனென்று சொன்னால் கமிஷன் என்று போட்டாலே அது சென்டிரல் கமிட்டியாக இருந்தாலும் சரி, ஸ்டேட்டாக இருந்தாலும் சரி அது பெட்டிக்குள்ளே போய்விடுகிறது. அது மாதிரி இல்லாமல் லக்ஷ்மிகாந்தன் பாரதியினுடைய கமிஷன் ரிப்போர்ட்டை உங்களுடைய மனத்திலே வைத்துக்கொண்டு நல்லதாக இருந்தால் நிறைவேற்றுங்கள் என்று நம்முடைய கலைஞர் அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பஸ் சமாச்சாரம். பஸ் சமாச்சாரத்திலே வரி நிறையப் போட்டிருக்கிறீர்கள். நான் கூட நினைத்தேன் என்ன இவ்வளவு வரி போட்டிருக்கிறீர்களே என்று, 500 ரூபாய்க்கு

1990 மார்ச் 24] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

2,000 ரூபாய் போட்டிருக்கிறீர்கள். இது ஒரு ஆம்னி பஸ்ஸுக்கு சீட்டு ஒன்றுக்கு, குவார்ட்டருக்கு கிட்டத்தட்ட 80 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமே என்று நினைத்தேன். மனத்திலே அவர்களுக்கும் வருத்தம் இருக்கும் அல்லவா? ஒன்றா, இரண்டா, நிறைய கட்ட வேண்டியிருக்கிறதே. ஆனால் இதே மாதிரி கர்நாடக கவர்மென்டிலே போட்டிருக்கிறார்கள். நேற்றுதான் அதைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன். ஆனால் அந்த பஸ் ஸெல்லாம் எப்படி ஓடுகிறது என்றால் கிட்டத்தட்ட இன்னொரு ஸ்டேட் வரைக்கும் ஓடுகிறது. பெங்களூரிலே புறப்பட்டால் பம்பாய் வரைக்கும் போகிறது. ஆனால் அதிலே லாப நஷ்டம் சொல்ல முடியாது. 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வரியாகக் கட்டினால் எப்படி பஸ் விடுவது? அப்புறம் கண்டக்டர் செலவு, ஓட்டுநர் செலவு, எண்ணெய் செலவு, ஸ்பேர் பார்ட்ஸ் செலவு என்று நிறைய செலவு இருக்கிறதே. இப்போது மறுபடியும் ஸ்பேர் பார்ட்ஸ் விலையை எல்லாம் ஏற்றி விட்டார்கள். அப்படி இருக்கும் காலத்திலே அவர்களால் எப்படி நடத்த முடியும்? அவர்களால் நடத்த முடியாது என்று தெரியும். பிரைவேட் சிஸ்டத்தை ஒழிக்கத்தான் இந்தத் திட்டம் என்றால் நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இந்த கவர்ன்மென்ட் செக்டார் வண்டி மட்டும் சரியாக நடக்கிறதா ? பப்ளிக் செக்டார் பிரைவேட் செக்டார் பற்றி விவாதிப்பதற்கு மேடைக்கு வரட்டும், தெரியும். இங்கே மட்டும் அந்த நிலை இல்லை, ஆல் இந்தியா லெவலிலேயே பப்ளிக் செக்டார் சரியாக வேலை செய்கிறதா, பிரைவேட் செக்டார் சரியாக வேலை செய்கிறதா என்று பார்த்தால் பப்ளிக் செக்டார் தான் சரியான முறையிலே இல்லை. குவாலிட்டியும் இல்லை, குவான்டிட்டியும் இல்லை. நிச்சயமாகச் சொல்கிறேன், நூற்றுக்கு தொண்ணூறு அப்படித்தான். மீதி பத்திலே வேண்டு மானால் கவர்ன்மென்ட் செக்டார் நன்றாக இருக்கலாம்.

ஆம்னி பஸ் என்ன ஓட மாட்டேன் என்கிறதா ? அந்த சீட்டிலே உட்கார்ந்தால் மெத்தை இல்லையா அல்லது ஓட்ட மாட்டேன் என்கிறார்களா, மற்றவைகளுக்கு எல்லாம் ரூ. 50 ரூ. 100 ஏற்றியிருக்கிறீர்கள். ஆனால் இதற்கு ஏற்றியிருப்பதைப் பார்த்தால் ரொம்ப அதிகமாக இருக்கிறது. அதையும் கொஞ்சம் கன்சிடர் பண்ண வேண்டும். நிவாரணம் என்பது எல்லோருக்கும் இருக்க வேண்டும். வரியைப் போட்டால் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது. அதுவும் பஸ்தான், இதுவும் பஸ்தான். அங்கேயும் நாம்தான் உட்காரப் போகிறோம். இங்கேயும் நாம்தான் உட்காரப் போகி றோம். பஸ் ஸ்டிரைக் அல்லது வேலை நிறுத்தக் காலத்திலே அவன்தான் உதவ வேண்டியிருக்கிறது. எல்லோரும் சேர்ந்து ஸ்டிரைக் பண்ணி விடுவார்கள். அப்போது ஆம்னி பஸ்ஸிலே ஏறுய்யா போகலாம் என்று சொல்லக்கூடிய நிலைமை பல தடவை ஏற்பட்டிருக்கிறது. இன்னமும் ஏற்படாது என்று நாம் சொல்லி விட முடியாது. ஆகவே இப்படிப்பட்ட கட்டங்களில் கொஞ்சம்

யோசனை பண்ணவேண்டும். நீங்கள் பிரைவேட் செக்டாரை நம்புகிறீர்களா, பப்ளிக் செக்டாரை நம்புகிறீர்களா என்ற கேள்விக்கே இடம் இல்லை. இது என் சொந்த அபிப்பிராயம். கட்சியினுடைய அபிப்பிராயம் அல்ல என்று முதலிலேயே சொல்லிக்கொள்கிறேன் உங்களுக்கு. அடுத்தபடியாக ஹோட்டல் களுக்கு . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு கட்சியினுடைய தலைவர் இது கட்சியின் அபிப்பிராயம் அல்ல, சொந்த அபிப்பிராயம் என்று சொல்வது முறையா ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சொந்த அபிப்பிராயம் சொல்வதற்கு ஜனநாயகத்தில் முறை இருக்கிறது. இது ஜன நாயகம். இது வெகுநாயகம் அல்ல, சர்வாதிகாரமும் அல்ல. இது என்ன ஹிட்லர் ஆட்சிக் காலமா, முசோலினி ஆட்சிக் காலமா? நம் இந்தியாவிலே வாழக்கூடிய பாமர மக்களுக்கு, அதுவும் என்னைப்போல் அரைகுறை படிப்பு படித்தவர்களுக்கு—படிப்பு என்றால் என்ன படிப்பு தெரியுமா? என்னுடைய தகுதி ஃபோர்த் பாரம்தான். இதற்குள்ளேயே அப்படி இப்படி கலந்து உரை யாற்றுவதற்குரிய வாய்ப்பு தகுதியை எனக்குக் கொடுத்திருக்கி றார்கள்.

அப்புறம் நிதிநிலை அறிக்கையிலே சுதந்திரப் போராட்ட வீரர் களுக்கு எல்லாம் பணம் கொடுக்கிறார்கள். 41–42லேதான் சுதந்திரப் போராட்டம். அதற்கு மேலே சுதந்திரப் போராட் டமே கிடையாது. நிச்சயமாக 65 வயதிற்கு மேலேதான் இதைக் கொடுக்க வேண்டும். ஆனால் இப்போது வாங்குகிறவர்களை யெல்லாம் பார்த்தால் இளைஞர்கள் எல்லாம் போய் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான தொகையை வாங்குகிறார்கள். சர்க்கார் பணம் அவ்வளவு தாராளமாக இருக்கிறது. நம்மிடம் மட்டும் இல்லை. சென்டிரல் கவர்ன்மென்டிடமும் வாங்குகிறார் கள். அதே மாதிரி எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.

மிசா சட்டத்திலே நாம் இரண்டாவது சுதந்திரம் வாங்கி னோமே அந்தச் சட்டத்திலே எவ்வளவு கஷ்டம் அனுபவித்தோம். மிசா கணேசன் என்ற ஒருவரை அந்தச் சட்டத்திலே பார்த்தேன். மிசாவிலே எவ்வளவு கஷ்டத்தை அனுபவித்தோம் தெரியுமா என்று அவர் கூட கேட்டார். நம் எல்லோருக்கும் எல்லா, ஜனங் களுக்கும் தெரியும். எத்தனையோ பேருக்கு பென்ஷன் கொடுக் கிறோம். அப்படியே மிசா சட்டத்தின் கீழ் கொடுமை அனுபவித் தவர்களுக்கும் ஏதாவது பென்ஷன் கொடுக்க வழி வகை செய்ய முடியுமா என்பதை கலைஞர் அவர்கள் யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயிலுக்கு எல்லோரும்தான் போகிறார்கள். அந்தக் காலம் மாதிரி இப்போது ஜெயில் இல்லை. வெள்ளைக்காரன் காலத்திலே ஜெயிலுக்குப் போனால் கஷ்டம். இப்போதுதான்

மோரிலிருந்து எல்லாம் கிடைக்கிறது. எண்ணெய் கூட தேய்த்து விடுகிறான். ஒன்றுதான் பாக்கி. அதைத் தவிர பாக்கி எல்லாம் ஜெயிலுக்குள்ளேயே கிடைக்கிறது. (சிரிப்பு) இப்போது ஜெயிலுக்குப் போகும்போது என்ன பண்ணுகிறான் என்றால் வக்கீலைக் கூப்பிட்டு போராட்டத்திலே போராடப்போகிறேன், நிச்சயம் பிடித்து விடுவார்கள், பெயில் அப்ளிகேஷன் எழுதுங்கள், கையெழுத்து போட்டு விட்டுப் போகிறேன் என்று சொல்லுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மட்டுமல்ல, நானும் அப்படித்தான். நாங்கள் ஜெயிலுக்குப் போகிறபோது சிவிலிலே சொல்லிவிட்டு, தம்பிகிட்டே சொல்லிவிட்டு. . . .

10-40 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குமரி அனந்தன்) : கனம் உறுப்பினர் வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள், ஒன்றே ஒன்று தான் பாக்கி இருக்கிறது என்று சொன்னார்களே, அந்த ஒன்று என்ன ? (சிரிப்பு)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சொல்லக்கூடாது. சொல்வதைத்தான் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் சொல்லக் கூடாது. சாப்பிடுவதுதான் சாப்பிடலாம். எல்லாவற்றையும் சாப்பிடலாமா? (சிரிப்பு) ஒன்றுதான் பாக்கியிருக்கிறது, அதையும் சாப்பிடுகிறேன் என்று சொல்லலாமா? அதுமாதிரி சொல்லக் கூடாது என்ற வகையிலே சொல்ல முடியாது. நிதிநிலை அறிக்கையிலே கூடிய வரை ஸ்டேட்டினுடைய வளர்ச்சியானது நல்ல முறையில் இருப்பதற்கு நம்முடைய கலைஞர் அவர்கள் திட்டம் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சிலவற்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு).

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்களைப் பற்றி 3 நாட்கள் சபையிலே பேசப்பட்டது. அவர் ஏன் வரவில்லை என்று கேட்கும்போது (குறுக்கீடு) அமைச்சரவர்கள் சொன்னார்கள், அவருக்கு உடல் நலம் குறைவாக இருக்கின்றது என்று. (குறுக்கீடு) ஆனால் இன்று நாம் பார்க்கும்போது அவர் நன்றாகத்தான் இருக்கின்றார். என்ன காரணத்தினால் அப்படிச் சொல்லப்பட்டது என்பதை இந்தச் சபையிலே. . . . (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குமரி அனந்தன்) : கனம் ராமசுப்பு அவர்கள், வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு இந்தக் கருத்தைச் சொல்லலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : வெளியே வந்து தான் அதனைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. யாருக்கும் தெரியாதா? அவர் வந்து உட்கார்ந்திருக்கிறார். அத்தனை பேருக்கும் தெரியும், அவர் வந்து உட்கார்ந்திருப்பது.

எஸ். சி., எஸ். டி., 42 வருஷமாக எஸ்.சி.,எஸ்.டி., என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறோம். அதன் விளைவாக மண்டல் கமிஷன் அமைத்து, ஜனதா ஆட்சியிலே அமைத்து, இப்போது அதை பார்லிமென்ட்டிலேயும் போட்டிருக்கிறோம். இங்கே, உட்கார்ந்திருந்தவரைக் காணவில்லையே, இங்கே உட்கார்ந் திருக்கிறாரே வக்கீல் பாண்டியன், பக்கத்திலே உட்கார்ந்திருப்ப தற்கு அவரைப் பார்த்தாலே கொஞ்சம் எனக்குப் பயம். (சிரிப்பு) அவர் சுப்ரீம்கோர்ட்டிலே ஒன்று போட்டிருக்கிறார். பேக்வேர்டு மண்டல் கமிஷன் பற்றி ஒன்று போட்டிருக்கிறார். அது பேக் வேர்டுக்கு. ஆனால் எஸ்.சி., எஸ்.டி.க்கு அதைப்பற்றி வேறாக இருந்தாலும் கொஞ்சம் சொல்ல வேண்டியதிருக்கிறது.

இலவசப் படிப்பு கொடுத்திருப்பதைப் பற்றி ரொம்ப சந்தோஷப்படுகிறேன். பெண்களுக்கு இலவசப் படிப்பு கொடுத்திருப்ப தைப்பற்றி ரொம்ப சந்தோஷப்படுகிறேன். டிகிரி கோர்ஸ்—பட்டப் படிப்பு நான் உங்களைத் தயவுபண்ணிக் கேட்டுக் கொள் கிறேன். இத்தனை ஜாதி, இத்தனை வகுப்பு என்று பிரித்து எழுதுவதற்கு ஒரு பெரிய கிளாஸே வைத்து, எத்தனையோ குமாஸ் தாக்கள் வைத்து வரவு செலவு எவ்வளவு என்று பார்த்தால் எல்லோருக்குமே இலவசமாகக் கொடுத்து விடலாம். நம் நாட்டிலே எத்தனை பேர் படிக்கப் போகிறான், காலேஜிலே? எத்தனை செக்ஷன் இருக்கப் போகிறது ? எல்லோருக்குமே இலவசப் படிப்பு கொடுக்கலாம். ஏனென்றால் டிகிரி கோர்ஸ் வரைக்கும்தான் கொடுக்கப் போகிறதே, இப்போது, அதிலே ஒன்றும் தவறில்லையே, யார் இருந்தால் என்ன, யார் படித்தால் என்ன? நம் நாட்டிலே காற்று, மழை மாதிரி பொதுவாக அதுவும் இருக்கட்டுமே, காற்று,சூரியன் இதெல்லாம் வெளிச்சம் தருகிறபோது ஒருவருக்குத்தானா? கலைஞருக்குத்தான் என்று சொல்கிறதா? யாருக்கு வேண்டுமானாலும் அந்த சூரியன் மறைக்கவே முடியாது. அது மாதிரி மழை பெய்கிறபோது குடை வைத்துக்கொண்டால்—அது கூட ஓட்டைக் குடையாக இருந்தால் ஜலம் ஒழுகும். மேல் காற்று அடிக்கும்போது மணலை கொண்டு வந்து கொட்டும். அதுமாதிரி கல்வியை நம் நாட்டிலே பொதுவுடைமை ஆக்கவேண்டும். நம் நாட்டிலே மட்டுமல்ல, எல்லா நாடுகளிலும், கம்பல்சரி எஜுகேஷன் நாட்டிலே இருக்க வேண்டும். படிக்காதவனே இருக்கக்கூடாது.

42 வருடம் கழித்து 32 பர்சென்ட்தான் நம் நாட்டிலே எழுத்தறிவு இருக்கிறது. நாம் என்ன பண்ணுவது? என்னால் 72 வயதிலே படிக்க முடியாது. இன்னமும் படிக்கலாம். முதியோர் கல்வித் திட்டத்திலே படிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்குச் சரியாக சாவகாசம் இல்லை. நம்முடன் சுதந்திரம் வாங்கியவன் எல்லாம் எங்கேயோ போய்விட்டான். கம்பல்சரி எஜுகேஷன், கம்பல்சரி மிலிட்டரி டிரெயினிங், அது மட்டுமல்ல. 'வாடா சண்டைக்கு' என்று வருகிறானா, இல்லையா? நாம்

எங்கே போய் நிற்கிறோம்? நாளைக்கு ஏதாவது வந்தது நாட்டுக்கு என்றால், போகவேண்டுமே சட்டென்று. படிக்கிறதோடு நில்லாமல் மிலிட்டரி டிரெயினிங் கொடுத்து, அவர்கள் வாடா என்று சொல்கிற இடத்திற்குச் சென்று ஆகவேண்டும். நம் நாட்டிலே 32 பர்சென்ட் தான். ஆகவே, இந்த டிகிரி கோர்ஸ் வரையிலாவது, யாருக்குமே ஏற்றத்தாழ்வு பார்க்காமல்—ஏன் சொல்கிறேன் என்றால், இந்தத் திட்டத்திலே பணக்காரன், ஏழை, இந்த ஜாதி, அந்த ஜாதி என்று கணக்கிடுகிறபோது செலவு அதற்கு மேல் ஆகிவிடுகிறது. அந்தச் செலவை ஒப்பிட்டுப் பார்த்தால் ஏதோ சில இலட்சக்கணக்கிலே கம்பல்சரி எஜுகேஷனுக்கு முழுமையாகக் கொண்டு வந்து டிகிரி கோர்ஸ் வரையிலும் கொடுத்து நல்லபடியாக.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மர்ற்றுத் தலைவர் (திரு. குமரி அனந்தன்): 25 மணித்துளிகள் நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: என்ன சார், நேற்றெல்லாம் 3/4 மணி நேரம் பேசியிருக்கிறார்கள். ஒரு நிமிஷம் சார். (குறுக்கிட்டு) அவர் வந்தால் விடமாட்டார். நீங்கள் இருப்பதற்கு சந்தோஷப்படுகிறேன். லோயர் பவானியிலே எனக்கும் நிலம் இருக்கிறது. அதிலே ஒரு சின்னக் கேள்வியாகக் கேட்க விரும்பினேன். நல்ல ஜோராக இருக்கும் கேள்வி. சர்க்காருக்கு ஒன்றும் இடைஞ்சல் இருக்காது. பொது ஜனங்களுக்கும் இடைஞ்சல் இருக்காது. கேள்வி கேட்கிறேன். என்றால், உட்காருங்கள் என்று சொல்லிவிட்டார். யார்? நம்முடைய பேரவைத் தலைவர். இருக்கட்டும், அதனாலே ஒன்றுமில்லை. அவர் சங்கடம் எனக்குத் தெரியும். அத்தனை பேருக்கும் கொடுத்தாக வேண்டும். (சிரிப்பு).

10-45 மணி

நிலவுடைமை. நிலவுடைமையில் ஏற்கனவே அளந்திருக்கிறார்கள். அது ரொம்ப தவறுதலாகப் போய்க் கொண்டிருக்கிறது. நிலத்தை அளக்கவேண்டியதுதான். அளக்காமல் இருக்கவேண்டியதில்லை. பட்டா போடுவதிலே, இந்தப் பட்டாவை அந்தப் பட்டாவாகப் போடுகிறான். குறைத்ததை நீட்டிப் போடுகிறான். நீட்டத்தைக் குறைத்துப் போடுகிறான். அப்படி அளக்கிறதைப் பற்றி—அளக்க வேண்டியதுதான். 1928 ஆம் வருடத்திலே செட்டில்மென்ட் நடந்தது. நம்முடைய தமிழ்நாடு செட்டில்மெண்ட் எப்போது நடந்தது என்றால் 1928. அப்போது செட்டில்மெண்டு ரிஜிஸ்ட்டர் என்ற ஒன்று இருந்தது. இப்போது அதையெல்லாம் புதிதாக ஆக்கவேண்டும். இப்போது வேறு வகையாக இருக்கிறது. நயா பைசா என்பதைப் போல மீட்டர் கீட்டர் என்பன போன்றவை வந்து விட்டன. அந்த பழைய அடி உதை எல்லாம் இப்போது கிடையாது. அளப்பதைப் பற்றி யோசனை செய்கிறீர்கள். சாமானிய விவசாயிகள் விவசாயத்தில் இப்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மார்ச் 24

போது விளையவே மாட்டேன் என்கிறது. வெள்ளம் என்கிறோம். அப்புறம் ட்ரவுட் என்கிறோம். அப்படிப்பட்ட காலத்தில் இந்த விவசாயிகளுக்கு என்ன செய்கிறோம்? (மணியடிக்கப்பெற்றது) நிலத்திற்கு எல்லாம் வரி போட்டு வாங்கி விட்டார்கள். அந்த நிலத்திற்கு வரியும் போடக் கூடாது. வாங்கியிருந்தாலும் அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்பது என்னுடைய கருத்து. ஏன் என்றால் விவசாயிகளைப் பொறுத்தவரையில் 10 ஆயிரம் ரூபாய் கடன் தள்ளுபடி என்று சென்டிரல் கவர்ன்மெண்டில் சொல்லியிருக்கிறார்கள்.

விவசாயிகளைப் பற்றிச் சொல்லும் போது கொஞ்சம் டைம் கொடுங்கள். ஏன் என்றால் நாம் எல்லாம் அரிசியைத் தான் சாப்பிடுகிறோம். ஆகவே, அந்த 10 ஆயிரம் ரூபாய் கடன் தள்ளுபடி செய்ததற்கு நான் ரொம்ப சந்தோஷப் படுகிறேன். கடன் வாங்கியது 5 ஆயிரம் ரூபாய் இருக்கும். வட்டி எல்லாம் சேர்த்து 20 ஆயிரம் ரூபாய் ஆகியிருக்கும். 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கட்டியிருப்பான். மறுபடியும் ஏன் இந்த 10 ஆயிரம் ரூபாய்? ஆகவே, கடன் வாங்கி திருப்பிக் கட்டியவர்கள் என்ன சொல்கிறார்கள்? ஐயோ நாம் திருப்பிக் கட்டிவிட்டோமே என்னடா செய்வது என்று அவனுக்கு வெகு வருத்தமாக இருக்கிறது. எங்களைப் போன்ற கடன் வாங்காதவர்களுக்கு அதற்கு மேலே வருத்தமாக இருக்கிறது. கடன் வாங்கியிருந்தால் நமக்கும் 10 ஆயிரம் ரூபாய் சலுகை கிடைத்து இருக்குமே, கிடைக்கவில்லையே, வாங்காமல் இருக்கிறோமே, இனிமேல் எப்போது கடன் கொடுக்கப்போகிறார்கள் என்று பார்த்துக்கொண்டே இருக்கிறோம் பேப்பரை. காலையில் பேப்பரில் போட்டுவிட்டால் உடனே தாலுக்கா ஆபீசுக்கு போய் விடுவேன். நானும், என் பேரன், பேத்தி எல்லோரும் போய் 10 ஆயிரம் ரூபாய் கடன் வாங்குவோம். ஏன் என்றால் தள்ளுபடி என்று வந்து விட்டது. இனிமேல் ஒரு காலத்தில் தள்ளுபடி ஈசியாக வாங்கிவிடலாம். போராடி, கீராடி என்ற ஒரு எண்ணம் வருகிற போது.. (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய நிதி அமைச்சர் படித்த வரவு-செலவுத் திட்டத்தில் இந்த ஒரு முறை தான் இந்தக் கடன் ரத்து செய்யப்படும் என்று பேசியிருப்பதை ஜனதா தளத்தினுடைய தலைவர் ஏன் படிக்க மறந்தார் என்று எனக்குப் புரியவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இல்லை, அந்த அந்த பட்ஜெட்டின்போது, இந்த ஒரு வருடம் முதல் பட்ஜெட் போட்டு இருக்கிறார், இதில் சொல்லியிருக்கிறார், அடுத்த பட்ஜெட் வரும்போது அதற்குப் பிறகு

1990 மார்ச் 24] [திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

என்ன சொல்லுவது. அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் வந்துவிடும் இல்லையா ? (சிரிப்பு) கடன் வாங்குவதை இப்போது வாங்கிக் கொள்கிறோம். மறுபடியும் நாங்கள என்ன சொல் வோம்? விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க மாட்டேன் என் கிறார்கள். பயிர்கள் எல்லாம் எழுந்திருக்க மாட்டேன் என் கிறது, யூரியா போட வேண்டும், காம்போஸ் போடவேண்டும், காம்பிளக்ஸ் போடவேண்டும், எரு போடவேண்டும், இதற்கு எல்லாம் பணம் தேவையாக இருக்கிறது. பணம் இருந்தால் கூட எப்படியாவது பொய் சொல்லிவிடுவோம். நான் சொல்ல வில்லை, சொல்லச் சொல்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குமரி அனந்தன் : தயவு செய்து 2 மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அப்போது திரு. மொரார்ஜி தேசாய் வந்து இருந்தார். நான் தான் 'பெல்லில்' கொண்டு போய் இருக்கச் செய்தேன். பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ் வந்தார்கள். கடன் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார்கள். நாராயணசாமி நாயுடு போராட்டம் மிகவும் உச்சக் கட்டத்தில் அப்போது இருந்தது. கடன் என்றால் கடன் தான். மானியம் என்றால் மானியம் தான். அதற்குப் பிறகு நான் ஒன்றும் சொல்லமாட்டேன் என்று சொல்லிவிட்டார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குமரி அனந்தன் : உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேல் நீங்கள் 3 மணித் துளிகள் எடுத்துக் கொண்டீர்கள். தயவுசெய்து முடிக்கவும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு கலைஞருடைய நிதிநிலை அறிக்கை நல்லபடியாக, ஜனங்களுக்கு பயன்படக்கூடியதாக இருக்கும்படியாக இருப்பதால் நான் இதை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உறுப்பினர் ராமசுப்பு அவர்கள் இங்கே நமது மாண்புமிகு முன்னாள் அமைச்சர், இந்நாள் இங்கே உறுப்பினராக அமர்ந்து இருக்கின்ற திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே வருகை தந்து இருக்கின்ற காரணத்தாலே விளக்கம் தருவார் களா எனக் கேட்டார்கள். நேற்று சபாநாயகர் அவர்கள் அதுபற்றிய ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள். தீர்ப்பு வழங்குகின்றபோது அமைச்சராக இருந்து தன்னுடைய பதவி விலகல் கடிதம் கொடுத்து அதை ஏற்றுக்கொண்டிருக்கிற நிலையில் இருக்கின்ற உறுப்பினர்கள் தாங்கள் விரும்பினால் விளக்கம் சொல்லலாம் என்று இருக்கிறது. எனவே அந்தத் தீர்ப்பின்படியே அவர்கள் விரும்பினால் இப்போது விளக்கம் சொல்வார்கள். இல்லை என்றால் அடுத்த நிகழ்ச்சிக்கு நாம் செல்லலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது கடன் பற்றிச் சொன்னார்கள். இந்தக் கடன் பற்றி பாரதப் பிரதமர் அவர்களே 10 ஆயிரம் ரூபாய் வரை கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னதால் மக்கள், இருக்கின்ற கடனைக் கட்டுவதற்கு கூட—தள்ளுபடி ஆகும், தள்ளுபடி ஆகும் என்ற நிலை இங்கே ஏற்பட்டுவிட்டது. அது மட்டும் அல்ல, இதர மாநிலங்களில் கடன்களைத் திருப்பிக் கட்டக்கூடிய நிலை ஏற்பட்ட நிலையில்தான் ரிசர்வ் வங்கி 100,150 கோடி என்று பணம் கொடுத்து கடன் கொடுக்கிறார்கள். இப்போது 6 சதவீத வட்டிக்கு கடன், 20 கோடி, 25 கோடி, 15 கோடி வழங்கக்கூடிய நிலைமை தமிழகத்திற்கு ஏற்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கட்சியின் தலைமைக்குச் சொல்லி உடனடியாக இந்த 10 ஆயிரம் ரூபாய் கடன் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இந்த பட்ஜெட் என்ன தீட்சிதரைக் கேட்டா போட்டார்கள்? அதிலே தள்ளுபடி செய்கிறேன் என்று தானே சொல்லியிருக்கிறார். தீட்சிதரைக் கேட்டால் உடனே தள்ளுபடி செய்து விடமுடியுமா? யார் தள்ளுபடி செய்வது? கையில் பணம் இருந்து, வங்கிக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்து, கேட்டகிரி என்னவென்று பார்த்துத் தானே தள்ளுபடி செய்ய முடியும்? உடனே தள்ளுபடி செய்து விட முடியுமா? ஆகவே அதனுடைய நிலைமை என்ன? எதற்குத் தள்ளுபடி கொடுக்கிறோம் என்று எல்லாம் ஆராய்ந்து பார்த்து நிச்சயமாகத் தள்ளுபடி செய்யப்படும். திரு. மது தண்டவதே என்ன சாமான்ய பேர்வழியா, ஏற்கனவே ரயில்வே மினிஸ்ட்டராக இருந்து இருக்கிறார் தெரியுமா உங்களுக்கு. எல்லாக் கட்சியிலும் கேட்டிருக்கிறார்கள் (மணியடிக்கப்பெற்றது) ஏன் என்றால் அவர் மறுபடியும் எங்களுக்கு வேண்டும் என்று. ஏன் என்றால் இப்போது நிதி அமைச்சராக இருப்பவர் அதற்கு மேலே நிலைமை கிடைக்கும் என்று சொன்னார். ஆகவே தவறவே தவறாது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய அரசியலில் 'ஓப்பன்னெஸ்' திறந்ததோடு இருக்கவேண்டுமென்று சொல்கிற தேசீய முன்னணியின் அங்கமாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிலையைச் சொல்வதற்கு ஏதோ முன் வந்ததாகத் தெரிகிறது. ஆகவே அவர்கள் சொல்வார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 24]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் கேட்கிறார் தேசிய முன்னணியில் அங்கமில்லை என்று......(மணியடிக்கப்பெற்றது)

10-50 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் விளக்கம் சொல்ல வருகிறார் என்று கருதுகிறேன். அவர்களை விளக்கம் அளிக்குமாறு வேண்டுகிறேன்.

7. அமைச்சர் பதவியை விட்டு விலகிய திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களின் விளக்கம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையிலே வைத்த வரவு செலவுத் திட்டத்தின் மீது மக்களே வரவேற்கின்ற சூழ்நிலையில் குறை காண முடியாத காரணத்தினாலே எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் என்னுடைய பதவி விலகலை ஒரு பிரச்சினையாக இந்த அவையிலே 4 நாட்களாக எழுப்பியதை நான் பத்திரிகையிலே பார்த்தேன். அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகத்தான், இன்று கூட, உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தாலும் நான் அவைக்கு வந்திருக்கிறேன். என்னுடைய உடலில், கண் பழுது ஏற்பட்டு, வலது கண்ணிலே 9 துவாரங்கள் இருந்த காரணத்தினாலே சிகிச்சை பெற வேண்டுமென்றும், அமைச்சர் பொறுப்பிலே இருந்த என்னை விடுவிக்க வேண்டுமென்றும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அந்த அடிப்படையிலேதான் முதலமைச்சர் அவர்கள் என்னுடைய பதவி விலகலை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ காரணங்கள் கற்பிப்பதற்காக சில பத்திரிகைகளும் சில உறுப்பினர்களும் முயற்சிப்பது உள்ளபடியே வருந்தத்தக்கது. நாட்டிலே சிலபேர் ஆளுகின்ற பொறுப்புக்கு வரவில்லையே என்று உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில், அமைச்சராகிவிட்ட காரணத்தினாலே உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கிறேன். அதைக்கூட குறை காண வேண்டும் என்று யாராவது விரும்புவார்களேயானால் நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது, நான் பதவி விலகிய பிறகுகூட நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை 10 ஆம் தேதி காலையிலே சந்தித்து ஒரு மணி நேரம் பொதுப் பிரச்சினைகள் குறித்து பேசியிருக்கிறேன். தினந்தோறும் கட்சி அலுவலகத்திற்குச் சென்று மாலையிலே மூன்று மணி நேரம் கழகப் பணி ஆற்றுகின்றேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏதோ, முதலமைச்சருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இருப்பதைப் போலவும் நாட்டைவிட்டே என்னை நாடு கடத்தியதைப் போலவும்கூட இங்கே பேசப்பட்ட அந்த வாசகங்களைப் பார்த்தேன். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரைப் பொறுத்த

வரையில், முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கைத் தமிழ்ப் போராளிகளுடைய தலைவர்கள் பாலசிங்கம், சந்திரஹாசன் போன்றவர்களை நாடு கடத்தியபோது அவர்களையே தடுத்து மீண்டும் இந்தியாவிற்கு வரவழைத்த ஆற்றல் மிக்கதலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அவர்கள் என்னை நாடு கடத்த வேண்டிய அவசியம் இல்லை. நாட்டிலே எத்தனையோ பேர், நாடு கடத்தப்பட வேண்டியவர்கள் பற்றியே அவர் கவலைப் படாமல் இருக்கும் போது எதற்காக என்னை நாடு கடத்த வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. எனவே, ஒரு தனிப்பட்ட முறையில், ஒரு அமைச்சராக இருந்த நான் என்னுடைய உடல்நிலை காரணமாக விலகல் கடிதம் கொடுத்ததை ஒரு பிரச்சினையாக ஆக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குமரி அனந்தன்: இது தொடர்பாக மேலும் விவாதம் தேவையில்லை என்று விதிகள் கூறுகின்றன.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதிக்கவில்லை யென்றால் நான் உட்கார்ந்து விடுவேன்; அது வேறு விஷயம். ஆனால் எதிர்க்கட்சிக் காரர்கள் வேண்டுமென்றே குற்றம் சாட்டுகிறார்கள் என்று சொல்கின்ற அந்த நிலையை அவர் எடுத்ததற்குப் பின்னால், அவரைப் பற்றி, அவருடைய உடல்நிலையைப் பற்றி இப்போது தேறிவிட்டார் என்பதோ இன்னும் உடலில் வியாதி இருக்கிறது என்று சொல்வதைப் பற்றியோ எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால், எதிர்க் கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே சொல்கிறார்கள் என்ற நிலையை உருவாக்கி விட்டார். அதனால் தான் விளக்கம் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேனே தவிர, நான் வேண்டுமென்றே, அவர் சொல்கின்ற விளக்கத்திற்கு, விளக்கம் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை. (குறுக்கீடு).

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியினுடைய தலைவரே காணாமல் போய் விட்டார் என்று ஹைகோர்ட்டிலே கேஸ் போட்டு, எங்களுடைய கட்சித் தலைவரைத் தேடிக் கொடுங்கள் என்று கட்சிக்காரரே கோர்ட்டிலே விண்ணப்பம் போட்டார். அது ஒரு பெரிய பிரச்சினையாகத் தெரியவில்லை. ஆனால் அமைச்சர் ஒருவர் பதவி விலகி இருக்கிறார் என்றால், அதை மிகப் பெரிய பிரச்சினையாக ஆக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேர்த்துக் கொண்டு, அவருக்கு நல்வாழ்த்துக் கூறிக்கொண்டு, அருமைக்குரிய திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

வரவு-செலவுத் திட்டம், 1990–91—பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1990–91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது சில கருத்துக்களை வழங்குகிற வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற போது, ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள், தங்களுக்கு சொல்லாற்றல் இருக்கிறது, இலக்கிய நயம் இருக்கிறது. மக்களுக்குத் தேவையான திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன என்று பேசியிருக்கிறார்கள். கருத்துக்களைக் சொல்லியிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைப் பொறுத்த வரையில், இன்றைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்களைப் போல, எரிகின்ற விளக்குக்குத் தூண்டுகோலாக எதிர்க் கட்சி இருந்து ஆளும்கட்சியில் இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது, எங்களைப் போன்றவர்களுடைய கடமை என்ற அடிப்படையில் இங்கே சில கருத்துக்களை முன் வைக்க நான் விழைகிறேன். ஆங்கே குறிப்பிட்டுக் காட்டியதைப் போல, இந்த நிதிநிலை அறிக்கையில் ஆழ்கடலில் மூழ்கி முத்துக்களை முதல்வர் எடுத்து வருவார் என்று நாங்கள் கருதினோம். ஆனால் கடற்கரை மணலில் பரவி இருக்கிற சிப்பிகளை எடுத்து வந்திருக்கிற ஒரு அவல நிலையை நாம் இங்கே கண்டுகொண்டு இருக்கிறோம். ஆகவே அந்த அடிப்படையில் ஆளுங்கட்சியில் இருக்கிற நண்பர்கள், பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கஸ்.

செவ்வாழைத் தோட்டத்திற்கு மேலே பறந்து கொண்டிருக்கிற கழுகுக்கு, அங்கே குலையாக இருக்கிற பழம் தெரியாது கீழே செத்துக் கிடக்கிற எலிதான் தெரியும் என்று சிலர் சொன்னார்கள். பழம் போன்ற ஏழை மக்களின் அன்றாட உணவுப் பொருளாகிய அரிசி விலையை உயர்த்தியிருக்கிற நேரத்தில், மலிவு விலை சாராயம் வழங்கப்படும் என்று சொல்கிற நேரத்தில், கழுகுக்கு எலி தெரிவதைப் போல இந்த ஆட்சி ஏழை மக்களின் மீது சுமையைச் சுமத்திக் கொண்டிருக்கிற வரியைப் பார்க்கிற போது, எனக்கு அந்த எலியைப் பற்றிய நினைவு வருகிறது. 175 கோடிக்கு மேல் வரி போட்டிருக்கிறோம் என்று புள்ளி விவரத்தைத் தந்திருக்கிறார்கள். மலிவு விலையில் சாராயம் தருகிறோம் என்ற வகையில் மட்டும் 150 கோடி ரூபாய்க்கு மேல் வரி வருகிறது என்று புள்ளி விவரம் தந்திருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்திற்கும் இலவச அரிசித் திட்டத்திற்கும் 140

கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்ற விபரத்தைச் சொல்லி, இன்றைக்கு மதுவிலக்கைக் கொண்டு வருவதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். சொல்வதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, இந்த அரசு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் தருவோம் என்று சொன்னீர்களே, செய்தீர்களா? அதற்கு ஒரு புள்ளி விவரக் கணக்கைத் தந்து இருக்கிறீர்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியங்கள் தந்திருக்கிறதா என்றால் முழுமையாகத் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அரசு அலுவலர்கள் இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் 400 கோடி ரூபாய்க்கு மேல் சலுகைகள் தருகிறோம், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பளத்தைத் தருகிறோம் என்று சொல்லி, வாக்குறுதி மட்டுமல்ல, அறிக்கையையும் நீங்கள் விட்டிருந்தீர்கள். அதே அடிப்படையில் இன்றைக்கு சொல்வதைத்தான் செய்தீர்களா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

11.00 மணி

அதேநேரத்தில் இன்றைக்கு மலிவுஅரிசிக்கு உதாரணம் காட்டுகிறபோது, பொது விநியோகத்தில் வெவ்வேறு மாநிலங்களை நீங்கள் உதாரணம் காட்டியிருக்கின்றீர்கள். தமிழ்நாட்டிலே ரூ. 1.75-க்கு இருந்த அரிசியை இன்றைக்கு 2 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறீர்கள். 2.25 ரூபாயிருந்த சன்ன அரிசி 3 ரூபாய்க்கு, உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைவிட சன்ன அரிசியாயிருக்கிற 2.50 ரூபாய்க்கு இருந்த அரிசியை 3.50 ரூபாய்க்கு, ஒரு ரூபாய் விலை உயர்த்தியிருக்கிறீர்கள். இந்த விலைப்பட்டியலைப் போட்டு ஒரு விளம்பரத்தை உணவுத் துறைச் செயலாளர் அவர்கள் செய்திருக்கிறார்கள். இங்கே கேரள மாநிலத்தை ஒப்பிட்டுக் காட்டியிருக்கலாம், கர்நாடக மாநிலத்தை ஒப்பிட்டுக் காட்டியிருக்கலாம். ஒரிசா மாநிலத்தைக் காட்டியிருக்கலாம், பல்வேறு மாநிலங்களை ஒப்பிட்டுக் காட்டுகிறபோது, பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்தில் இன்றைக்கு அரிசி விலை எப்படி விற்கிறது என்பது இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறதா என்றால் கிடையாது. ஆனால் அந்த அடிப்படையிலே வெவ்வேறு மாநிலங்களையெல்லாம் சுட்டிக்காட்டி அதைக்காட்டிலும் குறைத்துத்தான் நியாயவிலைக் கடைகளிலே இன்றைக்கு அரசு விலையை உயர்த்தியிருக்கிறது என்று சொல்லி ஒரு உதாரணத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வரிச்சுமையை அரசு யார்யாருக்கு எவ்வாறு சுமத்தியிருக்கிறது என்று சொல்லுகிறபோது, ஏழை எளிய மக்கள், அடித்தளத்திலே உழைக்கின்ற மக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்கள்,

அன்றாடம், வாரத்திற்கு ஒரு முறை அல்லது மாதத்திற்கு ஒரு முறை நியாயவிலைக் கடைகளிலே சென்று இந்த அரிசியை வாங்கித்தான் வாழ வேண்டும் என்றிருக்கிற கோடிக்கணக்கான மக்கள் மீது வரிச் சுமையை நீங்கள் சுமத்தியிருக்கிறீர்கள் என்ற குற்றச் சாட்டை நான் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போலத்தான் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் களுக்கெல்லாம் அதிக அதிகாரத்தைத் தருவதாக நீங்கள் சொன்னீர்கள். ஆனால் அதிக அதிகாரத்தை தந்திருக் கிறீர்களா என்றால் கிடையாது. இரண்டாண்டு காலம் பதவி உயர்த்தினீர்களே தவிர பதவி உயர்த்தியதற்குப் பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் முன் காலத்தைப்போல் ஆசிரியர்களும் உங்கள் இடத்திலே பணியாற்றுவார்கள், மருத்துவத் துறையும் பணியாற்றும், வேளாண்மைத் துறையும் உங்களுக்கு வழங்கப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் வாக்குறுதியைத் தந்தார்கள். ஆனால் இந்தத் துறைகள் எல்லாம் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர்களுடைய கையிலே இருக்கிறதா ? இல்லை. அதே நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் அன்றைக்கு கொடுக்கப்பட்டிருந்த இந்தக் கடன் வழங்குகிற திட்டத்தில், கடன் வழங்குகிற டாஸ்க் போர்ஸ் கமிட்டியிலே இந்த ஊராட்சி ஒன்றியப் பெருந்தலை வர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அதே போல் என். ஆர். டி. கமிட்டியிலே ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இடம் பெற்றிருந் தார்கள். ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் அடிப்படை யிலே போடுகின்றத் திட்டத்திற்கெல்லாம் ஊராட்சி ஒன்றியத் தில் இருக்கிற தலைவர்கள் இடம் பெற வேண்டும் என்று சொல்லி அன்றைக்கு வகுத்திருந்ததைக் கூட இன்றைக்கு எடுத் திருக்கிற அவல நிலையை நாம் பார்க்கிறோம். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையெல்லாம் அழைத்து உங்களுக்கு அதிக அதிகாரங்களைத் தருகிறேன் என்று சொல்லி பெரும் தலைவ ராக மாற்றிய காட்சியை நாம் இன்றைக்குப் பார்த்துக் கொண் டிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு நீங்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

அதே நேரத்தில் நெசவாளர்களுடைய நூல் விலை இன் றைக்கு விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் உதாரணத்தைச் சொல்லுகிறபோது 18 நூற்பாலை களில் 2 நூற்பாலைகள்தான் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக் கின்றன என்று சொன்னார்கள். நெசவாளர்களிடத்திலும் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். உயிரோடு இருந்த நேரத்தில் மாஸ்டர் வீவர்ஸ் என்று சொல்லப்படுகிற நெசவாளர்கள் நசுக் கப்படுகிற நேரத்திலே நூற்றுக்கணக்கான நெசவாளர்களை, ஆயிரக்கணக்கான நெசவாளர்களை, லட்சக் கணக்கான நெச வாளர்களை லட்சக் கணக்கான கூட்டுறவுச் சங்கங்களை அங்கே

1990 மார்ச் 24] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

அன்றைக்கு அமைத்து பல்வேறு பகுதியிலே நெசவாளர்களுடைய துயரைத் துடைப்பதற்காகப் பாடுபட்டார்கள். அந்தப் புரட்சித் தலைவருடைய ஆட்சியிலேதான் நூற்பாலை நஷ்டத்திலே ஓடினாலும் கவலையில்லை, நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க வேண்டும் என்று சொல்லி 165 ரூபாய்க்கு அங்கே ஒரு கட்டு இரண்டுக்குப் பதினேழு என்ற ரகத்தை வழங்கினார்கள். ஆனால் இன்றைக்கு இந்த அரசு இந்த இரண்டுக்கு பதினேழு என்ற ரகத்தை 215 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறது என்று சொன்னால் இன்றைக்கு வெளி மார்க்கெட்டிலே கூட கூட்டுறவு நூற்பாலைகளிலே வழங்கப்படுகிற நூலைக் காட்டிலும் சில மாதங்களிலே குறைந்திருக்கிற அவல நிலையை நாம் பார்க்கிறோம். இந்த கூட்டுறவு நூற்பாலை எதற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது ? இந்த கூட்டுறவு நூற்பாலை இங்கே இருக்கக்கூடிய நெசவாளர்களுடைய துயரைத் துடைப்பதற்காகத்தான் அரசாங்கம் அதை உருவாக்கியிருக்கிறதே தவிர கூட்டுறவு நூற்பாலை லாபத்திலே ஓடுவதற்கு அல்ல. அந்த அடிப்படையிலே அரசாங்கம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. லட்சக் கணக்கான நெசவாளர்கள் தங்களுடைய கண்ணீரை இந்த அரசாங்கம் துடைக்கும் என்று எண்ணினார்கள், வாக்களித்தார்கள், வாக்களித்ததற்குப் பிறகு பழைய காலத்தைப் போலத்தான் இந்த அரசாங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மக்கள் இன்றைக்கு சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு பல்வேறு திட்டங்கள், இந்த அரசு போடுகிற திட்டங்கள் ஏழை மக்களுக்குக் கிடைக்கிறதா ? கிடைக்காத ஒரு அவல நிலையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

11-05 மணி

அந்த அடிப்படையிலேதான் சாலைகளைப் பார்க்கிறோம். புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிற நேரத்தில் தன்னிறைவுத் திட்டம் என்கிற திட்டத்தின் அடிப்படையில் இந்த ஏழை கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்பதற்காக, கிராம ராஜ்யம் நாட்டிலே மலர வேண்டும் என்பதற்காக, தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார், சாலைகளைப் பராமரித்தார்கள், அவ்வாறு சாலைகளைப் பராமரித்ததோடு மட்டுமல்லாமல் கிராமப்புறத்தில் உள்ளவர்கள் நகரப்புறத்திற்கு வரவேண்டும் என்றால் பேருந்துகள் இல்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்தவர்களின் கண்ணீரைத் துடைத்து பேருந்து வசதிகளைச் செய்து தந்தார்கள். ஆனால் இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம். இங்கே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவரே நெடுஞ்சாலைத்துறை அமைச்சராகவும் இருக்கிறார். சிவகங்கைக் கூட்டங்களில் பேசும்போது பொதுப்பணித்துறை அமைச்சர்

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1990 மார்ச் 24

அவர்கள் ஒரு கருத்தினை அங்கே சொல்லியிருக்கிறார்கள். சர்க்கரை ஆலை நிகழ்ச்சியிலே பேசுகிறபோது அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். அந்தப் பாதைகள் எப்படி இருக்கிறது என்பதைச் சொன்னார். முன்பெல்லாம் வாகனங்கள் வருகிறது என்று சொன்னால் பள்ளிக்கு செல்கிற குழந்தைகள் அந்த வாகனங்களைப் பார்த்தவுடன் ஓரங்களிலே ஒதுங்கிவிடுவார்கள். ஆனால் இப்போது அந்தக் குழந்தைகள் ஒதுங்க வேண்டிய தேவையே இல்லை; அந்தக் குழிகள் இருக்கின்றனவே, அதாவது செப்பனிடப்படாமல் இருக்கின்ற குழிகள் இருக்கின்றனவே அவற்றில் குழந்தைகள் அமர்ந்துகொண்டாலே போதும் அந்தப் போக்குவரத்து நகர்ந்து சென்றுவிடும் என்று ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு அமைச்சர் அவர்களைப் போன்றவர்களும், என்னைப்போன்றவர்களும் அந்தப் பாதைகள் சீரமைக்கப்படாத காரணத்தால், அதாவது கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அந்தச் சாலைகள் பராமரிக்கப்படாத காரணத்தால்.......

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதாவது 13 ஆண்டுக் காலத்தில் அந்தச் சாலைகள் என்ன நிலைக்கு வந்திருக்கிறது என்பதைத்தான் நான் எடுத்துக்காட்டினேன். அந்தப் படப்பிடிப்பின் மூலம். அத்தகைய பாதைகளைச் சீரமைக்கின்ற பணிகளைத்தான் இப்போது நாங்கள் நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரே நாளிலே இது முடியுமா என்றால் முடியாது. இருந்தாலும் கூடுமானவரையில் வேகமாக அவற்றைச் சீரமைக்கிற பணி நடந்துகொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடைபெறுகிற அந்தப் பாதைகளைச் செப்பனிடும் பணிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கும் இந்த அரசால் எந்த முடிவும் எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். நீங்கள் ஏறத்தாழ $1\frac{1}{2}$ ஆண்டுக்காலமாக ஆட்சியில் இருக்கிறீர்கள். பழைய ஆட்சிக் காலங்களிலேயே சுட்டிக்காட்டி, அந்தப் பாதைகள் சரியாக இல்லை, சர்க்கரை ஆலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் போடப்பட்ட சாலைகள் செப்பனிடப்படவில்லை என்று சொல்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்த ஒன்றரை ஆண்டுக்காலங்களிலே அந்தச் சர்க்கரை ஆலைகளின் நிர்வாகிகளை அழைத்துவைத்துப் பேசி,

1990 மார்ச் 24] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

ஏறத்தாழ 10 கோடி ரூபாய்க்கு மேலே சர்க்கரை ஆலைகள் தர வேண்டிய வரிப்பணத்தைப் பெற்று அந்தப் பாதைகளைச் செப்பனிட்டு இருக்கிறார்களா என்றால் இல்லை.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்திவிடுகிறார்கள். ஆனால் தனியார் துறைகளில் நடத்தப்படுகின்ற சர்க்கரை ஆலைகள்தான் தர மறுக்கின்றன. அதனை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டு இருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. வழக்கின் முடிவு வரட்டும் என்று கூடக் காத்திருக்கவில்லை. அமைச்சரவைக் கூட்டத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களிடத்திலே உடனடியாக அந்த ஆலை அதிபர்களை அழைத்துப் பேசு என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு பேசி இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய அசோசியேஷனிலே ஒரு முறை பேசிவிட்டு 28-ஆம் தேதி வாக்கில் மீண்டும் அமைச்சரைச் சந்திக்க இருக்கிறார்கள். எனவே தொடர்ந்து அந்த முயற்சியை இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, 6 மாத காலத்திற்கு முன்பு அந்தத் தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகிகள் எல்லாம் அமைச்சர் அவர்களைச் சந்தித்து, முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இதற்கு நல்ல முடிவை நீங்கள் செய்து தாருங்கள், நாங்கள் அதை ஒத்துக் கொள்கிறோம் என்று கேட்டிருப்பதாகக் கூட எங்களிடத்திலே அந்த நிர்வாகிகள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி 6 மாத காலமாக அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தாலும் கூட நீங்கள் நாளை அல்லது ஒரு வார காலத்திற்குப் பிறகு பேச்சுவார்த்தை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்திருக்கிறீர்களா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; தலைவர் அவர்களே, முன்பு வேளாண்மைத் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்த மாண்புமிகு ஊரக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஆலை அதிபர்களை எல்லாம் அழைத்துப் பேசினார்கள். செஸ்-ஐப் பொறுத்த வரையில் இப்போது 8 ஆலைகள் ஏறத்தாழ 15 கோடி ரூபாய்க்கு மேல் நமக்குத் தரவேண்டி இருக்கிறது. அந்த ஆலைகள் ஒரே தவணையில் எங்களால் செலுத்த முடியாது, நான்கைந்து தவணையில் வேண்டுமானால் செலுத்துகிறோம் என்றும், பெனாலிட்டி எங்களால் தர இயலாது

என்றும் சொன்னார்கள். மீண்டும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களை அழைத்துப் பேசுங்கள் என்று என்னிடத்திலே சொன்னபோது 20-ஆம் தேதி அவர்களை அழைத்து நான் பேசினேன். 4 கோடி ரூபாய்க்கு மேலே நீங்கள் பெனாலிட்டி தரவேண்டியிருக்கிறது. நீங்கள் முறைப்படி கட்ட வேண்டிய செஸ் நிதி 15 கோடிக்கு மேல் வருகிறது. ஒட்டுமொத்தமாக 20 கோடியை நீங்கள் தர வேண்டும். உடனடியாகத் தர முன் வாருங்கள் என்று சொன்னேன். உச்ச நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கை நீங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்; பாதை அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கிறது. விவசாயிகள் பெரும் சங்கடத்திற்கு ஆளாகிறார்கள் என்று எடுத்துச் சொன்னேன் அவர்களேதான் ஒருவார காலம் எங்களுக்கு வாய்தா தாருங்கள்; எங்களுடைய ஆலையதிபர்களுடைய சங்கத்தில் கலந்து பேசிவிட்டு பிறகு நாங்கள் வந்து சொல்கிறோம். மீண்டும் பேசலாம் என்று ஆலையதிபர்களுடைய சங்கத்தின் சார்பாகத்தான் வாய்தா வாங்கி சென்றிருக்கிறார்கள்.

11-10 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையாவது விரைவிலே முடித்து, இந்தப் பாதைகளைச் செப்பனிட வேண்டுமென்று.........(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, 15 ஆண்டுக்காலமாக, 15 கோடி ரூபாய் இந்தப் பளு வளருகின்ற அளவுக்கு விட்டுக் கொண்டிருந்தவர்கள் யார்? அதை எப்படியாவது பெறவேண்டுமென்று முயற்சிப்பவர்கள் யார் என்பது திரு. செங்கோட்டையன் அவர்களுடைய மனசாட்சிக்கு நன்றாகத் தெரியும்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: 12 ஆண்டுக்காலமாக விட்டு விட்டார்கள் என்ற கருத்தைச் சொல்லி, முதலமைச்சர் அவர்கள் தாங்களாவது செய்ய வேண்டும்; நீங்கள் வந்திருக்கிறீர்கள் ஆட்சிபீடத்திலே அமர்ந்திருக்கிறீர்கள் என்ற அடிப்படையிலே நீங்கள் செய்ய வேண்டுமென்ற கருத்தைத்தான் நாங்கள் சொல்கிறோம். இன்றைக்கு அந்தப் பாதையிலே வேறு திட்டங்களைச் செய்ய முடியவில்லை. நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துச் செய்ய முடியவில்லை. ஆகவே அந்தப் பாதையில் எப்படி பொதுமக்கள் செல்ல முடியும்? ஏறத்தாழ தமிழ் நாட்டிலே அயிரக்கணக்கான கிலோ மீட்டர் தொலைவு அளவிற்கு பாதைகள் அமைத்திருக்கிறார்கள். அந்தப் பாதைகள் சீர் கெட்டு இருக்கிற நேரத்தில் அதை வேறு திட்டத்திலாவது செய்வதற்கு அரசு வழி வகை செய்திருக்கிறதா என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1990 மார்ச் 24] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

அதே நேரத்தில் இன்றைக்கு சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு கொண்டிருக்கிற அவல நிலையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு, பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம், சேலம் மாவட்டம் போன்ற பகுதிகளில் கிராமப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் இரவு நேரங்களில் தூங்கமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற ஒரு அவல நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு பல இடங்களிலே முகமூடிக் கொள்ளையர்கள் புகுந்து கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் ஏதாவது ஒரு வழக்கை, ஒருவரையாவது கைது செய்து, அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்களா என்றால் இதுவரையிலும் கிடையாது. மாதக் கணக்கிலே இங்கே இருக்கின்ற கிராமப்புறங்களிலே வாழ்கின்ற பெரியார் மாவட்டத்திலே இருக்கின்றவர்கள், சேலம் மாவட்டத்திலே இருக்கின்றவர்கள், கோவை மாவட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு இரவு நேரங்களில் தூங்குவதற்குக்கூட அஞ்சுகின்ற ஒரு அவல நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இன்றைக்கு சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுக் கொண்டிருக்கிற ஒரு நிலை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு வறட்சியின் பிடியிலே சிக்கிக்கொண்டிருக்கிற ஒரு அவல நிலையை நாம் பார்க்கிறோம். இன்றைக்கு அன்பிற்குரிய நண்பர்கள் சில பேர் குறிப்பிட்டு காட்டுகின்றபோது அந்த மாவட்டத்திலே தென்னை மரங்கள், பனை மரங்கள் கூட வரண்டு கொண்டிருக்கிற ஒரு காட்சியைப் பார்ப்பதாகத் தெரிவித்தார்கள். அங்கே பயிர் செய்யப்பட்ட பயிர்கள் 2, 3 மாத காலத்திற்குள் அறுவடை செய்யக் கூடிய பயிர்கள் விளைச்சல் இல்லாமல் விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலையை பெரியார் மாவட்டத்திலே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வறட்சி மாவட்டமாக அறிவித்து பல்வேறு சலுகைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சியின் கோரப்பிடியில் இன்றைக்கு தமிழ்நாடு சிக்கிக் கொண்டிருக்கிற நேரத்தில், பல்வேறு இடங்களிலே குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறபோது பல்வேறு இடங்களிலே வேகமாக போர்க்கால அடிப்படையில் ஆழ்குழாய் கிணறுகளை இந்த அரசு அமைத்துத் தர வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1990 மார்ச் 24

அதேபோல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய கருத்துக்களை அன்றைக்குச் சொல்கிற போது, உக்கம் சந்த் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த போது, இரண்டு கருத்துக்களுக்கு அவர் பதில் சொல்லவில்லை. திண்டிவனத்திலேயிருந்து ஒயர்லஸ் வண்டி தொடர்ந்து வந்ததும் அதிலிருந்து தகவல் அளிக்கப்பட்டு மீனம்பாக்கம் அருகிலே நம்முடைய கழகத்தின் பொதுச் செயலாளர் ஆக இருக்கிற புரட்சித் தலைவி மீது லாரி தாக்கியது குறித்து எந்தக் கருத்தும் முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. காவல்துறையை சேர்ந்த அதிகாரிகள், அந்தப் புகார் கொடுக்கின்ற நேரத்தில் முதலிலே மாட்டின் மீது மோதி, அந்த லாரி வேகமாகச் சென்றது என்ற கருத்தை, காவல்துறையைச் சேர்ந்தவர்கள் முதலிலே சொன்னார்கள். அதற்குப் பிறகு மாவட்ட காவல்துறை அதிகாரி அவர்கள் அந்த மாடுமுன் தினமே இறந்து விட்டது என்ற கருத்தையும் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டு கருத்துக்களையும் கருத்திலே கொண்டு அதற்கேற்ப பதிலுரையை அளிக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் இங்கே வைக்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், வருவாய்த் துறையிலே பல்வேறு மாற்றங்களை நாம் இன்றைக்கு உருவாக்கியாக வேண்டும். வருவாய்த்துறையைப் பொறுத்த வரையிலே கேரள சிஸ்டத்தைப் போல ஜாதிச் சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ்கள் பொறுத்தவரையில் கிராம நிர்வாக அதிகாரிகளே தந்து விட்டால் நன்றாக இருக்கும். இல்லையென்று சொன்னால், இந்த வருமான சான்றிதழ், ஜாதி சான்றிதழ்களுக்காக, வட்டாட்சியரிடத்திலே ஒருவர் மனு தந்து, மனு தந்ததற்குப் பிறகு அந்த வட்டாட்சியர் நிர்வாக அதிகாரிக்கு அனுப்பி, நிர்வாக அதிகாரி அங்கே இருக்கின்ற ஆர்.ஐ. அவர்களுக்கு அனுப்பி, அதற்குப்பிறகு சான்றிதழ்கள் அளிக்கிறபோது காலதாமதம் ஏற்படுகிறது. அந்த நிலையை மாற்றியமைத்தாக வேண்டும். அதைப் போல பட்டாக்கள் கொடுக்கிற நேரத்தில் அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற பட்டாக்கள், அங்கேயிருக்கின்ற நிர்வாக அதிகாரிகளுடைய ஒப்புதலோடு தருகின்ற அளவிற்கு நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

11-15 மணி

இந்த அரசைப் பொறுத்தவரையில் இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையில், இன்றைக்கு நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும் அரிசியினுடைய விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. அது குறைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை சொல்லி, மலிவு விலையில் மது வழங்குவதாக சொல்லியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில்,

1990 மார்ச் 24] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் நாங்கள் அதை முழுமையாக எதிர்க்கிறோம் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்து, விடைபெறு கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது இந்த அவையிலே வரவேற்றுப் பேசியவர்களோடும், இந்த நிதிநிலை அறிக்கையிலே மாற்றுக் கருத்து அளித்தவர்களோடும், வரவேற்றுப் பேசிய உறுப்பினர் களுடைய கருத்தோடு என்னுடைய கருத்தையும் இணைத்து, ஒரு சில கருத்துக்களைக் கூறவிழைகிறேன்.

கேட்டுக் கொடுப்பவன் வள்ளல், கேட்காமல் கொடுப்பதுதான் தெய்வம். ஆனால், இன்றையதினம் இந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர் கள் தமிழகத்திலுள்ள மக்களால் வள்ளலாகவும், தெய்வமாக வும் போற்றப்படுகின்ற வகையிலே பல்வேறு நலத்திட்டங்களை யும், நல்ல திட்டங்களையும் இன்றைக்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே தந்திருக்கிறார்கள். ஏழையெளிய மக்களுக்கும், உழவர் பெருமக்களுக்கும், உழைக்கின்ற வர்க்கத்திற்கும், ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும், இன்றைக்கு வளமான பொருளாதாரத்தை வழங்குகின்ற வியாபார பெருமக்களுக்கும், இன்றைக்கு பல்வேறு நல்ல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே காணமுடியும்.

1990-91 ஆம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையிலே மூலதனக் கணக்கிலே இன்றையதினம் 4,397.46 கோடிகளும் அதே நேரத்திலே மொத்த செலவான 4,814 கோடிகளையும் ஒப்பு நோக்கிய பற்றாக்குறை 416.63 கோடியாக இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை ஆரம்பத்திலே ஆரம்பிக் கப்படுகிறது. ஆனால், மூலதனக் கணக்கிலே வருகின்ற உபரி 9.32 கோடியும், பொதுக் கணக்கிலே உள்ள உபரியான 57.95 கோடிகளையும் சேர்த்து 67.27 கோடியை இன்றைக்கு பற்றாக் குறையிலே கழிப்போமானால், 349.36 கோடி பற்றாக்குறை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், நடப்பு ஆண்டிலே துவக்கப் பற்றாக்குறையாக இன்றைக்குக் கணக்கிடப்பட்டிருக் கின்ற ரூபாய் 160.74 கோடியையும் சேர்க்கிறபோது, மொத்தப் பற்றாக்குறை 510.10 கோடியாக உயர்ந்து இருக்கிறது. ஆனால், இந்த பற்றாக்குறையை இந்த நிதிநிலை அறிக்கையிலே புதிய வரி கள் வர இருக்கின்ற எதிர்பார்ப்புகள் 62 கோடியாகவும், அதே நேரத்திலே மதுவிலக்கு ஆயத்தீர்வைகள் மூலமாக வர இருக் கின்ற வருவாய் 180 கோடியாக கணக்கிட்டு, 242 கோடியைக் கழிப்போமேயானால் இறுதியிலே நிகர பற்றாக்குறையாக 268.10 கோடி இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே

சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், ஆயத்தீர்வையில் உள்ள குறைபாடுகளை நடப்பாண்டில் களைந்ததன் மூலம் இந்த அரசுக்கு 100 கோடி ரூபாய் வருவாய் எதிர்பார்க்கப்பட்டு இன்று அதுவே நிதிநிலை அறிக்கையிலே 134 கோடி ரூபாய் உயர்ந்து இருப்பதை, நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், எதிர்பார்ப்புக்கு மேல் இன்றைக்கு 34 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈட்டியிருக்கின்றார்கள்.

11-20 மணி

அதுபோலவே மதுவிலக்கைத் தளர்த்தியதன்மூலம், 180 கோடி ரூபாய் வரும் என்று கணக்கிட்டிருந்தாலும், வருகின்ற காலத்திலே இவை அதிகரிக்கவும் வாய்ப்புண்டு. எனவே, இன்றைக்கு 268.10 கோடியாக இருக்கின்ற இந்த பற்றாக்குறையை, இந்த அரசு இந்த ஆண்டில் எளிதாக சமாளித்து, ஒரு மிகச் சிறந்த அரசாக நிச்சயமாக செயல்படும் என்பதை நாங்கள் மிக நன்றாக அறிவோம்.

ஆனால், இன்றையதினம் மாநில அரசு ஊழியர்களுக்கு, 11 லட்சம் பேர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதிய உயர்வு அளித்த காரணத்தால், கூடுதலாக 430 கோடியை இந்த அரசு சுமக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறது. அதுபோல பொது வினியோகம், சத்துணவுத் திட்டம், இலவச அரிசித் திட்டம் போன்ற திட்டங்களை இந்த அரசு நடைமுறைப்படுத்துகின்றது. இந்த மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்காக, மானியத் தொகையாக அரசு தொகையை வழங்குவதன் மூலமாக இன்றைக்கு 400 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதால், இந்த இழப்பையும் சரிக்கட்ட வேண்டிய சூழ்நிலைக்கு இந்த அரசு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. வரி வாயில்களை திறக்காமலும், மக்களை துன்புறுத்தாமலும் ஒரு மாநில அரசு, எந்த அளவிற்கு மிகச் சிறந்த ஒரு நிதிநிலை அறிக்கையை அளிக்க முடியுமோ, அந்த அளவுக்கு ஒரு மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதை இம்மாமன்றத்திலே அளித்திருக்கிறார்கள்.

சரித்திர காலத்திலே இந்தியப் பேரரசை ஆண்டுகொண்டிருந்த சரித்திர நாயகர்களில், மௌரியர்கள் ஆட்சிக் காலத்தை பொற்காலம் என்று சொல்வார்கள். அதுபோல, தமிழகத்தை ஆண்ட ராஜராஜ சோழன் காலமும், கரிகால் பெருவளத்தான் ஆட்சிக் காலமும் பொற்காலமாகக் கருதப்படுகிறது. இன்றைக்கு அதுபோல கருணாநிதி அவர்களின் ஆட்சிக் காலம் பொற்காலமாகக் கருதப்படுகின்ற காலமாக ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில், முந்தைய அரசுகள் மேற்கொண்ட கொள்கைகளை இங்கே நான் கோடிட்டுக்காட்ட

1990 மார்ச் 24] [திரு. அ. மலர்மன்னன்]

விரும்புகிறேன். இங்கே பேசிய காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், 4 நாட்கள் சிறை வாசத்திற்காக எங்களுக்கு எல்லாம் பளிங்குக்கல்லிலே பெயர்ப் பலகை வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், இப்போது மாற்றுத் தலைவராக வீற்றிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இன்றைக்கு தலைவருடைய இடத்திலே அமர்ந்திருந்தாலும், அன்றைக்கு அவருடைய இடத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இலக்கியச் செல்வர் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். இங்கே நடைபெற்ற நடவடிக்கைகளை எல்லாம், அப்போது அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நான்கு நாள் தியாகத்தைஇங்கே கோடிட்டுக் காட்டியவர்களுக்கு எல்லாம், நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம், 1962-ல் நடைபெற்ற விலைவாசிப் போராட்டத்திலே. . . .

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னன் அவர்கள் கருத்துக்களைச் சொல்லும்போது, அவையை தலைமை தாங்கி, அவையை நடத்திக்கொண்டிருக்கின்ற உங்களை இழுத்தால், தாங்கள் அங்கே அமர்ந்துகொண்டு பதில் சொல்ல முடியாது. எனவே, தாங்கள் வேறு ஒருவரை உங்கள் இடத்தில் உட்கார வைத்துவிட்டு, உங்கள் இடத்திற்கு வந்து பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த முறையை நான் மிக நன்றாக உணர்ந்தவன் தான். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இந்த அவையிலே கடந்த காலத்திலே, அவருடைய இடத்திலே இருந்துகொண்டு இன்றைக்கு மாற்றுத் தலைவராக இருக்கின்ற இலக்கியச் செல்வர் அவர்கள் கவனித்துக்கொண்டிருந்தார்கள் என்கிற காரணத்திற்காகத்தான் நான் சொல்கிறேன். 1962-ல் நடைபெற்ற விலைவாசிப் போராட்டத்தில், நானும் முதன் முதலாக சிறைவாசத்தைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அன்றைக்கு இந்த நாட்டை ஆண்டுக்கொண்டிருந்தவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவர்கள். ஆனால், அன்றைய தினம் எங்களுக்கு எல்லாம் எப்படி தண்டனை வழங்கினார்கள் என்று தெரியுமா? அரைக்கால் சட்டையும், அரைக்கால் சூட்டும், தொப்பியும் எங்களைப் போன்றவர்களுக்கு சிறைச்சாலைகளில் சென்றபோது வழங்கினார்கள். அன்றைய தினம், இன்றைக்கு முதல்வராக இருக்கின்ற எங்களுடைய தானைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அரசியல் விழிப்புணர்ச்சியையும் சிறை விழுப்புண்களையும் எப்படி எல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், எப்படி எல்லாம் பின்பற்றி நாங்கள் போராட்டத்திலே பங்குகொள்ள வேண்டும் என்பதை எல்லாம்

எங்களுக்குப் பால பாடம் படித்துக்கொடுத்தார்கள். அதன் விளைவு தான் 1976 ஆம் ஆண்டு, ஓராண்டுக் காலம் மிசா சிறையைக்கூட நாங்கள் இனிதாகக் கழிக்க முடிந்தது.

11-25 மணி

நான் இதை ஏன் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், அந்த நேரத்திலே எங்களுக்கும், எங்களோடு இருந்த 8,000 எங்களுடைய தோழர்களுக்கும், 3 மாத தண்டனை என்றும், 2 மாத தண்டனை என்றும் ஒரே குற்றத்திற்கு பல்வேறு தண்டனைகளை வழங்கினார்கள். ஆனால், அந்த நேரத்திலே எல்லாம் முன்னே செல்பவர்களை, ஏன் செல்லுகிறீர்கள் என்று கேட்டு, சட்டையைப் பிடித்து கிழிப்பவர்கள் அல்ல, கிழித்தவர்களும் அல்ல. நான் இன்றைக்குப் பார்க்கிறேன். அத்தகைய தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொண்டு, கடந்த காலங்களிலே விழுப்புண்களை எல்லாம், காயங்களை எல்லாம், இரத்தக் காயங்களை எல்லாம் இந்த மாமன்றத்திலே நான் சுட்டிக்காட்டுகின்ற நேரத்திலே, அன்றைய தினம் ஏகடியம் பேசியவர்கள், மக்கள் மன்றம் பார்த்துக் கொள்ளும் என்று சொன்னவர்கள் இருந்தார்கள். மாண்புமிகு தலைவரவர்களே, உங்களைத் தான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த அவையிலே அவர்கள் எல்லாம் வர முடியவில்லை. என்னைப் பார்த்துச் சொன்னார்கள், அடுத்த முறை வருகிறாயா என்று பார்ப்போம் என்று. ஆனால், என்னைக் கேட்டவர்களை இந்த அவையிலே தேடிப் பார்க்கிறேன், அவர்கள் வரவில்லை. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், சிறைச்சாலைக்குச் செல்வதை நம்மை நாமே வருத்திக்கொள்வதை, போராட்டத்தில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வதை நாமே நேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட உணர்வுகளை வளர்த்த தலைவர்தான் எங்களுடைய தலைவர் அவர்களாவார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்ற நேரத்திலே, இங்கே காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள் கோஷம் போட்டார்கள், குரல் எழுப்பினார்கள். ஆனால், அரசியலிலே, இந்த அவையினுடைய நாகரீகத்திலே, நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும், நிதிநிலை அறிக்கை படிக்கின்ற நேரத்திலே இடையூறுகளை ஏற்படுத்தலாமா என்று தெரிவிக்கின்ற. . . .

*திரு. ஆர். சிங்காரம்: பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னன் அவர்கள் பேசுகின்ற போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நாங்கள் எங்களுடைய கோரிக்கைகளைச் சொன்னதன் காரணம், ஒரே செக்ஷனில், ஒரே குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற

1990 மார்ச் 24] [திரு. ஆர். சிங்காரம்]

உறுப்பினர்கள், தொண்டர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்யாமல், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் விடுதலை செய்தது என்ன நியாயம். ஆகவே எங்களோடு உள்ள தொண்டர்களையும் விடுதலை செய்ய வேண்டுமென்று ஜன நாயக ரீதியாக, சிவில் ரீதியாக நாங்கள் கோஷம் இட்டோமே தவிர, 'நோ கிரிமினல் கோஷம்'.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் கோடிட்டுக் காட்டினேன். ஒரே குற்றத்திற்காகச் சிறைச்சாலை சென்று...

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோஷம் போடுவதில் சிவில் கோஷம், கிரிமினல் கோஷம் என்று இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் சொன்னது, ஏ. 1—அக்யூஸ்டு நம்பர் 1 என்று சொல்லுகிற தலைமை ஏற்றுச் சென்றவர்களை எல்லாம் முதலில் அனுப்பிவிட்டு, அவர்களைப் பின் தொடர்ந்தவர்களை ஏன் அனுப்பவில்லை என்று இங்கே எழுப்பப்பட்ட சில கோரிக்கைகள் அமைதியான முறையில் இருந் தன என்பதற்காக அவர்கள் அந்தச் சொற்களைச் சொன்னார் களே தவிர வேறு ஒன்றுமில்லை. வன்முறையைத் தூண்டுகிற வகையில் நாங்கள் எப்போதும் இல்லை என்பதற்காக அவர்கள் அதைச் சொன்னார்களே தவிர, வேறு வகையில் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினையை விட்டு விட்டு அடுத்ததற்கு வரலாமே!

திரு. அ. மலர்மன்னன் : மிகவும் முக்கியமானது இது. பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் எழுப்பியதில் தவறில்லை. நிதிநிலை அறிக்கையைப் படித்ததற்குப் பின்னால் கூட அவர்கள் அந்தக் கோஷத்தை எழுப்பியிருக்கலாம். ஆனால் எங்களுடைய தலைவர், தமிழகத்தினுடைய முதல்வர், அரசியல் பண்பாடு, நாகரீகத்தை வளர்க்க விரும்புகிற அவர்கள், உடனடியாக நிதி நிலை அறிக்கை படிப்பதை நிறுத்தி விட்டு, எதிர்க் கட்சித் துணை தலைவரவர்கள் அன்று கூறிய கோரிக்கையை ஏற்று, உடனடி யாக இங்கே இருக்கின்ற அலுவலருக்கு உத்தரவிட்டு, அவர்களை எல்லாம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று சொன் னார்கள். இந்த அரசியல் நாகரீகத்தையும், நாணயத்தையும் கடந்த காலத்தில் இருந்தவர்கள் கடைப்பிடிக்கவில்லை என் பதை தம்முடைய இலக்கியச் செல்வர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

11-30 மணி

இன்றையதினம் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த காலத்திலே ஆட்சி எப்படி எல்லாம் செயல்பட்டு இருக்கிறது, அதன் சிறப்புகள், சொல்லப்பட்ட திட்டங்கள், அந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் ஒழுங்காக, முறையாக செலவழிக்கப்பட்டு இருக்கிறதா என்பதையும் ஆய்ந்து சொல்லி இருக்கிறார்கள். அதற்குப் பின்னால் வருகின்ற காலங்களிலே அந்தக் குறைபாடுகள் இருந்தால் அவைகளைக் களைவதற்கும், அந்தத் திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படுவதற்கும் உறுதியான நடவடிக்கை மேற்கொள்வதற்கும் வழி செய்து ஒரு நல்ல அரசு என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நடப்பு ஆண்டிலே நடைபெற்ற மிகச் சிறந்த மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை எல்லாம் இந்த நிதி நிலை அறிக்கையிலே தமிழக முதல்வர் அவர்கள் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள்.

38.12 கோடி ரூபாய்க்கு 83 இலட்சம் குடும்பங்கள் 5 கிலோ இலவச அரிசி விநியோகம் மூலம் 5 முறை தமிழகத்திலே பயன் அடைந்து இருக்கின்றார்கள். அது போலவே 42.25 இலட்சம் ரூபாயில் 83 இலட்சம் குடும்பங்கள் இலவச வேஷ்டி சேலைகள் பெற்று நன்மை அடைந்ததை மக்கள் போற்றுகிறார்கள். அது போல முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவைகள், ஆதரவற்ற மகளிருக்கு மாதம் 35 ரூபாயாக இருந்த உதவித் தொகையை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 50 ரூபாயாக உயர்த்தி வழங்கி இருக்கிறார்கள்.

அடுத்து பெண்கள் கல்வி பெற வேண்டும். தமிழகத்தில் இருக்கின்ற பெண்கள் சராசரி படிப்பையாவது பெற வேண்டும். அவர்கள் 8-வது வகுப்பு வரையாவது கல்வி பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடும், பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் 5-வது வகுப்பு வரை படித்தால் கூட அவர்களுடைய திருமணத்திற்காக 5 ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற ஒரு ஒப்பற்ற திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியதன் மூலம் 11,338 பெண்கள், குடும்பங்கள் இந்தத் தலைவனை வாழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள். அது போலவே மகளிருக்கு மகப் பேறுத் திட்டம் அளித்ததன் மூலம் இன்றைக்கு 97,473 பெண்கள் பலன் அடைந்து இருக்கிறார்கள். ''கொட்டாம்பட்டியில் இருக்கின்ற பெண்களுக்கு மட்டும் இந்தத் திட்டம்'' என்று திட்டத்திலே சொல்லிவிட்டுச் செல்கின்ற முதல்வர் டாக்டர் கலைஞர் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து குடும்பத் தலைவனை இழந்தால் அந்தக் குடும்பம் எப்படி எல்லாம் கஷ்டப்படும் என்பதை உணர்ந்த தமிழ்மகன் இன்றைக்கு அந்தக் குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கு

1990 மார்ச் 24] *[திரு. அ. மலர்மன்னன்]*

வதன் மூலம் நடப்பு ஆண்டிலே 10,517 குடும்பங்கள் அந்தப் பயனைப் பெற்று இருக்கின்றார்கள். விபத்திலே இறந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் மூன்று மணித் துளிகள் இருக்கின்றன.

திரு. அ. மலர்மன்னன் : இன்றைக்கு 235 பாட்டாளி குடும்பங்கள் அந்தப் பலனை அடைந்து இருக்கின்றன. அதுபோல ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள் இன்றைக்குப் பயன் பெறுகின்ற சிறந்த திட்டங்களை எல்லாம் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள்.

இன்றைக்கு வேளாண்மைக்கு அரசு எந்த அளவிற்கு முதல் இடம் கொடுத்து இருக்கிறது என்பது இந்த நிதிநிலை அறிக்கையிலே சிறப்பாக எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. நடப்பு ஆண்டிலே 145.98 கோடியாக இருந்ததை இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே 160.29 கோடியாக உயர்த்தி இருக்கின்றார்கள். விவசாயப் பெருமக்களுக்கு இந்த அரசு என்ன செய்தது என்று கேட்டவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது எல்லாம், 3 ஹார்ஸ் பவர், 5 ஹார்ஸ் பவர் பம்புசெட்டுகளுக்கு விற்பனை வரி ரத்து செய்யப்பட்டு இருக்கின்றது. அதே நேரத்தில் 5 ஹார்ஸ் பவருக்குக் குறைவான பம்ப் செட்களைப் பொறுத்த வரையில் 9 இலட்சம் விவசாயப் பெருமக்களுக்கு நடப்பு ஆண்டிலே 75 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக மின் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே $7\frac{1}{2}$ ஹார்ஸ் பவர், 10 ஹார்ஸ் பவர் வரை உபயோகிக்கின்ற விவசாயிகள் 75 ரூபாய் கட்டாமல் 50 ரூபாய் கட்டுவதற்குக் குறைக்கப்பட்டு இருக்கிறது.

தேசிய பால்வள வாரியத்தின் மூலம் இன்றைக்கு 13 மாவட்டங்கள் பயன் அடையத்தக்க வகையிலே குறிப்பாக செங்கை அண்ணா மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகியவைகளுக்குப் புதிய பால் பண்ணைகள் அமைக்கப் பட்டு இருக்கின்றன.

11-35 மணி

மீனவக் குடும்பங்களுக்காக நடப்பாண்டில் 3000 வீடுகளும், வரும் ஆண்டில் மேலும் 3000 வீடுகளும் இலவசமாகக் கட்டித் தருகின்ற நிலையில் திட்டங்களை இன்றைக்குத் தீட்டியிருக்கின்றார்கள். நெல்லையிலே புதிய பல்கலைக் கழகம், கன்னியாகுமரியிலே 133 அடி உயரமுள்ள வள்ளுவர் சிலை, நெசவாளர்களுக்கு இன்ஸ்யூரன்ஸ் தொகை அதிகரிப்பு. சென்னை நகரத்திற்கு 27 கோடி ரூபாயிலே போக்குவரத்துப் பெரும் திட்டம், நகராட்சி, பேரூராட்சிகளிலே பத்தாயிரம் பேர்களுக்குப்

[திரு. அ. மலர்மன்னன்] [1990 மார்ச் 24

புதிய வேலை வாய்ப்பு, 12,000 புதிய ஓராசிரியர் பள்ளிகள், 800 ரூபாய் சம்பளத்திலே புதிய ஆசிரியர்கள் நியமனம், பத்தாண்டுகளிலே எல்லா பஸ்களும் தேசியமயமாக்கப்படும் என்ற மிகச் சிறந்த கொள்கைக் குறிப்பு, ஆறு மாதம் முதல் 3 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து வழங்குகின்ற திட்டம், ஆதிதிராவிட மக்களுக்கு 56 கோடி ரூபாயில் 47,000 வீடுகள் கட்டித் தரும் புதிய திட்டம் என்று இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை இந்த நிதி நிலை அறிக்கையின் மூலம் சமர்ப்பித்திருக்கின்றார்கள்.

சிறுபான்மையோர் பாதுகாப்பிற்காக, அவர்களுடைய நலனிலே அக்கறை கொண்ட முதல்வரவர்கள் ஏற்கெனவே, இன்றைக்குச் சிறுபான்மைக் குழு அமைத்ததோடு, 1975-லே மதம் மாறிய கிறித்தவர்களுக்கு அன்றைக்கு ஆதிதிராவிட மக்களுக்கு உரிய சலுகைகளை அளித்தார்கள். ஆனால் இன்றைய தினம் நான் மெத்தப் பணிவன்போடு அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றைக்கு 1953 ஆம் ஆண்டு சீக்கியர்களுக்கு மதம் மாறியவர்களுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே மாற்றத்தை உருவாக்கியதைப் போல இன்றைக்கு நடைபெறுகின்ற நாடாளுமன்றத் தொடர் கூட்டத்திலே புத்த மதத்தைச் சார்ந்தவர்களுக்கு ஆதிதிராவிடர்களுக்கு வழங்குகின்ற அந்தச் சலுகை வழங்கப்படுவதைப்போல, வருங்காலத்திலே நீங்கள் போராடி, வாதாடி இந்தக் கிறித்துவ ஆதி திராவிட மக்களும் அந்தப் பலனைப்பெற ஆவன செய்திட வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே ஹஜ் பயணிகள் தங்குவதற்கு இல்லம்.

அதைப்போலவே, வணிகர் நல வாரியம், முப்பதாண்டுக் காலமாக வணிகப் பெருமக்களுடைய ஒருமித்த குரல் ஒரு முனை வரி. அந்த மாமன்றத்திலே பலமுறை நாங்களெல்லாம் எடுத்து வைத்திருக்கிறோம். மாநாடு மூலம் தெரிவித்திருக்கிறோம். ஆனால் இருந்த அரசுகள் அனைத்தும் கேளாக் காதினராக இருந்தார்கள். ஆனால் இன்றையதினம் விற்பனை வரியில் ஒரு முனை வரியாக மாற்றி, வியாபாரப் பெருமக்களுக்குப் பொற்காலம் படைத்திருக்கிறார்கள். மிளகாய், புளி, மிளகு, வெல்லம், மஞ்சள், மல்லி, சீரகம், சியக்காய் போன்றவையெல்லாம் அத்தியாவசியப் பண்டங்கள் ஆகும். அவற்றில்கு 8-லிருந்து 6 ஆகக் குறைத்திருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது) இன்னும் ஒரு சில நிமிடங்களிலே முடித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு கூடுதல் வரி 10 இலட்சம் வரையிலும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த 10 இலட்சத்திற்கும் மேல் கூடுதல் வரி இன்றைக்கு வசூலிக்கப்படுகிறது. ஆனால், இந்த ஸ்லாப் ரேட் இன்கம் டாக்சிலே இருப்பது எப்படியென்றால், 22,000 ரூபாய் வரையிலே அவர்களுக்கு வரி இல்லை.

1990 மார்ச் 24] [திரு. அ. மலர்மன்னன்]

ஆனால், 22,000-க்கு மேல் கூடுகின்ற 1000-க்கு அதற்கு மேல் உள்ள தொகைக்குத்தான் வரி வசூலிக்கப்படுகிறது. போடப்படுகிறது. ஆனால் இன்றைய தினம் இந்தக் கூடுதல் வரியிலே மட்டும், பத்து இலட்சத்திற்கு மேல் எவ்வளவு கூடினாலும் இந்தப் பத்து இலட்சத்தையும் சேர்த்து இன்றைக்கு அசெஸ்மெண்ட் செய்யப்படுகிறது. ஆகவே. இதை மாற்றி பத்து இலட்சம் வரையிலும் விலக்கு, அதற்கு மேல் உள்ளதற்கு நீங்கள் வரியாக வசூலிக்க வேண்டுமென்று இந்தத் திட்டத்திலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே, இன்றையதினம் மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினை. இன்றைக்குத் தடை ஆணை மூலம் வியாபாரப் பெருமக்கள் பலர் வழக்குமன்றத்தை நாடியிருக்கின்றார்கள். ஆனால் அதன் மூலம் இந்த அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரிகள் வராமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, பற்றாக்குறை நிதி நிலையிலே இருக்கின்ற இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களே இவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அந்தக் குறைகள் களையப்படுமானால் நிச்சயமாக இந்தப் பற்றாக் குறை சரி செய்யப்படுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் உப்புத் தோலுக்கு 1987 ஆம் ஆண்டு 3 சதவீதம் வரி விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதையே பாடம் செய்கிறபோது கிரேஸ் தோலாக மாற்றுகிறபோது வரி இல்லாமல் இருந்தது. ஆனால் 1987 ஆம் ஆண்டிற்கு பின்னால் உப்புத் தோலுக்கு 2 சதவீதம் என்றும், கிரேஸ் தோலுக்கு, சுத்தம் செய்யப்பட்ட தோலுக்கு 2 சதவீதமாகவும் மாற்றினார்கள். அன்றைய தினம் வியாபாரிகள் தடையாணை பெற்றார்கள்.

11-40 மணி

1988 ஆம் ஆண்டில் ஆளுநர் ஆட்சிக் காலத்தில் உப்புத் தோலுக்கு 2 சதவீதம் என்றும், கிரேஸ் தோலுக்கு, பதப்படுத்தப்பட்ட தோலுக்கு ஒரு சதவீதம் என்றும் மாற்றப்பட்டது. வெளி மாநிலங்களிலிருந்து இந்த உப்புத் தோல் 75 சதவீதம் இங்கே கொண்டு வரப்பட்டு, கிரேஸ் தோலாக மாற்றப்படுகிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால், வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படுகிற இந்த உப்புத் தோலுக்கு வரி இல்லை 1987 ஆம் ஆண்டில். ஆனால் கிரேஸ் தோலுக்கு 2 சதவீதம் வரி போடப்பட்டிருந்தது. 1987ஆம் ஆண்டில் அதைப் போல உப்புத் தோலுக்கு வரி இல்லை. கிரேஸ் தோலுக்கு 2 சதவீதம் வரி போடப்பட்டது. ஆளுநர் ஆட்சியிலே உப்புத் தோலுக்கு வரி இல்லை. கிரேஸ் தோலுக்கு ஒரு சதவீதம் என்று குறைத்தார்கள். ஆனால், இன்றைய தினம் நீங்கள் மீண்டும் உப்புத் தோலுக்கும், கிரேஸ் தோலுக்கும் 2 சதவீதம் வரி போட்டிருக்கிற காரணத்தால், இன்றைக்கு உள்நாட்டில் தோலை வாங்கி, உள்நாட்டில் பதப்படுத்தி அந்த வியாபாரிகள்

செய்கிறபோது 4 சதவீதம் வரியையும், அதேநேரத்தில் அவர்கள் அடிஷனல் டாக்சாக உப்புத் தோலுக்கு 2 சதவீதம், அதற்குமேல் கிரேஸ் தோலுக்கு 2 சதவீதமும் என்றால் உப்புத் தோல் விலை ரூபாய் 100 ஆக இருப்பது, கிரேஸ் தோலாக மாற்றுகிறபோது ரூபாய் 176 ஆக மாறி விடுகிறது. ஆகவே, ஆரம்பக் கட்டத்தில் 2 ரூபாயும், கிரேஸ் தோலாக மாற்றப்படுகிறபோது $3\frac{1}{2}$ ரூபாயும், அடிஷனல் டாக்சாக $3\frac{1}{2}$ ரூபாயும், ஆக 9 ரூபாய் வரி கட்ட வேண்டியிருக்கிறது. அதேநேரத்தில் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வருகிறபோது அவர்கள் சி. எஸ். டி. கட்டி விடுகிற காரணத்தால், அவர்களுக்கு வரிச் சலுகை அளிக்கப்படுகிற காரணத்தால், அவர்கள் அதிகப் பயனை அடைகிறார்கள். இதன் காரணமாக நமக்கு வர வேண்டிய வரியில் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, ஒட்டுமொத்தமாக இன்றையதினம் கொள்முதலில் உப்புத் தோலுக்கு அல்லது கிரேஸ் தோலுக்கு 2 சதவீதம் என்று ஒரு வரியையும் அல்லது 3 சதவீதம் என்ற வரியையும் போட்டு, அதேநேரத்தில் நுழைவு வரியாக நீங்கள் 3 சதவீதம் வரி இன்னொரு மாநிலத்திலிருந்து வருகிற தோலுக்கு போடுவீர்களானால், நிச்சயமாக வருவாய் உயரும். பிறகு நம்முடைய தேவையை சரிக்கட்டலாம் என்பதை இந்த நேரத்தில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்டங்கள் மூலமாக ஒரு புதிய சகாப்தத்தை படைத்து, மற்ற மாநிலங்கள் வியக்கத்தக்க அளவிற்கு ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை அளித்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க முற்படுகிறேன். நிதிநிலை அறிக்கையில் பாரா 4 என்பதில் முழுமையாகவும் இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழ்நிலையில் எனக்கும் அதிக உடன்பாடு உண்டு என்ற காரணத்தால் நான் என்னுடைய கருத்தை அதன்மீது தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சியோடு கூடிய கூட்டாட்சி முறை சரியான தீர்வாக இருக்க முடியும் என்ற கொள்கையை அங்கே வலியுறுத்தி இருக்கிறார்கள். இன்றைக்கு சோவியத் நாட்டை எடுத்துக் கொண்டால் அங்கேயிருக்கிற மாநிலங்களும் இதைத்தான் கேட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு நம்முடைய இந்திய அரசியல் கட்சிகளும், அரசியல் சட்டப்பிரிவு 370 ஏன், எதற்கு என்று கேள்வியெல்லாம் கேட்கக் கூடிய இந்த காலக்கட்டத்தில் தான் பாரா 4 எனக்கு ஒரு நினைவை இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கிறது.

1990 மார்ச் 24] [திரு. பி. எச். பாண்டியன்]

11-45 மணி

இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில், வரையறைக்குள் இருக்கக்கூடிய ஒரு மாநிலம் காஷ்மீர் மாநிலம். இந்திய அரசியல் சட்டத்தால், முழுமையாக ஆட்சி செலுத்த முடியாவிட்டாலும் தானாகவே, தனக்காகவே, தன்னுடைய மாநிலத்திற்காகவே ஒரு அரசியல் சட்டத்தை இந்திய நாட்டில் இன்றைக்கு உருவாக்கி சுமார் 30, 40 ஆண்டுகளாக ஆட்சி செலுத்திக்கொண்டு இருக்க கூடிய அரசியல் சட்டம் பிரிவு 370 அந்த மாநிலத்திற்கு மட்டும் தானா, அந்த மாநிலத்திற்கு மட்டும்தான் இது வழங்கப்பட வேண்டுமா? இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் அந்த உரிமைகள், அந்தச் சலுகைகள் வேண்டாமா என்ற நிலையில்தான் இன்றைக்கு பொருளாதாரச் சுதந்திரம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின் நிலைமை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டியாக வேண்டும்.

என்னதான் வரியை அதிகரித்துப் போட்டாலும், குறைத்துப் போட்டாலும், மாநிலங்களுக்கு முழுமையான பொருளாதாரச் சுதந்திரம் கிடையாது. மாநிலங்களுக்கு நிதிச் சுதந்திரம் முழுமையாகக் கிடையாது. நிதியினால் ஏற்படக்கூடிய நெருக்கடி காரணத்தினால் கூட ஒரு மாநில அரசாங்கத்தின் மீது நடவடிக்கை எடுத்து, கலைப்பதற்குக் கூட நம்முடைய அரசியல் சட்டம் வழி செய்கிறது. ஆனால் இதற்கு நம்முடைய மாநில மக்கள் பொறுப்பு கிடையாது. ஒரே மாநிலத்திற்கு வழங்கப் படக்கூடிய சலுகைகள் என்று சொல்கிறபோது, பல்வேறு சலுகை களைப் பற்றி இங்கே எழுதப்பட்டு இருக்கிறது. நம்முடைய இந்தியத் திருநாட்டில், அந்த மாநிலமாக இருந்தால் ஒரு மாநில கவர்னரை நியமிக்க வேண்டுமானால், அந்த மாநில Council of Ministers அமைச்சரவையைக் கேட்டுத்தான் நியமிக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் எழுதி யிருக்கிறார்கள். ஆனால் நமக்கு அப்படிக் கிடையாது. அந்த மாநிலத்தில் ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியை நியமிக்க வேண்டு மானால், ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியை மாற்றவேண்டுமானால், அந்த மாநில கவர்னரின் ஒப்புதலைப் பெற்றுத்தான் மாற்ற வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் அப்படி முழுமையான சுதந்திரத்தை வழங்கியிருக்கிறார்கள். அங்கே சொத்தை முழுமையாக வாங்குவதற்கு உரிமை கிடையாது. 31-சி அங்கே கிடையாது. Acquisition and Requisition of Property is not available there. தடுப்புக் காவல் சட்டம் பாராளு மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தடுப்புக் காவல் சட்டம் அங்கே செல்லுபடியாகாது. ஒரே நாடுதான். ஆனால் வெவ்வேறு சட்டங்கள். இதனால் அந்த நாட்டிலே எந்தப் பாதிப்பும் இது வரை ஏற்பட்டுவிடவில்லை என்பதை இங்கே நான் வலியுறுத்திச் சொல்லியாக வேண்டும்.

அதுமட்டுமல்ல, மத்திய புலன் ஆய்வுத்துறை Central Intelligence அங்கே நுழைய முடியாது. ஒரு முழுமையான அதிகாரம், இன்னும் பலவேறு பாகங்கள். ஐ.ஏ.எஸ். அங்கே நுழைய முடியாது. ஐ.ஏ.எஸ். வர்க்கமே அங்கே கிடையாது. அரசியல் சட்டம் பிரிவு 312 விதிவிலக்கு அளிக்கிறது Except Kashmir. நம்முடைய இ.பி.கோ. extends to the whole of India except Jammu and Kashmir. இது நம் நாடு. அதேபோல், Cr.P.C. Criminal Procedure Code extends to the whole of India except Jammu and Kashmir.

அதேபோல் Evidence Act. இப்படி நம்முடைய நாட்டில், இங்கே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அங்கே செல்லுபடியாகாத நிலைமை. ஜனாதிபதி உத்தரவைப் போட்டால்தான் அங்கே பல்வேறு சட்டங்களை நிறைவேற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. நமக்கும் அதே சலுகை, உரிமை இந்தக் காலக் கட்டத்திலே வேண்டும் என்பதை எடுத்து வைப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கை எனக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது இன்றைக்கு. இங்கே பாராளுமன்றத்தினால் ஒரு அமெண்ட்மென்டை, ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமானால், அந்த மாநிலத்தைச் சம்பந்தப்படுத்தி, ஜனாதிபதி முதலிலே அங்கே, அந்த மாநில சட்டமன்றத்திற்கு உரிய உரிமையைப் பெற்றுக் கொண்டு வரக்கூடிய அவ்வளவு உரிமை படைத்த மன்றம் அந்த மன்றம். சட்டமன்றமும் முழுமையான அதிகாரம் படைத்த மன்றம். அங்கேயிருக்கக்கூடிய அமைச்சரவை அதிகாரம் அதிகமாக பெற்ற அமைச்சரவையாகும். அமைச்சரவைக்கும் அதிகாரம், சட்டமன்றத்திற்கும் அதிகாரம். இப்படி முழுமையான அதிகாரங்களை, நம்முடைய இந்திய அரசியல் சட்டம், அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கிறது. ஆனால் நாம் இன்னும் நம்முடைய பொருளாதாரச் சுதந்திரத்தை முழுமையாகப் பெறாத காரணத்தால்தான் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையை இன்றைக்கும் நம்முடைய முதலமைச்சர் போன்றவர்கள் சமர்ப்பித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் சொல்லியாக வேண்டும். ஆகவே, அந்த காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்டு இருக்கக்கூடிய 'ஸ்டேடஸ்' அந்த நிலைமை எல்லா மாநிலங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, தமிழ் மாநிலத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

11-50 மணி

Kashmir is in a different geographical situation என்று சொல்லலாம். அது எல்லை. தமிழ்நாடும் அப்படித்தான். தமிழ்நாட்டைச் சுற்றி கடல். தமிழ்நாட்டிற்கு அடுத்தாற்போல் அண்டை நாடுகள். இதை ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், வடக்கே இமயமலை, தெற்கே கன்னியாகுமரி இரண்டையும்

1990 மார்ச் 24] [திரு. பி. எச். பாண்டியன்]

ஒப்பிட்டுப் பார்த்தால், நிச்சயமாக இன்றைக்கு இருக்கக்கூடிய தேசிய முன்னணி அரசாங்கத்தோடு நம்முடைய மாநில சட்ட மன்றத்தின் பரிந்துரைகளைக் கொடுப்போமேயானால், முழுமை யான சட்டமன்றமாக, ஒரு அதிகாரம் படைத்த சட்டமன்ற மாக, ஒரு அதிகாரம் படைத்த அமைச்சரவையாக நம்முடைய வருங்கால சந்ததிகளுக்கு நல்லாட்சியை, எங்கேயும் போய் கையேந்தாமல், நம்முடைய பொருளாதார சுதந்திரத்தோடு பற்றாக்குறையில்லாமல் நம்மால் ஒரு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய முடியும் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதுமட்டுமல்ல....... (குறுக்கீடு).

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிற நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். காஷ்மீர் மாநிலத்திற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. கவர்னரை யாராவது நியமிக்க வேண்டும் என்று சொன்னாலும் அங்கு இருக்கின்ற மந்திரி சபையின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று சொல்லி யிருக்கின்றார்கள். தற்போது நிலைமை அதுதானா? அதோடு மட்டுமல்ல அங்கே மந்திரி சபையை கலைக்க வேண்டும் என்று சொன்னால் மத்திய அரசைக் கூட அல்லது ஜனாதிபதியைக் கூட கேட்காமல் அங்கே இருக்கின்ற கவர்னரே கலைக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. அதை நம்முடைய உறுப் பினர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்; இதை ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. அதாவது இன்றைக்கு நியமிக்கப்படுகிற கவர்னர் கூட இந்தச் சட்டத்தின்படி நியமிக்கப்படவில்லை. ஜகன்மோகன் நியமிக்கப்பட்டது இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சட்டத் திற்கு புறம்பானதுதான். அதைத்தான் மற்றக் கட்சியினர் இன்றைக்கு எடுத்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். 370-ல் விளக்கமாகச் சொல்லியிருக்கின்றார்கள். Concurrence of the Government of the State—Concurrence of the State எல்லாமே கன்கரன்ஸ் தான். அந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் Concurrence of the State—Concurrence of the Council of Ministers இரண்டும் இருக்கும். சட்டமன்றத்தை எடுத்தால் At the request of Legislature. With the consent of the Legislature. இந்த நான்கிலும் இருக்கும். இந்த அதிகாரம் நமக்கு கிடையாது. ஆகவேதான் நாம் எவ்வளவுதான் பாடுபட்டு, எவ்வளவுதான் தேர்தலிலே தெருத் தெருவாக அலைந்து வெற்றி பெற்று இங்கு வந்தாலும், கலைத்து விடு வோம். கலாட்டா பண்ணிவிடுவோம் அதனால் கலைந்துவிடும் இதனால்தான். இதைச் சேர்க்க வேண்டுமானால், 40 ஆண்டு காலம் தாண்டிவிடும். இனிமேல் வரக் கூடிய காலங்களில் மக்கள் சுதந்திரமாக வாக்கு அளிக்கக்கூடிய இந்தக் காலக் கட்டத்தில்

[திரு. பி. எச். பாண்டியன்] [1990 மார்ச் 24

சட்டமன்றத்தின் சுதந்திரம், அமைச்சரவையின் சுதந்திரம், தமிழ்நாட்டு மக்களுடைய பொருளாதாரச் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் பறிபோய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, பூகோள ரீதியில் பார்த்தாலும் நமக்கும் காஷ்மிருக்கும் ஒற்றுமை இருக்கிறது. நமக்கு மட்டும் கேட்டால் தவறாகச் சொல்வார்கள். எல்லா மாநிலங்களும், சோவியத் நாட்டில் இன்றைக்கு மாநிலங்கள் உரிமை பெற்றிருக்கின்றன. Within the Constitutional frame-work இந்த அரசியல் சுதந்திரத்திற்கு உட்பட்டு நம்முடைய உரிமைகளைப் பெறவும் அதற்கு இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்கள் பாரா நான்கை எழுதி படிப்பதற்கு முன்பே உடன்பட்டவன் என்ற காரணத்தால் நான் அதை வரவேற்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் 153-வது பாராவில் தமிழ்நாட்டிலுள்ள சொத்துக்களின் உரிமம் மாற்றம் செய்யும்போது வேறு மாநிலங்களில் போய் அதை பதிவு செய்து கொள்கின்றார்கள் என்பதை முதல் அமைச்சர் இங்கே குறிப்பிட்டு இருக்கின்றார்கள். இரண்டு மாத காலத்திற்கு முன்பு நான் என்னுடைய தொகுதிக்கு சென்றபோது என்னுடைய தொகுதியில் 200 ஏக்கர், 300 ஏக்கர், 400 ஏக்கர் என்று சொல்லப் போனால் பாதித் தொகுதியை வாங்கிவிட்டுப் போய் விட்டார்கள். அதை அறிந்து அன்றைக்கே ஒரு அறிக்கையை விட்டேன். முதல் அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்தேன்.

11-55 மணி

என்னைப் பொறுத்தவரையில—இன்றைக்கு கண்ணகி கோயிலுக்காக பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது கேரளத்தோடு. இங்குள்ள நிலங்களையெல்லாம், அங்கே பதிவு செய்ய அனுமதித்து விட்டு எதற்கு கண்ணகி கோயிலுக்கு பேச்சு வார்த்தை நடத்துவது? அந்த நிலங்களை மீட்டுத்தாருங்கள். அந்தச் செயல் செல்லாது என்று அறிவிக்கக் கூடிய அளவுக்கு உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது என்று வழக்கறிஞ நண்பர்கள் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் அரசாங்க வழக்கறிஞரோடு கலந்து இந்த சேல் செல்லுபடியாகாது அல்லது ஆகுமா என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஏதை

ஏழை எளிய மக்கள் வாழ்வதற்காக ஒரு ஏக்கர் 100 ரூபாய் 200 ரூபாய் என்று தமிழ்நாட்டில் விற்றுக் கொண்டிருக்கக் கூடிய நிலையில் மற்ற மாநில மக்கள் அதை வைத்து நம்முடைய நாட்டு மக்களுக்கு இருக்கக் கூடிய அந்த இட உரிமையை பறித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இட உரிமை போய் விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு இன்னொரு

உதாரணமும் சொல்லலாம். அரசியல் சட்டத்தின்படி, காஷ்மீர் மாநிலத்தில் வீடு வாங்க முடியாது. நிலம் வாங்க முடியாது. ஆனால் தமிழ்நாட்டில் எளிதாக வாங்கலாம்.

இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை இந்து பத்திரிகை கடைசி பக்கத்தில் ஒரு விளம்பரம். நான் வரும்போது எடுத்துக் கொண்டு வர பார்த்தேன். வீட்டிலிருந்து வேகமாக வநது விட்டதனால் கடைசி நேரத்தில் அதை பெற்றுக் கொண்டு வர முடியவில்லை. அதில் Sitting Gujarat Buy property in Madras என்று இருக்கிறது. தமிழர்கள் எந்த அளவுக்கு ஏழ்மையாக இருக்கிறோம் எனபதை மறநதுவிடக் கூடாது. இங்கே உள்ள மாடிக் கட்டிடங்களை நாம் கட்டவில்லை. இங்கே வந்து சிக்கிம், குஜராத்திகாரர்கள் கட்டுகிறார்கள். (குறுக்கீடு) Sitting in Gujarat and buying property in Madras. என்று இருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் பெரிய பெரிய சொத்துக்களை இங்கே வாங்க முடியவில்லை. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய வர்கள் பெரிய பெரிய கட்டிடங்களை இன்றைக்கு கட்ட முடியவில்லை. வெளி மாநிலத்திலிருந்து வநதவர்கள தான் இங்கே பெரிய பெரிய கட்டிடங்களாக 20 மாடி 30 மாடி என்று அடுககு மாடிக் கட்டிடங்களை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைத தடை செய்யவேண்டும் என்பதை நான் இந்த அரசாங்கத திற்கு, முதலமைச்சருக்கு வேண்டுகோளாக சொல்லுகிறேன். அனுமதி இல்லாமல் கட்டியிருப்பார்களானால் அதை இடித்து தரைமட்டம் ஆக்குங்கள்.

ஒரே ஒரு உதாரணம். பெத்தநாயக்கன் தெரு நெ. 22, கரம்சந்த் என்பது பெயர். நம்முடைய எம்.எம்.டி.ஏ. அதி காரிகள் உள்ளே செல்ல முடியவில்லையாம். லிப்ட் வைதது கட்டியிருக்கிறார்கள். பிளான் பெர்மிஷன் இல்லை. ஹவுசிங் போர்டு பெர்மிஷன் போர்ஜரி. கேஸ் போடப் போவதாகச் சொன்னார்கள் எம்.எம்.டி.ஏ-வே. வேறு மாநிலத்திலேயிருந்து வந்தவர்கள் லிப்ட் வைத்து கட்டிக் கொண்டு தமிழநாட்டிலே அதுவும் நம்முடைய அதிகாரிகள் உள்ளே நுழைய முடியவிலலை என்றால் இன்றைக்கு எந்த அளவிற்கு நம்மால் கட்டுப்பாட்டிற் குள் எல்லோரையும் வைத்துக் கொள்ள முடிகிறது என்பதை புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

பிளான் பெர்மிஷன் வாங்காமல் கட்டியிருக்கக்கூடிய கட்டி டங்களை இடியுங்கள். சட்டத்தை மீறி, தமிழ்நாட்டு மக்களுக்கு தொல்லை கொடுக்கக் கூடிய கட்டிடங்களையும் இடியுங்கள். காரணம் இடிபடுபவர்கள் ஏழையாகி விட மாட்டார்கள். அவர் கள் பெரிய பெரிய பணக்காரர்கள். பூந்தமல்லி ஹைரோடையே நிரப்பி விட்டான். இன்னும் 10 வருஷம் கழித்து பூந்தமல்லி ஹைரோடிலே ஒன்றும் கட்ட முடியாது. ஆகவே தயவுசெய்து

தாட்சணியம் காட்டாதீர்கள். பிளான் இல்லையா இடித்துத் தான் ஆக வேண்டும். அதற்கு பெனாலிட்டி கட்டலாம் என்று விதி வந்து விடக் கூடாது.

இனிமேல் அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கு அனுமதியே கொடுக்காதீர்கள். ஏனென்றால் தண்ணீர் கிடையாது சென்னை மாநிலத்தில். வீடுகளுக்கு குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது. அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கு அனுமதி கொடுத்துக் கொண்டே போவீர்களானால் தமிழர்கள் தண்ணீர் இல்லாமல் மாண்டு போகக் கூடிய காலம் வந்துவிடும் என்பதை நான் இங்கே நினைவூட்டுகிறேன். இதற்கு பரிகாரம் வேண்டுமானால் மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சென்னையிலிருந்து திருச்சிக்கு தலைநகரத்தை மாற்ற வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். இங்கே நீங்கள் அடுக்கு மாடி கட்ட விடுவீர்களேயானால் தலை நகரத்தை திருச்சிக்கு மாற்றி, தமிழர்கள், தமிழ்நாட்டு மக்களை, திராவிடர்களை காப்பாற்றுங்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள் கிறேன். அதை விட்டால் வேறு வழியே கிடையாது.

12.00 மணி

இங்கே 9-வது நிதிக்குழுவின் அறிக்கை பற்றி, பாரா-7-இல், திருப்தி அளிக்கவில்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள். வருமான வரியில் மாநிலத் திற்குப் பங்கு அளித்து இருக்கின்றார்கள். தனி நபர் கட்டக் கூடிய வருமான வரியில் பங்கு இங்கே மாநிலத்திற்குத் தரப் பட்டிருக்கிறது. ஆனால் கம்பெனிகள் கட்டக்கூடிய வருமான வரிக்கு நமக்குப் பங்கு கிடையாது. கார்ப்பரேட் டாக்ஸ்'. அதிலே நமக்கு ஷேர் கிடையாது. அந்த வருமான வரியை வாங்கினால்தான், அந்தப் பங்கைப் பெற்றால் தான் கம்பெனி களை மாநில அரசாங்கத்தின் கன்ட்ரோலுக்குக் கொண்டு வரமுடியும். அதை இன்றைக்கு இருக்கக்கூடிய அந்த அரசாங் கத்தோடு தொடர்பு கொண்டு, 'கார்ப்பரேட் டாக்ஸை'யும் மாநிலங்களுக்கு ஒரு பங்கு வழங்கவேண்டும் என்பதைத் தெரி வித்து, பெற்றுத் தாருங்கள் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கு 40 ஆயிரம் மக்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த நாட்டில் திராவிடனை விட முந்தியவன் ஆதி திராவிடன். பட்டா என்ன ? இந்த நாட்டுக்கு அவன் தான் சொந்தம். ஆதி திராவிடனுக்கு நாம் பட்டா கொடுக்கிறோம். அவன் நமக்கு விட்டுக் கொடுத்துவிட்டான். ஆதி திராவிடர்களுக்கு இன் றைக்கு ஒரு சென்ட், இரண்டு சென்ட்டிற்கு பட்டாவுக்குத் தாலுகா அலுவலகம், ஆர்.டி.ஓ. அலுவலகம் சென்று அவர்கள் அலைந்து கொண்டு இருக்கிறார்கள், குடிசை கட்டுவதற்கு. ஆகவே, சாதாரண, சாமானிய மக்கள் ஏமாந்த காரணத்தி

னால், சாதாரண, சாமானிய மக்கள் புறக்கணிக்கப்பட்ட காரணத்தால், அந்த மக்களின் அரசியல் சுதந்திரம் சரியாக செயல்படாத காரணத்தினால்தான் இன்றைக்கு 40 ஆயிரம் பட்டாவை நாம் 'பேஸ்டு புரோகிராமில் போடக்கூடிய அளவுக்கு வந்திருக்கிறோம். தமிழ்நாட்டிலுள்ள உபரி நிலங்களைக் கைப்பற்றுங்கள். இங்கே 'லேண்ட் சீலிங்' சட்டத்தைக் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த இரண்டாண்டு காலத்திற்கிடையில் யாராவது மாற்றியிருந்தாலும் கைப்பற்றலாம் என்பதைச் சொல்லியிருக்கிறீர்கள். வரவேற்கின்றேன். இன்னும் சொல்லப்போனால், ஒருபடி மேலே போய்—சட்ட அமைச்சர் இருக்கிறார். ஐ.பி.சி.-ஐ அமென்ட் பண்ணுங்கள். அந்த மாதிரி லேண்டை மாற்றி ரிஜிஸ்தர் பண்ணினால், 'காக்னிசபிள் அஃபன்ஸ்' என்று. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனால் சிவில் மேட்டர் என்று சொல்லிவிடுவார்கள். கிரிமினல் என்றால் குக்கிக்காக கேஸை முடிக்கமுடியும். சிவில் 10 வருடம் ஆகும். சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் 30 வருஷம் ஆகும். அதற்குள்ளே ஏழு எலக்ஷன் போய்விடும். அதை 'காக்னிசபிள் அஃபன்ஸ்' ஆக்குங்கள். பினாமி எல்லாம் 'காக்னிசபிள்'. அந்தக் காலத்திலே இதெல்லாம் கிடையாது. இப்போது பினாமி எல்லாவற்றிலேயும் வந்துவிட்டது. அந்தளவிற்கு பல்வேறு நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

எல்லா உபரி நிலங்களையும் கைப்பற்றி, கணக்கெடுத்து, ஆங்காங்கே இருக்கக்கூடிய மக்களை நேரடியாக விசாரித்து அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பங்கினை, இடத்தை வழங்குங்கள். இட ஒதுக்கீடு கல்லூரியில் படிக்கின்றவனுக்கு வேண்டும். வாழ்கின்ற ஏழைகளுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு, சாதாரண தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உட்கார இடம் வேண்டாமா? அந்த இடத்தை வாங்கித் தாருங்கள். கேட்கலாம், இதை ஏன் முன்பு செய்யவில்லையென்று, நான் அங்கே இருந்தேன், அவ்வளவுதான். இங்கே இருப்பது வேறு.

இங்கே நிதிநிலை அறிக்கையில் சில விவாதங்கள், சொல்லப்படாத விவாதங்கள், இதில் முதலமைச்சரால் படிக்கப்படாத கருத்துக்களின்மீது சில விவாதங்கள் நடைபெற்றன. சில விவாதங்கள் நடைபெறும்போது இதிலே உள்ளே இருக்குமா என்று பார்த்தேன். இப்போதுகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது, நான் எண்ணிக் கொண்டிருந்தேன். முதல் நாள் கூட அதைப்பற்றிப் பேசினார்கள். 'இன்டிஸ்கிரிமினேட் அரெஸ்ட்ஸ்' பற்றி. எப்படி போராட்டங்களிலே கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டார்கள் என்பதை முதல் நாளிலேயே அவர்களுடைய அடையாளத்தைக் காட்டினார்கள், இது தவறு என்று. இது ஆண்டாண்டுதோறும், அந்தக் காலத்திலிருந்து

151 சி.ஆர்.பி.சி.—'பிரிவென்டிவ் அரெஸ்ட்'—எல்லோரையும் போட்டு விடுவார்கள். 1898-லிருந்து அந்தச் சட்டம் இருக்கிறது. அது 'பிரிவென்டிவ்'. இங்கே 1988-வது ஆண்டு சட்டமன்றம் கலைக்கப்பட்டவுடன் மார்ச் மாதம் 15-ஆம் தேதி தமிழகம் முழுவதும் 'பாரத பந்த்' நடைபெற்றது என்று உங்களுக்கெல்லாம் ஞாபகமிருக்கும் என்று எண்ணுகிறேன்—15—3—88—151-வது பிரிவின் கீழ் இன்றைக்கு இருக்கக்கூடிய ஆளுநர் அவர்கள் 10,000 பேரை அன்றைக்குக் கைது செய்து தமிழக சிறைகளில் இருந்தார்கள். நான் அன்றைக்கு சபா நாயகராக இருந்தேன். என்னால் நீதிமன்றத்திற்குச் செல்ல

12—05 மணி

முடியவில்லை. உடனே என்னுடைய ஜூனியரை அழைத்து, இதை விடக்கூடாது, இதோ நான் டிராப்ட் கொடுக்கிறேன் என்று சொல்லி, I drafted a petition to strike down 151 அப்போது உயர்நீதிமன்றத்தில்அந்த வழக்குதாக்கல் செய்யப்பட்டு நீதிபதி சிவசுப்பிரமணியம் அவர்கள் அந்த வழக்கிலே கடைசியாக விடுதலையானால் அரசாங்கம் மீது காம்பன்சேஷன் பெற்றுக் கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கினார். ரிட் பெட்டிஷன் நம்பர் 2791/1988, 21 மார்ச் 1988 அன்று தீர்ப்பு வழங்கினார். இது 151-க்கே. இது பிரிவெண்டிவ்க்கு. அந்த பிரிவெண்டிவ் அரஸ்ட்டிலும் நம்முடைய முன்னாள் சபா நாயகர் புலவர் கோவிந்தன் அவர்களை கைது செய்து இருக்கிறார்கள் என்று பத்திரிக்கையில் பார்த்தேன். உடனே நம்முடைய ஆளுநரோடு தொடர்பு கொண்டேன். ஒரு காலத்தில் நம்முடைய தமிழக சட்டமன்றத்தில் சமூக விரோத செயல்களைச் செய்தவரா சபாநாயகராக இருந்தார், உடனே விடுங்கள் என்று சொன்னேன், இன்றைக்கு இருக்கின்ற நம்முடைய ஆளுநரின் உதவியாளர் சந்தானம் தொலைபேசியை கீழே வையுங்கள் ஐந்து நிமிடத்தில் தொடர்பு கொள்கிறேன் என்று சொன்னார். ஐந்து நிமிடம் கழித்து தொடர்பு கொண்டார். புலவர் கோவிந்தனை விடுதலை செய்து விட்டோம் என்று என்னிடம் சொன்னார். இதை நான் எதற்குச் சொல்கிறேன் என்றால் எப்படி எல்லாம் பயன்படுத்தப்பட்டது 151. 10 ஆயிரம் பேர் 15 மார்ச் 1988-ல். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு கைது செய்யப்பட்டவர்கள் they have been arrested for specific offence and they have admitted the offences. நீதிமன்றத்தில் போய் தவறு செய்தேன் என்று சொன்னால் தண்டனை தான். அதாவது punishment will follow எத்தனைநாள், ரிமாண்டில் இருந்தாலும் அதை கழித்துக் கொள்ள வேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. ஆகவே, 1898-லே இருந்து இந்தப்பிரிவின் கீழே இதுவரை வழக்கு தொடர்ந்தது இல்லை. சென்னை உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. முதலமைச்சர் அவர்களும்

1990 மார்ச் 24] [திரு. பி. எச். பாண்டியன்]

அதை அடிப்படையாக வைத்து எல்லோரையும் விடுதலை செய்து இருந்தாலும், ஒன்றை மறந்து விடக்கூடாது. அவர்கள் அரசாங்கத்திற்கு அனுமதி கொடுத்து இருக்கிறார்கள் உச்ச நீதிமன்றத்திற்கு செல்வதற்கு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் கூறும்போது அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் விடுதலை செய்தார்கள் என்று சொன்னார்கள். அப்படி அல்ல, அந்தத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு நாங்கள் அப்பீல் போடுவதாகக் கேட்டு நீதிபதிகள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட்டினுடைய முடிவுதான் இறுதியான முடிவு ஆகும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தத் தீர்ப்பு சென்னை சிறைச்சாலையில் இருந்தவர்களுக்கு மட்டும் தான். அந்தத் தீர்ப்பிலேயே இரண்டு வகை. சென்னை சிறைச் சாலையில் உள்ளவர்களை அவர்களிடத்திலே எழுதி வாங்கிக்கொண்டு அவர்களை விடுவிக்கவேண்டும். வெளி ஊர்களில் சிறையில் இருக்கின்றவர்களுக்கு வேறு மாவட்டங்களில் இருப்பவர்களை 20 ஆம் தேதி அன்று விசாரித்து அந்த நீதிபதி என்ன முடிவு எடுக்கிறாரோ அந்த முடிவு எடுக்கலாம் என்பது தான் தீர்ப்பு. ஆனாலும் அதற்கு முன்பாகவே 17 ஆம் தேதியே அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, ஏற்றுக்கொள்கிறேன். நான் சொல்ல வந்தது, உயர் நீதி மன்றத்தில் வழங்கிய இந்தத் தீர்ப்பு, they are not sure of their judgements. அவர்களே அந்தத் தீர்ப்பின் மீது கொஞ்சம் சட்டத்தின் அடிப்படையில் சந்தேகம் பெற்ற காரணத்தால்தான், உங்களுக்கு அரசாங்கத்திற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றம் சென்று—தீர்ப்பு வரும் வரை ineffect, it has no legal effect அதை நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்.

மற்றும் ஒன்று, இதை நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் தவறாக எண்ணக் கூடாது. ஒரு அக்கடமிக் இன்ட்ரஸ்டில் சொல்கிறேன். ஹேபியஸ் கார்பஸ் என்று சொன்னால் அவர்களை சிறையில் இருந்து கொண்டு வந்து நீதிமன்றத்திற்கு முன்னால் நிறுத்த வேண்டும். ஆனால் 12 பேரும் அங்கே நீதிமன்றத்தின் முன்னால் நின்று வழக்கு நடத்தினார்கள். இது வக்கீல் என்ற முறையில் பார்த்த காரணத்தால் நான் சொல்கிறேன். When the corpus is before the Court why

should there be a habeas corpus petition. இது எந்த ஒரு சாதாரண சட்டம் தெரிந்தவர்களுக்கும் தெரியும் என்ற காரணத்தால்தான் இந்த அர்த்தத்தில் சொன்னேன்.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, இதை அவர்களே கேட்டு தெளிவைப் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, முதல் நாள் எங்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றபோது நாங்கள் சிறையில்தான் இருந்தோம். சிறையில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு நீதிபதிகள் முன்னால் ஆஜர் செய்யப்பட்டோம்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, ஹேபியஸ் கார்பஸ் பெட்டிஷன் ரொம்ப சீரியஸான கேஸ்களுக்கு போடுவார்கள். ஒருவரை கைது செய்து தலை மறைவாக எங்காவது சர்க்கார் வைத்து இருந்தால்தான் சந்தேகத்தின் பெயரில் ஹேபியஸ் கார்பஸ் போடுவார்கள். வெளிப்படையாக தேதி அறிவித்து விட்டு அல்லது அரஸ்ட்டு செய்யப்பட்டு, சிறை வாசலில் இருந்து பார்த்தால் ஒரு ஆயிரம் பேர் மனு போட்டு பார்த்து சொந்தக்காரர்கள் எல்லாம் குசலம் விசாரித்து இவ்வளவு முடிந்ததற்குப் பின்னாலே, வால் போஸ்ட்டர்கள் ஒட்டி, ஊர்வலங்கள் நடத்தி, கண்டனம் தெரிவித்து அதற்குப் பின்னால் போய் அவர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா? என்று ஹேபியஸ் கார்பஸ் பெட்டிஷன் போட்டு இருப்பது ரொம்ப விசித்திரமாக இருக்கிறது.

12.10 மணி

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, வசதி உள்ளவர்கள் ஹேபியஸ் கார்பஸ் உடனே போட்டுவிடலாம். வசதி இல்லாதவர்கள் 1950 ஆம் ஆண்டிலிருந்து இது நாள் வரை கைது செய்யப்பட்ட இடத்திலேயே அவர்களால் ஹேபியஸ் கார்பஸ் போட முடியவில்லை, நம்முடைய சட்டத்தில் வழி இருந்தும் கூட. அரசியல் சட்டம் பிரிவு 32 கிளாஸ் 3, நான் படிக்கிறேன்.... without prejudice to the powers conferred on the Supreme Court by Clauses (1) and (2)....'' அதற்குக் கீழே இருப்பதுதான் முக்கியம்.
Parliament may by Law empower any other court to exercise within the local limits of its jurisdiction all or any of the powers exercisable by the Supreme Court under Clause (2)
இதன்படி பாராளுமன்றம் 1950-வது ஆண்டில் ஒரு சட்டத்தை உருவாக்கி நீதிமன்றத்தை நிறுவி—இது இருக்கின்ற நீதி மன்றத்திற்கு— Quo Warranto, Mandamus and Habeas Corpus. எல்லாம் போட இன்றைக்கு அனுமதித்திருப்பார்களானால், மதுரையிலே இருப்பவர்கள் இங்கே வரவேண்டாம். நெல்லையிலே இருப்பவர்கள் இங்கே வர

வேண்டாம். இதைச் செய்யத் தவறிய காரணத்தால்தான், இன்றைக்கு பல்வேறு தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, குறைபாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதற்காகச் சொன்னேன்.

இனிமேலாவது Article 32(3) உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை, அந்தந்த ஊரில், Habeas Corpus என்றால், அம்பாசமுத்திரம் என்றால், அம்பாசமுத்திரத்திலே விடுவிக்கலாம், Article 32(3) இதெல்லாம் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கொள்கை இருக்கிற காரணத்தாலே சொல்கிறேன். அங்கே குவிந்திருக்கிறது. நிர்வாகத்தில் உள்ள அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். நீதிமன்ற அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். பாராளுமன்ற அதிகாரங்கள், சட்ட மன்றத்திற்கு வழங்கப்பட்டு பரவலாக்கப்பட வேண்டும். அது கிடைத்தால்தான் முழுமையான சுதந்திரம் கிடைத்ததாகக் கருதமுடியும். நாட்டு மக்கள் பொருளாதாரம், அரசியல், சமூக நீதிகளைப் பெற்றார்கள் என்று கருத முடியும் என்பதற்காக நான் இதை உங்கள் முன்னால் வைக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இங்கே வாதாடிய பெருமக்களைப் போல, சட்டம் படித்த அறிஞன் அல்ல. நீதிமன்றத்திலே கொண்டு நிறுத்தப்பட்ட பல இடங்களில், போலீஸ் டயரி யைக்கூட நீதிபதிகள் பார்த்துச் செய்யவேண்டிய சில காரியங்களிலே ரொட்டினாக without applying their mind, பண்ணிவிட்டார்கள் என்பது ஒரு வாதமாக வைக்கப்பட்டது. அதிலே அந்த நீதிமன்றத்திற்குச் சென்றவர்கள் வாதிட்டதும், அரசாங்கத்தினுடைய சார்பிலே அரசாங்க வழக்கறிஞர்கள் வாதிட்டதும், அதன்பிறகு, நீதிபதிகள் அவர்கள் தீர்ப்பு எழுதியதும், தீர்ப்புக்கு மேலே இப்போது நீங்கள் உச்சநீதி மன்றத்திற்கு செல்வதற்கு என்று அனுமதியைப் பெற்று இருப்பதும், இத்தனையும் இருக்கின்றபோது, எத்தனையோ செய்திகளைச் சொல்கிற போது, இது நீதிமன்றத்திலே இருக்கிற காரணத்தாலே, பேசக்கூடாது என்று இந்த அவையிலே சொல்லப்பட்ட போது, இதை மட்டும் பேசியும், பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தவர்கள் எல்லாம் ஊர்வலம் நடத்துவது பற்றியும், சுவரொட்டி ஒட்டுவது பற்றியும், குசலம் விசாரிப்பது பற்றியும் தங்களுடைய எண்ணங்களை எல்லாம் வெளியிடுவதற்கான ஒரு வாய்ப்பாக இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமா என்பதை அவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்புக்கு நான் விட்டுவிடுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே நிலுவையில் இருந்தால் பேசியிருக்க மாட்டேன். இன்னும் அரசாங்கம் அப்பீல் செய்யவில்லை என்று எண்ணுகிறேன். ஆகவே வழங்கிய தீர்ப்பைப் பற்றி யார் வேண்டுமானாலும், fair criticism பண்ணலாம்,

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, ஒரு நீதிபதியைப் பற்றி தனிப்பட்ட முறையில் விமர்சனம் செய்யக்கூடாது. ஆனால் அந்த நீதிபதி கொடுத்த தீர்ப்பைப் பற்றி விமர்சனம் செய்ய உரிமை உண்டு.

திரு. பி. எச். பாண்டியன் : இதோடு அதை விட்டுவிடுகிறேன். அடுத்து 51-ஏ, அரசியல் சட்டப் பிரிவு 51-ஏ. to safeguard public property இப்பேர்ப்பட்ட போராட்டங்களில் பொதுச் சொத்தைப், பாதுகாக்கவேண்டும். It shall be the duty of every citizen இது சாதாரண மனிதன் கடைப் பிடிக்க வேண்டியவை. நாம் கட்சி நடத்துகிறோம் என்ற காரணத்தால், யாராக இருந்தாலும், கடந்த காலமாக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், பொதுச் சொத்திற்கு சேதம் விளைவிப்பது, அரசியல் சட்டத்தினுடைய கடமையிலிருந்து தவறுவதாகும் என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று. இன்றைக்கு நிர்வாகம் முழுமையான ஜனநாயக ரீதியாக செயல்படவில்லை. யாராவது ஒரு அதிகாரிக்கு உதாரணமாக ஒரு எம்.எல்.ஏ. அதிகாரி ஒருவருக்கு தொலைப் பேசி செய்தால், political interference இப்படிப் பேசலாமா? எம்.எல்.ஏ. என்றால் என்ன? சட்டசபையிலே மட்டுமல்ல. அதிகாரிகளிடம் தொலை பேசியிலே ஒரு எம்.எல்.ஏ. என்னுடைய தொகுதியிலே ஒரு கான்ஸ்டபிள் தவறு செய்கிறான் என்று எஸ்.பி. இடம் சொன்னால், கலெக்டரிடம் சொன்னால், ஒரு வி. ஏ. ஓ.வை-ப் பற்றிப் பேசினால், அது political interference என்ற நிலை இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டும். தவிர்க்க வேண்டும் என்றால், அதிகாரிகள் தவிர்க்கவேண்டும்.

12-15 மணி.

காரணம், எம்.எல்.ஏ. என்றால் சட்ட மன்றத்திலே மட்டும் தான் கட்சிகளுக்கு கைதூக்குவார்கள் என்று எண்ணக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். பெரிய அதிகாரிகளுடைய பைல்ஸ் அமைச்சர்களுக்கு வரவில்லையா? ஒரு புரமோசன், ஒரு டிரான்ஸ்பர் பற்றி பைல் வரவில்லையா? அது பொலிட்டிகல்ஸ் இன்புளுயன்ஸ் இல்லையா? பொலிட்டிகல் இன்டர்பியரன்ஸ் என்றால், அவர்களுடைய மட்டத்திலேயே முடித்துக் கொள்ள வேண்டும். தலைமைச் செயலாளரை மீறி முதலமைச்சருக்கு எந்த பைலும் வரக் கூடாது. அப்போது பொலிட்டிகல் இன்டர்பியரன்சே இருக்காது. ஒரு அமைச்சர் மூலமாக வரும்பொழுது அது பொலிட்டிகல் எக்ஸிகியூட்டிவ்ஸ். அதை பொலிட்டிகல் இன்டர்பியரன்ஸ் என்று சொல்ல முடியாது. அஃபிசியல் எக்ஸிகியூட்டிவ் வேறு, பொலிட்டிகல் எக்ஸிக்யூட்டிவ் வேறு. ஆகவே,

1990 மார்ச் 24] [திரு. பி. எச். பாண்டியன்:]

அந்த நிலையில், நிர்வாகத்தை முழு கட்டுக் கோப்பாக, ஜன நாயக ரீதியில் வைத்து, பாவிக்கப் பட வேண்டுமென்பதற் காகத்தான் நான் இங்கே இதைச் சொல்கிறேன்.

இன்னொன்று, மக்கள் நலப் பணியாளர்கள் என்று இளை ஞர்களை நியமிப்பதாகப் படித்தேன். அது நல்ல திட்டம்தான். ஆனால் இளம் வயதிலேயே பணத்தைக் கொடுத்தால், முன் னேற வேண்டுமென்ற ஆசையில்லாமல், போய் விடக் கூடாது. நாங்களெல்லாம் வக்கீல் தொழில் தொடங்கும்பொழுது எந்த சீனியரும் 3 வருடம் ஜூனியர்களுக்கு காசே கொடுக்க மாட் டார்கள். மாதச் சம்பளம் கொடுத்தால் படிக்க ஆசை வராது. திரு.கணபதி அவர்கள் சொல்கிறார்கள்; இப்போது மட்டும் யார் கொடுக்கிறார்கள் என்று. ஆரம்ப காலத்தில், ஒரு தொழி லைச் செய்யும் பொழுது யாரும் சம்பளம் கொடுக்க மாட் டார்கள். அந்தக் காலத்தில் தொழிலைப் படிக்கும்பொழுது எந்த சீனியரும் ஜூனியருக்குப் பணம் கொடுப்பதில்லை. ஏனென்றால், பணத்தை வாங்கினால் படிக்க மாட்டார்கள். ஆகவே இளைஞர் களுக்கு இவ்வாறு செய்வது நல்லதுதான். ஆனால் இதையே அவர்கள் வாங்கி வாங்கி சாப்பிட்டுவிட்டு வயதாகும் வரையில் இருந்து விடுவார்களேயானால், முதியோர் பென்ஷன் வாங்கக் கூடிய காலம் வரையில் வாழ்ந்து விடுவார்கள், வேலையே செய் யாமல் என்பதை மறந்து விடக் கூடாது. இவர்களுக்காகச் செல விடும் பணத்தில் தொழிற்சாலைகளை உருவாக்குவோம். இல வச அரிசித் திட்டத்திற்கும், இலவச வேட்டி, சேலை அளிக்கும் திட்டத்திற்கும் செலவிடும் பணத்தை கூட்டிப் பார்த்தால் 80 கோடி ரூபாய் வருகிறது. இந்த 80 கோடிக்கு 80 தொழிற் சாலைகளை உருவாக்கினால் அவரவர்கள் வேட்டி சேலை வாங் கிக் கொள்வார்கள்; அவரவர்கள் தீபாவளிக்கு, பொங்கலுக்கு அரிசி வாங்கிச் சாப்பிடுவார்கள். ஆகவே, இதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காக உங்கள் முன்னால் வைக்கிறேன்.

பல்வேறு திட்டங்களைப் பற்றி இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கின்றார்கள். இன்றைக்கு இருக்கக் கூடிய அரசியல் சூழ்நிலையில், இந்த பட்ஜெட் முழுவதும் நல்ல பட்ஜெட் என்று எல்லோரும் சொல்லி விட்டால் அடுத்த தடவை அவர்கள் யாரும் எங்குமே தேர்தலில் நிற்க முடியாது. அதுதானே உண்மை? இந்த பட்ஜெட் நல்ல பட்ஜெட் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? அதனால்தான் சில நேரத்தில் சில விமர்சனங்கள், இன்றைக்கு இருக்கக் கூடிய அரசியல் காரணங்களுக்காக சொல்லப்படுவது உண்டு. முத லமைச்சர் அவர்கள் ஒரு பங்ஷனுக்கு வருகிறார் எங்கள்

[திரு. பி. எச். பாண்டியன்] [1990 மார்ச் 24

ஊருக்கு; முதலமைச்சர் அவர்கள் பேசும்போது உங்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே என்று எங்கள் ஊரிலே கேட்டார்கள். அதற்கு நான் சொன்னேன், முழுமையாகச் சொல்லிவிட்டால் அடுத்த தடவை அவர்கள் நிற்க முடியாது என்று. அதுதான் உண்மை. உண்மையைப் பேச முடியவில்லை. ஏனென்றால், அரசியலில் உண்மை பேச முடியாது. உண்மையைப் பேசினோமானால் நாளைக்கு எதிர்ப்பை சந்திக்க முடியாது. ஆகவே, எதிர்ப்பவர்கள் அவர்கள் பாணியிலே பேசிக் கொண்டுதான் இருக்க வேண்டும். நீங்கள் திட்டங்களைத் தீட்டிக் கொண்டுதான் இருக்க வேண்டும். Ruling Party should take decision. But we should have a say என்ற அளவிற்கு இன்றைக்கு நிலைமைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. இருந்தாலும் மக்களுக்காக உண்மை பேசித்தான் ஆகவேண்டும். கருப்பை, கருப்பு என்றுதான் சொல்ல முடியும். ஆகவே, நிதிநிலை அறிக்கையிலே உள்ள நல்ல திட்டங்களுக்கு ஆதரவு உண்டு. ஆனால் அத்தனை திட்டங்களும் மக்களுக்குப் போய் சேர வேண்டும். சேருகிறதா என்பதைப் பாருங்கள். இடையிலே இருப்பவர்கள் சாப்பிட்டு விடக் கூடாது. 100 ரூபாய் போனால், வழியிலே 90 ரூபாயை சாப்பிட்டு விடுவார்கள். அதை கண்காணியுங்கள்.

'டாமின்' நிறுவனத்தைப் பற்றி ஒரே ஒரு பாரா சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன். அதில் 4 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று படித்தேன். சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே கூட பேசினேன். அந்த அதிகாரி மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? என்று. இன்று காலை பத்திரிகை பார்த்தேன், 50 ரூபாய் லஞ்சம் வாங்கியவருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை என்று. வெறும் 50 ரூபாய்க்கு கடுங்காவல் தண்டனை என்றால், 4 கோடி இழப்பு என்றால், அதை நீங்கள் படித்துவிட்டீர்கள்! இந்நேரம் பிடித்து போட்டிருக்க வேண்டாமா? நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்ற ஆசையினால் நீங்கள் கொஞ்சம் தாட்சணியமாக இருந்தால் நல்ல பெயர் வராது. யாராவது நல்லவன் என்று நினைப்பார்கள் என்று மட்டும் இந்தக் கால கட்டத்தில் எண்ண முடியாது. ஆட்சியிலே இருக்கக் கூடியவர்கள் சட்டப்படி ஆட்சி செய்யுங்கள். ஆட்சியிலே இருக்கக் கூடியவர்கள் அதிகார வர்க்கத்தை கையிலே வைத்து மக்களுக்கு பணி செய்யச் சொல்லுங்கள். அதிகாரிகளிடம் ஒரு மாதத்திற்குள் இந்தத் திட்டம் வேண்டும்; அதை நிறைவேற்றியாக வேண்டும் என்று உத்தரவு போடுங்கள். அடுத்த தேர்தலை எண்ணிப் பார்க்காதீர்கள். அப்படி எண்ணிப் பார்ப்பீர்களேயானால் தைரியமே வராது. அடுத்த தேர்தலைப் பற்றி அடுத்த தேர்தலில் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி இந்த அளவிற்கு என்னுடைய கருத்தை வெளியிடு

1990 மார்ச் 24] [திரு. பி. எச். பாண்டியன்]

வதற்கு வாய்ப்புக் கொடுத்த சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, அமைகின்றேன்., நன்றி, வணக்கம்.

12-20 மணி.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் பேசும்போது, பொருளாதார சுதந்திரம் இல்லாததால், இந்த அரசு பற்றாக்குறையான பட்ஜெட் போடக்கூடிய சூழ்நிலை உருவாகியது என்று சொன்னார்கள். பொருளாதார சுதந்திரம் இல்லையென்றால், ஒரு கிலோ ரேஷன் அரிசி..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன ''Point cf Order'' இருக்கிறது? திரு. கே. ரமணி அவர்கள் பேசுங்கள்.

*திரு. கே. ரமணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கஜானா காலியான சூழ்நிலையில் அதிகாரத்திற்கு வந்து ஒரு ஆண்டுக் காலத்திற்குப் பிறகு நமது முதலமைச்சர் அவர்களால் வைத்திருக்கும்படியான இந்த நிதிநிலை அறிக்கை, கடுமையான நெருக்கடியும், இன்னொரு பக்கம் மக்களுடைய எல்லையற்ற தேவைகளையும் கொண்டு, இந்த இரண்டுக்கும் மத்தியில் நமக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக, இந்த நிதி நிலை அறிக்கையில் மக்களுக்குச் சாதகமான பல காரியங்களைச் செய்வதற்கான ஒதுக்கீடுகளும், அதற்கான ஏற்பாடுகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் வரவேற்கப்படக்கூடிய விஷயங்கள். எனக்கு முன்னால் பேசிய எங்களுடைய கட்சி அங்கத்தினர்களும் அவைகளைச் சுட்டிக் காட்டினார்கள். அதே சமயத்தில் சில விஷயங்கள் அதனுடைய உண்மையான நிலை இருக்கிறதே, அதை விமரிசனமாகவும், அதே நேரத்தில் மாறுதல்கள் அவைகளில் வேண்டுமென்றும் கோருவது அவசியமாகிறது. இந்த முறையில், பெருவாரியான அளவில் மக்களுக்கு நன்மைகளைச் செய்யக் கூடிய காரியங்களை நிறைவேற்ற முன்வந்திருக்கும்படியான இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சில விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்திய நாட்டில் ஏற்கெனவே ஒரு பெரும் அரசியல் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் இதே மன்றத்தில் பேசி, அதை நாம் வரவேற்றுள்ளோம். ஒரு புதிய தேசிய முன்னணி அரசு மத்தியிலே ஏற்பட்டிருப்பது நமக்கு சாதகமான ஒரு அம்சம். அது இன்றைக்கு எல்லா விதத்திலும்,

இந்த மாநிலத்திற்கும், இந்தியாவிற்கும், குறிப்பாக இங்கே இருக்கிற $4\frac{1}{2}$ கோடிக்கும் மேல் உள்ள தமிழ் மக்களுக்கும் ஆதாரவாக செயல்படும்படியாக இருப்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மத்தியில் அரசாங்கம் மாறுதலானவுடன், கடுமையான தாக்குதலுக்கு ஆளான இந்த அரசாங்கம், இந்த அரசாங்கமே இருக்கக்கூடாது என்ற நிலை வந்தது. அது மட்டுமல்ல, இந்த அரசாங்கத்திற்கு எதிரான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டதெல்லாம் நமக்குத் தெரியும். அந்த நிலைமையில் அடுத்த கட்டமாக 8 மாநிலங்களுக்கு நடந்த தேர்தல், பாண்டிச்சேரியையும் சேர்த்தால் 9 மாநிலங்களுக்கு நடந்த தேர்தலில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இந்த தேர்தல் முடிவுகள் எல்லாம், யானைக்கு யானை கை கொடுப்பதைப் போல, மத்திய அரசுக்குப் பலம் கிடைக்கக்கூடிய அளவுக்கு, நாம் எதிர்பார்த்த ஒரு தீவிரமான மாற்றத்தைக் கொள்கை அடிப்படையில் ஏற்பட்ட அந்த மாற்றத்தை, அரசியலில் ஏற்படுத்தியது.

இந்த மாற்றமானது, 42 ஆண்டு காலமாக நமது மக்கள் எந்த சர்வாதிகாரத்திற்கு எதிரான ஒரு வழியை ஏற்படுத்தித் தந்தார்களோ, சர்வாதிகாரப் பாதையில் நம்மை தொடர்ந்து இழுத்துக்கொண்டு போன அந்த ஒரு நிலைமையை மாற்றியது. பல குறைபாடுகளும், கெடுதல்களும், ஜனநாயகத்திற்கு இழைக்கப்பட்ட அபாயமும் மாறுவதற்கான பாதையில் செல்வதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி, அதிக முக்கியத்துவமுள்ள ஒரு மாற்றத்தை மத்தியில் ஏற்படுத்தியது.

இங்கே பேசும்போது, நமது அண்ணா தி.மு.க. வைச் சார்ந்த நண்பர்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்களும் சில விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். பாண்டியிலும் இங்கே தமிழகத்திலும் நடந்திருக்கும்படியான பழனி நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலிலும் உங்களுக்குத் தான் என்ன பெரிய வெற்றி கிடைத்தது, என்று பேசினார்கள். உண்மையை நாம் கணக்கெடுத்துப் பார்க்கவேண்டும். என்ன கணக்கு என்றால், அனைந்திந்திய அண்ணா தி.மு.க. வும், காங்கிரசும் ஒன்று சேர்ந்த வெற்றியின் அடிப்படை என்ன? மக்கள் நலனா? அல்லது இங்கே தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய 39 பாராளுமன்ற இடங்களில் 28 எண்ணம் உங்களுக்குத் தருகிறோம், மத்தியில் ராஜீவ் காந்திதான் ஆட்சிக்கு வர வேண்டும்.

1990 மார்ச் 24] [திரு. கே. ரமணி]

12-25 மணி

வந்தவுடனே இங்கே இருக்கிற, தமிழகத்தின் பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற இந்த அரசாங்கத்தைக் கீழே தள்ளவேண்டும் என்பதுதானே சிம்பிள் கான்ட்ராக்ட். வேறு என்ன கொள்கை? இந்த அடிப்படையில்தான் அது வந்தது. அதை நீங்கள் எடுத்துப் பாருங்கள் அப்போது கூறப்பட்ட வாதம் என்ன வந்தது? தமிழக மக்களின் ஆதரவு உங்களுக்கு இல்லை; அது தீர்மானிக்கப்பட்டு விட்டது; இந்த அரசு உண்மையிலேயே சட்டபூர்வமாக இருப்பதற்கு தார்மீக அடிப்படை கிடையாது என்று பேசினார்கள்.

நான் பழனி தொகுதி பாராளுமன்றத் தேர்தலின்போது அங்கே சென்றிருந்தேன். அங்கே சென்று அந்த மக்களின் உணர்வு எப்படி இருக்கிறது என்பதை நான் பார்த்தேன். அங்கே போட்டியிட்ட மன்றாடியார் அவர்கள்—சேனாபதி அவர்களுக்கு அந்தப் பட்டப்பெயரும் உண்டு. என்ன சொன்னார்? 3 இலட்சம் ஓட்டு வித்தியாசத்தில் ஜெயிப்பேன் என்று பிரகடனப்படுத்தினார். ஆனால் என்ன நடந்தது? 80 ஆயிரம் ஓட்டுகள் வித்தியாசத்தில்தான் அவரால் ஜெயிக்க முடிந்தது. முன்பு இரண்டரை இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயித்தவர் இப்போது 80 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில்தான் ஜெயிக்கிறார் என்றால் கணக்கும் தெளிவாகிறது. அதாவது காங்கிரஸ் கட்சியும், அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் பார்க்கக் கூடிய அந்தச் சுலபமான கணக்கு இருக்கிறதே, அதன்படி ஒன்றும் நடக்க முடியாது என்ற உண்மை தெளிவாகிறது. அதேமாதிரி இந்தியாவிலும் நடக்க முடியாது. இதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் அரசியல் வித்தியாசத்தைச் சுட்டிக்காட்டவேண்டும் என்பதற்காக அல்ல......

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சென்றதைப் போலே நானும் அங்கே சென்றிருந்தேன். அங்கே பல இடங்களில் நடைபெற்ற வன்முறைகள், பல இடங்களில் நடைபெற்ற தவறான செயல்கள் இவைகளின் காரணத்தாலே காங்கிரஸ்-க்கு வரவேண்டிய வாக்குகள் குறைந்தன. என்னையே தாக்க வந்தார்கள். அதனால் நான் நீதி கேட்டு அங்கே போராட வேண்டி வந்தது

கைதும் செய்தார்கள். எனவே வரவேண்டிய வாக்குகள் வராமல் இருந்ததற்கு இந்தத் தவறுகள்தான் காரணமே தவிர காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கிலே சரிவு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பழனித் தொகுதி உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் ஏதோ சொல்ல வருகிறார்கள். (சிரிப்பு).

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிஸ் கட்சியைச் சேர்ந்த துணைத் தலைவர் அவர்கள் பழனிக்கு வந்திருந்தார்கள். நானும் அங்கே தேர்தல் பணியிலே இருந்தபோது தேவையில்லாமல் 10, 15 நபர்களோடு நுழைந்து இவர் தகராறு செய்தார். அதனால்தான் போலீசாருக்கும், இவருக்கும் தகராறு ஏற்பட்டு இவரை வெளியே இழுத்து வந்தார்கள். அங்கே ரோட்டிலே உட்கார்ந்து இவர் மறியல் செய்து, அதனால் போலீஸார் இவரைக் கைது செய்ததாகச் சொன்னார்கள். எனவே இவர் நியாயமாக அங்கே ஜனநாயகப் பணிகளை ஆற்றவில்லை என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தைப் பாதுகாத்துத் தரவேண்டும்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, நமது பழனி தொகுதி உறுப்பினர், எந்தப் பகுதியில் எந்த வாக்குச் சாவடிக்குச் சிறிது நேரத்திற்கு முன்பு சென்றுவிட்டு வந்தாரோ அதே இடத்திற்குத் தான் நானும் சென்றிருந்தேன். 10, 15 பேரோடு சென்று நான் தகராறு செய்யவில்லை. எங்களுடைய ஏஜெண்டுகள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏஜெண்டுகள் உள்ளே இருக்க முடியாத நிலைமை என்ன என்பதைக் கேட்கத்தான் நான் வந்தேன். ஆனால் அவர் சொன்னது அவைக்குறிப்பில் இருக்கட்டும். வெளியேயும் வரட்டும். நான் இப்படிப்போய்ச் செய்திருப்பேனா என்பதை நாட்டு மக்கள் முடிவு செய்யட்டும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்த நிலைமை ஏற்பட்டதினுடைய விளைவாகத்தான் எங்களுடைய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய நாட்டில் இருக்கிற அரசியல் நிலைமைகளையும், தமிழகத்தில் இருக்கிற அரசியல் நிலைமைகளையும் . இணைத்துப் போட்டுப் பார்த்துத்தான் எங்களுடைய கொள்கையை வகுத்து எந்த முறையில் அதை அமலாக்குகிறோம் என்பதைச் சொல்கிறேன். நாட்டிலுள்ள இந்தப் புதிய அரசாட்சிக்கு இடதுசாரிக் கட்சிகள், ஜனநாயகக்

1990 மார்ச் 24] [திரு. கே. ரமணி]

கட்சிகள், மதச்சார்பற்ற சக்திகள் அத்தனைபேர்களும் சேர்ந்து நிபந்தனையற்ற ஆதரவினை அளித்து அந்த அரசாங்கம் அதனுடைய தேர்தல் அறிக்கையை நிறைவேற்றட்டும் என்று நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அப்படிச் சொல்லும் போது இங்கே இருக்கிற இந்த அரசாட்சியும், அதாவது திராவிட முன்னேற்றக் கழக அரசாட்சியும் அந்த தேசிய முன்னணியில் ஒரு அங்கமாக இருக்கின்றது. இதுவும் அதனுடைய ஒரு பகுதியாக இருக்கின்றது. எனவே இந்த அரசாட்சியும் காரியங்களை நிறைவேற்ற வேண்டும். அதிலே குறைபாடுகள் இருந்தால் அவற்றை விமர்சனம் செய்து ஒழுங்கு படுத்த வேண்டுமே தவிர டெல்லியோடு காண்ட்ராக்ட் பேசி ஒழித்துக் கட்டுகிற திட்டம் வந்தால் இந்தச் சக்திகள் முழுவதும் ஒன்று சேர்ந்து அந்தப் போக்கை உடைத்து எறிய வேண்டி இருக்கும், அதற்கு தமிழக மக்கள் முன்வருவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அப்படி ஒழித்துக்கட்டுகின்ற போக்கை நாம் அனுமதிக்க முடியாது. வளர்ந்துவருகிற ஜனநாயகத்தை நாசப்படுத்துவதாகும் அது. அதனால்தான் இந்த நிதி நிலை அறிக்கையில் 4-வது பாராவில் நமது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கும்படியான அம்சங்கள் வரவேற்கத்தக்கவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு தேசிய இனங்களைக் கொண்டிருக்கிற இந்த நாட்டில் கடந்த 40, 42 ஆண்டு காலமாக நாம் வாதாடியும், போராடியும் செய்ய முடியாமல் சில காரியங்கள், சில உரிமைகள் உள்ளன. அதாவது மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் தருவது என்ற அப்படிப்பட்ட தன்மைகள், மத்தியில் ஒரு கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற நிலைக்கு வந்திருக்க வேண்டும்.

12-30 மணி

எந்த அரசாங்கமும் அதை ஏற்றுக்கொண்டு உறுதியாக நிற்கக்கூடிய அரசாங்கமாக இருப்பதையே நாம் வரவேற்கிறோம். இதைச் சொல்லும்போது மத்தியிலேயும் ஒரு பலமிக்க அரசாங்கம் இருக்கவேண்டும். பெடரேடிவ் கவர்ன்மென்ட் என்று சொல்லுகின்றபோது, அது தொளதொளப்பான இடுப்புக்கு சக்தியில்லாத கவர்மெண்ட்டாக இருந்து பிரயோசனம் இல்லை. அந்த சக்தியான அரசாங்கம் மத்தியிலே வேண்டும். அந்த சக்தியான அரசாங்கம் வேண்டுமென்பதற்காக அது சர்வாதிகாரத்திற்குச் செல்ல முடியாது. சென்றால் நடக்காது. அதே மாதிரி மாநிலத்திலும் அதிகாரமும் சக்தியும் உள்ள ஒரு அரசு இருக்கவேண்டும். எல்லா மாநிலங்களிலும் அப்படி இருக்கவேண்டும். அப்படி பலமிக்க மாநில அரசுகள், பலமிக்க மத்திய அரசு என்ற முறையில் இந்திய நாட்டின் அரசாட்சியினுடைய முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்பதுதான் எங்களுடைய கட்சியின் கருத்து.

இன்றைக்கு இருக்கின்ற இந்த மத்திய அரசாட்சி புதிய முறையிலே அதனுடைய செயல்கள் ஆரம்பமாகியிருக்கின்றன. அதைத்தான் நாம் பார்க்கிறோம். அதில் நம் மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் அங்கிருந்து கிடைக்கவேண்டிய சலுகைகளையும் நன்மைகளையும் நாம் பெறவேண்டும். நமக்கு கிடைக்க வேண்டும். மாநிலங்களுடன் கலந்து பேசியே பிரச்சினைகளைத் தீர்ப்பது என்று வேண்டும். இதற்கு முன்பு இது நடக்கவில்லை. கலெக்டர்களையும் மற்ற அதிகாரிகளையும் மத்திய அரசு அவர்களாகக் கூப்பிட்டு வைத்து பேசிவிட்டுப் போவார்களே தவிர மந்திரிசபையிடம் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசுவது குறைவு. அந்த நிலை முன்பு இருந்தது. இன்றைக்கு அது மாற்றப்படுகிறது. அரசியல் கட்சிகளுடன் கலந்து பேசுகிறார்கள். அதிகாரத்திலே மத்தியிலே நாங்கள் இல்லை. எங்களிடம் கலந்து பேசுகிறார்கள். பி. ஜே. பி. யிடம் கலந்து பேசுகிறார்கள். அங்கே பாராளுமன்றத்திலே சக்தியான கட்சிகள் இருந்தும், பதவி ஏற்றுக் கொள்ளாத அக்கட்சிகளுடன் கலந்து பேசுகிறார்கள். ஒன்றுக்கொன்று நேர் எதிரிலே, எதிரும் புதிருமாக கட்சிகளோடு கலந்து பேசுகிறார்கள். அதுதான் பிரச்சினை. அப்படி சொல்லும்போது என்ன வாதம் முன்பு சொல்லிக்கொண்டிருந்தார்கள்? மாநிலங்களிலே எல்லாம் பல கட்சிகள் சேர்ந்து கூட ஆட்சியை உண்டாக்கிவிடலாம். மத்தியிலே சாத்தியம் இல்லை என்று ஒரு மாய வாதத்தை, ஒரு மயக்க வாதத்தை இந்த நாட்டிலே சொல்லிக்கொண்டிருந்தார்கள், இப்போது அந்த மயக்க வாதமே உடைத்து தகர்க்கப்பட்டது. அது தான் உண்மை. ஆகவேதான் அதற்குத்தான் அங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மைனாரிட்டி கட்சி, மைனாரிட்டி கட்சி, மைனாரிட்டி கட்சி எப்படி ஆட்சியில் இருக்கலாம் என்று. மைனாரிட்டி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற கட்சி என்பது நிலைமை. ஆனால் மெஜாரிட்டி மக்களுடைய பிரதிநிதிகள் ஒப்புதல் கொடுத்து சகல விதத்திலும் ஆதரவு கொடுத்து அவர்களும் சேர்ந்து அந்த அரசாட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதை யாரும் ஒன்றும் பண்ணமுடியாது. இந்த நிலைமைதான் வளரும், மாநிலங்களிலேயும் வளரும், ஒற்றைக் கட்சி ஆட்சிக்கு வந்தால் எல்லாம் கரெக்டாகப் போயிற்று. அப்படி என்று சொல்வது போயிற்று. ஒரு கட்சி ஆட்சியில் சகலமும் வந்துவிடும். இதைச் சொல்லும்போது சிலர் நேரே சோவியத் யூனியனுக்கு செல்வார்கள். அதைப்பற்றி இப்போது நான் விவாதிக்கவில்லை அதைப் பற்றி யார் வந்தாலும் நான் விவாதிக்க தயார். இந்தியாவிலேயே இருக்கக்கூடிய நிலைமையைப் பற்றி நாம் இப்போது பேசிக்கொள்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட முறையில் இன்றைக்கு ஏற்பட்டுள்ள தேசிய முன்னணி அரசும் அதனுடைய அங்கமாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசும், தமிழக அரசும் திட்டவட்டமாக மக்களுக்கு எதிர்காலத்தில் நல்ல அம்சங்களை நிறைவேற்றிக்கொண்டு, தவறானதும், ஜனநாயகத்திற்கு விரோதமானதும், பொருளாதாரத்தில் ஊழலும், மக்கள்மீது தாக்குதல்களும் அந்தப் போக்குகளும் நடப்பதை தடுத்து நிறுத்தும்படியான

நிலையில் இருக்கவேண்டும். எந்த மக்கள் நம்மை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தார்களோ அவர்களுடைய பலத்தைத் திரட்டிக் கொண்டு நாம் செல்லவேண்டியிருக்கிறது என்பது எங்கள் கட்சியினுடைய தெளிந்த முடிவு.

இலங்கை அகதிகள் பிரச்சினைகள் பற்றியும் இங்கே விவாதம் வந்தது. அகதிகளை எல்லாம் தண்டகாரண்யத்திற்கு கொண்டு போய் விட்டார்கள். ஒரிசாவிற்குக் கொண்டு போய்விட்டார்கள். முதலாவது, வெளிநாட்டிலே இருந்து எந்த அகதிகள் வந்தாலும் அவர்களை எங்கே குடியமர்த்தவேண்டும்? அவர்களுக்கு எப்படி உதவி செய்யவேண்டும். எப்படி இந்திய நாட்டினுடைய கலாச்சாரத்திற்கும், பண்புக்கும், நம் சட்டத்திற்கும் உட்பட்டு மனிதாபிமானத்தோடு நடத்தவேண்டும் என்று பிரச்சினையை முடிவு செய்ய வேண்டியவர்கள் மத்திய அரசு. மாநில அரசுகளோடு கலந்து செய்யவேண்டியவர்கள். அதற்கான நிதி செலவுகளும் அவர்கள் செய்யவேண்டும். அந்த முறையிலே அவர்கள் செய்கிறார்கள். பிரச்சினை என்னவென்றால் இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றி இதே மன்றத்திலே நாம் பேசியிருக்கிறோம். அந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் இலங்கையினுடைய, ஒற்றுமையான இலங்கையினுடைய கட்டுக்கோப்புக்குள் வடகிழக்கு மாநிலங்களிலே சுய ஆட்சியோடு அங்கே அரசாட்சி ஏற்பட வேண்டும். அங்கே இருக்கின்ற சிங்கள மக்களும், தமிழ் மக்களும், மற்ற எல்லா மைனாரிட்டி மக்களும், இடதுசாரி கட்சிகளும், ஜனநாயக கட்சிகளும் ஒன்றுபட்டு, அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் அந்த நாட்டை ஒரு தளமாக மாற்றி இந்திய நாட்டினுடைய பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்காமல் அந்த நாடு சுதந்திரமாக இருந்து இந்தியாவோடு சிநேகமாக இருக்கவேண்டியது ஒரு கடமையாகும். மிக்க அவசியமாகும். அந்த முறையிலே அந்த ஒப்பந்தம் உருவானது. அது நாடு பூரா வரவேற்கப்பட்டது. உலகத்திலே பல நாடுகள் அதை வரவேற்றன. அது சரியானது. எங்கள் கட்சியிலும் வரவேற்றார்கள். எல்லோரும் வரவேற்றார்கள். இங்கே இருந்த அரசும் வரவேற்றது. ஆனால் அந்த ஒப்பந்தத்திலே இருக்கும்படியான ஒரு கருப்பொருள். ஒரு அண்டர்ஸ்டான்டிங் என்னவென்றால் அந்தத் தமிழ்மக்கள் பிரதானமாக வாழும்படியான வட கிழக்கு மாநிலங்களில் அவர்களுக்கு சுயாட்சி உரிமை வேண்டும், சகல பிரஜா உரிமைகளும் வேண்டும். அவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் சண்டை ஏற்பட்டு மோதல் ஏற்பட்டு அதைப் பயன்படுத்தி அங்கே இருக்கின்ற இலங்கை அரசின் தாக்குதலுக்கு அந்த மக்கள் இரையாகக்கூடாது என்கிற அண்டர்ஸ்டான்டிங் அதிலே பிரதானமாக இடம் பெற்றிருந்தது.

12-35 மணி

அங்கே சமாதானத்தை நிலைநாட்ட, இலங்கை அரசின் சம்மதத்தோடுதான் இந்திய அமைதிப் படை போனது. அந்தப் படையை இலங்கை அரசு வெளியே போக வேண்டுமென்று சொன்னதற்குப்

பிறகு ஒரு நிமிடமும் நம் படை அங்கே இருப்பது சாத்தியமில்லை. இந்தியப்படை ஒரு ஆக்குபேசன் ஆர்மி அல்ல. இந்திய ஐ.பி.கே. எப். ஒரு ஆக்கிரமிப்பு படையல்ல. நம்முடைய அமைதிப்படையை அங்கே போய் உட்காருவதற்காக அனுப்பி வைக்கவில்லை. ஆயிரக் கணக்கான நம்முடைய ஜவான்கள் ரத்தம் சிந்தினார்கள். உயிரையும் கொடுத்தார்கள். அங்கே வாழ்கிற தமிழ் மக்களுக்கும், ஜனநாயகத்திற்கும் பாதுகாப்பு கொடுத்தார்கள். ஆகவே, அங்கே சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டுமென்று ஆரம்பத்திலேயே எங்களுடைய கட்சியும் இதைத்தான சொன்னது. ஆனால் போராளிக் குழுக்கள் அத்தனைபேரும் ஒன்று சேர்ந்து இலங்கையில் வாழ்கிற தமிழ் மக்களும், மற்றவர்களும், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் அத்தனைபேரும் ஒன்று சேர்ந்து ஒரு ஜனநாயக ரீதியில் காரியங்களை ஆற்றுவதற்கு உரிய முறையில் தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னோம்.

நம்முடைய ஐ.பி.கே.எப். சமாதான படை அநேகமாக வெளியேறிவிட்டார்கள். இன்னும் 4 ஆயிரம் பேர் தான் இங்கே இருக்கிறார்கள். இவர்களும் நிச்சயமாக கம்ப்ளீட்டாக விரைவில் வெளியேறிவிடுவார்கள். மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள் ஐ.பி.கே.எப். இலங்கையிலிருந்து வாபஸ் பெறக்கூடாது, அப்படி வாபஸ் பெற்றால் அங்கே இருக்கக்கூடிய தமிழர்கள் படுகொலை செய்யப்படுவார்கள், எல்.டி.டி.இ. போன்ற குரூப்புகள் தாக்குவார்கள், இப்போதே ஐ.பி.கே.எப். காலி பண்ணி போன இடங்களில் எல்லாம் இவர்கள் போய் ஆக்குபை பண்ணிவிட்டார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். இப்படி எல்லாம் சிலது நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. But, we cannot sit in judgement here அவர்கள் எல்லாம் அங்கே ஒற்றுமையாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்குதான் கெடுதல் ஏற்படும் என்பதை நாங்கள் ஆரம்பத்திலேயே எச்சரிக்கை செய்திருக்கிறோம்.

ஆனால் ஐ.பி.கே.எப். தொடர்ந்து அங்கே இருக்க வேண்டுமென்று எந்தக் கொள்கையின் அடிப்படையில் அவர்கள் சொல்கிறார்கள்?

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, ...

திரு. கே. ரமணி: I am not yielding Kindly allow me to finish. கொஞ்சம் இருங்கள். நீங்கள் பேசினால் எனக்கு நேரம் போய் விடும். நான் சொல்வது அரசியல். வேறு விவகாரங்களுக்குள் போகவில்லை. அவர் எந்த அடிப்படையில் அந்த முறையில் சொல்கிறார்? காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைக்கும், தீர்மானத்திற்கும் எதிராக சொல்கிறார். எப்படி அது சரியாக

இருக்கும்? அக்ரிமெண்டில் ஏற்படுத்திய அண்டர்ஸ்டாண்டிங்குக்கு எதிராக அவர் அப்படி சொல்கிறார். ஆகவேதான் இதுபற்றி சிந்திக்க வேண்டுமென்று சொல்கிறேன். அந்தமுறையில் அவர்கள் யோசனை செய்யவேண்டும். அவர்கள் சொல்வது மாதிரி நிலைமை ஏற்பட்டால் அது சரியாக இராது.

இப்போது நம்முடைய வேண்டுகோள் என்னவென்றால் எல். டி.டி.இ. உட்பட, எத்தனைப் போராளிக் குழுக்கள் இருக்கின்றனவோ அத்தனை குருப்புகளும் ஒற்றுமையாய் இருந்து இலங்கையினுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டும். அவர்களுடைய ஒற்றுமையின் கட்டுக் கோப்பின்கீழ் வட கிழக்கு மாநிலங்களுக்கு சுயாட்சியும், அனைத்து மக்களுக்கும் சுதந்திரமும், பிரஜா உரிமைகளும் கிடைக்க வேண்டும். அது பறி போகின்ற நிலைமை வரக்கூடாது. அப்படி இல்லையென்றால் இலங்கையினுடைய சுதந்திரத்திற்கும் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளால் கிளப்பி விடப்படும் கலகங்களுக்கும், குழப்பங்களுக்கும் இடம் கொடுத்தது மாதிரி ஆகிவிடும். அப்படி ஒன்றும் நிலைமை ஏற்படாமல் இருக்க அதற்கு ஆவன செய்யவேண்டும். கடைசியாக நமக்குக் கிடைத்த செய்தி என்னவென்றால் இந்திய அமைதிப்படை முழுமையாக வாபஸ் ஆனால் தமிழ் மக்கள் வசிக்கும்படியான பகுதிக்கும், அந்த சிங்கள மக்கள் வசிக்கும்படியான இடத்துக்கும் இடையே ஒரு பப்பர் ஜோண் (buffer zone) இலங்கை அரசு ஏற்படுத்தும் என்று சொல்கிறார்கள். அதாவது ஒரு சூன்ய பிரதேசம் அங்கே ஏற்படும். அப்படிப்பட்ட நிலை ஏற்படுகிற போது அந்த இலங்கை அரசு என்ன செய்யும் என்பதை இப்போது நம்மால் சொல்ல முடியாது. அந்த நிலைமை எங்கே கொண்டு போகும் என்றால், பெரிய குழப்பத்துக்கும், மறுபடியும் உயிர் நாசத்துக்கும் வழிவகுக்கும். இந்த நிலைமையில் இதை நாங்கள் கவலையோடு பார்க்கிறோம். அத்தனை தமிழ்மக்களும், குறிப்பாக அந்த நாட்டிலே ஜனநாயகத்தை விரும்பக் கூடிய அத்தனை அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இலங்கை அரசு அப்படிப் பட்ட தவறுகளை செய்ய அனுமதிக்காத வகையில், இடம் கொடுக்காத வகையில் அத்தனை போராளிக் குழுக்களும் ஒற்றுமையாய் இருங்கள், ஒன்று படுங்கள், ஒன்று பட்டு நில்லுங்கள் உங்களிடையே இருக்கிற வித்தியாசங்களைத் தூக்கி எறியுங்கள் என்று நான் இச்சந்தர்ப்பத்தில் சொல்ல கடமைப் பட்டிடுருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதை நாம் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும்.

12-40 மணி

அந்தச் சூழ்நிலையிலேதான் அந்த அகதிகள் இங்கே வருகிறார்கள். அதைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் கிளியராகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே என்ன சந்தேகம்? சந்தேகமேயில்லை. இந்த அரசாங்கத்திற்கு ஒரு அடி கொடுக்க

வேண்டும் என்ற கருத்தோடு இந்த அரசு இருப்பதை விரும் பாதவர்கள் இதை அரசியலாக எடுத்துக்கொண்டு, இதற்கு ஒரு அடி கொடுக்கப் பார்க்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய கருத்து என்னவென்றால், அங்கேயிருந்து வரக்கூடிய ஆயுதம் ஏந்தாத, இங்கே வந்து குழப்பம் உண்டாக்க வேண்டு மென்ற எண்ணத்தோடு வராத குழந்தைகளும், பெண்களும் வருவதை வரவேற்கலாம். அதைச் செய்யலாம். அந்தச் சூழ்நிலை வரவேண்டும். அதை முதலமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தமிழ் மக்கள் இங்கே வருவதற்கு இவர்களே விரோதி. ரொம்பச் சுலபமான சாக்கு. கையும், காலும் இல்லாத குற்றச்சாட்டு. ஆகவே அதுவல்ல பிரச்சினை. முன்பு ஆயுத தாரிகளாக அங்கேயிருந்து பெருவாரியானவர்கள் வந்து சேர்ந் திருக்கிறார்கள். முன்பு தஞ்சையிலே என்ன நடந்தது, திருச்சி யிலே என்ன நடந்தது, சென்னை மாநகரத்திலே என்ன நடந்தது. பல இடங்களிலே என்ன நடந்தது ? அங்கேயிருந்து இராணுவ உடையோடு, கையிலே ரைபிளைப் பிடித்துக் கொண்டு வந்து தமிழகத்திலே சுற்றுவதற்கு எந்தச் சட்டமும் இடம் கொடுக்க வில்லை. அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. தமிழகத்திலே அந்த விஷ வித்துக்களை ஊன்றுவதற்கு யார் முயற்சித்தாலும் அதை அனுமதிக்கக்கூடாது. தமிழ் நாட்டில் ஒரு சொட்டு ரத்தம் சிந்துவதைக் கூட நாம் ஒத்துக் கொள்ளவில்லை. எந்த தேசிய இன மக்களின் ரத்தம் சிந்துவதையும் நாம் ஒத்துக்கொள்ள வில்லை. இங்கே சிந்துவதற்கு நம்மிடம் ரத்தமில்லை. நமக்கு உடம்பில் மேலும் நல்ல ரத்தம் சேர்க்கப்பட வேண்டும். ஆகவே அதைச் சொல்கிறோம், ஆகவே அந்த அகதிகளைப் பொறுத்த வரையில் நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்களும், அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும் சிந்திக்க வேண்டும். அவர்களின் இந்தப் போக்கு சரியல்ல. இது ஒத்து வராது,

அடுத்து மலிவு விலையில் மது உற்பத்தி செய்வது ரொம்ப பாவ காரியமான விஷயம். இதனால் நரகத்தில்தான் போய் விழுவார்கள்போல் இருக்கிறது. இந்த அரசு அதை எப்படிச் செய்தார்கள் என்று கேட்டார்கள். அதற்கு கான்ஸ்டிடியூஷன் டைரக்டிவ் பிரின்சிபல்சைக்கூட மதிப்புமிக்க திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். நான் கேட்கிறேன், சுய ராஜ்ஜியம் வந்ததற்குப் பிறகு இன்றையவரைக் கும் எந்த மாநிலத்திலாவது பூரண மது விலக்கை அமல்படுத்தி இருக்கிறார்களா ? பூரண மதுவிலக்கு எங்கள் லட்சியம் என்று நமது மதிப்பிற்குரிய இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். அந்த லட்சியம் நல்லதுதான். ஆனால் அவர்களுடைய அரசாட்சி நடக்கிற மாநிலங்கள் முழுவதிலும் அதில் அலட்சியமா? இங்கே லட்சியம், அங்கே அலட்சியம் என்றால் எப்படிச் சரியாகும். அதற்கு அவரைக் குற்றம் சொல்ல வில்லை. It is a contradiction. தீர்க்க முடியாத ஒரு முரண்

1990 மார்ச் 24] [திரு. கே. ரமணி]

பாட்டை வளர்த்துவரும்போது, எந்தக் கட்டத்திலும் தீர்வு காண சிறந்த தந்திரத்தை உபயோகிக்க வேண்டும் என்பதுதான், அரசியலிலே இருக்கும்படியான சிறந்த அறிவும் செயல்பாட்டுத் தன்மையும் இல்லை என்றால் விஷயம் நடக்காது. கரணம் தப்பினால் மரணம் என்று கழைக் கூத்தாடிகள் சொல்கிறார்கள். அதுமாதிரி ஏற்பட்டது. ஆகவே பூரண மதுவிலக்கை இந்த அரசு அல்ல, எந்த அரசும் செய்ய முடியாது. அதனாலேதான் எங்களை பொறுத்தவரையிலே மதுவிலக்கு மதுவிலக்கு என்று 'தம்' பிடித்துக்கொண்டு சண்டைபோடுவதற்கு நாங்கள் போகவில்லை. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நீங்கள் 'மிதக் குடி' யைப் பிரச்சாரம் பண்ணலாம். நாங்களும் கூட வரத்தயார். காங்கிரஸ் அன்பர்கள், தலைவர்கள் உட்பட நாம் அனைவரும் அதிகம் குடிக்காதே என்று பிரச்சாரம் செய்ய வேண்டும். இஷ்டம் போல் ஒரு சாலையிலே உட்கார்ந்து பாட்டில் பாட்டிலாக குடிப்பதல்ல மதுபானம். அரசாங்கம் உற்பத்தி செய்து காபி கடை மாதிரியாக அல்லது ஒரு கிளப் மாதிரியாக வைத்து அங்கே ஈ, கொசு மொய்க்காமல் சுகாதாரத்தோடு நல்ல முறையில் சர்வர்கள் வைத்து ஒரு டம்ளர், 2 டம்ளர் என்று விதி வைத்துக் கொடுக்கவேண்டும். குடிப்பவர்கள் அப்படி சாப்பிட்டுவிட்டுப் போகட்டும். ஆனால் அது வெற்றி பெற முடியுமென்று நான் சொல்லவில்லை. சோம பானம் அருந்தியவர்களைப் பற்றி கிரந்தங்களில் படிக்கலாம் என்று சொன்னால் இந்த குடிசையிலே இருக்கிற மக்களுக்கு டிசிப்பிளின் இல்லை என்று சொல்லி, இவனைத் தீர்த்துக் கட்டவேண்டுமென்று சொன்னால், 'இட் இஸ் இம்பாசிபிள்'. அதற்காகக் குடிகாரர்களாக மாறி தெருவிலே உருளவேண்டும் என்று நான் என்றைக்கும் விரும்பவில்லை. ''டிரங்கன்னஸ்'' வீ நெவர் அக்சப்ட். அதுதான் பிரச்சினை. இதைப் பற்றி கொஞ்சம் சிந்திக்கவேண்டும். மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி அன்பர்களே, சிலபேர் இங்கே எடுத்துச் சொன்னது ரொம்ப கஷ்டத்தோடுதான். கட்சிக்குள்ளே வேறு விதமான கட்டுப்பாடு இருப்பது உண்மை. அதையும் மீறி இந்த அரசு செய்தது சரியென்று அவர்களையே சொல்ல வைத்ததை நாங்கள் வரவேற்கிறோம். ஒரு யதார்த்தத்தை நீங்கள் என்ன தான் கூடையைப் போட்டு மூடி வைத்தாலும் அது பொத்துக் கொண்டு வெளியே வரத்தான் செய்யும். வேறு வழியில்லை.

12—45 மணி

அடுத்து நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றிப் பல்வேறு விதமான நல்ல ஆலோசனைகள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது. நல்ல அம்சங்கள் பல இருக்கின்றன. ஆனால் சில அம்சங்கள் கவனிக்கப்படாமல் விடுபட்டு இருக்கிறது. கவனிக்கப்படாமல் என்றால் அது உங்களுக்குத் தெரியாதது அல்ல. நான் முந்தாநாள் பேசும்போது மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் சொன்னார். 'ஞாபகத்தில் வைத்து இருக்கிறோம்' என்று பதில் சொன்னார். ரொம்ப சந்தோஷம்.

[திரு. கே. ரமணி] [1990 மார்ச் 24

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், கோவை மாவட்டத்திலே அவினாசி தாலுகா, பல்லடம் தாலுகா, கோயம்புத்தூர் தாலுகாவின் வட பகுதி முழுவதும், மேட்டுப் பாளையம் தாலுகா ஆகிய இந்த தாலுக்காக்களிலே எந்த ஜென்மத்திலும் நீங்கள் நதிநீர்ப் பாசனத் திட்டம் கொண்டுவர முடியாது. ஏனென்றால் அங்கு நதி இல்லை. அது தான் பிரச்சினை. வற்றாத ஜீவ நதி என்று நொய்யலைச் சொல்லு வோம். ஆனால் 2 அல்லது 3 மாதம் தவிர அது வற்றியே தான் கிடக்கும், அப்புறம் அமராவதி இருக்கிறதே என்று நீங்கள் சொன்னால், அதில் எத்தனை தடவை கையைவிட்டு நீரை எடுத்துக் கொள்ள முடியும்? அங்கே அந்த மக்கள் கேட்பது எல்லாம்—மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்குக் கூட அந்த அனுபவம் இருக்கும். பல்லடம், அவினாசி தாலுக்காக்கள், கோவை தாலுகாவில் வட பகுதி, மேட்டுப்பாளையம் தாலுகா ஆகிய இடங்களில் இருக்கும் பெரும் பகுதி மக்கள் கேட்பது—அந்த குந்தா 'டெய்ல் ரேஸ் வாட்டர்' வேண்டுமென்பதே. கழிவு நீர் அல்ல? அது வேறு. பில்லூர் டாமிலிருந்து வரக்கூடிய தண்ணீரைத் தான், முன்பு மத்திய மந்திரி கே. எல். ராவ் அவர்களிடத்திலே நானும் எங்களுடைய தலைவராக இருக்கக்கூடிய ஆனந்தன் நம்பியாரும் 1967-ல் நாங்கள் பாராளுமன்றத்திற்குச் சென்ற போது அவரிடத்திலே, கலந்து பேசி, அந்தத் திட்டத்திலே நமக்கு நஞ்சைப் பாசனம் கிடைக்காது; அங்கே ஒரு மாதம் அல்லது $1\frac{1}{2}$ மாதம் அல்லது மேக்சிமம் 2 மாதத்திற்கு தண்ணீர் கிடைக்கும். Water conservation and a best kind of Management மூலம் என்பதைத் தான் கே. எல். ராவ் சொன்னார். அதை பில்லூர் டாமில் செய்தால் We can get with sizable flow of water: we can divert water to that area. அவ்வளவு தான் அதற்குமேலே முடியாது.

அன்றிருந்த அரசு, ஒரு எக்சிகியூடிவ் என்ஜினியரை காரமடையிலே போட்டு, அங்கிருந்து அவிநாசி தாலுகாவுக்கும், பல்லடம் தாலுகாவுக்கும் இரண்டு வாய்க்கால் வெட்டுவதற்கும், அதனுடைய இன்வெஸ்டிகேஷன் ஆரம்பித்து $1\frac{1}{2}$ வருட காலம் நடந்தது. அப்புறம் அது என்ன ஆனது என்று எனக்குத் தெரியவில்லை. அதைக் கவனிக்க வேண்டி இருக்கிறது. கோவை மாவட்டத்திலே இருக்கிற பெரும் நிலச் சுவான்தார்கள் யாராவது அதற்குள் புகுந்து தகராறு பண்ணி தடுத்துவிட்டார்களா என்று எனக்கு இப்போது சொல்லமுடியவில்லை. என்னிடம் எவிடன்ஸ் கிடையாது. ஆனால் இப்போது நான் கேட்டுக்கொள்கிறேன். முன்பு இருந்த அரசாங்கத்திடம் நான் 10 வருடமாகக் கேட்டேன். அவர்கள் ஒரு மாநாடு போட்டு, அதற்கு பணம் அதிகம் செலவாகும், ஒரு இடத்திலே லிஃப்ட் பண்ணி தண்ணீரை மேலே தூக்கிக் கொண்டுபோக வேண்டி இருக்கும் என்று சொன்னார்கள். 100 கோடி அல்லது 150 கோடி

1990 மார்ச் 24] [திரு. கே. ரமணி]

செலவாக வேண்டி வந்தால்கூட அந்த 3 அல்லது 4 தாலுக்காக்களினுடைய மக்களின் வாழ்வைக் கருத்தில் கொண்டு, அந்தத் திட்டத்தை நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் எல்லோரும் சேர்ந்து கலந்து பேசி இதற்கு என்ன செய்யலாம் என்று ஒரு முடிவுக்கும் வரவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். ஆனால் இதற்கு ஒரு மாற்றுத் திட்டம் சொல்வது உண்டு. அது தான் பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டம். அதிலே எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்குத் தெரியும். நன்றாகவே தெரியும். ஈ.எம்.எஸ். கேரள முதல்வராக இருந்த காலத்தில், 1967-ல் நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தத் தண்ணீர் எப்படியாவது இங்கே கொடுத்தால் பரவாயில்லை என்று சொன்னேன். 100 மெகாவாட் கரண்ட் முழுவதும் நமக்குக் கிடைக்கும். ஆனால் தண்ணீரை நமக்கு அவர்கள் நேரடியாக, அதனுடைய ஃப்ளோவை இங்கே திருப்பிவிட மாட்டார்கள். அதை இங்கே திருப்பிவிட்டால், கொச்சிக்குப் பக்கத்திலே களமச்சேரி பகுதியில் இருக்கிற பிரம்மாண்டமான இண்டஸ்ட்ரியல் காம்பிளக்ஸுக்கு இந்த 'வாட்டர் ஃப்ளோ' போகவில்லை என்று சொன்னால், வெயில் காலம் வரவர அங்கு கடலிலிருந்து உப்புத் தண்ணீர் வந்து விடும். அவர்களுடைய இண்டஸ்ட்ரீஸ் முழுவதும் ஸ்டாப் ஆகிவிடும். இன்றைக்கு தமிழ்நாட்டில் 7 இலட்சம் மக்களுக்கு கொடுக்க வேண்டிய சிறுவாணி குடிதண்ணீரை- அன்றைக்கு அவர் முதலமைச்சராக இருந்த போது, அவரை நாங்கள் கோவைக்குக் கொண்டு வந்த போது முனிசிபாலிட்டி வரவேற்பு கொடுத்தது. நாங்கள் கேட்டது எங்களுக்குத் தண்ணீர் வேண்டும் என்பதற்காகத் தான். ஆனால் அவர், 'எவ்வளவு இலட்சம் பேருக்குத் தண்ணீர் வேண்டும்' என்று கேட்டார். அப்போது பூபதி சேர்மனாக இருந்த காலம். நாங்கள் சொன்னோம், 5 இலட்சம் பேருக்கு தண்ணீர் கொடுங்கள் என்று சொன்னோம் அப்போது 3 இலட்சம் பேர் தான் கோவையிலே இருந்தார்கள். அவர் சிரித்துக்கொண்டே சொன்னார். வளருகின்ற கோவை, மாநகராக, பெரிய தொழில் நகரமாக ஆகப்போகிறது என்று தீர்க்க தரிசனத்தோடு எங்களிடம் சொன்னார். 10 வருடங்களுக்குப் பிறகு என்ன ஜனத் தொகை இருக்கும் என்பதை உத்தேசித்து எவ்வளவு தண்ணீர் தேவை என்பதைப் பார்த்துக் கேளுங்களேன் என்று சொன்னார். அப்போதுதான் எங்களுக்குத் தெரிந்தது. நாம் முட்டாள்தனம் பண்ணிவிட்டோம் போலிருக்கிறதே என்று. இன்றைக்கு நாம் அந்தத் தண்ணீரைத் தான் உபயோகப்படுத்துகிறோம். தமிழ்நாடு முழுவதும் வறட்சி வந்த போதும் கூட 1 மணி நேரம், $1\frac{1}{2}$ மணி நேரம், அதாவது கோவை மாநகர மக்களுக்கும், சுற்று வட்டாரத்தில் பல கிராமங்களுக்கும் தண்ணீர் கிடைத்தது அந்தத் தண்ணீரால் தான்.

12–50 மணி

அதே மாதிரி வேறுபல நீர்த்தேக்கத் திட்டங்களும் இந்த பட்ஜெட்டில் இருக்கின்றன. அதிலே பாண்டியாறு-புன்னம் புழா....(மணியடிக்கப்பெற்றது) நான் உபயோகமில்லாத ஒரு விஷயத்திற்குள்ளும் போகவில்லை. ஆகவே, பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் என்பது பற்றி அவர்களிடையே கலந்து பேசி அவர்கள் எவ்வளவு தண்ணீர் தரத் தயாரோ அதை வாங்கிக் கொள்ளலாம். ஆனால், 100 மெகாவாட் கரண்டும் இல்லை. தண்ணீரும் இல்லை என்று கடந்த 25 வருஷ காலமாக இருக்கிறது. அதிலே எந்த இலாபமும் இல்லை. ஆகவே, 100 மெகாவாட் கரன்ட் கிடைத்தால் ரொம்ப நல்லது. அந்த மின் நிலையம் கட்ட வேண்டும். அவர்களுடைய இடத்திலே கேரள எல்லைக்குள் கட்ட வேண்டும், நாம் பணம் கொடுக்கவேண்டும்; அணை நம்முடைய பகுதியிலே இருக்கும். மரப் பாலத்திற்குப் பக்கத்திலே வேலை துவக்கப்பட்டது. ஆனால் கைவிடப்பட்டது. நிறுத்தி வைக்கப்பட்டது அல்லது சண்டையினாலே நிறுத்தி வைக்கப் பட்டது. யார் சண்டையினாலே என்று இங்கே சொல்ல விரும்பவில்லை. அதனாலே இங்கே ஒரு சண்டை வேண்டாம். பின்னால், நேரிடையாக அதை உங்களிடம் சொல்கிறேன்.

அதே மாதிரி தொழிலாளர்கள் நலன் பற்றி எங்களுடைய தோழர்கள்—உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பேசும்பொழுது, அரசு தனது தொழிலாளர் கொள்கையைத் தெளிவாக வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் இதைச் சொல்லும் போது இந்த அரசு எந்த ஒரு தனிக் கொள்கையும் வைத்திருக்க வில்லையென்று அர்த்தம் இல்லை. என்ன யதார்த்த நிலை யென்பதை இன்றைக்கு நான் முதல் அமைச்சருடைய முக்கிய மான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன் றைக்கு, தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய முதலாளி மார்கள், அநேகமாக, தொழிலாளர்கள் நலச் சட்டங் கள் அனைத்தையும் அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். அந்த நிலையை நாம் அனுமதிக்க முடியாது. தொழிலாளர் கொள்கைப் பிரச்னை, அது தரம் கெட்டு அது ஒரு கன்டாமி னேஷன் மாதிரி, வியாதி மாதிரி, தொழில்களில் மட்டுமல்ல கூட்டுறவுக்கும் பரவுகிறது; அரசாங்க இலாகாக்களுக்கும் பரவுகிறது. அதில் ஒன்றிரண்டை நான் சொல்கிறேன்.

சபாநாயகர் அவர்களே, நீங்கள் என் நேரத்தைப் பாதுகாக்க வேண்டும். முதலாவது, கான்ட்ராக்ட் ரெகுலேஷன் அன்ட் அபாலிஷன் ஆக்ட்டை அமுலாக்க முடிகிறதா? முடியவில்லை. அரசாங்க இலாகாக்களிலே அமுலாக்கப்பட வேண்டும். கை நெசவாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டங்கள்; 4, 5 மூலச் சட்டங்கள் இருந்தன. அவற்றிலிருந்த நல்ல பகுதிகளை

1990 மார்ச் 24]]திரு. கே. ரமணி]

எடுத்து ஒரு சட்டத்தை இங்கே நாம் உருவாக்கினோம் அதற்கு ஒரு பெரிய போராட்டத்தை நடத்தினோம். அந்தச் சட்டத்திற்குத் தடை உத்திரவு வாங்கி, அதன் இடுப்பை முறித்து படுக்க வைத்திருக்கிறார்கள், அதிலிருக்கிற முதலாளி கள். அதே மாதிரி 480 நாள் நிரந்தரம் ஆக்கும் சட்டத்தினை பிரம்மாண்டமான சட்டம், புரட்சிகரமான சட்டம் என்று அன்றைக்கிருந்த தொழிலாளர் மந்திரி இங்கிருந்து சொன்னார்கள். இப்பொழுது புரட்சியும், சட்ட மும் ஒன்றும் சீர்பட நடத்த முடியவில்லை. முதலாளி கள் சொன்னால்தான் சரி. அதே மாதிரி கிராஜுவிட்டி சட்டம். அதுவும் இன்றைக்கு மண்ணைத் தின்கிறது. 38 வருஷம் அல்லது 40 வருஷம் வேலை செய்து, 58 வயதானவுடனே ஒரு நிமிஷம் கூட வைத்திருக்க மாட்டேன். போ, தொழிற்சாலையை விட்டு வெளியே போ என்று சொல்லி, அனுப்பி விடுகிறார்கள். எங்கள் கம்பெனியிலே பணம் இல்லை என்று சொல்கிறது நிர்வாகம். என்ன வேண்டுமானாலும் பண்ணுங்கள், ஆனால், மில்லுக்குள் இருக்கக் கூடாது; இருந்தால், போலீசை விட்டு வெளி யேற்றுவேன் என்கிறார்கள். அந்தப் பணம் இங்கேயே இருக்க ஒரு கடுதாசி எழுதிக் கொடுத்து விடு. பங்கு மூலதனத்தோடு நாங்கள் சேர்த்து விடுகிறோம் என்று சொல்கிறார்கள். கிராஜுவிட்டி சட்டம் மத்திய அரசு சட்டம்; அதையே நிராகரிக்கிறார்கள். அதே மாதிரி சம்பளப் பட்டுவாடா சட்டம் இப்பொழுது இங்கே நம்முடைய தோழர் கோவிந்தராஜன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால். வடலூரில் இருக்கும்படியான இன்சுலேட்டர்ஸ்ஸில் 500 பேர்களுக்கு லே ஆப் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் ? லே ஆப் கொடுத் ததற்கு பைனான்ஷியல்கிரைசிஸ் என்கிறார்கள். செய்யவே கூடாது தொழில் தகராறு சட்டம் விதி 2 (கே) (கே) கே) படித்துப் பார்த்தால் நமக்குத் தெரியும். பினான்ஷியல் கிரைசிஸ் என்று லே ஆப் செய்யக் கூடாது. அதே மாதிரி, பினான்ஷியல் டிபிகல்டீஸ், அதற்கு அப்ளை ஆகாது. அப்படி செய்யவே கூடாது. அதே மாதிரி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது. பினான்ஷியல் டிபிகல்டீஸ், அல்லது ஸ்ட்ரின்ஜன்ஸி இதற்கு அப்ளை ஆகாது. ஆனால், அவர்கள் செய்கிறார்கள். சம்பளப் பட்டுவாடா சட்டப்படி இன்றைக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தை இன்றைக்குக் கொடுக்காமல், நாளைக்குக் கொடுத்தால், கோர்ட்டிலே கேஸ் போட்டால் பைன் பண்ணு வார்கள். அந்தக் கம்பெனியில் அந்தச் சம்பளத்தை 3 மாத மாகக் கொடுக்காமல் தள்ளி, தள்ளி போட்டுக் கொண்டே யிருக்கிறார்கள். அப்படி சம்பளப் பட்டுவாடாச் சட்டம், உடைக்கப்படுகிறது. தொழிற்சாலைச் சட்டம் பல இடங்களில் அமுலாக்கப்படவில்லை. எல்லா அதிகாரிகளும் தப்பு செய்கி றார்கள் என்பது அர்த்தம் இல்லை. பல அதிகாரிகள்

கவலைப்படவில்லை. ஏனென்றால், ஒரு பரவலான முறையில் எந்தச் சட்டத்தை வேண்டுமானாலும் மீறலாம்; மீறி, மீறி அதுவே ஒரு சட்டம் ஆகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையிருக்கிறது. அதே மாதிரி ஈ.எஸ்.ஐ. சட்டம். அதிலே என்ன சங்கடங்கள் ஏற்படுகின்றன; தொழிலாளர்கள் தாங்களே பணம் கொடுத்து, மாநில அரசும் மத்திய அரசும் தங்கள் பணத்தைப் போட்டு, நடத்தக்கூடிய ஆஸ்பத்திரி, அவர்கள் தர்மத்திற்குப் போய் அங்கு இருக்கவில்லை. அவர்களுக்கே போதிய சௌகரியம் கொடுக்காத அப்படிப்பட்ட நிலையில் ஈ.எஸ்.ஐ. சட்டங்கள் இருக்கின்றன.

12-55 மணி

இதை எல்லாம் நான் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற முறையிலே சொல்லியிருக்கிறேன். அந்த வகையிலேதான் இன்றைக்குத் தொழிலாளர் நலச் சட்டங்கள் இருக்கின்றன. அவற்றிலே சிலவற்றைச் சுட்டிக் காட்டினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே ஒரு அடிப்படை மாற்றம் செய்ய வேண்டும். அதிகாரிகளைக் கூப்பிட்டுச் செய்யச் சொல்லுங்கள். அது மட்டுமல்ல. இதிலே ஒரு கொள்கை மாற்றம் தேவை. இந்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்தி, துர்பனப்படுத்தி, சட்டத்திற்கு விரோதமான ஒப்பந்தங்களில் அதிகாரிகள் கையெழுத்துப் போடக் கூடாது. அப்படிப்பட்ட அட்வைஸ் பண்ணக் கூடாது; ஆலோசனை சொல்லக் கூடாது. சட்டத்தை மீறுகிற ஆலோசனையைத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பது சரியல்ல. இதை தொழிலாளர் நல இலாகா கண்காணிக்க வேண்டியிருக்கிறது.

அதற்குப் பின்னாலே நகர்ப்புற அபிவிருத்திப் பிரச்சினை இருக்கிறது. கோவை மாநகரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். கோவை மாநகரில் காந்திபுரம், வடகோவை இரண்டையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்த வட கோவையில் ஒரு இரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டும் என்பதற்கு தமிழக அரசும் மத்திய அரசும் ஒப்புக் கொண்டு, தீர்மானித்தும் கூட மத்திய அரசுக்குச் சொந்தமான 'பாரஸ்ட் காலேஜ்' இருக்கக் கூடிய அந்தப் பகுதியில் 10, 15 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது ரோடு போடுவதற்கு. அந்த ரோடு நீளமாகப் போய் திரும்ப வேண்டியிருப்பதால் அந்த அளவுக்கு நிலம் தேவைப்படுகிறது. அதைத் தெரிவித்த ஒரு சில நாட்களுக்குள்ளாகவே அதற்கு மாற்று நிலம் கொடுக்க நமது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராமன் அவர்கள் 8, 10 ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொடுக்கிறேன் என்று சொல்லி ஒத்துக் கொண்டார்கள். ஆனால் மேலே இருக்கிற அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சென்னையிலே கிண்டிக்கு முன்னால் ஒரு மாற்று இடம் கொடுக்க வேண்டும், அங்கே அவர்களுக்கு குளு குளு பங்களா கட்ட வேண்டு

மென்று சொல்கிறார்கள். எப்படி இருக்கிறது நிலைமை? 'கஸ்ட் ஹவுஸ்' கட்ட வேண்டுமாம். ஆக, கோவை மக்களுக்கு அந்த ரோடு அல்ல பிரச்சினை. அதனால் இதிலே என்ன நடவடிக்கை எடுத்தும் இதை அனுமதிக்கக்கூடாது. அவர்களுக்குக் கொடுப்பதற்கான நிலத்தை கலெக்டர் அவர்களே கொடுப்பதாய் சொல்லிவிட்டார்கள். அந்த வகையிலே அதைக் கொடுக்க வேண்டும். மேம்பாலத்தை எப்படியும் கட்ட வேண்டும்.

காந்திபுரத்திலே வேறு பிரச்சினை ஒன்றும் இல்லை. அந்த டவுன் பஸ் ஸ்டாண்டுக்கும் சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டுக்கும் இடையில் ஒரு சுரங்கப் பாதை அமைக்க வேண்டும். அவ்வளவு ஜன நெருக்கம் அங்கே இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அங்கே வந்தால் கூட அவருக்கு வழி உருவாக்கி, போக முடியாது. இதற்கு முன்னால் இருந்த அரசு அதற்கு ஒப்புதல் கொடுத்தது. கோவை மாநகராட்சி உருவாக்கப்பட்ட 1983-லேயிருந்து சொல்லியும், அவர்கள் மாநகராட்சியில் பணம் இல்லை என்று சொல்லி, அமெரிக்க உதவி திட்டத்திற்கு அதை அனுப்பினார்கள். அந்தத் திட்டம் அதோடு சரி. அமெரிக்க உதவியிலிருந்து கடன் கொடுப்பவர்கள், அவர்களுடைய ஆட்கள் சிலர் வந்து பார்த்து விட்டு, இது வயபிள் அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பதிலை நாம் ஒத்துக் கொள்ள முடியாது. எந்த வகையிலாவது அதற்கு நிதியைத் திரட்டி, நிதி வரவைக் கண்டுபிடித்து, அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி, வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. கிராமப் புறங்களில் ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டும் திட்டத்திலே சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அரசே கட்டிக் கொடுப்பது மட்டுமல்ல; வேறு சில அம்சங்களும் இருக்கின்றன. கோடிக் கணக்கான மக்கள், கிட்டத்தட்ட 4.5 கோடி மக்கள் இருக்கிற தமிழ்நாட்டில் பூரா பேருக்கும் அரசே வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது சாத்தியமல்ல. 'சோசலிஸ்ட்' அரசாங்கம் வந்தாலும் கூட 15 ஆண்டு, 20 ஆண்டுகளில் கூடச்செய்ய முடியாது. அதனால் ஏழை எளிய மக்கள் தாங்களே வீடு கட்டிக் கொள்ளக் கூடிய வகையில் உதவ ஓடு, செங்கல் போன்ற சாதனங்களுக்கு எல்லாம் விலையைக் குறைத்துக் கிடைக்க வரிச் சலுகைக் கொடுத்திருப்பது நல்ல அம்சம் என்பதை ஒத்துக் கொள்கிறோம்.

ஏற்கெனவே குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டும் திட்டத்தை இந்த அரசுதான் ஆரம்பித்தது. ஆனால் கடந்த 10 ஆண்டுக்காலத்திலே அப்போது ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் சீரழிந்துவிட்டது. இப்போது அந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகள் ஒவ்வொன்றுக்கும் பக்கத்தில் இரண்டு, மூன்று குடிசைகள் இருக்கின்றன. ஆகவே, குடிசை மாற்று

வாரியத்திற்குள்ளேயே ஒரு குடிசை மாற்று வாரியம் தேவை இருக்கிறது. அதுபற்றி யோசிக்க வேண்டும்; இப்படிப்பட்ட நிலை கூடாது என்று நாங்கள் சொல்லுகிறோம்.

அதைவிடக் கொடுமை, இந்த மன்றத்திலேயே நான் 10, 12 பத்திரங்களைக் கொண்டு வந்து காட்டினேன். முத்திரைத் தாளை 5 ரூபாய்க்கு வாங்கி, இராமன் மகன் குப்பன் என்று எழுதிக் கொடுத்து விட்டு, நீ 5 வருஷத்திற்கு அல்லது 10 வருஷத் திற்கு இங்கே இரு என்று 'பர்ஸ்ட் அலாட்டி' எழுதிக் கொடுத்து விடுவார். அதற்கு ஆயிரக்கணக்கில் பணம் விலை. அதற்குப் பின்னாலே அவரை வெளியேற்றுவதற்கு 'ரவுடிக் கூட்டம்'' ஒன்றை வைத்திருக்கிறார்கள். மந்திரிமார் களுடைய பெயரை வைத்துக் கொண்டு, அந்தக் கூட்டம் இருக் கிறது. அந்தக் கொடுமையை நான் அரசாங்கத்துக்குச் சொன் னேன். இதைச் சொன்னதற்குத்தான் டெலிபோனில் என் னுடைய வீட்டுக்கு 'த்ரெட்' வந்தது. அன்றைக்கே இதை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். அதை அனுமதிக்கக்கூடாது; அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடிசை மாற்று வாரியம் ஏழை எளிய மக்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்யும்போது அவர்களுடைய போட்டோவையும் எடுத்து வைத்து, இலாகா கொடுத்திருக்கிறது. அவர்கள்தான் அதிலே குடியிருக்க வேண்டும். அவர்களுக்கு வேண்டாம் என் றால் அதை அரசுக்கு சப்மிட் பண்ண வேண்டும். வரிசையில் இருக்கிற அடுத்தவருக்கு அதைக் கொடுக்க வேண்டும். அது அல்லாமல் பலவிதமான வியாபாரம் நடைபெறுவதை, புது குடிசைகள் வருவதை அனுமதிக்கக்கூடாது. அனுமதித்தால் சுகாதாரக் கேடும் வந்துவிடும்.

இதேமாதிரி, இன்றைக்கு அரிசி விலையேற்றத்தைப் பொறுத்தவரையில் எங்களுக்கு இதிலே வித்தியாசம் இருக்கிறது. இது ஒரு பெரிய சுமை. மக்களுக்கு பல சௌகரியங்கள் செய் யப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் ஒரு பெரிய சுமையைத் தூக்கி வைத்த மாதிரி மக்களுக்கு அரிசி விலை இருக்கிறது. ஒரே சமயத்தில் ஒரு கிலோ அரிசியில் ஒரு ரூபாய் அதிகம் என்பது பெரிய சுமைதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து, குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சகலத்திலும் விலையேற்றம் வந்திருக்கிறது. இரயில் கட்டண உயர்வு வந்துள்ளது. பெட்ரோலில் வந்திருக்கிறது. டீசலில் வந்திருக்கிறது. அது மத்திய அரசால் வந்தது. நாங்கள் அதை ஒத்துக் கொள்ளவில்லை. எதிர்க்கிறோம். பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன; ஆனால் சொல்ல மாட்டார்கள், இந்த அரசு களை. எதிர்ப்பவர்கள்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல் நேரம் அவையின் அனுமதியோடு ஒன்றிரண்டு மணித்துளிகள் மட்டும் நீட்டிக்கப்படுகிறது.

13.00 மணி

திரு. கே. ரமணி: கிராமத்திலே பத்தாயிரம் ரூபாய் கடன் பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு அத்தனையையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அந்த மத்திய சர்க்கார் சொல்கிறது. அதை நமது காங்கிரஸ் கட்சித் தலைவர்களோ, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர்களோ இங்கே சொல்ல மாட்டேன் என்கிறார்கள். 50 பர்செண்ட் வருமானம் கிராமத்திலேயே நாங்கள் முதலீடு செய்வோம் அல்லது செலவழிப்போம் என்று இன்றைக்கு அந்த மத்திய அரசு ஒரு கொள்கையைச் சொல்கிறது. அதைச் சொல்கிறார் களா? சொல்லவில்லை. இப்படி, இந்த நல்லது முழுவதையும் விழுங்கி விட்டு, கெட்டதை மட்டும் எடுத்துச் சொன்னால் அது எப்படிச் சரியாகும்? அதனால்தான் அது ஒரு டிஸ்டார்ட் உருவத்திலே இங்கே வைக்கப்படுகிறது.

நாம் என்ன சொல்கிறோம் என்றால், அந்த மாதிரி இருக்கக்கூடிய நல்ல அம்சங்களை நாட்டிலே வளர்க்க வேண்டு மென்பதற்கு இடையிலே இப்படிப்பட்ட ஒரு தன்மை வந்தால் இதையொரு கேடயமாகப் பயன்படுத்துவார்கள். அரிசி விலை ஏறி விட்டது, அரிசி விலை ஏறி விட்டது, அரிசி விலை ஏறி விட்டது என்று சொல்லுவார்கள். நான், அந்தப் பேச்சுக்காக மட்டும் சொல்லவில்லை, இது ஒரு உண்மையும்கூட. அதனால் தான் சொல்கிறேன். அரிசி விலையைக் குறைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த நிலைமைக்கு மாற்றம் காண்பதோடு சேர்த்து, ஒட்டு மொத்தமாக பிரஜா உரிமைகளைப் பாது காப்பதற்குண்டான ஒரு தீவிர முயற்சியை நமது அரசாங்கம்—குறிப்பாக நமது முதலமைச்சரவர்கள் எடுக்கத் தலையிட வேண்டும்.

போலீஸ் நடவடிக்கைகளைப் பற்றி பல அம்சங்கள் இங்கே வந்திருக்கின்றன. அது அவ்வளவையும் சொல்ல எனக்கு நேரமில்லை. இப்பொழுது நடந்த போராட்டம் இருக்கிறதே, இரயில் நிலையத்திற்குப் பெயர் வைக்கக்கூடிய காங்கிரஸ் போராட்டம், எங்களைப் பொறுத்தவரையில் அது அவசிய மற்ற போராட்டம் என்று சொல்லி நாங்கள் பத்திரிகைகளிலே எங்களுடைய அறிக்கையைக் கொடுத்திருக்கிறோம். காமராஜ ருக்கு நாம் எவ்வளவு பெரிய இடங்களில் பெயர் சூட்டியுள் ளோம். பல்வேறு இடங்களிலே அவருடைய பெயர் மேலும் மேலும் சூட்டப்படக்கூடிய சந்தர்ப்பமும் இருக்கிறது. இப்

பொழுதும் சூட்டியிருக்கிறது, அங்கேயிருக்கின்ற விமான தளத்திற்குச் சூட்டிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் இது தேவையற்ற போராட்டம் என்று நாங்கள் சொல்கிறோம்.

அப்படிப் போராடினாலும், கைது செய்யப்பட்டவர்களை உடனுக்குடன் விடுதலை செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஒரு ஜனநாயகக் கோரிக்கையை முன் வைத்துப் போராடுகிறார்கள். உள்ளத்திலே எண்ணங்கள் பல இருக்கலாம். அந்தப் போராட்ட திசை வழி இருக்கிறதே அதுகூட வேறுபட்டு இருக்கலாம். ஆனால், ஜனநாயக உரிமையை அதற்காக மறுத்து மற்றவர்களைப் பாதிக்கின்ற நிலைக்குப் போய்விடக் கூடாது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அவருக்கு என்ன ஏற்பட்டது? அவர் பாராளுமன்றத்திற்குள்ளே போய், தன்னுடைய சட்டையைக் கழற்றி, அங்கே விட்னெஸ் ஆக, சாட்சியாகச் சொல்கிறார். என்னை அடித்திருக்கிறார்கள், நாசப்படுத்தியிருக்கிறார்கள் என்று. இதையும் நம்முடைய முதலமைச்சர் கவனிக்க வேண்டும். என்ன நடந்தது? அது உண்மையா? நடந்திருக்கிறதா? நம் சட்டத்திற்கு முன்னால் எல்லா பிரஜைகளும் சமம்' ஆனால், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கதி என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அது நாடாளுமன்றத்திலே உரிமைக் குழுவுக்குச் சென்றிருக்கிற காரணத்தால் அதைப் பற்றிய விவரங்களை நான் இங்கே சொல்ல இயலாதவனாக இருக்கிறேன்.

திரு. கே. ரமணி: எங்களைப் பொறுத்தவரையிலும், இந்த அடக்குமுறை பற்றியெல்லாம் சொல்லக்கூடியவர்கள்—நான் ஒன்று கேட்கிறேன். நான் சொன்னால் நீங்கள் பயப்படாமல் இருக்க வேண்டும். மாதவமேனன், காங்கிரஸ் மந்திரியாக இருக்கும்பொழுது, இதே தமிழ்நாட்டிலே, ஆரம்ப காலத்தில், 1937-க்குப் பிறகு அரசாட்சி வந்தபோது, 1939-லேயிருந்து 1942 ஆம் ஆண்டு வரையில் தலைமறைவாக இருந்த எங்களைப் பிடித்து ஜெயிலுக்குள்ளே போட்டு, இழைக்கப்பட்ட கொடுமை ஜெயிலிலே படுப்பதற்காக ஒரு திண்ணை இருக்கும். அந்தக் கொட்டறைக்குள்ளே, அந்த செல்லுக்குள்ளே அந்தத் திண்ணை மீது உடம்பிலே இருக்கிற சட்டையைக் கழற்றி வைத்து, குப்புறப் படுக்க வைத்து' ஜெர்மன் மார்க் போடுகிறேன் என்று மூன்று நாட்களுக்கு முன்னே கசை அடி கொடுப்பதற்குள்ள பிரம்புத் தடியை தண்ணீரில் ஊறவைத்து (Cane-testing) நடத்துவார்கள் பெரிய பிரம்பு' 4, 5 அடி நீளம் இருக்கின்ற பிரம்பு. தண்ணீரிலே போட்டு அதை வளையும்படி பண்ணி அதை டெஸ்ட் டத்துவார்கள். பிறகு, சூப்பரின்டெண்டு எடுத்து

உடைத்துப் பார்ப்பார். அது அப்படியே வளைந்து கீழே முட்ட வேண்டும். அதுதான் டெஸ்ட். நான் பார்த்திருக்கிறேன் ஒரு வருஷம் சிறைச்சாலையிலே நான் அனுபவித்திருக்கிறேன். என்னை அந்தத் திண்ணையிலே படுக்க வைத்து, உனக்கு ஜெர்மன் மார்க் போடுகிறேன் என்று அடித்த அடி, அங்கே அதற்கு என்ன சின்னத்தை உண்டாக்கப் போகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்கவே துன்பமாக இருக்கிறதே !

திரு. கே. ரமணி: அதைப்பற்றிக் கட்டுரை எழுதச் சொன்னால், எழுத முடியாது என்று சொன்னேன், அதற்குக் காரணம், இந்தக் கட்டுரையைக் கண்டு ஆட்கள் பயந்து கட்சிக்கு வராமல் போய்விட்டால் என்ன செய்வது? எங்கள் காலஞ்சென்ற வி.பி.சி. அவர்களுடைய நினைவு மலராக வெளியிட்ட புத்தகத்திலே ரொம்ப நிர்பந்தத்தினாலே ஒரு கட்டுரையை நான் எழுதி இருக்கிறேன். அந்த ஜெயிலிலேஎங்களுக்குக்காங்கிரஸ் ஆட்சியிலே கிடைத்திருக்கும்படியான அற்புதமான சன்மானத்தை, 9 விஷயங்களை நான் அதிலே எழுதியிருக்கிறேன். படித்துப் பாருங்கள். அதனால் இப்பொழுது இந்த அடக்குமுறை தேவையா என்றால் இல்லை.

சமூகக் காடுகள் வளர்க்கக்கூடிய அவர்கள் அநேகமாக இளைஞர்கள். என்னிடத்திலே பலபேர் வந்து பேசினார்கள், படித்தவர்கள். அவர்களுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. அவர்கள் ஒரு போராட்டத்திலே இறங்கியிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும். குத்துமதிப்பாக குறிப்பிட்ட ஒரு தொகை பணத்தைக் கொடுத்து அவர்களைக் கொண்டு வேலை வாங்குவது. தயவு செய்து அவர்களைக் கைது செய்து ஜெயிலுக்குள்ளே அடைக்கவேண்டாம். அவர்களை விடுதலை செய்யுங்கள்.

13-05 மணி

எல்லாவற்றிற்கும் மேல், ஊர்வலம் நடத்துவது, ஆர்பாட்டம் செய்வது, தர்ணா நடத்துவது, உண்ணாவிரதம் நடத்துவது இவையெல்லாம் சட்ட விரோதம் என்று இந்த அரசாங்கம் சொல்லவில்லை என்றீர்கள். சொல்லவும் மாட்டார்கள் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், போலீஸ் என்ன செய்கிறது? கோவை, மதுரை, சென்னை ஆகியவை மாநகராட்சிகள் என்று சொல்வதன் மூலம் என்ன செய்கிறார்கள்? தடை, 'ஜெனரல் பேன்; பொதுவான தடையுத்தரவைப்போடுகிறார்கள் இங்கே நடத்தக்கூடாது' பார்டிகுலர்லி' குறிப்பிட்ட இடங்களில் செய்ய வேண்டுமென்று பேசி லைசென்ஸ் தருகிறார்கள். அதுதவறு. அதை தலைகீழாகத் திருப்புங்கள். பொதுவாக இந்த சுதந்திரம், பேச்சு

சுதந்திரம், சமாதான முறையில் போராடும் சுதந்திரம் பரிபூர்ண மாக அத்தனை பேருக்கும் இருக்கிறது. அதற்கு லைசென்ஸ் வாங்க வேண்டியதில்லை. குறிப்பிட்ட இடங்களில் போக்குவரத் திற்கோ மற்றவைகளுக்கோ தகராறு ஏற்படுமானால், அரசியல் கட்சிகளிடம், மற்றஅதிகாரம் படைத்தவர்களிடம் இருந்து பேசி, நீங்கள் இந்த இடத்தில், எந்த நேரத்தில் தவிர்க்க வேண்டுமோ, அதற்கு முடிவிற்கு வாருங்கள். இந்தமுறையை கையாள வேண்டும் என்பது எங்களுடைய கட்சியின் கருத்து. இந்தக் கருத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு' பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்தி ரம் கூட்டம் கூடும் சுதந்திரம் ஊர்வலம் நடத்தும் சுதந்திரம் இருக்க வேண்டும். ரவுடித்தனம் செய்யும் சுதந்திரம் அல்ல. ரவுடித்தனத்தை ஒழித்துக்கட்ட வேண்டும். அதை அனுமதிக்க முடியாது. அது இந்த லைசென்சிற்குள் வருவதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட சுதந்திரத்திற்கு ஊனம் வராமல், இப்போது வரக்கூடிய அரசியல் பொருளாதார மாற்றத்தோடு, அரசியல் மூச்சு 42 ஆண்டுக்காலமாக ஒரு சர்வாதிகார மூச்சு வாங்கி வந்தோமே, அதிலேயிருந்து மாறுபட்ட ஒரு சுதந்திர மூச்சாக இது இருக்க வேண்டும். அதற்கு இந்த அரசாங்கம், தேசிய முன்னணியின் அங்கம், நாங்கள் ஆதரிக்கிற ஒரு அரசாங்கம் என்ற முறையில் நாட்டில் ஏற்பட்டு வரக்கூடிய மொத்த மாற் றத்தை இங்கே இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டுமென் றால், இந்த மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டு நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, காலதாமதமாகிவிட்டதால் அதிக நேரத்தை நான் எடுத்துக் கொள்ள மாட்டேன். இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அவர்கள் நான் இடையிலே சொல்ல வேண்டிய கருத்துக்களை அப்போது சொல்ல அனுமதிக்காத தால், பின்னால் அனுமதிக்கப்படும் என்ற நம்பிக்கையில் நான் அமர்ந்து இருந்தேன். இப்போது அதைச் சொல்ல விரும்பு கிறேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி இங்கே இல்லை. இல்லாத அவர்களைப் பற்றி ஒரு செய்தி சொல்லிவிட்ட காரணத்தால், அடுத்து சட்டமன்றம் கூடுகிறபோது என்னுடைய பேச்சிலே அதற்குப் பதில் சொல்வதற்கு இடைப்பட்ட நாட்கள் 3 நாட்கள் இருக்கிறதால் எங்கள் கடமையையும், நியாயத்தையும் இங்கே எடுத்துச்சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் இலங்கையில் இந்திய இராணுவம் எப்போதும் இருந்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால், நமது மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, ஒப்பந்தத்திற்கு

1990 மார்ச் 24] [திரு. குமரி அனந்தன்]

விரோதமான சொல்லா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். ஒப்பந்தத்திலே devolution of power தமிழ் மக்களுடைய பத்திரம், பாதுகாப்பு, இவைகளோடு இணைந்தது தான் இராணுவம் வெளியேறுவது. ஆகவே, அவர்களுக்குப் பத்திர மும், பாதுகாப்பும் கொடுத்ததற்குப் பிறகு இராணுவம் வெளி யேற வேண்டுமென்று சொல்கிற காரணத்தால் தமிழர்களுக்குப் பத்திரமும், பாதுகாப்பும், அவர்கள் உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற ஆதங்கத்திலே, அந்தப் பாதுகாப்பிற்காக இவர்கள் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டதே தவிர, அங்கேயேயிருந்து விட வேண்டும் இந்திய ராணுவம் என்பது அதனுடைய நோக்கமல்ல.

பங்களா தேஷ் என்கிற ஒரு நாடு உருவாவதற்கு முக்திவாகினி யோடு துணை நின்று அந்த இராணுவம், அந்த நாடு உருவான உடனேயே நொடிப்பொழுதும் தாமதம் இல்லாமல், அந்த இடத்தை விட்டு அகன்றது, இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, உலகத் திற்கே வரலாற்றுச் செய்தியாகும். எனவே தான், தமிழ் மக்களு டைய பத்திரம் கருதி சொல்லப்பட்டது அந்தச் சொல் என்பதை யும் சொல்லி, அதே நேரத்தில் நான் ஒன்றைபாராட்டவும்கடமைப் பட்டிருக்கிறேன். இங்கேயிருந்து சென்ற இராணுவம் தன்னு டைய இராணுவ வீரர்கள் பலரை தியாகம் செய்து நல்ல பணி ஆற்றியது என்று சொன்னதற்கு என்னுடைய பாராட்டு. மற்ற வர்களைப் போல இல்லாமல், இராணுவத்தை குறை சொல்லிக் கொண்டு இருக்காமல், நமது இராணுவம் அத்தகைய நல்ல பணி ஆற்றியது என்பதை இங்கே எடுத்துச் சொன்னதற்கு நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த செய்தியாக சொல்ல விரும்புவது, இங்கே அ.இ. அ.தி.மு.க. மற்றும் காங்கிரஸ் தோழர்கள் மதுவிலக்கைப்பற்றி கொண்டிருக்கிற அபிப்பிராயத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றே ஒன்று மட்டும் நான் சொன்னால் போதும். பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்த நேரத்தில் கொண்டு வராத ஒன்றை, அவர்களுடைய கொள்கைகளில் உறுதிமிக்க கொள்கையாக இருந்த ஒன்றை இப்போது நாம் விட்டுவிட்டு, இந்த அரசாங்கம் கொண்டுவரலாமா என்று கேட்பது மட்டும் போதாதா? மற்றவைகளை எல்லாம் விடுங்கள். மதியை வளர்க்க வேண்டும் என்பதில் காமராஜரிலிருந்து, பேரறிஞர் அண்ணாவிலிருந்து, இராஜகோபாலாச்சாரியாரிலிருந்து அத்தனை பேருக்கும் மதியை வளர்க்கிற எண்ணம் இருந்ததே தவிர மதுவை வளர்க்கிற எண்ணம் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா? எனவே தான், இந்த அரசுக்கு, அதுவும் அண்ணா வழியில் செல்கிற அரசு, அவருடைய அருமைத்தம்பி ஆளுகிற அரசு, கையிலே கூட அவர் போட்டிருக்கிற கணையாழியை கணப்பொழுதும் கழற்றாத கலைஞர் அவர்களுடைய அரசாக இருக்கிற காரணத்தால்,

[திரு. குமரி அனந்தன்] [1990 மார்ச் 24

இங்கே பொன்னம்மாள் போன்றவர்கள் கண்ணீர் வடிய அதனை எடுத்துச் சொன்னார்களே தவிர, எங்களுக்கு வேறு ஒன்றுமில்லை.

இதுவரையில் காங்கிரஸ் கட்சி ஆட்சி எந்த மாநிலத்திலாவது வைத்ததா என்றால் தமிழ் மாநிலத்தில் முழுவதுமாக வைத்திருந்ததே. அடுத்து இன்னொன்றுக்கும் பாராட்டைச் சொல்ல விரும்புகிறேன். கைதானவர்களை உடனே விடுதலை செய்திருக்கலாம் என்று அவர்கள் சொன்னார்கள். மற்ற அரசியல் ரீதியிலே அவர்கள் ஒரு பார்வை பார்க்கலாம், நாங்கள் ஒரு பார்வை பார்க்கலாம். கைதானவர்களை, உறவு கட்சியாக இருந்தபோதிலும் அனுபவம் மிக்க அவர் சொல்கிறபோது சொன்னார்கள் அவர்களை உடனே விடுதலை செய்திருக்க வேண்டாமா என்று சொன்னார்கள். பிறகு முதலமைச்சர் அவர்களை விடுதலை செய்தார்கள். அதோடு தொடர்புடைய ஒன்றைச் சொல்கிறேன்.

13-10 மணி.

பிப்ரவரி மாதம் 12 ஆம் தேதி காந்திய வழியிலே உண்ணா நோன்பு இருக்கப் போனவர்களைத் தடுத்து, அதைமீறி உண்ணா நோன்பு இருக்கப் போனவர்கள் மீது வழக்கு தொடர்ந்து இன்னும் அந்த வழக்கு நீதிமன்றங்களில் நடந்து கொண்டிருக்கிறது ; தோழர்களும் நடந்து கொண்டிருக்கிறார்கள் ; அலைந்துகொண்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்று அவர்கள் சொன்னதைப் போலவே, உண்ணாநோன்பு இருந்ததற்காக, அல்லது இருக்கப் போனதற்காக வழக்கு தொடரப்பட்டவர்களையும், ஒருவேளை விடுதலை செய்வதிலே அல்லது அந்த வழக்குகளை எல்லாம் திரும்பப்பெறுவதிலே இந்த முதல்வரும் நமக்கு முன்னைப் போலவே இருப்பார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே நமது மரியாதைக்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர்கள் சொன்னதற்கு நான் அனுசரணையாக வார்த்தைச் சொல்லி நான் அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள், இடையிலே மூன்று நாள் இருக்கிற காரணத்தால், திரு. ரமணியினுடைய பேச்சையும் மீறி தன்னுடைய பேச்சு பத்திரிகையிலே வரவேண்டும் என்கிற எண்ணத்தோடு ஒரு சிறிய உரையை இங்கே ஆற்றி முடித்திருக்கிறார்கள். அவர்கள், வழக்குகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். நான் அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அறிஞர் அண்ணாவைப் பற்றிக் குறிப்பிட்டதாலே, எங்களுடைய நண்பர் அரங்கண்ணல் அவர்கள் 'அறப்

1990 மார்ச் 24] [டாக்டர் மு. கருணாநிதி]

போர்' என்ற பத்திரிகையை நடத்தினார்கள். அந்தப் பத்திரிகையில்—அவர் ஊரில் இல்லாத நேரம், வெளியூர் போயிருந்த நேரத்தில் — துணை ஆசிரியர் ஒரு கேலிச் சித்திரம் வெளியிட்டார். பண்டித ஜவஹர்லால் நேருவின் படத்தின் மீது இந்தி ஆதிக்கக்காரர்கள் அவர்கள் முதுகில் குத்துவதைப்போன்ற ஒரு கேலிச் சித்திரம். அவ்வளவுதான். அந்தக் கேலிச் சித்திரத்தை வரைந்தவர், அந்தக் கட்டாரியின் மீது 'இந்தி ஆதிக்கம்' என்று எழுத மறந்துவிட்டார் இதுதான் கேலிச்சித்திரம். ஆனால் அரங்கண்ணல் மீது 307, 302 செக்ஷன்படி வழக்கு போடப்பட்டது. அப்போது அண்ணா அவர்கள் அன்றைய முதலமைச்சரைச் சந்திக்குமாறு என்னையும், அரங்கண்ணலையும் அனுப்பினார்கள். முதலமைச்சரைச் சந்தித்து, இது கேலிச் சித்திரம்தான், நேருவைக் கொல்லுகின்ற முயற்சிக்காக போடப்பட்டது அல்ல, இந்தி ஆதிக்க வெறியர்கள் நேருவினுடைய முதுகிலே குத்துகிறார்கள் என்பதற்காகப் போடப்பட்ட கேலிச் சித்திரம்தான் என்று நான் அன்றைய முதலமைச்சரிடத்திலே விளக்கிச் சொன்னேன். அரங்கண்ணலும் விளக்கிச் சொன்னார்கள். போடும்போது புத்தி எங்கே போயிற்று என்று அந்த முதலமைச்சர் எங்களுக்கு பதில் அளித்தார். இறுதிவரையில் வழக்கு நடைபெற்றது. இந்த அவையிலே எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே சட்டத்துறை அமைச்சராக இருந்த நாராயணசாமி முதலியார் அவர்கள்தான் அண்ணா அவர்களுடைய ஆணைப்படி அந்த வழக்கை நடத்தினார். பிறகு வழக்கில் அரங்கண்ணல் வென்றார். இது வரலாறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 28—3—1990 புதன் கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13-12 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

34. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் (1974 ஆம் ஆண்டு நீர்ச்) (மாசுத் தடுப்பு கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள் அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

26. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (ஒன்றாவது பட்டியல்).

27. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை). (இரண்டாவது பட்டியல்).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 24]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் கேட்கிறார் தேசிய முன்னணியில் அங்கமில்லை என்று...... (மணியடிக்கப்பெற்றது)

10-50 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் விளக்கம் சொல்ல வருகிறார் என்று கருதுகிறேன். அவர்களை விளக்கம் அளிக்குமாறு வேண்டுகிறேன்.

7. அமைச்சர் பதவியை விட்டு விலகிய திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களின் விளக்கம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையிலே வைத்த வரவு செலவுத் திட்டத்தின் மீது மக்களே வரவேற்கின்ற சூழ்நிலையில் குறை காண முடியாத காரணத்தினாலே எதிர்க் கட்சியிலே இருப்பவர் கள் என்னுடைய பதவி விலகலை ஒரு பிரச்சினையாக இந்த அவையிலே 4 நாட்களாக எழுப்பியதை நான் பத்திரிகையிலே பார்த்தேன். அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகத்தான், இன்று கூட, உடல்நிலை பாதிக்கப்பட் டிருந்தாலும் நான் அவைக்கு வந்திருக்கிறேன். என்னுடைய உடலில், கண் பழுது ஏற்பட்டு, வலது கண்ணிலே 9 துவாரங்கள் இருந்த காரணத்தினாலே சிகிச்சை பெற வேண்டுமென்றும், அமைச்சர் பொறுப்பிலே இருந்த என்னை விடுவிக்க வேண்டு மென்றும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அந்த அடிப்படையிலேதான் முதலமைச்சர் அவர் கள் என்னுடைய பதவி விலகலை ஏற்றுக் கொண்டிருக்கிறார் கள். ஏதோ காரணங்கள் கற்பிப்பதற்காக சில பத்திரிகைகளும் சில உறுப்பினர்களும் முயற்சிப்பது உள்ளபடியே வருந்தத்தக்கது. நாட்டிலே சிலபேர் ஆளுகின்ற பொறுப்புக்கு வரவில்லையே என்று உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில், அமைச்சராகிவிட்ட காரணத்தினாலே உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கிறேன். அதைக்கூட குறை காண வேண்டும் என்று யாராவது விரும்புவார்களேயானால் நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது, நான் பதவி விலகிய பிறகுகூட நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை 10 ஆம் தேதி காலையிலே சந்தித்து ஒரு மணி நேரம் பொதுப் பிரச்சினைகள் குறித்து பேசியிருக்கிறேன். தினந்தோறும் கட்சி அலுவலகத்திற்குச் சென்று மாலையிலே மூன்று மணி நேரம் கழகப் பணி ஆற்றுகின்றேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏதோ, முதலமைச்சருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இருப்பதைப் போலவும் நாட்டைவிட்டே என்னை நாடு கடத்தி யதைப் போலவும்கூட இங்கே பேசப்பட்ட அந்த வாசகங்களைப் பார்த்தேன். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரைப் பொறுத்த

வரையில், முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கைத் தமிழ்ப் போராளிகளுடைய தலைவர்கள் பாலசிங்கம், சந்திரஹாசன் போன்றவர்களை நாடு கடத்தியபோது அவர் களையே தடுத்து மீண்டும் இந்தியாவிற்கு வரவழைத்த ஆற்றல் மிக்கதலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அவர்கள் என்னை நாடு கடத்த வேண்டிய அவசியம் இல்லை. நாட்டிலே எத்தனையோ பேர், நாடு கடத்தப்பட வேண்டியவர்கள் பற்றியே அவர் கவலைப் படாமல் இருக்கும் போது எதற்காக என்னை நாடு கடத்த வேண்டுமென்று எனக் குத் தெரியவில்லை. எனவே, ஒரு தனிப்பட்ட முறையில், ஒரு அமைச்சராக இருந்த நான் என்னுடைய உடல்நிலை காரணமாக விலகல் கடிதம் கொடுத்ததை ஒரு பிரச்சினையாக ஆக்க வேண் டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குமரி அனந்தன் : இது தொடர்பாக மேலும் விவாதம் தேவையில்லை என்று விதிகள் கூறுகின்றன.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதிக்கவில்லை யென்றால் நான் உட் கார்ந்து விடுவேன்; அது வேறு விஷயம். ஆனால் எதிர்க்கட்சிக் காரர்கள் வேண்டுமென்றே குற்றம் சாட்டுகிறார்கள் என்று சொல்கின்ற அந்த நிலையை அவர் எடுத்ததற்குப் பின்னால், அவரைப் பற்றி, அவருடைய உடல்நிலையைப் பற்றி இப்போது தேறிவிட்டார் என்பதோ இன்னும் உடலில் வியாதி இருக்கிறது என்று சொல்வதைப் பற்றியோ எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால், எதிர்க் கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே சொல்கிறார்கள் என்ற நிலையை உருவாக்கி விட்டார். அதனால் தான் விளக்கம் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேனே தவிர, நான் வேண்டுமென்றே, அவர் சொல்கின்ற விளக்கத் திற்கு, விளக்கம் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை. (குறுக்கீடு).

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியினுடைய தலைவரே காணாமல் போய் விட்டார் என்று ஹைக்கோர்ட்டிலே கேஸ் போட்டு, எங்களுடைய கட்சித் தலைவரைத் தேடிக் கொடுங்கள் என்று கட்சிக்காரரே கோர்ட்டிலே விண்ணப்பம் போட்டார். அது ஒரு பெரிய பிரச் சினையாகத் தெரியவில்லை. ஆனால் அமைச்சர் ஒருவர் பதவி விலகி இருக்கிறார் என்றால், அதை மிகப் பெரிய பிரச்சினையாக ஆக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேர்த்துக் கொண்டு, அவருக்கு நல்வாழ்த்துக் கூறிக்கொண்டு, அருமைக்குரிய திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

வரவு-செலவுத் திட்டம், 1990–91—பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1990–91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது சில கருத்துக்களை வழங்குகிற வாய்ப்பை எனக்கு உரு வாக்கித் தந்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற போது, ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள், தங்களுக்கு சொல்லாற்றல் இருக் கிறது, இலக்கிய நயம் இருக்கிறது. மக்களுக்குத் தேவையான திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன என்று பேசியிருக்கிறார்கள். கருத்துக்களைக் சொல்லியிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைப் பொறுத்த வரையில், இன்றைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்களைப் போல, எரிகின்ற விளக்குக்குத் தூண்டுகோலாக எதிர்க் கட்சி இருந்து ஆளும்கட்சியில் இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது, எங்களைப் போன்றவர்களுடைய கடமை என்ற அடிப்படையில் இங்கே சில கருத்துக்களை முன் வைக்க நான் விழைகிறேன். இங்கே குறிப்பிட்டுக் காட்டியதைப் போல, இந்த நிதிநிலை அறிக்கையில் ஆழ்கடலில் மூழ்கி முத்துக்களை முதல்வர் எடுத்து வருவார் என்று நாங்கள் கருதினோம். ஆனால் கடற்கரை மணலில் பரவி இருக்கிற சிப்பிகளை எடுத்து வந்திருக்கிற ஒரு அவல நிலையை நாம் இங்கே கண்டுகொண்டு இருக்கிறோம். ஆகவே அந்த அடிப்படையில் ஆளுங்கட்சியில் இருக்கிற நண்பர்கள், பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கஸ்.

செவ்வாழைத் தோட்டத்திற்கு மேலே பறந்து கொண்டிருக் கிற கழுகுக்கு, அங்கே குலையாக இருக்கிற பழம் தெரியாது கீழே செத்துக் கிடக்கிற எலிதான் தெரியும் என்று சிலர் சொன் னார்கள். பழம் போன்ற ஏழை மக்களின் அன்றாட உணவுப் பொருளாகிய அரிசி விலையை உயர்த்தியிருக்கிற நேரத்தில், மலிவு விலை சாராயம் வழங்கப்படும் என்று சொல்கிற நேரத்தில், கழுகுக்கு எலி தெரிவதைப் போல இந்த ஆட்சி ஏழை மக்களின் மீது சுமையைச் சுமத்திக் கொண்டிருக்கிற வரியைப் பார்க்கிற போது, எனக்கு அந்த எலியைப் பற்றிய நினைவு வருகிறது. 175 கோடிக்கு மேல் வரி போட்டிருக்கிறோம் என்று புள்ளி விவரத்தைத் தந்திருக்கிறார்கள். மலிவு விலையில் சாராயம் தருகிறோம் என்ற வகையில் மட்டும் 150 கோடி ரூபாய்க்கு மேல் வரி வருகிறது என்று புள்ளி விவரம் தந்திருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்திற்கும் இலவச அரிசித் திட்டத்திற்கும் 140

1990 மார்ச் 24] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்ற விபரத்தைச் சொல்லி, இன்றைக்கு மதுவிலக்கைக் கொண்டு வருவதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். சொல்வதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, இந்த அரசு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் தருவோம் என்று சொன்னீர்களே, செய்தீர்களா? அதற்கு ஒரு புள்ளி விவரக் கணக்கைத் தந்து இருக்கிறீர்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியங்கள் தந்திருக்கிறதா என்றால் முழுமையாகத் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அரசு அலுவலர்கள் இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் 400 கோடி ரூபாய்க்கு மேல் சலுகைகள் தருகிறோம், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பளத்தைத் தருகிறோம் என்று சொல்லி, வாக்குறுதி மட்டுமல்ல, அறிக்கையையும் நீங்கள் விட்டிருந்தீர்கள். அதே அடிப்படையில் இன்றைக்கு சொல்வதைத்தான் செய்தீர்களா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

11.00 மணி

அதேநேரத்தில் இன்றைக்கு மலிவுஅரிசிக்கு உதாரணம் காட்டுகிறபோது, பொது விநியோகத்தில் வெவ்வேறு மாநிலங்களை நீங்கள் உதாரணம் காட்டியிருக்கின்றீர்கள். தமிழ்நாட்டிலே ரூ. 1.75-க்கு இருந்த அரிசியை இன்றைக்கு 2 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறீர்கள். 2.25 ரூபாயிருந்த சன்ன அரிசி 3 ரூபாய்க்கு, உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைவிட சன்ன அரிசியாயிருக்கிற 2.50 ரூபாய்க்கு இருந்த அரிசியை 3.50 ரூபாய்க்கு, ஒரு ரூபாய் விலை உயர்த்தியிருக்கிறீர்கள். இந்த விலைப்பட்டியலைப் போட்டு ஒரு விளம்பரத்தை உணவுத் துறைச் செயலாளர் அவர்கள் செய்திருக்கிறார்கள். இங்கே கேரள மாநிலத்தை ஒப்பிட்டுக் காட்டியிருக்கலாம், கர்நாடக மாநிலத்தை ஒப்பிட்டுக் காட்டியிருக்கலாம். ஒரிசா மாநிலத்தைக் காட்டியிருக்கலாம், பல்வேறு மாநிலங்களை ஒப்பிட்டுக் காட்டுகிறபோது, பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்தில் இன்றைக்கு அரிசி விலை எப்படி விற்கிறது என்பது இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறதா என்றால் கிடையாது. ஆனால் அந்த அடிப்படையிலே வெவ்வேறு மாநிலங்களையெல்லாம் சுட்டிக்காட்டி அதைக்காட்டிலும் குறைத்துத்தான் நியாயவிலைக் கடைகளிலே இன்றைக்கு அரசு விலையை உயர்த்தியிருக்கிறது என்று சொல்லி ஒரு உதாரணத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வரிச்சுமையை அரசு யார்யாருக்கு எவ்வாறு சுமத்தியிருக்கிறது என்று சொல்லுகிறபோது, ஏழை எளிய மக்கள், அடித்தளத்திலே உழைக்கின்ற மக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்கள்,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

உள்ளடக்கம்.

28—3—1990.

		பக்கங்கள்.
1.	கவன ஈர்ப்பு—	
	(அ) தருமபுரி மாவட்டத்தில் பருத்தி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் நிவாரணம் அளிக்கவேண்டிய அவசியம் குறித்து.	283—285
	(ஆ) மதுராந்தகம் வட்டத்தில் பூதூர் கிராமத்தில் பாலாற்று மணல் எடுப்பதால் நீர்வளம் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.	286—290
2.	அறிக்கை அளித்தல்—	
	பொதுக் கணக்குக் குழு	290
3.	இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1989-90 —அளித்தல்.	290—292
4.	அறிவிப்பு—	
	வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து	293
5.	விதி 109 இன் கீழ் உறுப்பினரின் தன்னிலை விளக்கம்—	
	மலிவு விலை மது மற்றும் மதுவிலக்குக் கொள்கைபற்றி அவையில் ஏற்கெனவே பேசியது குறித்து.	293—296
6.	வரவு-செலவுத் திட்டம், 1990-91—பொது விவாதம்—தொடர்ச்சி.	
	திரு. குமரி அனந்தன்	296—327
	திரு. எஸ். ஆர். இராதா	327—366
	மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி	366—423
7.	பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.	423—424